ஜீவசாட்சி

வெளியீடு
அருட்தந்தை சறத்ஜீவன் நிதியம்
2017

தலைப்பு	:	ஜீவசாட்சி
மலர்க்குழு	:	அருட்தந்தை கி. ஜோ. ஜெயக்குமார் அருட்தந்தை த. ஜெ. கிருபாகரன் அருட்தந்தை ம.வி.இ. இரவிச்சந்திரன் அருட்தந்தை செ. அன்புராசா அ.ம.தி செல்வி நித்திலா மரியாம்பிள்ளை
பக்கங்கள்	:	240
முதற்பதிப்பு	:	26.06.2017
பதிப்புரிமை	:	மலர்க்குழு
வெளியீடு	:	அருட்தந்தை சறத்ஜீவன் நிதியம்
கணினி வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு	:	JS Graphics & Printers

Title	:	Jeevasaadchi
Editorial Board	:	Rev. Fr. C. G.Jeyakumar Rev. Fr. T. J. Kirupaharan Rev. Fr. M.V.E.Ravichandran Rev. Fr. S. Anpurasa OMI Miss. Nithila Mariampillai
Pages	:	240
First Edition	:	26.06.2017
Copy Right	:	Editorial Board
Published by	:	Fr.Sarathjeevan Foundation
Computer Setting & Printed by	:	JS Graphics & Printers

ISBN: ISBN978-955-7406-00-8

உள்ளே

"You lived your life like a candle in the Wind"	01
நெஞ்சகலா நினைவுகள்	02
துன்பப்படுவோரில் இயேசுவின் பிரசன்னத்தைக் கண்ட சறத்ஜீவன்	03
Fr. Sara - A LEGACY	04
அர்ப்பணம் உனக்கும் சாத்தியமே!	05
In our Cherishing Memories	07
அருட்தந்தை ம. தேயுஸ் சறத்ஜீவன் வாழ்க்கைச் சுருக்கம்	08
REV. FR. SARATHJEEVAN - A PROFILE	12
அருட்தந்தை சறத்ஜீவன் நிதியம்	14
நினைவுச் சின்னங்கள்	16
பகுதி 1	
"போரின் எல்லையில் ஒரு முல்லை" "உயிர்ப்பில் உயிர்ப்புள்"	17
Sara…. Sarathjeevan…	19
சிறந்த சாரணர் தலைவன்	21
உண்மைச் சீடன்	23
அமரர் சறா அடிகள் - என் அன்பு நண்பன், என் நெஞ்சை விட்டகலா இனியவன்	26
அகத்தின் அழகை முகத்தில் கண்ட முதியவர்	28
சறாகுஞ்சு	30
எனதுசகோதரன் சறாஅண்ணா…	33
"அக்கா, நான் சறா கதைக்கிறன்".	35
Rev. Fr. SarathJeevan	37
இறந்தும் வாழும் அருட்தந்தை சறத்ஜீவன்	41
நிறைந்த உள்ளத்தோடு வாழ்ந்தவர்.	44
அமரர் அருட்பணி சறா - நான் கண்ட உத்தம குரு	46
உன்னதமான குரு	48
சறா ஒரு சகாப்தம்	50
வாழத்துடித்தவர்களோடு சாவைச் சந்தித்த சறத்ஜீவன் அடிகளார்	53
Fr.Sara, Stood by his decision	57
சறத்ஜீவன் ஒரு சாதனையாளன்	58
சுனாமியும் அருட்பணி சறாவும்	60
கல்வாரி பிரதிமை	62
சறா - ஆழமான விடுதலை உணர்வுகொண்ட ஒரு தமிழ் குருமகன்	63
"காலங்கள் பல கடந்தோடிய போதும் கனவாகிப்போகாதோ …	66
இடப்பெயர்வே வாழ்வாக…	69
சிரித்த முகம் கண்டு…	72
சறாக்குட்டி !!	75

ஏழைகளின் நண்பன் 79
நினைவழியா உருவம் 80
இயேசு அடியவன் சறாவின் இறுதி **24x60x60** நொடிகள் 82
சறா நீர் சாகவில்லை எம் நினைவுகளில் நினைப்போம்!... 92
அருட்தந்தை சறத்ஜீவன் - ஒரு ஞாபகம் 94
Rev. Fr. Sarathjeevan - a Remembrance 98
நினைவகலா நினைவுடன் 8 ஆண்டுகள் 103
மனிதருள் மாணிக்கம் 105
அருட்பணி சறாவின் கடைசி நாட்களின் நினைவுகள் 108
நினைவுகளில் நீங்காத அருட்பணியாளன் 111
மற்றவர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த உத்தமர் 113
மண்ணில் மடிந்த நெல்மணி நீ ... 116

பகுதி 2

'வன்னி'பற்றிய கரிசனை வேண்டும் 119
Concern about 'Vanni' is needed 123
சமாதானம் ஒரு 'பொருளா?' 125
Peace is not an Object 130
ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான வடக்கு... 134
இலங்கைத்தீவில் நிலைமாறுகால நீதியும் ஈழத்தமிழரின் எதிர்காலமும் 144
இன்றைய அரசியல் பின்புலத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அரசில் தீர்வுக்கான அணுகுமுறைகள் 151
Feasible ways to achieve lasting solution to Tamils issue at present Context. 156
Fr. Sara - called to work with hands rather than lips. 158
சரத் ஜீவன் வார்த்தையினால் அல்ல செயல்களினால் பணியாற்ற அழைக்கப்பட்டவர் 169
குறைந்த செலவில் கூடுதலான வருமானம் தரும் சூரிய அடுப்புகள் 173

பகுதி 3

மக்களின் நல்லாயன் 179
ஒரு விழுப்பம் 186
முள்ளிவாய்க்கால் கல்வாரியில் விதையாகிய குருத்துவ விருட்சங்கள் 217
"I Will not Leave my People" 224
AN EPITOME OF SIMPLICITY AND COMMITMENT 227
அருட்தந்தைசறத்ஜீவனின் 5ம் ஆண்டுநினைவாக 229
கல்வாரிப்பலியும் வாழ்வுப்பலியும் -அருட்தந்தை சறத்ஜீவன் 233
Heroic Decision of Rev. Fr. Sara 235
அமரர் சரத்ஜீவன் அடிகளார்க்குக் கவிதாஞ்சலி 236
'Good Shepherd who did not abandon his sheep' 237
Priest dies alongside refugees (Vatican Radio, 27 May 2009) 239

Rt.Revd.Dr.Justin B Gnanapragasam
Bishop of Jaffna

Bishop's House,
P.O.Box No. 02
Jaffna - Sri Lanka.
Tel: +94(0) 21 222 2649(O)
+94(0) 21 222 8518(R)
Email: gnanamjb48@gmail.com

Revd. Fr. Thadeus Sarathjeevan

"You lived your life like a candle in the Wind"

I have known Fr Sarathjeevan from 2002 when I was at St. Patrick's College, Jaffna, where he used to visit me to get advice for his life in the Seminary and for his priestly formation. I found him as a very humble, obedient, pleasant and affable person. He came from a devout Catholic family and was a God-fearing person who was seeking to do God's will always. He was ordained a priest in 2003 and started his priestly ministry in the parishes. Wherever he served, he was very much appreciated by the people for his concern for them and the encouragement he gave them.

During the last stages of the civil war, though he was physically weak, he spent most of his time with the people and was consoling them. He would ring up at night and ask me to help them. I could only tell him to have faith and the Lord will guide them. I did speak to the military officers directing the operations in Mullaitivu area about the priests and nuns serving there. Fr Sarathjeevan was with the people in their worst sufferings and did not look after his health. He was always worried about the sufferings of the people and the need to help them. It was very sad that after he was rescued that he passed away on the way to Vavuniya. It was quite a shocking news to me as I had heard that Fr Sarathjeevan had been rescued and is on his way to Vavuniya. We all had to take it as God's will.

Fr Sarathjeevan still lives in the hearts of the people he served so diligently and faithfully throughout his ministry in Vanni area. Even though he passed away in 2009, I have vivid memories of his past conversations with me. I pray that God Almighty grant him eternal rest with Him, I also pray for his mother and other family members who miss Fr Sara very dearly.

May you ever grow in our hearts
You were the grace that placed itself where lives were torn apart
You whispered to those in pain that they belonged to heaven
You are like a candle burned out long before!!!!

+B Gnanapragasam
Right Revd. Dr Justin B Gnanapragasam
Bishop of Jaffna

Rt. Revd. Dr. Justin B Gnanapragasam
Bishop of Jaffna

I have come that they may have life, and have it to the full. Jn. 10:10

நெஞ்சகலா நினைவுகள்



யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் எனது பணிக்காலத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு, பல பணிகளைப் பொறுப்புடன் ஏற்று செயற்பட்ட அருட்தந்தை சறத்ஜீவன் அடிகள் அமரத்துவம் அடைந்து ஏழு ஆண்டுகள் கடந்தும் எம் நெஞ்சங்களில் வாழ்கிறார்.

அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளாரின் இழப்புச் செய்தி யாழ் திருச்சபைக்குப் பேரிழப்பாய் அமைந்தது. அவரது பணிக்காலம் மிகவும் சவால் மிகுந்த தருணத்தில் பங்குப்பணிகளுடன் JRS அகதிகள் புனர்வாழ்வுப்பணியின் இணைப்பாளராகவும் பணியாற்றினார். துயருறும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இறை நம்பிக்கையோடு அரும்பாடுபட்டு உழைத்தார். இதன் மூலம் பல சவால்களை எதிர்கொண்டதை பலர் மூலம் அறிந்து கொண்டேன்.

எந்தத் தருணத்திலும் அவரது ஆன்மீகப் பற்றுறுதியும் தாழ்ச்சியான பணி வாழ்வும் குருத்துவ வாழ்வில் முன்மாதிரிகையாகக் கொண்டு வாழ்ந்ததை கண்டுணர்ந்தேன். அவரது அர்ப்பணம் நிறைந்த வாழ்வை யாழ் திருச்சபை எட்டு ஆண்டுகளாக இழந்து தவித்த போதும் அவர் வாழ்ந்த வாழ்வு என்றும் நெஞ்சகலா நினைவாக நிறைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அவரது ஆன்மா சாந்தி பெற இறைவனை இரந்து வேண்டுவோம்.

+ Thomas Saundaranayagam

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
முன்னாள் யாழ் ஆயர்

துன்பப்படுவோரில் இயேசுவின் பிரசன்னத்தைக் கண்ட சறத்ஜீவன்

அமைதியான, கீழ்ப்படிவுள்ள, இறைபயமுள்ள, நேர்மையான, தியாக சிந்தையுள்ள ஒரு அருட்சகோதரனாக அமரர் சறத்ஜீவன் அடிகளாரை நான் புனித சவேரியார் குருத்துவக்கல்லூரியில் 2000ம் ஆண்டு முதல்முதலாகச் சந்தித்தேன். அன்றிலிருந்து 2009ம் ஆண்டு அவர் மக்களுக்காகத் தன் உயிரை அர்ப்பணிக்கும்வரை இதே பண்புகள் அவரில் நிறைந்திருந்ததை என்னால் காணமுடிந்தது.

தன்னுடைய கடமைகளில் கண்ணியமும், அடுத்தவருக்குத் துணைபுரியும் ஆர்வமும் அவரின் அன்றாட வாழ்வில் இழையோடிக்கொண்டிருந்தது. எடுத்த ஒரு காரியத்தை, அல்லது அவருக்குக் கொடுக்கப்பட்ட பணியை செவ்வனே செய்து முடிக்கும்வரை அல்லும் பகலும் அயராது உழைக்கும் மனப்பக்குவத்தை நான் அவரில் கண்டேன். தன்னோடு கூட வாழ்வோரை, பணிபுரிவோரை எப்போதும் மகிழ்வாக வைத்திருக்கவேண்டும் என்ற ஒரு உயரிய பண்பை அவர் கொண்டிருந்தார். இதற்காக, தனது விருப்பங்களை, ஆசைகளை தியாகம் செய்து, மற்றவர் மகிழ்ந்திருப்பதைக் கண்டு தானும் மகிழ்ந்திருந்த ஒரு உத்தமர் அருட்தந்தை சறத்ஜீவன்.

துன்பப்படுவோரில் இயேசுவின் பிரசன்னத்தை அவர் கண்டார் என்பதற்கு சான்றுகள் தேவையில்லை. அவரில் நிறைந்திருந்த இத்தகைய பண்புகளால் அவர் வாழும்போதும் இயேசுவுக்கு சாட்சியாக வாழ்ந்து அதே இயேசுவுக்காக தன் இன்னுயிரையும் அர்ப்பணித்த தியாகச் செம்மலாக விளங்கினார். திருச்சபையால் இன்னும் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தப்படாத ஒரு வேதசாட்சி என்று நான் அவரை அழைக்க விரும்புகிறேன்.

அயலவரின் நல்வாழ்வுக்காக, உயர்வுக்காக வாழ்ந்து மரித்த எம் அன்புச்சகோதரன் அமரர் சறத்ஜீவனை இறைவன் இன்று மிகவே உயர்த்தி தன் மாட்சிமையில் பங்களித்திருக்கிறார் என்பது எமது அசையாத நம்பிக்கை.

அருட்தந்தை ப. யோசப்தாஸ் ஜெபரட்ணம்
குரு முதல்வர்
யாழ். மறைமாவட்டம்

Fr. Sara - A LEGACY

Remembering **Rev. Fr. Mariampillai Thaddeus SARATHJEEVAN**, a priest for the diocese of Jaffna, my memory goes back to 1980. I had seen Sarathjeevan as a school boy at St. Patrick's college, Jaffna; as an altar server, and as a chorister singing and playing keyboard at St. Mary's Cathedral, Jaffna.

Though I have seen him I did not know him until I happened to meet him with his sister in 1991 at Oblate Scholasticate, Ampitya, Kandy, where he expressed his idea of becoming a priest and also he sought friendly advice as to which seminary he could join. I was surprised and appreciated his mature way of speaking and behaving with people. When I asked him why do you want to become a priest, he said that he actually, did not know, 'why he wants' at that moment, but he confessed that 'something tells him from within.'

Due to lack of communication and contact during the war in 1990ies I did not have much link with him except I heard that he had entered St. Martin's Seminary, Jaffna. Then, I had met him a few times when he was studying philosophy and theology at St. Francis Xavier's Seminary in Jaffna and as an assistant priest at Mullaitheevu and as a parish priest of Uruthirapuram in Kilinochchi.

As an assistant priest at Mullaitheevu, during Tsunami in 2004, in spite of losing all of his belongings his sympathy and empathy for the Tsunami affected people was tremendous. Almost, all the People who went to Mullaitheevu to witness the devastating site of Tsunami and who had met Fr. Sara spoke about his extraordinary dedication and commitment for the Tsunami affected victims.

As the coordinator for the Jesuit Refugee Service (JRS) agency in the Kilinochchi district, in the midst of the horrendous human tragedy, he was one of the seven priests who remained with the refugees until the end of war in northern parts of Sri Lanka. He refused to abandon the refugees, including orphan children when others fled from the war zone for safety due to severity of the war. In the midst of dreadful shelling and bombing, he identified himself with the suffering ones. He himself buried the dead; he provided medical aid to the wounded; he shared his food with those around him; and gave spiritual support to those around him during the months of intense fighting.

Resembling Jesus, the Good Shepherd, Fr. Sara was a deeply compassionate and loving priest, who laid down his life for the sheep entrusted to his care, while leading the last batch of refugees to safety from war zone. Thus, Fr. Sara has left a strong legacy for us, priests, religious and also laity.

Fr. S. Edwin Vasantharajah, OMI
Provincial Superior,
Oblates of Mary Immaculate,
Jaffna Province, Sri Lanka

அர்ப்பணம் உனக்கும் சாத்தியமே!

நாம் வாழும் இன்றைய உலகம் பின் நவீனத்துவக் கலாசாரத்தில் வேக மாக வளர்ச்சி காணுகின்றது. சிந்திக்கக்கூடிய எந்த மனிதனும் இந் நவீனத்துவக் கலாசாரத்தைத் தவிர்த்து தமது வாழ்வை அமைத்துக் கொள்ள முயலமாட்டான். இத்தகைய பின் நவீனத்துவக் கலாசாரத்தில் உறவு, ஆன் மீகம், நீதி, உண்மை போன்ற பண்புகள் முன் நிற்கின்றன.

பல ஆண்டுகளாக, இலங்கையில், குறிப்பாக, தமிழர் பிரதேசங்களில் நீடித்து, கடந்துசென்ற போரின் பாரதூரமான விளைவுகளை நாம் அறிவோம். இப்பாதிப்புக்கள் எமது மக்களின் பின் நவீனத்துவக் கலாசார வளர்ச்சிக்குத் தடைகளாக அமைந்திருந்தன. இருந்தும் உலகநாடுகளில் ஏற்பட்ட பாரியவளர்ச்சியை நாம் அறியாதவர்களாக இருந்ததில்லை.

இத்தகைய பின்னணியில் பின் நவீனத்துவக் கலாசாரத்தை உள்வாங்கியவராக, சறா தனக்கென்றொரு ஆன்மீகத்தை வளர்த்துக் கொண்டார். அந்த ஆன்மீகம் பின் நவீனத்துவக் கலாசாரப் பண்புகளான உறவு, நீதி, உண்மை போன்ற பண்புகளை உள்ளடக்கியதாக வளர்ச்சி பெற்றிருந்தது. இதனடிப்படையிலேயே சறாவின் வாழ்வும், அர்ப்பணமும் அமைந்திருந்தன.

சறாவில் எழுந்த இந்த மாற்றம், இந்த வளர்ச்சி, திடீரென ஏற்பட்டதொன்றல்ல. இறைபயமும், இறைபக்தியும், நிறைந்த குடும்பம் சறாவினுடையது. ஆசான்களாக அம்மாவும், அப்பாவும் இறைவார்த்தையில் தமது வாழ்வைக் கட்டி எழுப்பி, குடும்பத்திலும், சமூகத்திலும் அன்புடனும் அர்ப்பணிப்புடனும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள். சறாவினுடைய உள்ளத்திலும் பெற்றோரே இறைவார்த்தை எனும் விதையை விதைத்தார்கள். அன்று விதைக்கப்பட்ட அந்த விதையே முளைத்து, வளர்ந்து, விருட்சமாகி, சறாவின் வாழ்வின் அன்புக்கும், அர்ப்பணத்திற்கும் வழிசமைத்தன.

சறாவின் சிறு வயதிலிருந்தே அவரைக்கண்டு, அவருடன் பழகி, அவரை அறிந்திருக்கின்றேன். அவருடைய திறந்தமனம், நேர்மையான போக்கு, பண்பான உறவாடல், கடினஉழைப்பு, நீதியின்பால் தாகம், உண்மையை விரும்புதல் போன்றவையே நான் அவரில் கண்ட அவரின் சொத்துக்கள். அடுத்தவரை இவரிடம் கவர்ந்து ஈர்த்த சக்தியும் இவையே.

இப் பண்புகள் விளைந்த விளைநிலம் இவரது குடும்பம். பெற்றோர், சகோதரங்களின் இறை உறவும், நெருங்கிய அன்பு உறவாடலும் அத்தோடு கூடிவந்த விழுமியங்களும் சறாவுக்குப் பலமாக, உரமாக அமைந்தன.

எனது எண்ணத்தில் சறாவின் குடும்பம் விதைத்த, சறாவைப் பாதித்த, சறாவின் அன்புக்கும், அர்ப்பணிப்புக்கும் தூண்டுதலாக அமைந்த இறைவார்த்தைப் பகுதிகள் இவையாகவே இருக்கவேண்டும்:

> “நல்ல ஆயன் நானே
> தந்தை என்னைஅறிந்திருக்கின்றார்
> நானும் தந்தையை அறிந்திருக்கின்றேன்.
> அது போல் நானும் என் ஆடுகளைஅறிந்திருக்கின்றேன்.

என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன.
அவைகளுக்காக என் உயிரைக் கொடுக்கிறேன்."

(யோவா.10:14-15)

"நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல
நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்."

(யோவா.15:4)

"நீங்கள் கனி தரவும்
நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும்
உங்களை ஏற்படுத்தினேன்."

(யோவா.15:16)

"நான் பசியாய் இருந்தேன்.
நீங்கள் உணவு கொடுத்தீர்கள்.
நான் தாகமாய் இருந்தேன்.
என் தாகத்தைத் தணித்தீர்கள்...
மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள்
ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம்
எனக்கே செய்தீர்கள்...

(மத்.25:35,40)

என் எண்ணத்தில் சறாஎனக்கும், உனக்கும் சொல்வது
"இந்த இறைவார்த்தையை உள்வாங்கி, வாழ்ந்து, நான் மக்களின் நல்லாயனானேன்.
நீ...
இறைவனின் பராமரிப்பையும்
ஆண்டவர் இயேசுவின்
அருள்பாலிக்கும் ஆதரவையும்
தூய ஆவியின் வழிநடத்துதலையும்
அன்னை மரியாளின் பரிந்துரையையும் நம்பி
அர்ப்பணமாகிடு.
உன் மக்களின் நல்லாயனாகிடு.

சறாவுக்காக,
அருட்தந்தை த. ஜெ. கிருபாகரன்
அதிபர்
புனிதபிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

In our Cherishing Memories

Rev. Fr.Sarathjeevan, as a young energetic priest, scarified his life serving God and his people. He is still in our memories even after 8 years were added to the calendar after him. I know him very well as a polite, knowledgeable Patrician and a Priest of great qualities and letters.

He was ordained a priest and served as Assistant Parish Priest during the catastrophical outbreak of Tsunami in 2004. He served selflessly among the victims of Mullaitivu district on their urgent requirements and immediate essential needs. When the local was dramatically devastated the lives of Vanni people, he was among the people. He was the Parish Priest of Uruthirapuram served as a dedicated Pastor in 2008 and 2009.

He shared his shoulder for the victims of local war, as being a partner in sorrows, who lost all their belongings, properties, shelter and the lives of their beloved ones at last.

He toiled hard to establish the religious faith among the people, when he was at Our Lady of Fatima. There are still people who bear witness to his selfless life, thankfully recalling the uncertain moments he travelled through the pouring of shells despite the risks to his life in Kilinochchi. He served responsibly among the people who had the scars of wars by attending to their needs keenly.

He was very fond of playing keyboard and his wisdom of music is remarkable. May be, in the eyes of the Lord, such a service of six years as a young enthusiastic priest, seemed equal to a service of 100 years. So, he was called from this mortal world.

His life teaches us vividly that our life can be short but leading a fruitful life is the will of our Lord and Rev. Fr. Sarathjeevan's life bears witness to this.

Rev. Fr. M. Jero Selvanayagam
Rector
St. Patrick's College
Jaffna

அருட்தந்தை ம. தேயுஸ் சறத்ஜீவன்
வாழ்க்கைச் சுருக்கம்

- ஆசிரியர்களான திரு. மனுவல் மரியாம்பிள்ளை, திருமதி. கசில்டா மங்களநாயகி ஆகியோரின் மகனாக பொகவந்தலாவையில் 1968 மே மாதம் 13ம் திகதி சறத்ஜீவன் பிறந்தார்.
- தலைமன்னார், கட்டுக்காரன் குடியிருப்பு என்ற இடத்திற்கு பெற் றோர் ஆசிரிய இடமாற்றம் பெற்றுச் சென்றபோது, 1969 – 1973 வரை அங்கு வளர்ந்தார்.
- 1974 - 1987 காலப்பகுதியில் தரம் 1 தொடக்கம் உயர்தரவகுப்பு வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்றார்.
- 1990 - 1993 யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் (Draftsman Course) கல்வி பயின்றார்.
- 1993 மார்ச் 1ம் திகதி புனித மாட்டினார் சிறிய குருமடத்தில் இணை ந்து 1994 ஆகஸ்ட் 22 வரை குருமட மாணவனாகக் கல்வி பயின்றார்.
- 1994 செப்ரெம்பர் 25ம் திகதி கொழும்புத்துறை, புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இணைந்தார்.

  1995ம் ஆண்டு இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின்போது பெரிய குருமடமாணவர்களுடன் மடுத்திருப்பதிக்கு இடம்பெயர்ந்து சென் றார். 1996ம் ஆண்டு திரும்பவும் கொழும்புத்துறை புனித பிரான் சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரிக்கு வந்தார்.

  2000ம் ஆண்டு திரும்பவும் ஓர் இடப்பெயர்வினால் பண்டத்தரிப்பு தியான இல்லத்திற்கு பெரியகுருமட மாணவர்களுடன் செல்ல

நேரிட்டது. மீண்டும் 2001ம் ஆண்டு கொழும்புத் துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் பெரிய குருமடத்திற்குத் திரும்பிவந்தார்.

- 1997ம் ஆண்டு தனது மெய்யியல் பட்டப்ப டிப்பை புனித பிரான்சிஸ்கு சவேரியார் பெரிய குருமடத்தில் நிறைவுசெய்தார்.
- 2002ம் ஆண்டு தனது இறையியல் பட்டப் படிப்பை புனித பிரான்சிஸ்கு சவேரியார் பெரிய குருமடத்தில் நிறைவுசெய்தார்.
- 2002 நவம்பர் 07ம் திகதி தியாக்கோனாக யாழ் ஆயர் மேன்மைதங்கிய தோமஸ் சவுந் தரநாயகம் அவர்களினால் திருநிலைப் படுத்தப்பட்டார். அதன்பின் பாசையூர் புனித அந்தோனியார் கோவில் பங்கிலும், அதனைத் தொடர்ந்து இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியிலும் தியாக்கோனாகப் பணி புரிந்தார்.
- 2003 மே மாதம் 14ம் திகதி யாழ் ஆயர் அவர் களினால் குருத்துவ நிலைக்கு திருநிலைப் படுத்தப்பட்டார்.
- 2003 மே மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரை யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலயத்தில் உதவிப்பங்குத்தந்தையாக அருட்தந்தை பயஸ் அடிகளாருடன் பணி யாற்றினார்.
- 2003 டிசம்பர் தொடக்கம் 2005 பெப்ரவரி மாதம் வரை முல்லைத் தீவு புனித பேதுரு வானவர் ஆலயத்தில் உதவிப்பங்குத்தந் தையாக அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாருடன் பணியாற்றினார்.
- இந்தக் காலப்பகுதியில் 2004 டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் தனது உடமைகள் அனைத்தையம் இழந்தாலும் கடவுள் அருளால் காப்பாற்றப்பட்டார். சுனாமி அனர்த்தம் காரணமாக மாமூலை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு இடம்பெயர்ந் தார். பின்னர் செல்வபுரம் புனித அன்னாள் ஆலயத்திற்கு மாறிச்சென்றார்.
- 2005 மார்ச் மாதம் பங்குத்தந்தையாக உருத் திரபுரம் பற்றிமா அன்னை ஆலயப்பங்கில் பொறுப்பேற்றார். அத்துடன் ஜெயந்திநகர், கோணாவில், யூனியன்குளம், கனகபுரம், 155ம் கட்டை, திருநகர், ஊற்றுப்புலம் ஆகிய உபபங்குகளையும் நிர்வகித்தார். அத்துடன் கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதேசங்க ளிற்கு யேசுசபை அகதிப்பணிகளின் (JRS) பொறுப்பாளராக இறக்கும் வரை பணிபுரிந் தார். தமிழ் மக்களிற்கு நிரந்தர அமைதித் தீர்வு கிடைக்கவேண்டும் என்ற நோக்கத் தோடு ஆவணி மாதம் 2008ம் ஆண்டு அமை தியின் அரசி என்ற ஆலயத்தை செல்வாந கரில் அம்மக்களின் துணையோடு அமைத் தார். 2008ம் ஆண்டு மார்ச் மாதம் அருட் தந்தை கடைசியாக யாழ்ப்பாணத்திலுள்ள தனது வீட்டிற்கு வருகைதந்தார். அவர் தனது பெறாமகனான மெரிஜனுக்குத் திருமுழுக்கு அளித்தது அவர் குடும்பத்தினரோடு இணைந் திருந்த இறுதி நிகழ்வாக அமைந்தது

2008ம் ஆண்டு ஒக்ரோபர் 3ம் திகதியிலி ருந்து வன்னியில் ஏற்பட்ட யுத்தம் காரண மாக உருத்திரபுரத்திலிருந்து முள்ளிவாய்க் கால் வரை 18 இடங்களிற்கு அவரது இறப்பு வரை இடம்பெயர்ந்து சென்றார். இடம் பெயர்ந்த சில இடங்கள் உருத்திரபுரம் - சுதந்திரபுரம் - கல்மடு - புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை - வலைஞர்மடம் - மூங்கி லாறு - உடையார்கட்டு - முள்ளிவாய்க்கால். அருட்தந்தை மரியாம்பிள்ளை தேயுஸ் சறத்ஜீவன் இறுதி யுத்தத்தின்போது மக்க ளோடு இருந்து பணிசெய்து அவர்களுட னேயே 18 இடங்களுக்கு இடம்பெயர்ந்து இறுதியில் முள்ளிவாய்க்கால் வரையும் மக்க ளுடன் இருந்தார். அவரது சகோதரியிடம் அவர் தொலைபேசி வழியாக சிலதடவைகள் தொடர்பு கொண்டிருந்தார். அவர் கூறியது "அக்கா நான் மக்களுடன் தான் இருப்பேன். அவர்கள் வெளியில் வரும்போது அவர் களுடன் தான் நான் வருவேன். என்னை வரும்படி ஆயரிடம் போய் கேட்க வேண்

டாம்" என்றார். அதற்கு அவர் சகோதரி "சறா உனது விருப்பம் தான் எனது விருப்பமும்" என்று அவருக்கு உறுதி கொடுத்தார். அருட் தந்தை சறத்ஜீவன் மக்களோடு இருப்பேன் என்பதில் மிகவும் உறுதி கொண்டிருந்தார்.

- 2009 மே மாதம் 18ம் திகதி மாலை 3.00 மணிக்கு உணவுப்பற்றாக்குறை காரணமாக ஏற்பட்ட இதய அடைப்பால் அவரது உயிர் பிரிந்தது. Died: According to the postmortem report:"Death due to Myocardial Infarction subject to Malnutrition"at Irrattaivaikal, Mullaitivu.

அருட்தந்தை சறத்ஜீவனின் இறுதி நாட்கள் பற்றிய சில குறிப்புக்கள்:

- போதுமான அளவு உணவோ, நீரோ கிடைப் பது அரிதாக இருந்தது. அத்துடன் கடைசி சில நாட்களாக உணவோ நீரோ முற்றாகக் கிடைக்கவில்லை அத்துடன் கடுமையான யுத்தம் காரணமாக பதுங்கு குழிக்குள்ளேயே இருக்க நேர்ந்தது.
- 13 மே மாதம் 2009 ஆண்டு அருட்தந்தை சறத்ஜீவனின் 41வது பிறந்தநாள். அன்று தான் கடைசியாக குடும்ப அங்கத்தவரோடு தொடர்புகொண்டார். அதிலும் 'திருப்பலி ஒப்புக்கொடுக்க முடியவில்லை' என்பதே அவரது கவலையாக இருந்தது.14 மே மாதம் அவருடைய 6வது குருப்பட்ட நாளாக இருந்தது. பதுங்கு குழிக்குள் இருந்தே தனது கடைசித் திருப்பலியை நிறைவேற்றினார்.
- யுத்தத்தின் கடைசி நாளில், மே மாதம் 18ம் திகதி, அருட்தந்தை சறத்ஜீவன், அவருடன் இருந்த சககுருக்களுடனும், அவர்களின் பொறுப்பிலிருந்த சிறுவர்களுடனும் மக்களு டனும் வெளியில் வந்தார்கள். அங்கு படையி னரால் நெஞ்சில் பலமாகத் தாக்கப்பட்டார்.
- நான்கு மைல்களுக்கு மேல் அருட்தந்தை சறத்ஜீவன் அவருடன் இருந்த மக்களுடன் நடந்தே சென்றுள்ளார். இதன் போது யுத் தத்தினால் ஏற்பட்ட அழிவுகளுக்கு ஊடாக வும் காயமடைந்த, மற்றும் இறந்துபோன மக்களின் உடல்கள் ஊடாகவும் அவர் நடக்க நேரிட்டது."என்னால இதைத் தாங்க முடியாமல் இருக்கு" என்று சொல்லியவாறே அருட்தந்தை சறத்ஜீவன் நடந்து சென்றார். ஒரு கட்டத்தில் நெஞ்சுவலி தாங்கமுடி யாமல் மயங்கிவிட்டார். அதன்பின் இரட்டை வாய்க்கால் எனும் இடத்திலுள்ள படையின ரின் தற்காலிக மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அவரது உயிர் பிரிந்தது.
- அவரது உயிரற்ற உடல் இரட்டை வாய்க்கா லில் இருந்து வவுனியா வைத்தியசாலைக் குக் கொண்டு செல்லப்பட்டது. பின் வவு னியா புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் கொழும்பிற்கு எடுத்துவரப்பட்டு, கொழும் பில் 26 மே மாதம் திருப்பலியின் பின் தகனம் செய்யப்பட்டது. அருட்தந்தை சறத்ஜீவன் இலங்கையில் முதன்முதலில் உடல் தகனம் செய்யப்பட்ட அருட்தந்தையாவார். அருட் தந்தை சறத்ஜீவனின் அஸ்தி பின்னர் விமானம் மூலமாக யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு, திருப்பலியின் பின்னர் யாழ்ப்பா ணம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் 30ம் திகதி மே மாதம் 2009 அன்று நல்ல டக்கம் செய்யப்பட்டது. அருட்தந்தை சறத் ஜீவன் நினைவாக இரண்டு புத்தகங்கள் அவரது குருத்துவத்தோழர்களினால் வெளி யிட்டு வைக்கப்பட்டுள்ளன.

அருட்தந்தை சறத்ஜீவனின் வாழ்வில் சில குறிப்புக்கள்:

- யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயிலும் போது குருளைச் சாரணராகவும், பின்னர் சாரணராகவும், சாரணத்தலைவரா கவும் இருந்தார்.
- 1978 - 1988 வரை யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் பீடப்பணியாளராகப் பணி புரிந்தார்.

- 1978 - 1993 வரை யாழ் புனித மரியன்னை பேராலயத்தின் பாடகர் குழாமில் அங்கம் வகித்தார். அத்துடன் ஓகன் இசைக்கருவி வாசிப்பவராகவும் இருந்தார்.
- யாழ் புனித மரியன்னை பேராலயத்தின் இளைஞர் உருவாக்கல் இயக்கத்தில் அங்கத் தவராக இருந்து பல வருடங்கள் பணியாற் றினார்.
- அருட்தந்தை சறத்ஜீவன் ஒரு சிறந்த குருதிக் கொடையாளி. ஒவ்வொரு 6 மாதாகாலத்தில் அல்லது ஒவ்வொரு வருடமும் 1993ம் ஆண் டிலிருந்து தொடர்ச்சியாக குருதி வழங்குவ பராக இருந்துள்ளார். அத்துடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிரந்தர உறுப் பினராகவும் இருந்துள்ளார். Life Member of Sri Lankan Red Cross Society: ID serial no.B9/1-129/93 since the year 1993.

குறிப்பு: அருட்தந்தை சறத்ஜீவனின் நினைவாக அவரது 1ம் வருட நினைவுநாளில் (18-05-2010) உருத்திரபுரம் பற்றிமா அன்னை ஆல யத்தில் நினைவுச்சின்னம் ஒன்று அவருடன் பயின்ற குருத்துவ சகோதரர்களினால் அமைக்கப்பட்டுள்ளது.

அருட்தந்தை சறத்ஜீவனின் நினைவாக இரண்டு முன்பள்ளிகள் கட்டப்பட்டுள்ளன. ஒன்று மாங்குளத்தில் அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் அவர்களாலும் மற்றயது புங்குடுதீ வில் அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் அவர் களாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. புங்குடுதீவிலுள்ள சறத்ஜீவன் தரிசனம் முன் பள்ளிக்கான நிரந்தரக் கட்டிடம் திரு. அஜித் ஜோண்பிள்ளை அவர்கள் இயக்குனராகவுள்ள சண்பீம் நிறுவனத்தினால் 2016ம் ஆண்டு அமைக்கப்பட்டு 2017 மாசித் திங்கள் 11ம் நாள் திறந்து வைக்கப்பட்டது.

அருட்தந்தை சறத்ஜீவன் அவர்களின் நினை வாக அருட்தந்தை சறத்ஜீவன் நிதிதிட்டம் 2013ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. உருத்திரபுரம் பங்கு, இரணைப்பாலைப் பங்கு, குமுழமுனைப் பங்கு, மற்றும் முல்லைத்தீவுப் பங்கைச் சார்ந்த 23 மாணவர்களுக்கு மாதாந்தம் கல்விக்கான உதவியாக ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வரு கின்றது. இதற்காக பல நல்ல உள்ளங்கள் உள் நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் நிதி உதவி செய்து வருகின்றார்கள்.

அருட்தந்தை சறத்ஜீவனின் உயிருடல் அழிந்தாலும் அவரது உருத்திரபுரம் பங்கு மக்களினதும் அவர் பணியாற்றிய முல்லைத் தீவு மற்றும் ஏனைய பங்கு மக்களினதும் அவ ரது குருத்துவ தோழர்களினதும் நண்பர்களின தும், அவரது தாயார், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர் அனைவரினதும் மனங்க ளில் அவர் என்றும் வாழ்ந்து கொண்டிருக் கின்றார்.

நிதீதிலா மரியாம்பிள்ளை
அருட்தந்தை சறத்ஜீவனின் சகோதரி



REV. FR. SARATHJEEVAN - A PROFILE

- Born in Bogawanthalawa to M. Mariampillai and Cassilda Mariampillai 1968 May 13
- Lived in Kaddukaran kudiyiruppu, Thalaimannar 1969 - 1973
- St. Patrick's College, Jaffna. Gr.1 to A/L Science 1974 - 1987
- Technical College, Jaffna. Draftsmen Course 1990 - 1993
- Joined St. Martin's (Minor) Seminary, Jaffna 1993 March 1 to 1994 August 22
- Joined St. Francis Xavier's Seminary, Columbuthurai, Jaffna 1994 September 25

  Mass exodus - displacement of the Seminary and it functioned at Madhu Church 1995

  Displacement of the Seminary to Pandeteruppu 2000
- Completed Philosophy studies at St.Francis Xavier's Seminary 1997
- Completed Theology studies at St. Francis Xavier's Seminary 2002
- Diaconate. Appointed as Deacon at St.Antony's Church, Passaiyoor, Jaffna 2002 November 07

  Appointed as Deacon at St.Henry's College, Illavalai
- Ordination to the priesthood at St.Mary's Cathedral, Jaffna 2003 May 14
- Assistant Parish Priest at OLR Church, Jaffna with Rev.Fr. M.E.Pius 2003 May - November

- Assistant Parish Priest at St. Peter's Church, Mullaitivu with Rev. Fr.James Pathinathan 2003 Dec - 2005 February
- Tsunami disaster and he lost all his belongings to tsunami and was displaced to St.Antony's Church, Mamulai, Mullaithivu. Shifted again to St. Anne's Church at Selvapuram. 2004 December 26
- Parish Priest at Our Lady of Fatima Church, Uruthirapuram and was in charge of 7 sub-stations: Jeyanthinagar, Konavil, Unionkulam, Kanagapuram, 155th Mile Post, Thirunagar, Ootupulam 2005 March to 2009
- and was JRS Coordinator, Vanni (Kilinochchi & Mullaitivu Districts)

  Displaced from Uruthirapuram (the Church of Our Lady of Fatima) and moved to 18 different places.Uruthirapuram'! Suthanthirapuram'! Kalmadhu'! Puthuku diyiruppu'! Iranaipalai'! Valaignarma dam'! Moonkilaru'! Udayarkaddu'! Mulli vaikkal.Within these areas he got displa ced 18 times until his death.
- Died: According to the post-mortem report:"Death due to Myocardial Infrac tion subject to Malnutrition"at Irraddaivai kal, Mullaithivu. 2009 May 18, Monday 3.00 p.m.

Some moments in his last days:

- Not enough food or water for several months and the last few days nothing left to eat or drink and the days mostly spent in the bunker.
- On the 13th of May was his 41st birthday and the last day he spoke to me and said "Acca you know we are in the bunker and cannot say mass". Offering Mass was his first priority in his life and anyhow he offered mass on the 14th on his 6th Ordination Anniversary. This was his last Holy Mass offered and he himself was an offering on 18th May 2009.
- On the last day when he was coming out with others he was kicked on his chest and was assaulted.
- He walked through the scattered dead bodies and injured people for about 4 miles.
- He said "I cannot bear this" several times repeatedly. Twice he felt pain in the chest, unable to walk alone and carried by 2 persons on shoulder and finally he was holding a bed-sheet, tightly against his chest to control his pain. He was taken to Irraddaivaikal make shift hospital and was announced dead at 3.00 p.m.
- His body was brought from Irraddai vaikal'to Vavuniya hospital'! Funeral mass at St.Antony's Church, Vavuniya'! funeral mass Again in Colombo and cremated on 26th May 2009'! the ashes were brought to Jaf-fna by flight'! Ashes were buried at St. Mary's Cemetary Jaffna on 30th May 2009.

In Sara's life:

- In his school days at St.Patrick's College, he was in the Cubs and the Scouts.
- He was an Altar Server in his boyhood at St.Mary's Cathedral, Jaffna (1978 - 1988)
- He was in the choir of St.Mary's Cathedral, 'Morning Star', from 1978 - 1993 and was also an organist.
- He was a member of the 'Youth Formation Group', St.Mary's Cathedral Jaffna.
- Sarathjeevan was a regular blood donor and donated blood every six months or every year and was a Life Member of the Sri Lankan Red Cross Society: ID serial no.B9/1-129/93 since the year 1993.

Nithila
Sara's sister

அருட்தந்தை சறத்ஜீவன் நிதியம்

இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க் காலில் மக்களுக்காகத் தன்னுயிர் ஈந்த அருட் தந்தை சறத்ஜீவனின் நினைவாக அருட்தந்தை சறத் ஜீவன் நிதித்திட்டம் 2013ம் ஆண்டு அவரது குடும்ப அங்கத்தவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், 2014ம் ஆண்டு ஆனி மாதம் 10ம் திகதி முன்னாள் யாழ் ஆயர் மதிப்பிற்குரிய தோமஸ் சவந்தரநாயகம் ஆண்டகை மற்றும் யாழ் ஆயர் மதிப்பிற்குரிய ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண் டகை அவர்களின் அனுமதியுடன் அருட்தந்தை கி.ஜோ.ஜெயக்குமார் அடிகளாரை இயக்குனரா கக் கொண்டு "அருட்தந்தை சறத்ஜீவன் நிதியம்" உத்தியோகபூர்வமாக இயங்கத் தொடங்கியது. அருட்தந்தை ரவிராஜ் பொருளா ளராகவும், நித்திலா அம்மையாரை செயலா ளராகவும், அருட்தந்தை கிருபாகரன், நிக் கொலின் சாமிநாதர் அம்மையார் ஆகியோரை அங்கத்தவராகவும் கொண்ட ஐவர் கொண்ட நிர்வாக அமைப்பால் இந்நிதித்திட்டம் நிர்வ கிக்கப்பட்டு வருகின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வறு மைக்கோட்டில் வாழும் மக்களுக்கும் பல பணி களை இந்நிதியம் ஆற்றிவருகின்றது. பாட சாலை மாணவர்கள், மாற்றுவலுவுள்ளவர்கள் மற்றும் பெண்கள் தலைமைத்துவமுடைய குடும்பங்கள் என பலர் இந்நிதியத்தின் மூலம் பயனடைகின்றனர்.

அருட்தந்தை சறத்ஜீவனின் குடும்ப அங்கத் தவர்கள், உறவினர்கள், நண்பர்கள், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் என பலரும் இந்நிதியத்திற்கு நிதியுதவி அளித்து வருகின் றார்கள். அவர்களுக்கு எமது நன்றிகள்.

Fr. Sarathjeevan Foundation

In memory of Rev.Fr.Sarathjeevan who was martyred for his people in the last days of Sri Lankan civil war, Fr. Sarathjeevan Foundation was established by his family members in the year of 2013. Initially the Foundation supported six students in Urithrapuram Parish of Kilinochchi district, by providing 1,000 Rupees monthly. The Foundation started to function officially from June 10, 2014 with the patronage of retired Bishop of Jaffna Rt. Rev. Dr. Thomas Soundaranayagam and the Jaffna Bishop Rt. Rev. Dr. Justin Gnanaparagasam. The five member Board has Rev. Fr. C. J. Jeyakumar as the director, Rev. Fr. T. Raviraj as Treasurer, Ms. M. Nithila as Secretary and Rev. Fr. T.J.Kirubakaran and Ms. Nicolin Saminathar as Board members.

With the benevolent donations from multi-national contributors the Foundation is now supporting war affected and vulnerable people. The Foundation is helping the students, who were disabled in the civil war and women headed families.

We thank our donors and Reverend Fathers and Board Members administerting the Foundation.

Activities of Fr. Sarathjeevan Foundation

Activity	Place	Benefactor
1. Educational Assistance for 23 students	Uruthirapuram, Mullaitivu, Kumulamunai, Mullaitivu	Rev. Fr. R. Nesarajah, Rev. Fr. M. David, Dr. J.C.P. Rajendra, Dr. Jaiman Emmanuel, Australia. Ms. Nithila Mariampillai Dr. Mrs. Ananthy Kamalanathan, UK, Mr. Fenton Alphonse, Canada
2. Educational Assistance for 15 Students	St. Charles MV, Jaffna	Mr. Vadivel, UK Mr.& Mrs. Logan & Marie, USA
3. Educational Assistance for 14 Students	UrumpiraiSaiva Tamil Vidiyalayam	Mr. Vadivel, UK Mr. Christopher Family, Canada
4. Medical Equipment and Air mattress	SAVE ACT Home, Kilinochchi	Canada Catholic Charismatic members,
5. Educational Materials for students affected by war	Kilinochchi	Canada Catholic Charismatic members
6. Wash rooms for differently abled persons	Mallavi, Vavuniya, Mamulai, Mannar	Mr. Vadivel, UK
7. Livelihood Assistance	Kilinochchi	Mr. Vadivel, UK
8. Washing Machine, TV, Mosquito nets for Special Need Children	ASSETS, Kilinochchi	Mr.& Mrs. Dr. Mahendrarajah, UK, Girija Family, UK

நினைவுச் சின்னங்கள்

அருட்தந்தை சறத்ஜீவன் நினைவாகவும், இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களின் நினைவாகவும் இரு நினைவுச் சின்னங்கள் உருத்திரபுரம் பற்றிமா அன்னை ஆலயவளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவையே போரினால் இறந்தவர்களுக்காக முதலாவதாக அமைக்கப் பட்ட நினைவுச் சின்னங்களாகும். அருட்தந்தை சறத்ஜீவனின் முதலாம் வருடநினைவு நாளான 2010ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி குருத்துவ தோழர்களால் இவை நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டன.

சறத்ஜீவன் முன்பள்ளி மாங்குளம்

மறைந்த அருட்தந்தை சறத்ஜீவன் ஞாப கார்த்தமாக 2010ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி சறத்ஜீவன் முன்பள்ளி மாங்குளத்தில் திறந்துவைக்கப்பட்டது. புனித அக்கினேசம் மாள் முன்னாள் ஆலய பங்குத்தந்தை அருட் பணி ஜேம்ஸ் பத்திநாதர் அவர்களின் முயற் சியாலும் ஜேசு சபை அகதிகள் புனர்வாழ்வு நிறு வனத்தின் அப்போதைய இயக்குனர் அருட் பணி ஜோயல் அடிகளாரின் நிதிப்பங்களிப்புட னும் ஒரு ஓலைக் கூரையால் வேயப்பட்ட முன் பள்ளி அமைக்கப்பட்டது. பின்னர் கியூடெக்-கரித்தாஸ் வன்னி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் அருட்பணி அ. ஜோ. யாவிஸ் அடிக ளாரின் முயற்சியால் நிரத்தரக் கட்டடமாக அமைக்கப்பட்டு 2012ம் ஆண்டு ஆடி மாதம் 31ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. மாங் குளத்தில் அமைந்துள்ள சறத்ஜீவன் முன் பள் ளியை நல்லாயன் சபைக் கன்னியர்கள் தற் போது நிர்வகித்து வருகின்றார்கள்.

சறத்ஜீவன் தரிசனம் முன்பள்ளி புங்குடுதீவு

புங்குடுதீவு முன்னாள் பங்குத்தந்தை அருட் பணி லியோ ஆம்ஸ்ரோங் அவர்களால் சறத் ஜீவன் தரிசனம் முன்பள்ளி 2010ம் ஆண்டு ஆரம்பித்துவைக்கப்பட்டது. ஓலைக் கூரையால் வேயப்பட்ட இம் முன்பள்ளிக்கான நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதற்கு 'சன் பீம் பவுண் டேசன்' நிறுவனத்தின் இயக்குநர் திரு அஜித் ஜோண்பிள்ளை அவர்கள் முன்வந்தார். 2016ம் ஆண்டு கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2017 தை மாதம் நிர்மாணப்பணிகள் நிறைவு பெற்றன. புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயத் திற்கு அருகாமையில் அமைக்கப்பட்ட சறத் ஜீவன் தரிசனம் முன்பள்ளி, மேன்மை தங்கிய ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண் டகை அவர்களால் 11-02-2017 அன்று ஆசீர்வ தித்து திறந்து வைக்கப்பட்டது. அருட் தந்தை இயூஜின் பிரான்சிஸ், கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அவர்கள் இந் நிகழ் விற்கு தலைமை தாங்கினார். சண் பீம் பவுண்டேசன் நிறுவனம் ஏழு மில்லியனுக்கும் (ரூபா. 7, 000, 000) மேற்பட்ட நிதி உதவிகளை இக்கட்டட நிர்மாணத்திற்கு வழங்கியுள்ளது. முன்பள்ளி சிறுவர்களுக்கான சத்துணவு, பாட சாலை உபகரணங்கள், பாட சாலைச் சீருடை கள் என்பனவும் சண் பீம் பவுண்டேசன் நிறுவ னத்தினால் வழங்கப்படுகின்றது.

“போரின் எல்லையில் ஒரு முல்லை”
“உயிர்ப்பில் உயிர்ப்புள்”

பாரில் உதித்த பரமனுக்கு உகந்த மலர் ஒன்று பாதியில் வாடியது. போரில் பதிந்த மாசுறு செயல்கள் மனதை வாட்டியது. “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற எண்ணம் பதிந்தது, யாதொரு மொழியும் பேசாதுயிர் அங்கு அமைதியில் உறைந்தது.

உலகச் செல்நெறிகள் உவப்பற்றவை என்பதை உணர்ந்து, உடலையும், உள்ளத்தையும் உருவாக்கியவருக்கு அர்ப்பணித்து வாழ்ந்த உத்தம குருவே **அமரர். அருட்தந்தை.சறத்ஜீவன்** அடிகளார். மனித மாண்பின் புனிதத்தை மனதில் கொண்டு மாண்புறு பணிகள் புரிந்த வள்ளல். வளமையும் வறுமையும், வாழ்வும் தாழ்வும், மலர்ச்சி யும் உதிர்வும், கொண்ட மானிட வாழ்வை சிரமதாய்க் கொண்டு வாழ் ந்து, வாழ்வித்தவர். போரின் முழக்கம் புடை சூழ்ந்த, வன்னி வாழ் மக்களின் வாழ்வில், இவர் பணி பல்வேறு வகையில் பரிணமித்தமை போற்றுதற்குரியது. ஏற்றத்தாழ்வற்ற எளிமையான வாழ்வால் மக்களின் மனதில் மாற்றத்தைக் கொணர்ந்திடும் புனிதர். அமைதியான பேச்சு, ஆழமான அர்ப்பணிப்பு, தாழ்மையான உள்ளம், தயை நிறைந்த தேடல், ஆன்மீகத்தின் ஊற்று, அன்பு நிறை வாழ்வு என்பவற்றால் மக்களைக் கவர்ந்த மானிட முதல்வர் என்று கூறினாலும் மிகை யில்லை.

சிறுவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாய், கரம்பற்றி நடந்திட்ட கருணா கரன். இளைஞர் வாழ்வை இதமாய் அரண் செய்யும் உளவியலாளன்.

இல்லறத்தோர் நல்லறம் புரியத் துணை புரியும் பிரசங்கி. இடர் நிறைந்தோர் இல்லம் தேடிப் பணி செய்திட்ட உயிர்நாடி. முதியோர் மனம் மகிழ்ந்திடத் தடம் பதித்திட்ட தருநிழல். பெற்றோரை இழந்த பிள்ளைகளின் உயிர்நாடி. கற்றோர் மனம் கொள்ளும் கருத்தாளன். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டின் சிகரமாய் வாழ்ந்தவர்.

அனைவரையும் போல் அன்புப்பணி புரிந்தாலும், துணிவுடன் இறுதிவரை அனாதைப் பிள்ளைகளோடு துணைநின்று காத்து வந்திட்ட அருட்குரவர்களில் இவரும் ஒருவர். " பாதர் எங்களோடேயே இறுதி வரை இருந்து எங்களடியிலே இறந்தார்" என உள்ளம் உருகிட உரைத்திட்ட உடனிருந்த யாருமற்ற மழலைகளின் அன்பு மொழி அவரின் அர்ப்பணத்தை அகிலமறியச் செய்கின்றது.

" வையத்து வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்பதற்கொப்ப, வாழ்ந்திட்ட காலம் சிறிதெனினும், சூழ்ந்திட்ட துன்பம் பெரிதெனினும், ஆன்மீகத்தில் உறுதியாக அடியெடுத்து வைத்த அண்ணல் இவர். அண்டிவந்தோர்க்கு அடைக்கலம் கொடுத்திட்ட புனிதர். பாரின் வாழ்வதை பக்குவமாய் வாழ்ந்திட்டதனால் வானுறையும் தெய்வத்திலும், வாழும் மக்கள் எம் உள்ளத்திலும் வாடா மலராய் மணம் பரப்பிடுவார் என்பதிலும் ஐயமில்லை. இவர் மரணித்தாலும் போர் முடிவுற்ற அமைதியின் உயிர்ப்பில், பார் நிறைவுறும் பரமனின் உயிர்ப்பில்பணிபுரிந்திட்ட ஆன்மீக உயிர்ப்பில் உயிர்ப்புள்ளாகிடுவார்.

போரின் எல்லையில் பூத்த முல்லையாய் என்றும் பரமனுக்கும், பாரிலுள்ளோர்க்கும், மணம் வீசிடுவார்.

அருட்தந்தை நேசராஜா
பங்குத்தந்தை
புனித மரியன்னை பேராலயம்

" பாதர் எங்களோடேயே இறுதி வரை இருந்து எங்களடியிலே இறந்தார்" என உள்ளம் உருகிட உரைத்திட்ட உடனிருந்த யாருமற்ற மழலைகளின் அன்பு மொழி அவரின் அர்ப்பணத்தை அகிலமறியச் செய்கின்றது.

Sara…. Sarathjeevan…

My memory lanes goes back to late 1970s…

It was during this time young Sara joined the St. Aloysius Altar servers Association of St. Mary's Cathedral, Jaffna. I was already a senior member of the association in those years. We recruit boys from the parish families to join the association to serve in the alter of the Lord. One day, his mother brought him to the parish priest and he was accepted as the member of the association. When he joined us he was studying in the primary school. Though he was small in age but in body structure he was big. Among the boys of his age, he looked bigger and stronger.

Born and brought up from a very pious and God fearing family, young Sara too was a very godly, devoted and spiritual person. He never missed the daily holy masses in the morning. He was not only participating in the mass but also wanting to serve at the altar daily. He comes early to the church and stays in the sacristy, expecting someone will miss the mass, so that he can serve the mass that day. Even at that young age, he was not playing inside the church. He was serious, prayerful and respectful to the Eucharistic Lord while inside the church. Disciplining him was not at all a matter since he kept thorough discipline inside and outside the church. To encourage the young altar servers to serve the mass enthusiastically, a point system was in place in the association. He always wanted to get the highest points in the month

for serving the mass. He never missed any special occasions like wedding masses and funeral celebrations. He was also interested in other activities like cleaning the church, helping in decorations, attending all the meetings and practices on time.

The dedicated service to the Lord and his people, which began at the very early stage as an altar server in the holy church was accomplished at the holy battle front.

It is true in the history of the church that many priestly vocations come from the altar servers. Sara was no exception to it. It happened in the life of Sara too. The foundation for the priesthood was laid when he started to serve at the altar for masses. I was not in the country when Sara joined the seminary. I met him after so many years as a seminarian. To my surprise, it was the same Sara, who was an altar server few years ago. I couldn't find much change in his figure and life. God had prepared him for his ministry since he was a kid.

I am sure, the childhood experiences and convictions had helped him to become a dedicated and committed priest. He found God in people and in every service he did, which he learnt from the time he was an altar server. The values he treasured from the time of serving at the altar for masses, has become well rooted life principles to him. That is why he was able to be with the suffering people and journey with them till the last. The dedicated service to the Lord and his people, which began at the very early stage as an altar server in the holy church was accomplished at the holy battle front.

I have no doubt, on that victorious day, when people experienced humiliation and defeat on earth, the Lord would have welcomed him saying... "Come Sara, you who are blessed by my Father, inherit the kingdom prepared for you from the foundation of the world." Sara..may you enjoy the presence of the Lord.

Rev. Fr. Rohan Dominic CMF

சிறந்த சாரணர் தலைவன்

அனைவராலும் சறா என அன்பாக அழைக்கப்படும் அமரர் அருட் பணி மரியாம்பிள்ளை ததேயுஸ் சறத்ஜீவன் அவர்கள் இனமத வேறு பாடு பாராது சமூகப் பணியிலும், ஆன்மீகப் பணியிலும் சிறந்து விளங் கிய ஓர் உத்தம கத்தோலிக்க குருவாகத் திகழ்ந்தவர். இவர் போர்க்கால சூழ்நிலையில் மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களது இன்ப, துன்ப நிகழ்வுகளில் பங்கு கொண்டு முக்கிய பணியாற்றியவர் என்பதை வன்னி மக்கள் அவர்மீது கொண்டுள்ள பாசமும், மரியாதையும் எடுத் துக்காட்டுவதாக இன்றும் அவர்களது நினைவில் நிலைகொண் டுள்ளமையை பலரது சாட்சிய வாழ்வினூடாக அறிகின்றேன்.

இவற்றிற்கெல்லாம் அடி அத்திவாரமாக இருந்தது அவரது குடும்பப்பின்னணியும், புனிதபத்திரிசியார் கல்லூரி வாழ்க்கையும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆசி ரியர் என்றவகையிலும் குறிப்பாக சாரண ஆசிரியர் என்றவகையிலும் நான் அவரை நன்கு அறிவேன். இவர் ஆரம்பப் பிரிவில் குருளைச் சாரண ராகவும், தொடர்ந்து சாரணராகவும் இருந்து செயற்பட்டவர். அவரது இளவயதில், ஆசிரியப் பணிபுரிந்த அவரது பெற்றோரின் வழிகாட்டல் ஒரு சிறந்த சமூக சேவையாளனாக எதிர்காலத்தில் மிளிர வழிகோலியது. இவரது முன்னேற்றத்திற்கு இவரது பெற்றோர் உறுதுணையாக இருந்து வழிகாட்டினர்.

இவரது பண்பான நடத்தை, தன் உடன் மாணவர்களுடன் பழகும் விதம், அவர்களை வழிநடத்தும் முறை என்பதை நான் நன்கு அறிவேன். ஆசிரியர்களையும், மூத்தோரையும் கனம் பண்ணி கீழ்ப்படிந்து வாழ்ந்

துவந்தார். இதன் நிமித்தம் தொடர்ந்து வந்த காலத்தில் சாரண துருப்பு தலைவனாக (troop Leader) இருந்து சாரணர்களை வழிநடத்தினார். துருப்புதலைவனாக இருக்கும் காலத்தில் "தயாராய் இரு" (Be prepared) என்ற சாரண விருது வாக்கிற்கேற்ப தன் வாழ்க்கையை வழக்கப் படுத்திக் கொண்டார். அத்துடன் "சமூகப் பணி செய்தல்" என்ற சாரண விதிக்கேற்ப சமூக சேவைகளில் தானும் ஈடுபட்டு தன்னுடன் சேர்ந்த ஏனைய சாரணர்களையும் ஈடுபடுத்தி முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். இதன் நிமித்தம் பலருக்கு வழிகாட்டியாகவும் இருந்து அனைவருடனும் நட்புடன் பழகி அனைவரது பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றவர். சாரண இயக்கத்தில் அதிகூடிய சின்னமான ஜனாதிபதிசின்னத்தைப் பெறுவதற்கு முன் பெற வேண்டிய சின்னமாகிய பச்சைநாடா (Green Code) சின்னத்தைப் பெற்றார். ஆனாலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஜனாதிபதி சின்னத்தைப் பெற தடைஏற்பட்டது. ஆனாலும், அவரது எதிர்கால வாழ்க்கைக்கு அவரது சாரண இயக்கத்தில் பெற்ற பயிற்சியும், வழிகாட்டல்களும் பெற்றோரின் வழிநடத்தலும் பெரிதும் உதவியாக இருந்தது. ஏனெனில் அவரது பெற்றோர் தம் மகனின் சேவை மனப்பான்மைக்கும், சமூகப்பணிக்கும் கல்லூரி வாழ்க்கையிலேயே பெரிதும் உதவியாக இருந்தனர். இவ்வுதவியானது அவர் பின்னர் துறவறவாழ்க்கையை தெரிந்து தம் பணியைத் தொடர அவர்களது அரவணைப்பும், அனுமதியும் பக்கபலமாக இருந்தது.

அத்துடன், பேராலயப்பங்கில் பீடப்பணியாளராக இருந்து சிறப்பாகப் பணிவோடு பணியாற்றியதோடு பாடகர் குழாம் உறுப்பினராக, இசைமீட்டுபவராகவும் இளையோர் அமைப்பின் துடிப்புள்ள உறுப்பினராகவும் செயலாற்றியுள்ளார். மேலும், தன் குருத்துவ வாழ்வில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டான குருவாக இருந்து போரின் இறுதிக்கட்டத்தில் மக்களோடு மக்களாக வாழ்ந்து பல வழிகளிலும் தன்னை ஒறுத்து யேசுபிரானின் போதனைக்கேற்ப தனக்கென வாழாதுதம் மக்களின் நல்வாழ்விலும் பாதுகாப்பிலும் அக்கறை கொண்டு அவர்களது துன்ப துயரங்களைத் தாமும் சுமந்து இறுதிவரை தன் நலம் கருதாது தம்மை நம்பிவந்த மக்களைக் கைவிடாது அவர்களைப் பாதுகாப்பாக கரை சேர்த்துத் தன்பணி முடிந்துவிட்டது என இறைவன் கையில் தன் ஆன்மாவைக் கையளித்து தன் மக்கள் மனதில் இடம் பிடித்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவர் விட்டுச்சென்ற பணியை பலர் அவரது பெயரால் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். நல்லவர்கள் என்றும் அழிவதில்லை மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

துருப்புதலைவனாக இருக்கும் காலத்தில் "தயாராய் இரு" (Be prepared) என்ற சாரண விருது வாக்கிற்கேற்ப தன் வாழ்க்கையை வழக்கப் படுத்திக் கொண்டார்.

D.C.C. சந்தியாப்பிள்ளை
(புனித பத்திரிசியார் கல்லூரியின்
ஓய்வுநிலை சாரணஆசிரியர்)

உண்மைச் சீடன்

மனிதராகப் பிறந்த எமக்கு மனித மரணங்களையும் இழப்புக்களை யும் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எனினும் ஒரு மனிதனின் வாழ்வு அர்த்தம் பெறுகின்ற போது அது எமக்கு ஆறுதலளிக்கிறது. அருட் தந்தை சறத்ஜீவனின் மரணமும் எமக்கு துன்பியலைத் தருகின்ற போதும் அவர் வாழ்ந்த வாழ்வை அறிகின்ற போது எமக்கு ஆறுதல ளிக்கின்றது. முன்மாதிரியாக அமைகின்றது.

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவ்வுலக வாழ்வி னூடாக மறுவுலக வாழ்வுக்கான பயணத்தில் ஈடுபடுகின்றான். அருட் தந்தை சறா தன் மறுவுலக வாழ்வுப் பயணத்தை வேகமாக ஓடி இலக்கை அடைந்திருக்கின்றார். அதற்கு அவரது தியாகம் நிறைந்த வாழ்வும் துன்புற்ற தமிழ் மக்கள் மீது அவர் கொண்ட தீராத அன்பும் காரணமாகிவிட்டன. இதற்கான பயிற்சியும் துணிவும் அவருக்கு எப்படிக் கிடைத்தது?

அருட்தந்தை சறத்ஜீவன் எழில் கொஞ்சும் யாழ்நகரின் மத்தியில் அன்னைமரியின் பெயரில் அமைந்த பேராலயப் பங்கில் திரு. திருமதி மரியாம்பிள்ளை தம்பதியினருக்கு மூன்றாவது புதல்வராகப் பிறந்தவர். அன்பும், பண்பும், பாசமும் நிறைந்த இவரது குடும்பம். பெற்றோர் தம் ஐந்து பிள்ளைகளையும் ஒழுக்கத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்கச் செய்ததோடு, சேவை மனப்பான்மையுடையவர்களாயும் வளர்த்தெடுத்தனர். ஐந்து பிள்ளைகளும் பேராலயப் பங்கில் பீடப்பணி யாளர் சபையிலும், பாடகர் குழாமிலும், இளைஞர் உருவாக்கல் இயக்கத்திலும் இணைந்து பணி செய்தமை குறிப்பிடத்தக்கது.

அருட்தந்தை சறா புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்றார். புனித பத்திரிசியார் அயர்லாந்து தேசத்திலே நற்செய்திப் பணி புரிந்து அந்நாட்டு மக்களை கிறிஸ்தவர்களாக்குவதில் முன்னின்று உழைத்தவர். நற்செய்திப் பணிபுரிந்த புனித பத்திரிசியார் பெயர் கொண்ட கல்லூரியில் கல்வி கற்றதினால் மறைபணி புரிய வேண்டும் என்னும் ஆர்வம் சிறுவயதில் இருந்தே அவருக்குள் உருவாகிவிட்டது. எனவே பேராலயப் பங்கின் பீடப்பணியாளர் சபையில் இணைந்து இறைபணி செய்யத் தொடங்கினார். பனியாக இருந்தாலென்ன மழையாக இருந்தாலென்ன திருப்பலியில் உதவ சறா பின்னிற்பதுமில்லை, நேரம் பிந்துவதுமில்லை.

இசையில் ஆர்வமும், ஆற்றலும் கொண்ட சறா பாடகர் குழாமில் இணைந்து சிறப்பாகப் பணியாற்றினார். நாளாந்த திருப்பலியில் ஓகன் வாத்தியக் கருவியை இசைத்த அருட்தந்தை 'மோர்னிங் ஸ்ரார்' என்னும் பாடகர் குழாமுக்கு தலைமை தாங்கி வழிநடாத்தினார்.

சறத்ஜீவனை பேராலயப் பங்கு இளைஞர் உருவாக்கல் இயக்கத்தில் நான் சந்தித்தேன். இளைஞர்களைஆன்மீக, உளவியல் ரீதியில் சிறந்தவர்களாக உருவாக்குவதே அவ் இயக்கத்தின் நோக்கம். அருட்தந்தை சறா ஓர் அங்கத்தவராக இருந்த போது அவருடன் இணைந்து செயல்பட்ட நாட்கள் மறக்கமுடியாதவை. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் நடைபெறும் இளைஞர் உருவாக்கல் கூட்டமாக இருந்தாலென்ன, ஞாயிறுதின திருப்பலிபாடல்களாக இருந்தாலென்ன, ஒவ்வொரு வருடமும் நடைபெறும் ஆன்மீக, உளவியல் கருத்தரங்காக இருந்தாலென்ன மற்றும் Rally, Easter Bazzar செயற்பாடுகளாக இருந்தாலென்ன அனைத்திலும் அருட்தந்தை சறாவின் பங்களிப்பு சிறப்பாக இருக்கும். நண்பர்களோடு ஒற்றுமையாகப் பழகுவதோடு தனது கருத்துக்களைப் பகிர்ந்து அனைவரையும் சிறந்த முறையில் வழிநடத்துவார். விளையாட்டில் அவர் 'w' இருந்த போதிலும் நண்பர்களுடன் இணைந்து விளையாடுவதற்கு பின்னிற்க மாட்டார்.

இளைஞர் உருவாக்கல் இயக்கத்தால் ஒவ்வொரு வருடமும் இரண்டு நாள் ஆன்மீக, உளவியல் கருத்தரங்கு நடைபெறும். யாழ் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது ஏனைய அயற் பங்குகளிலும் இருந்து இக் கருத்தரங்கில் இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் பங்குகொள்வர். இலட்சனை விளக்கம், குழுவுக்கு உண்மையாய் இருத்தல், தன்னம்பிக்கை, ராஜாராணிப் போட்டி என அனைத்து நிகழ்வுகளையும் சறா சிறப்பாக நடாத்துவார். இவ்வாறு பேராலயப்பங்கில் சறாவின் செயற்பாடுகளைக் கூறிக்கொண்டே செல்லலாம். இவற்றைப் பற்றி எழுதும் போது அமரர் அருட்தந்தை கில்லறி ஜெபநேசன் அடிகளார் நினைவுக்கு வருகின்றார். அடிகளாருக்கு வலதுகை போன்று செயல்பட்டவர் சறா.

தம் உயிரை மேலாகச் கருதும் எவரும் இயேசுவின் சீடத்துவத்தில் பங்கு கொள்ள முடியாது என்ற உண்மையை நன்குணர்ந்து கொண்ட அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளார் கிறிஸ்துவின் வழி நின்று பணிசெய்து சீடத்துவத்திற்கு அர்த்தம் கொடுத்திருக்கின்றார். அவர் ஒரு வழிகாட்டி.

ஒரு முறை அருட்தந்தை ஜெபநேசனின் ஆலோசனையின்படி யாழ் மறைமாவட்டத்திலுள்ள இளைஞர் ஒன்றியங்களையெல்லாம் இணைத்து இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினால் மாபெரும் 'Rally' நிகழ்வு ஏற்பாடு

செய்யப்பட்டது. இதனை வெற்றிகரமாக நடாத்தி முடிக்க சறா பாரிய பங்களிப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

யாழ் மறைமாவட்டத்தை பங்கேற்கும் திருச் சபையாகக் கட்டியெழுப்ப ஒவ்வொரு பங்குகளை யும் வட்டாரங்களாகப் பிரிக்கவேண்டும் என ஆயரால் அறிவுறுத்தப்பட்டது. அதற்கான செயல்வடிவம் முதன் முதலில் பேராலயப் பங்கி லேயே நடந்தேறியது. இப் பொறுப்பினை அருட் தந்தை ஜெபநேசன் அடிகளார் சறாவிடமே வழங்கியிருந்தார். அவரும் பேராலயப் பங்கை பதினேழு வட்டாரங்களாகப் பிரித்து பங்குமக் கள் சிறப்பாக செயற்பட வழிசமைத்தார்.

சறாவுக்குள் தூய்மையானஆன்மீக வாழ்வு இழையோடுவதை அவதானித்த அருட்தந்தை ஜெபநேசன் சறாவின் குருத்துவ வாழ்வுக்கு வித்திட்டு வழிகாட்டினார். இதனை சறா குரு மடத்தில் இணைந்து கொண்டபின்னரே நண்பர் களால் அறிய முடிந்தது. சறா குருமடம் சென்ற பின்னர் அவருடன் நெருங்கிப்பழகும் சந்தர்ப் பம் குறைந்துவிட்டது. எனினும் விடு முறையில் வரும் போதெல்லாம் நண்பர்களை சந்தித்து உறவாட அவர் மறக்கவில்லை.

பணிகளிலெல்லாம் சிறந்தபணி குருத்துவப் பணி. ஆண்டவர் இயேசு இவ்வுலகில் தன்னிட மாக நின்று பணி புரிய குருத்துவத்தை ஏற்படுத் தினார். கோதுமை மணியினால் உருவாக்கப் பட்ட அப்பத்தை திருப்பலியில் தனது உடலாக மாற்றக்கூடியவல்லமையை இயேசுக்கிறிஸ்து குருக்களுக்கு வழங்கினார். இத்தகைய மேன் மையான குருத்துவப் பணி மூலம் இறைபணி புரிய சறத்ஜீவன் தன்னை அர்ப்பணமாக்கினார். அருட்தந்தையின் குருத்துவ வாழ்வு கரடு முரடானது. முட்கள் நிறைந்தது. எனினும் அனைத்தையும் அவர் மகிழ்வுடன் விரும்பி ஏற்றுக்கொண்டார்.

தம் உயிரை மேலாகச் கருதும் எவரும் இயேசுவின் சீடத்துவத்தில் பங்கு கொள்ள முடியாது என்ற உண்மையை நன்குணர்ந்து கொண்ட அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளார் கிறிஸ்துவின் வழி நின்று பணிசெய்து சீடத்துவத் திற்கு அர்த்தம் கொடுத்திருக்கின்றார். அவர் ஒரு வழிகாட்டி.

நண்பன்
T. றங்கன்

அமரர் சறா அடிகள் - என் அன்பு நண்பன், என் நெஞ்சை விட்டகலா இனியவன்

சின்னஞ் சிறுவர்களாய் நாம் ஓடியாடித் திரிந்த காலகட்டத்தில் 1975ம் ஆண்டு புனித பத்திரிசியார் கல்லூரியில் நானும் சறாவும் தரம் ஒன்றில் கல்விகற்கும் பாக்கியம் பெற்றோம். அந்த நாளிலே நட்பென்னும் மலர் மொட்டு எங்கள் இதயத்தில் துளிர் விட்டது. காலப்போக்கில் அந்த மொட்டு விரிந்து உடன் பிறவா சகோதரனாக நண்பனாக பூத்துக் குலுங்கியது.

கல்விகற்கும் அந்த இனிய நாட்களில் சறாவும் நானும் பற்பல நிகழ்வுகளிலும் சாரணர் இயக்கத்திலும் சேர்ந்து ஒன்றாகச் செயற் பட்டோம். காலங்கள் ஓடின. நாம் இருவரும் கல்வியில் முன்னேறி வளர்ந்தோம். உயர் தரக் கல்விவரை எம் நட்பு மலராகக் கொடியேறி சுகந்தம் வீசின. நாம் இருவரும் இரு துருவங்களாகச் சென்றோம். நான் பல்கலைக்கழகம் செல்ல எனது நண்பன் சறா இறைவனுக்குத் தொண்டு செய்ய குருத்துவக் கல்லூரிக்குச் சென்றார்.

உள்ளம் இறைவனோடு ஒன்றிணைய உலகப் பற்றெல்லாம் துறந்து யேசுவின் சீடராகப் பணியாற்றக் குருத்துவக் கல்லூரியில் சேர்ந்து அமைதியாக அடக்கமாக கல்விகற்று ஓர் உன்னத குருவாக திரு நிலைப்படுத்தப்பட்டார். அதை அறிந்து நான் அடைந்த மகிழ்ச்சியை என்னவென்று சொல்வேன். கோயில் கடமைகளிலும் மக்களை ஞான ஒளியிலும் வளர்த்தெடுக்கவும் சறா செய்த சேவை அளப்பரியது.

நான் மேற்படிப்புக்காக கனடா சென்று வசிக்கும் நிலை ஏற்பட்டது. என் தாயார் நோயுற்று யாழ்ப்பாணம் மருத்துவமனையில் உயிருக்கு

போராடிக் கொண்டிருந்த வேளை ஓடோடி வந்து அவஸ்த்தைப் பூசுதல் கொடுத்ததும், என் தாயாரின் மரண இறுதிச் சடங்கில் பங்கு கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காக திருப் பலி ஒப்புக்கொடுத்து என்னோடு சேர்ந்து வேத னைப் பட்டதையும் என்னால் மறக்க முடியவில்லை. இதுவே சறாவும் நானும் சந்தித்த கடைசி நாளாகும்.

வன்னிப் பெருநிலப்பரப்பிலே சேவைசெய்ய அனுப்பப்பட்டார். கொடியபோர் அரங்கேறியது. மக்கள் படும் அவலங்களையும் வேதனைகளை யும் கண்டு உள்ளம் உருகி அவர்களைக் காக்க வும், அபயம் அளிக்கவும் சறா தன்னை முழு மையாக அர்ப்பணித்து சேவை செய்த வேளை அந்த நெருக்கடி நேரத்தில் என் சறா காலமா னதை அறிந்து என் கண்ணீரைப் பூக்களாய் சொரிந்து அழுதேன்.

பூவும் உறங்குது, பொழுதும் உறங்குது என் சறாவின் பசுமையான நினைவுகள் என்னில் உறங்காது என்றும் நிலைத்திருக்கும்.

அவரின் ஆன்மா மோட்சவீட்டில் அமைதி பெற இறைவனை வேண்டுகின்றேன்.

அன்புநண்பன்
மக்ஸ்வெல் சாமியாப்பிள்ளை

எனி தாயார் நோயுற்று யாழ்ப்பாணம் மருத்துவ மனையில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த வேளை ஓடோடி வந்து அவஸ்த்தைப் பூசுதல் கொடுத்ததும், எனி தாயாரினி மரண இறுதிச் சடங்கில் பங்கு கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக் கொடுத்து எனினோடு சேர்ந்து வேதனைப் பட்டதையும் எனினால் மறக்க முடியவில்லை.

அகத்தின் அழகை முகத்தில் கண்ட முதியவர்

அருட்தந்தை சறத்ஜீவன் சிறுவனாக இருந்த காலத்தில் அவர் வாழ்வில் இடம்பெற்ற ஒரு சம்பவம் இது.

அப்போது நாங்கள் யாழ் மரியன்னை பேராலயத்தின் சேவை செய்யும் சிறுவர் அமைப்பில் இருந்தோம். நத்தார் காலம். நிறைய வேலைகள் இருந்தன. வேலைகளை முடித்து விட்டு எல்லோரும் வீடுகளுக்குப் போகும் வழியில் எம்மில் ஒருவரின் வீட்டுக்கு சென்றோம். அந்தக் குடும்பமே பேராலயத்திற்கு தமது பங்களிப்பை செய்யும் குடும்பமாக இருந்தது. அவர்களில் முதல் புதல்வன் இன்று அருட் தந்தையாக சேவகம் செய்கிறார்.

அந்த வீட்டிற்கு நாங்கள் சென்ற போது அங்கு ஒரு முதியவர் வந்தி ருந்தார். அவர் திருமணமாகாதவர். நகைச்சுவையாகக் பேசுவார். ஒரு வருடைய முகத்தைப் பார்த்து அவர் எப்படிப்பட்டவர் என்று சொல்லும் திறமை அவருக்கு இருந்தது. அந்தக் குடும்பத்தினரைத் தவிர எம்மில் எவருக்கும் அவரைத் தெரியாது. எங்கள் நண்பர் அவரிடம் எங்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் நாம் எப்படிப்பட்டவர்கள் என்றும் சொல்லும் படி கேட்டுக் கொண்டார். அவர் ஒரு கதிரையில் அமர்ந்திருந்தார். எங் களை ஒவ்வொருவராகத் தமக்கு முன்னே அழைத்து எங்கள் முகத்தைப் பார்த்து எங்களைப் பற்றி உண்மையாகவும் அதே வேளை நகைச் சுவையாகவும் சொல்ல ஆரம்பித்தார். அவரது ஆற்றலைப் பார்த்து நாங்கள் வியந்து போனோம்.

சறத்ஜீவனுக்கு அப்போது பன்னிரண்டு வயது இருக்கும். அவரது முறை வந்தது. சறத்ஜீவன் முதியவர் முன்னே வந்து தனக்கே உரிய அழகான புன்னகையுடன் நின்றார். முதியவர் அவரைக் கூர்மையாகப் பார்த்துவிட்டு மிகவும் பவ்வியமாக அவரை சிறுது பின்னே சென்று நிற்குமாறு கேட்டுக்கொண்டார். சறத்ஜீவன் சிறுது பின்னே நகர்ந்த பின், முதியவர் தனது கதிரையில் இருந்து இறங்கி சறத்ஜீவனின் முன் முழங்காலில் நின்றார். நாம் திகைத்துப் போனோம். சறத்ஜீவனைப் பார்த்து தன்னை ஆசீர்வதிக்கும் படி கேட்டுக்கொண் டார். பின்னர் எழுந்து கதிரையில் மீண்டும் அமர்ந்து,"இவர் கடவுளுக்குச் சேவை செய்யப் பிறந்தவர். புனிதமானவர்." என்று எங்களுக்குச் சொன்னார். அந்த முதியவரின் வார்த்தைகளை நாம் புரிந்துகொள்ள முப்பது வருடங்கள் கடக்க வேண்டி இருந்தது.

யூட் சூரியஜீவன்

முதியவர் அவரைக் கூர்மையாகப் பார்த்துவிட்டு மிகவும் பவ்வியமாக அவரை சிறுது பின்னே சென்று நிற்குமாறு கேட்டுக்கொண்டார். சறத்ஜீவன் சிறுது பின்னே நகர்ந்த பின், முதியவர் தனது கதிரையில் இருந்து இறங்கி சறத்ஜீவனின் முன் முழங்காலில் நின்றார். நாம் திகைத்துப் போனோம். சறத்ஜீவனைப் பார்த்து தன்னை ஆசீர்வதிக்கும் படி கேட்டுக்கொண் டார். பின்னர் எழுந்து கதிரையில் மீண்டும் அமர்ந்து, “இவர் கடவுளுக்குச் சேவை செய்யப் பிறந்தவர். புனிதமானவர்.” என்று எங்களுக்குச் சொன்னார்.

சறாகுஞ்சு

சறாவைப் பற்றி எழுதுங்கள் என்று சொன்ன பொழுது எதை எழுதுவது என்று தோன்றியது. 41 வருட வாழ்க்கைச் சம்பவங்களை எழுதுவதென்றால் எத்தனை புத்தகம் எழுதவேண்டுமோ தெரியாது.

சறாவின் முழுப்பெயர் ததேயுஸ் சறத்ஜீவன். நாங்கள் சறாக்குஞ்சு என்றுதான் கூப்பிடுவோம். அப்படிக் கூப்பிடுவது அவருக்கு விருப்பம். ஒரு சின்னச் சிரிப்பு அவருடைய முகத்தில் இருக்கும். முதலில் இருந்தே சில நிகழ்வுகள் எங்கள் குடும்பத்தில் அவருக்கு ஒரு வித்தியாசமான சிறப்புக்கள் இருந்தன. நாங்கள் நால்வரும் பிறந்த இடம் யாழ்ப்பாணம் ஆனால் சறா பிறந்த இடம் பொகவந்தலாவ. என்னுடைய சகோதரர் களின் பெயர் மற்ற இருவருக்கும் ஜூட்சென் என்று தொடங்கி ஜீவன் என்று முடியும். சறாவுக்கு ததேயுஸ் என்பதுடன் சரத்ஜீவ என்று பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்திலும் அடையாள அட்டையிலும் குறிப்பிடப்பட்டி ருக்கும்.

சிறு வயதில் இருந்தே மற்றவர்களை ஈர்க்கும் தன்மை அவரிடம் இருந்தது. சிறுவயதில் இருந்தே பயம் தெரியாது. வித்தியாசமான வேலைகள் செய்வது, அதாவது த்ரில் ஆன விளையாட்டுக்களில் விருப்பம். 6 அல்லது 7 வயது இருக்கும் போது உயரத்தில் இருந்து பாய்ந்து நெற்றி உடைந்து இழைபோடப்பட்டது. தையல் போடும்போது நோகவில்லையா என்று கேட்டபோது இல்லை என்று சிரித்தான். அந்த வயதில் அம்மாவிடம் சொன்னார் தான் 'Marine Engineer' ஆக போகிறேன் என்று. அம்மா சொன்னார் 'கடல் பயணம் ஆபத்து

நிறைந்தது. வேறு படிக்கலாம்' என்று. அதற்கு அவர் ஆபத்து என்றால் என்ன? என்று கேட்டார். அம்மா அதற்கு 'ஆபத்துக்கள் வந்தால் சில வேளைகளில் அதில் அகப்பட்டு செத்து விடு வீர்' என்று. சறா சொன்னார் 'செத்தா என்னம்மா' இன்று அந்த வார்த்தைகள் உண்மையாகப் போய்விட்டது.

பின்பு பாடசாலைக் காலத்தில் பீடப்பரிசார ராகவும் பாடகர் குழாமிலும் சிறு வயதிலேயே சேர்ந்து விட்டார். பத்து வயதிலேயே ஒரு குருவாகப் போவதற்கு அம்மாவிடம் கேட்டார். அப்பாவுக்கும் அதில் விருப்பம் இருந்தது. அம்மா படித்து வளர்ந்த பின் போகலாம் குருவாகப் போனால் இறுதிவரை அதில் உறுதி யாக இருக்கவேண்டும் என்று சொன்னார். பின்பு O/L எடுத்தபின்பும் கேட்டார். அம்மா சொன்னா A/L படித்து முடித்தால் ஒரு முதிர்ச்சி வரும் அதன் பின்னர் போகலாம் என்று. ஏனென்றால் அம்மாவின் கருத்துப்படி ரீன்ஏஜ் கடந்த பின்பு எடுக்கும் முடிவு காத்திரமானதாக இருக்கும் என்பதால். தம்பி A/L படிக்கும் பொழுதே அப்பா காலமானார். போர்க் காலமும் கடுமையாகிப்போய்விட்டது. மூத்த மூவரும் மடம், படிப்பு, வேலை என்று வீட்டை விட்டு வெளியேறிவிட கடைசி இரண்டு பேரும் (சறாவும் சக்தியும்) வீட்டிலே அம்மாவுடனும், அம்மம்மாவுடனும் இருந்தார்கள். பொம்பர், ஹெலி என்று கூட்டமாக வரும் பொழுது தம்பி மார் இருவரும் ஆளுக்கொரு சைக்கிளில் அம்மாவையும் அம்மம்மாவையும் மட்டும் ஏற்றிக்கொண்டு நெடுந்தூரம் போய்விட்டு தாக்குதல் ஓய்ந்த பின்பு வீட்டிற்கு வந்து சேர்வார்கள். நான் அந்தநேரம் யாழ்ப்பாணம் மடத்தில் இருந்தேன்.

சறாக்குஞ்சுக்கு இது கஷ்டமான காலமாக இருந்தது. போருக்குள் சக்தியை தனியே வீட்டில் விட்டுவிட்டு செமினரிக்கு போகத்தயங் கினார். இறுதியாக அம்மாதான் சறாகுஞ்சைக் கூப்பிட்டு சொன்னார் போர் இப்படியே நீண்டு கொண்டு தான் இருக்கப்போகிறது. இறை அழைத்தலைப் புறக்கணியாமல் செமினரிக்கு போகும்படியாக. தம்பியின் காலகட்டத்தில் செமினரியும் கூட இடம்பெயர்ந்து மடுவில் போயிருக்க வேண்டிய கட்டம் வந்திருந்தது.

சறாகுஞ்சு கோபப்பட்டு ஒரு நாளும் சிறுவய திலும் சரி, வீட்டிலும் எப்போதும் நான் காண வில்லை. நல்ல நகைச்சுவை பண்புடையவன். எல்லோருடனும் பாசமானவர். பயப்படமாட் டார். நல்ல பக்தியும் விசுவாசமும் கொண்டவர். நான் தளர்ந்து போனால் 'அக்கா விசுவாசமா இரக்கா, கடவுளால் எல்லாம் முடியும். அவரால் முடியாதது ஒன்றுமில்லை' என்று சொல்வார். எல்லாவற்றையும்; சுமைகள், துக்கங்களைத் தாங்கிக்கொள்வார். பகைவர்கள் இல்லை. நிறைந்த அமைதியும் பொறுமையும் உள்ளவர். நல்ல முதிர்ச்சியான மனப்பக்குவம் நிறைந்த வர். கண்ணியமானவர் நிறைய நண்பர்கள் உள்ளவர். நம்பிக்கைக்குரியவர். பெரியவர் களையும், மேலதிகாரத்தில் உள்ளவர்களையும் மதிப்பவர். மன்னிக்கும் மனப்பான்மையுடை யவர். மிகவும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே இவ்வாறு இருப்பார்கள்.

சறாக்குஞ்சு ஒரு குருவாகவும் நான் ஒரு அருட்சகோதரியாகவும் இருந்ததினால் ஒரு புரிந்துணர்வோடு பலவற்றையும் கதைத்துக் கொள்வோம். எங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை, எங்களின் குடும்பம், கஷ்டங்கள், துன்பங்கள், மகிழ்வுகளைப் பகிர்ந்து கொள்வோம். எங்க ளுக்குள் ஒரு உடன்படிக்கை: அதாவது, எங்களுக்கு மேலுள்ளவர்களின் அனுமதியுட னும் புரிந்துணர்வுடனும் சறா தான் வன்னியிலி ருக்கும் போது என்னை யாழ்ப்பாணத்திலும், தனக்கு 6, 7 வருடங்கள் முடியும் போது தான் யாழ்ப்பாணத்துக்கும் இடம் மாற்றலாகி செல்லும் போது என்னை வேறு மாவட்டங்க ளுக்கு இடம்மாற்றலாகிச் செல்லலாம் என்று கதைத்துக்கொண்டோம். 6 வருடங்களில் வாழ்வு கனவாகி விட்டது. 2008ம் ஆண்டு மார் கழி மாதம் வவுனியாவில் சறாவை கடைசியாகச் சந்தித்தேன். சறா என்னிடம் கேட்டது "அம்மா

சறாகுஞ்சு கோபப்பட்டு ஒரு நாளும் சிறுவயதிலும் சரி, வீட்டிலும் எப்போதும் நான் காணவில்லை. நல்ல நகைச் சுவை பண்புடையவன். எல்லோருடனும் பாசமானவர். பயப்படமாட்டார். நல்ல பக்தி யும் விசுவாசமும் கொண்டவர். நான் தளர்ந்து போனால் 'அக்கா விசுவாசமா இரக்கா, கடவுளால் எல்லாம் முடியும். அவரால் முடியாதது ஒன்றுமில்லை' என்று சொல்வார். எல்லாவற்றையும் சுமைகள், துக்கங்களைத் தாங்கிக் கொள்வார். பகைவர்கள் இல்லை. நிறைந்த அமைதியும் பொறுமையும் உள்ளவர். நல்ல முதிர்ச்சியான மனப்பக் குவம் நிறைந்தவர். கண்ணியமானவர் நிறைய நண்பர்கள் உள்ளவர். நம்பிக் கைக்குரியவர்.

வையும் அக்காவையும் பார்த்துக்கொள்வாயா அக்கா?" என்றுதான். அப்போதே அவருக்கு ஏதோ தெரிந்திருக்கிறது.

கடவுளால் முடியாதது ஒன்றுமில்லை, ஆனால் கடவுள் ஏனோ சறாக்குஞ்சை காப் பாற்ற நினைக்கவில்லை. ஆனாலும் சறாக் குஞ்சுடன் வாழக்கிடைத்த இந்த 41 வருட வாழ்க்கைக்கும் ஆண்டவருக்கு நன்றி. இது மட்டுமல்ல சறாக்குஞ்சை ஆண்டவர் நல்ல இடத்தில் தான் வைத்திருப்பார். அதற்கும் நன்றி. சறாக்குஞ்சுவின் பரிந்துரையால் எவ்வ ளவோ நன்மைகள், நண்பர்கள், உதவிகள். அவருடைய பரிந்துரையால் கிடைத்த நன்மை களுக்கும் இறைவனுக்கு நன்றி. எனக்கு நல்ல பெற்றோரையும், பெற்றோருடைய பெற்றோரை யும் தந்து பாசமான, தாங்குகின்ற சகோதரங் களையும் தந்த கடவுளுக்கு நன்றி. சறாக்குஞ்சு உடலுடன் அக்கினியுடன் சங்கமாகிவிட்டார். ஆனால் உயிராக, உணர்வாக எங்களுடன் தான் இருக்கின்றார், வாழ்கின்றார்.

அருட்சகோதரி ம. மரினா
திருச்சிலுவை கன்னியர்

எனது சகோதரன் சறா அண்ணா...

எனது குடும்பத்தில் சறாஅண்ணா நாலாவது குழந்தையாக மலர்ந்தார். அவருக்கு அடுத்தவன் நான். வயதில் இருவருக்கும் சிறிய இடைவெளிதான். ஆதலால் பால்ய வயது தொடக்கம் பருவ வயது வரை இருவரும் கைகோர்த்து பாடசாலை, ஆலயம், ஆலயப்பணிகள் போன்று அனைத்து இடங்களுக்கும் ஒன்றாகச் செல்வது வழமை. கடந்து சென்ற நாட்களின் பசுமையானஅனுபவங்கள் என் நெஞ்சில் ஆழப்பபதிந்து...

சிறுவயது தொடக்கம் இறைபராமரிப்பு அவருக்கு இருப்பது நாம் அறிந்து கொண்ட உண்மை. அதன் பயன் இறை அழைப்பின் குரலுக்கு செவிமடுத்து நல்ல பங்கைத் தெரிந்தெடுத்தார். பிறர் பணியில் தன்னை இணைத்துக் கொள்வதில் அலாதிபிரியம் கொண்டு வாழ்ந்தவருக்கு இறைஅழைப்பு மென்மேலும் ஊக்கம் கொடுத்தது எனலாம். ஊரார் பணியில் ஊக்கமுடன் உழைத்தவர் தனது வீட்டவர் கடமையிலும் கண்ணாயிருந்தார். எனது திருமண நிகழ்வில் தந்தையாக, நண்பனாக பல பணிகளை அன்புடன் நிறைவேற்றினார். எமது முதற் குழந்தையின் ஞானத்தந்தையாக அவரை ஏற்படுத்த விரும்பியவேளையில் மறுக்காது ஏற்றுக்கொண்டது மட்டுமன்றி தன் கடமையையும் பொறுப்புடன் செய்தார். பல பணித்தளங்களில் அவர் பாதத்தடங்கள் பலவித நோவை யும் சுமைகளையும் தாங்கி உறுதியுடன் பதித்ததை நான் அறிவேன். முல்லைத்தீவு பணித்தளத்தில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந் தவேளை சுனாமியின் அகோரத்தில் அவலங்களுக்கு உள்ளானோரின் ஆறுதலாகவிருந்தார். உருத்திரபுரம் புனித பற்றிமா அன்னை ஆலய

மும் அதன் உப பங்குகளுமே அவரது இறுதிக் களப்பணி என்பது யாருக்குமே கற்பனைக் கெட்டாத கசப்பான உண்மை. 2008ம் ஆண்டு சித்திரை மாதம் எமது கடைசி மகனுக்கு திரு முழுக்கு வழங்குவதற்கான ஆசையுடன் யாழ் வந்து எம்முடன் கலந்துறவாடி இனிதே விடை பெற்றுச் சென்றார். இதுவே நான் அவரை இறுதியாகச் சந்தித்தது.

இறுதிக்கட்டபோரில் தன்மக்களுக்கு தம் பணி அவசியம் என்பதை உணர்ந்து அவர்கள் செல்லுமிடமெல்லாம் தானும் சென்று வேண்டிய தேவைகளில் துணைநின்றார். வழி தெரியாத ஆடுகளின் ஆயனாக கற்களிலும் முட்களிலும் தன் உடல் வதைபட்டாலும் தன் பணியினை சீரியமுறையில் திறம்பட நிறைவேற்றியவர். இறைசித்தப்படியே தன் மக்களுக்காக உயிர் கொடுத்தார். அவரின் பிரிவு எம் உள்ளங்களில் தாங்கமுடியாத சுமைகளைத் தந்தாலும் அவரின் வாழ்வு எம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கின்றது என்பதில் ஆறுதல டைகின்றோம். சாந்தி...

ம.யூ. சக்திஜீவன்

இறுதிக்கட்டபோரில் தன்மக்களுக்கு தம் பணி அவசியம் என்பதை உணர்ந்து அவர்கள் செல்லு மிடமெல்லாம் தானும் சென்று வேண்டிய தேவை களில் துணைநின்றார். வழி தெரியாத ஆடுகளின் ஆயனாக கற்களிலும் முட்களிலும் தன் உடல் வதை பட்டாலும் தன் பணியினை சீரியமுறையில் திறம்பட நிறைவேற்றியவர். இறைசித்தப்படியே தன் மக்களுக் காக உயிர் கொடுத்தார்.

“அக்கா, நான் சறா கதைக்கிறன்”.

“அக்கா நான் சறா கதைக்கிறன்”. என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கும் சறாவின் குரல். அதை எப்போது இனிமேல் கேட்பேன்?

ஒவ்வொரு முறையும், தொலைபேசியில் தொடர்பு கொண்டு “அக்கா நீ எப்படி இருக்கிறாய்” என்று என்னைக் கேட்கும் அன்புத் தம்பியின் குரலை நான் கேட்கமாட்டேன் என்று நினைக்கும் போது எழும் துக் கத்தை சறா தீர்க்கமாக எடுத்த தீர்மானத்தை நினைத்து தேற்றிக் கொள்வதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

கடைசியாக சறா என்னுடன் கதைத்தது 13.-05.2009 அவருடைய பிறந்தநாள் அன்று காலை 8.00 மணியளவில் தான். அன்றுதான் நாம் கடைசியாகக் கதைக்கும் சில மணித்துளிகள் என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. “அக்கா நான் சறா கதைக்கிறன்” என்று சொன் னவர், தொடர்ந்தும், “அக்கா இங்கு நிலைமை தெரியும் தானே, பூசை வைக்க முடியவில்லை” என்றார். நான் பதிலுக்கு சொன்னேன். “இங்கு பெரியகோவிலிலும் ஆச்சிரமத்திலும் நன்றிப்பூசை ஒப்புக் கொடுத் தோம்”. சிறிது நேர உரையாடல் தான். மே மாதத்திலேயே பிறந்த நாளும், குருத்துவ நாளும் எம்மைவிட்டுப் பிரியும் நாளும் வரும் என்று சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

பத்திரமாக வருவான் என்று பார்த்திருந்தேன்... பார்க்கமுடியாமலே போவான் என்று நினைத்திருக்கவில்லை. ஆனாலும் அன்றைய நாள் 18-05-2009, காலையிலிருந்தே என் உள்ளுணர்வு உணர்த்திக்கொண்டி ருந்தது. மனம் அமைதியின்றித் தவித்தது. எனக்குத் தெரிந்த சில குருக் களைத் தொடர்புகொண்டு செபிக்குமாறு கேட்டுக்கொண்டேன்.

பின்னேரம் 4.00 மணியளவில், எல்லோரும் பாதுகாப்பாக வந்துவிட்டார்கள் என்ற செய்தி கிடைத்தது. வழமையாக நான் செல்லும் பெரிய கோவிலிலுள்ள நற்கருணை ஆண்டவர் ஆலயத்திற்கும் சென்று நன்றி சொன்னேன். ஆனாலும், மாலை 6.00மணிக்கு அருட்சகோதரி கிளியா வந்து பேரிடியான செய்தியைச் சொன்னார் சறா மாரடைப்பு வந்து **மூன்று மணிக்கு** இறந்துவிட்டதாக. இன்றும் அந்த செய்தி பொய்யாக இருக்கக்கூடாதா என்று மனம் ஏங்குகிறது. சுனாமி வந்த போது முல்லைத்தீவில் அனைத்து உடைமைகளையும் இழந்தார். அன்று இறைவன் அவரை பாதுகாப்பாக அழைத்து வந்தார். இன்று உருத்திரபுரத்திலிருந்து முள்ளிவாய்க்கால் வரை 18 இடங்களில் இடம் பெயர்ந்த மக்களையும் வழிநடத்தி தானும் வழிநடந்து இறைதிட்டத்திற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த சறாவின் அர்ப்பணவாழ்விற்கு இறைவனுக்குத் தான் நன்றி கூறவேண்டும். இறைவழிநடத்தல் சறாவோடு என்றும் இருந்தது.

"அக்காவுக்கும் அம்மாவுக்கும் அங்கு இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள். இங்குள்ள குழந்தைகளையும் மக்களையும் பாரும்"

இன்றும் சறாவைப்பற்றி பலரும் வந்து சொல்கிறார்கள். தங்களின் கடைசி நாட்களின் போது, அவருடன் இருந்த நாட்களைப்பற்றி. சறா தீர்மானம் எடுத்தால் தீர்க்கமான முடிவைத்தான் எடுப்பார். கடைசிநாட்களில், அவரின் அன்பு அக்காவையும் அம்மாவையும் விட, அங்குள்ள மக்கள் தான் தனக்கு முக்கியம் என்று உருத்திரபுரத்தைச் சேர்ந்த மறைஆசிரியர் ஒருவருக்குத் தெரிவித்துள்ளார். "அக்காவுக்கும் அம்மாவுக்கும் அங்கு இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள். இங்குள்ள குழந்தைகளையும் மக்களையும் பாரும்" என்று.

"என்னைவிடத் தம் தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் என்னுடையோர் என கருதப்படத் தகுதியற்றோர். என்னைவிடத் தம் மகனிடமோ மகளிடமோ மிகுதியாய் அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்" "தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்" "தம் உயிரைக் காக்க விரும்புவோர் அதை இழந்துவிடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ, அதைக் காத்துக் கொள்வர்" (மத் 10: 34).

சறா ! நீ எடுத்தது ஒரு தீர்க்கமான முடிவு, அதற்கு நான் தலைவணங்குகின்றேன்

உன் அன்பு அக்கா, நிதீதிலா

Rev. Fr. Sarathjeevan

It is with much satisfaction and happiness I heard that a Book is being released about Fr. SarathJeevan. I was also happy that I was asked to write about my memories of him. I write the little bit that I know of him: I did not know much about his childhood or about his adolescence. But as a young priest I knew something about his mother. Her mother was an ardent Lay Apostle and contributed by her active participation in many Lay Apostolate activities. I know that she had a very good reputation among the other Lay Apostolate workers and they admired her a lot.

Later on, I came to know Fr. Sarathjeevan when he was a young brother Priest to me. Even at that age I knew that he was a very social minded person and that he carried out his responsibilities in a way that would be beneficial to the brother priests. I had seen him functioning as a very responsible person taking care of the basic needs of the Retreatant Fathers at Pandaterrippu. It was joy to see him going about his duties to satisfy the requirements of the Fathers. His loud shouts and his big figure and his lovely smile and laughter always made his presence felt anywhere--- though it was Annual Retreat time.!!!!

Later I was Parish Priest of Mullaitivu --- a very big parish with many challenges after the war and I was after a very serious sickness and major operation. Naturally the parish started suffering, since often I was away for Medical Clinics and Check

ups and Medication.. During this period My neighboring brother priests advised the bishop that I should be given an assistant or else the parish will die or I will die.. Our Former Bishop kindly consented to send an Assistant Parish Priest to Mullaitivu. With his arrival in the parish Fr. Sarath came into my life. And by that kind decision of the Bishop, the parish survived and was rejuvenated and personally I also survived.

He was a young priest who was Multi Talented: He was a good singer, and a good Organ player. So naturally our Choirs of different churches improved in their singing, and parish worship became meaningful and beautiful. I came to know that as a youngster he was an Altar Boy and later on he was the leader of the Altar boys in his Home Parish- the Cathedral Parish. His experience as a dedicated young Altar Boy and the understanding that he had of the Altar Boys , made him a very loving and strict Moderator and appropriate guide of the Altar boys and the Altar Boys Association. His past experience in the Cathedral Youth group and his natural qualities made him quite acceptable to the Youth Association in the parish and the Youth rallied around him for all parish activities. The recapture of the Mullaitivu Town by the LTTE a few years previously, had caused severe damage to St .Peter's Church and Presbytery as well as to the whole Town. The Ordination to Priesthood of three Deacons from Mullaitivu area was also fixed to be in Mullaitivu St Peter's Church .The repairs to the Church, and to the Presbytery and rebuilding of the Kitchen and Staff Quarters, etc had caused heavy expenditure, and the parish was in debts. His approach to the issue was such that he motivated the Parishioners to bear the cost of the repairs , painting etc, and we were able to cover good amount of the debts. He also played major role in building the New Church of St Anne in Chilawathai, Mullaitivu. The people of Chilawathai still remember him as the one who built their new Church.

He was a co worker who never shirked responsibilities that was entrusted to him or expected from him. Even after heavy work, when he should have rested, he would immediately accept any new assignment that needed to be attended to, cheerfully. I remember during the period of the Christmas Carols, he visited all the families in the Mullaitivu Town along with the Youngsters and blessed the houses of the Parishioners too. This involved keeping up till very late in the night. But the next day he will be at Morning Prayers and Mass as usual.

The Tsunami of 2004 that hit Mullaitivu left a trail of the whole town being destroyed, and a total of more than three thousand people killed, and many more injured, of whom more than half was our Catholic Parishioners. He along with Frs . Jude Amalathas and Robinson Joseph, played a major role in burying many hundreds of Bodies of the dead, daily in mass graves and conducting burial Services and consoling the Survivors. It was a deeply depressing emotional experience where our concept of God as a loving and Protecting father was questioned by the traumatised people and others . He was a pillar of strength in that tragic situation for all the people.

Then he was transferred and his Talents were made use of by UruthiraPuram Parish in Kilinochchi and Jesuit Refugee Services. He played a major role in the activities of

JRS as the Co-ordinator of Kilinochchi District during the height of the War. He was absolutely marvelous in his work during that period. Giving hope to the War affected people of Kilinochchi District by various JRS programmes, especially to Children was the main thrust of his services. During the warperiod there was an International Seminar in India in which he was expected to participate. The then Bishop gave him the option to decide whether to serve in the country and Kilinochchi District or go to India for the Seminar. He decided to be in the country with the war traumatized people and serve them.He could have saved himself from all that was part of the war. But he did not. That is Fr. Sara, as we used to call him. In his memory we have named the newly built Nursery school "Fr. SarathJeevan Nursery" at Mankulam.

He was truly a lovely and decent human being, a very faithful Christian who identified himself with Christ and a True Priest who offered his life as a sacrifice like Jesus did, to serve the People. For me, he is a Saint who gave his life as a witness and as a true symbol of the Love of Christ for the People..

The next phase of my memories about him is about his services at Valayan Madam – Mulliwaikkal area. Hundreds of thousands of people had gathered in that small stretch of land . All the Priests and Sisters with their institutions and people and officers and children in their immediate care were there in and around St. Mary's Church Compound. Food items were very scarce and very expensive and very dangerous to search for. Artillery Shells could fall at anytime among the people, or the Bombers could come at any time and could cause absolute destruction and chaos and death at any time. Nobody liked to get out of their bunkers which gave some protection from Shells and Bombs and Long Range Rifle shots.

It is in this background that Fr. Sara offered himself to search for food items for Fathers and Sisters and their protégés. Every morning he will go out in his motorcycle searching for food at various places and he will bring back at least some food items for us. It was a very dangerous service ,but he took that risk to provide us with food items which could be found. He did that joyfully to feed the hungry.

The next period of my memory of him is from hearsay evidence of people who were with him at the end as I had left Valayan Madam after being injured. The last three days of the battles in Mulliwaikkal were really horrible, as the military had closed in close to LTTE positions. Anybody found there were considered as LTTE and the army personnel were trigger happy. The people trapped between the warring parties could not get out of the bunkers even to get their food or cook them or even fetch their drinking water. Then on the orders of the Military higher ups, Fr. Sara and other Fathers and Sisters and their protégés were allowed to get out of the bunkers and proceed towards Army lines. Fr. Sarath after exhaustion of many sleepless nights, lack of

food and water, collapsed on the way. A Tractor was provided by the Army to transport him and others to the Army lines. On the wayHe was admitted to the Field Medical Tin Shed and put on saline. After the third bottle of Saline he died in the hands of one of my helpers who was with him till the end.

When the body was brought to Vavunia , many attempts were made to send the Body to Jaffna for her mother and family members and the clergy and people to pay their last respect to this great priest. But it was refused by the authorities . So finally it was decided that the body will be cremated away from his home and that his ashes will be sent to Jaffna. I had the most traumatizing privilege to switch on the incinerators which cremated his body into ashes.

Fr. Sarathjeevan is no more with us physically. But the memories of great human being, who was a Christian and a Priest are with all of us who knew him , loved him and were loved by him. He was truly a lovely and decent human being, a very faithful Christian who identified himself with Christ and a True Priest who offered his life as a sacrifice like Jesus did, to serve the People. For me, he is a Saint who gave his life as a witness and as a true symbol of the Love of Christ for the People..

Fr. James Pathinathan.
25.02.2017

இறந்தும் வாழும் அருட்தந்தை சறத்ஜீவன்

மாட்டீன் லூதர் கிங் என்பவர் அமெரிக்க வரலாற்றையே புரட்டிப் போட்ட ஒரு இறை ஊழியர். கறுப்பின மக்கள் வெள்ளை இன மக்களால் அடிமைகளாக நடத்தப்பட்டு, கறுப்பின மக்கள் தங்களுடைய உரிமை களை இழந்த நிலையில் வாழ்ந்துகொண்டிருந்தபொழுது இந்த கறுப்பின மக்களுடைய விடுதலைக்காக அமைதியான முறையில் போராடியவர்தான் மாட்டீன் லூதர் கிங். அவர் தன்னுடைய வாழ்க்கை யிலே அமெரிக்காவின் எதிர்காலத்திற்கான ஒரு கனவைக் கண்டார். ஒரு காலம் வரும் அப்பொழுது அமெரிக்காவில் வாழுகின்ற அடிமை களுடைய பிள்ளைகளும், அடிமை உரிமையாளர்களுடைய பிள்ளைக ளும் ஒன்றாக ஒரு மேசையில் இருந்து உணவருந்துவார்கள் என்கின்ற ஒரு கனவைக் கண்டார். தன்னுடைய மக்களுடைய அடிமைத்தனமான நிலைமையைக் கண்டு, அமைதியான முறையில் அந்த மக்களுக்காகத் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்த இவர், தன்னுடைய தியாகத் தினூடாக ஒருநாள் இந்தக் கனவு நனவாகுமென்று அவர் உறுதியாக நம்பினார்.

1968 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி அமெரிக்காவில் மெம் பிஸ் என்கின்ற இடத்திலே தன்னுடைய இறுதிப் பேச்சை அவர் நிகழ்த்தி னார். அமெரிக்க வரலாற்றிலே மிக முக்கியமாகப் பேசப்படுகின்ற இந்த உரையிலே அவர் கூறிய வார்த்தைகள் 'இப்பொழுது எது நடக்கப் போகின்றதோ என்று எனக்குத் தெரியவில்லை. எதிர்காலத்திலே மிகவும் கடினமான நாட்கள் இருக்கின்றது என்பது எனக்குத் தெரியும். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஏனென்றால் நான் மலையின்

உச்சிக்குச் சென்றிருக்கின்றேன். மற்ற மனிதர் களைப் போல எனக்கும் அதிக காலம் வாழ வேண்டும் என்கின்ற ஆசை இருக்கின்றது. நீண்ட காலம் வாழ்வது என்பது ஒரு நல்ல விட யம். ஆனால் நான் இப்பொழுது அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. இப்பொழுது நான் கடவு ளுடைய சித்தத்தை நிறைவேற்ற விரும்புகின் றேன். அவர் என்னை இந்த மலைக்குக் கொண்டு சென்றிருக்கின்றார். அந்த மலையிலிருந்து நான் அடுத்த பகுதியைப் பார்த்தேன். நான் வாக்களிக்கப்பட்ட தேசத்தைக் கண்டுவிட்டேன். உங்களோடு நான் சேர்ந்து அந்த வாக்களிக்கப் பட்ட தேசத்திற்குப் போகாமலிருக்கலாம். ஆனால் ஒன்றை மட்டும் உங்களுக்கு நான் சொல்லுகின்றேன். நாங்கள் நிச்சயமாக அந்த வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குப் போவோம். ஆகவே நான் இந்த இரவில் சந்தோசமாக இருக்கிறேன். எதைப்பற்றியும் நான் கவலைப் படவில்லை. நான் எந்த மனிதனுக்கும் அச்சப் படவில்லை. என்னுடைய கண்கள் ஆண்டவ ருடைய மகிமையைக் கண்டுகொண்டன." இவை மாட்டீன் லூதர் கிங் கூறிய அழகான வார்த்தைகளாக இருக்கின்றன. இந்த உரை ஆற்றிய மறுநாளே அவர் சுட்டுக்கொல்லப்பட் டார். மனிதனுக்கு அதிக காலம் வாழ வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் இறைசித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற வேட்கை மன தில் வருகின்ற போது மனிதர்கள் வாழ்வையே தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதனை இவ்வுலகில் வாழ்ந்த பலர் நமக்குப் பாடமாகச் சொல்லுகின்றனர்.

இந்த வேளையிலே அருட்தந்தை சறத்ஜீ வன் அவர்களுடைய வாழ்வை நான் நினைத் துப் பார்க்கின்ற பொழுது, மாட்டீன் லூதர் கிங்கி னுடைய அந்தக் கடைசி நாள் வார்த்தைகள், அவருடைய அந்த சிந்தனைகள் என்னுடைய மனங்களுக்கு வந்தன. சறத்ஜீவன் துடிதுடிப் பான ஒரு குருமட மாணவன், துடிதுடிப்பான ஒரு இளம் குரு. தன்னுடைய மக்களோடு மக்களாக எளிமையாக வாழவேண்டுமென்று எளிமையாகத் தனது வாழ்க்கையை அமைத்து, அமைதியான வழியில் தனது குருத்துவப் பணி யைச் செய்துகொண்டிருந்த ஆன்மீக வாஞ்சை பொருந்திய ஒரு இளம் குருவானவர். அவரு டைய பணியில் அவர் தன்னை மக்களோடு இணைத்துக்கொண்டு சென்ற பாதையிலே தான், 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்த காலத் திலே மக்களோடு மக்களாக அவரும் இடம் பெயர்ந்து சென்றார். அந்த இறுதி நாட்களிலே தானும் மக்களோடு மக்களாக இறுதிவரை வாழவேண்டுமென்று அவர் ஒரு தீர்மானம் எடுத்து வாழ்ந்துகொண்டிருந்தபொழுது, அவருக்குள்ளே என்ன உணர்வுகள் இருந்தி ருக்கும் என்று நான் சிந்தித்துப் பார்க்கின்றேன். அவர் மக்களோடு மக்களாக இருந்த வேளை யிலே அவர் விரும்பியிருந்தால் அந்த இடத்தை விட்டு வெளியேறியிருக்கலாம். அவருடைய தாய் சகோதரர்கள் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு அவரைப் பற்றி விசாரிக் கின்றபொழுது, அவர் சொல்லுகின்ற வார்த்தை கள் 'என் மக்களோடு நான் இறுதிவரை இருக்க விரும்புகின்றேன்." இறுதிவரை என் மக்க ளோடு இருக்க விரும்புகின்றேன் என்று அவர் கூறுகின்ற போது அந்த இறுதிக் கணங்களிலே அந்தப் போரின் அகோரங்களுக்குள்ளே இருந் திருக்கின்ற பொழுது, அவருடைய சிந்தனை கள் எவ்வாறு இருந்திருக்கும் என்று நான் சிந்தித்துப் பார்க்கின்றேன். அது மாட்டீன் லூதர் கிங்கினுடைய அந்த இறுதிச் சிந்தனைகளைப் போல பின்வருமாறு அமைந்திருக்கலாம் என எண்ணுகிறேன்.

"இந்த உலகத்திலே எந்த மனிதனுக்கும் நீண்ட காலம் வாழவேண்டும் என்கின்ற ஆசை இருக்கின்றது. நீண்ட காலம் வாழ்வது சிறந் தது. ஆனாலும் இந்தக் கட்டத்திலே நான் என் னுடைய மக்களோடு இருக்கவேண்டுமென்று விரும்புகின்றேன். நான் சாவைப்பற்றி அஞ்ச வில்லை. எனக்கருகிலே ஒவ்வொரு நிமிடமும் சாவுகள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. எல்லாத் திசைகளிலும் உயிரற்ற உடலங்கள்

கிடக்கின்றன. எங்கு பார்த்தாலும் மரண ஓலங்கள் கேட்டுக்கொண்டே இருக்கின்றன. எங்களுடைய வாழ்வு பதுங்குகுழிக்குள்ளே முடக்கப்பட்டு விட்டது. ஆனாலும் இந்த வேளையிலே என்னுடைய உணர்வு எல்லாம் ஆண்டவருடைய சித்தத்தைச் செய்யவேண்டும் என்பதே. என்னுடைய குருத்துவப் பணியில் இறைவன் எதை என்னுடைய வாழ்க்கையில் என்னிடம் எதிர்பார்க்கின்றார், அவருடைய சித்தம் என்ன என்பதை நானும் உய்த்துணர சிந்திக்கின்றேன். என்னுடைய மந்தைகளை விட்டு நான் விலகமாட்டேன். ஏனென்றால் இந்த மந்தைகளுக்காகவே நான் குருவாக அழைக்கப்பட்டிருக்கின்றேன். மந்தைகள் இல்லாத குருத்துவம் பொருளற்றது என்பதை நான் உணருகின்றேன். ஆகவே இந்த மந்தைகள் சிதறடிக்கப்பட்டு, இந்த மந்தைகளின் மரண ஓலங்களைக் கேட்கின்ற பொழுது அவர்களோடு நானும் சேர்ந்து வாழ விரும்புகின்றேன். ஒவ்வொரு நாளும் என்னுடைய வாழ்க்கையிலே இறைவனை என்னுடைய செபத்திலே சந்திக்கின்ற பொழுது, என் மக்களோடு நீ வாழவேண்டும் என்பதைத் தான் அவர் எனக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றார். இவர்களோடு சேர்ந்து மரணிக்க வேண்டி வந்தாலும் அது இறைவனுக்கும் அவரின் உன்னத குருத்துவத்துக்கும் மாட்சிமையே ஆகும்"

புனித பவுல் தனது வாழ்க்கையினுடைய போராட்டத்தைச் சொல்லுகின்ற பொழுது, 'இந்த உலகத்திலே நான் தொடர்ந்து வாழ்வதா அல்லது மரணித்து இறைவனோடு இணைந்து வாழ்வதா என்கின்ற இரு துருவங்களுக்குள்ளே எதைத் தெரிவது என்று தெரியாமலிருக்கின்றேன். என்னுடைய வாழ்வை முடித்து இறைவனோடு இணைந்து வாழவேண்டுமென்பதே என்னுடைய விருப்பம். ஆனாலும், மக்களுக்குப் பணி செய்ய வேண்டும் என்பதற்காக நான் தொடர்ந்து வாழ விரும்புகின்றேன்." எனவே அவரின் சிந்தனைப் படி அவரின் வாழ்விற்கு அர்த்தம் கொடுப்பது அவருடையை பணியாகும்."

இந்த புனித பவுலின் உணர்வுகளும் நிச்சயமாக அருட்தந்தை சறத்ஜீவனுடைய வாழ்வின் இறுதிக்கட்ட வேளையில் அவரின் மனதில் ஒலித்திருக்கும். ஆகவே தான் அவருடைய வாழ்வு உன்னதமானது. அப்துல் கலாம் சொல்லுகின்றார், 'பிறப்பு என்பது எல்லோருக்கும் ஒரே மாதிரியானது. ஆனால் இறப்புத்தான் ஒரு மனிதனுடைய பிறப்பிற்கு பெருமை சேர்க்கிறது" என்று. இன்று சறத்ஜீவனுடைய இறப்புத்தான் அவருடைய பிறப்பிற்குப் பெருமை சேர்க்கிறது. அவருடைய குருத்துவத்திற்கு பெருமை சேர்க்கிறது. ஆகவே இந்த வேளையிலே யாழ் மறைமாவட்டத்தினுடைய சக குருக்களாக இருக்கின்ற நாங்கள் அவருடைய வாழ்வை மெச்சுகின்றோம். அவர் வாழ்ந்த குருத்துவத்திற்காக ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றோம். அவருடைய குருத்துவத்திலே அவர் கொண்டிருந்த இலட்சியங்களிற்காக நாங்கள் நன்றி கூறுகின்றோம். தன் மக்களோடு மக்களாக வாழவேண்டுமென்று அவர் கொண்டிருந்த ஆன்மீக வாஞ்சைக்காக நாங்கள் நன்றி கூறுகின்றோம்.

இந்த தூய ஜோசப்வாஸ் ஆண்டிலே தன்னுடைய நாட்டையும் ஊரையும் விட்டு, கடல் கடந்து வந்து, தனி மனிதனாக, இலங்கை பூராகவும் கால் நடையாகச் சென்று, ஒரு தனிக் குருவாக இந்த இலங்கைத் தீவில் பணிபுரிந்த மாபெரும் குருவினுடைய நினைவிலே இருக்கின்ற இந்த ஆண்டிலே, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி வாழ்ந்த ஒரு குருவை நம்முடைய மறைமாவட்டம் பெற்றெடுத்ததுக்காக இறைவனுக்கு நன்றிகூறுகின்றோம். தூய ஜோசப்வாஸ் முனீந்திரருடைய குருத்துவ வாழ்வை நாங்கள் வாழ முற்படுகின்ற வேளையிலே அவருடைய வாழ்வைப் பின்பற்றி வாழ்ந்த அருட்தந்தை சறத் ஜீவனுக்காக நாங்கள் நன்றி கூறி, இவர்களைப் போல தியாக உள்ளம் படைத்த குருக்களாக நாங்களும் வாழ இறையாசீர் வேண்டுகின்றோம்.

அருட்பணி மனுவேற்பிள்ளை டேவிட்

நிறைந்த உள்ளத்தோடு வாழ்ந்தவர்

மரியாம்பிள்ளை தம்பதிகளின் புதல்வனாய் சிறுவயதில் அறிமுக மானார். ஒருவகையில் அவர் என் உறவினரும் கூட. பண்புள்ள குடும் பம், பக்தியுள்ள குடும்பம், ஒழுக்கமுள்ள குடும்பம், பிறரன்புள்ள குடும் பம் என்று அடிகளாரின் குடும்பத்தைப் பற்றிக் கூறிக்கொண்டே போக லாம். அதற்கமைவாக பக்தியுள்ள, பண்புள்ள, பிறர்நேயமுள்ள பிள்ளைகளை ஆண்டவர் கொடுத்தார். அதில் ஒருவரைக் கன்னியாஸ்திரி யாகவும், இன்னுமொருவரைக் குருவாகவும் ஆண்டவர் தேர்ந்து கொண்டார்.

படிக்கும் காலத்தில் யாழ் ஆசனக்கோவிலில் பீடப்பணிகளிலோ, பங்கின் பக்திச்சபைகளிலோ இவர்களுடைய பங்களிப்பு அபரிமிதம். அருட்தந்தையும் தன்னுடைய பங்களிப்பை சிறுபராயத்திலிருந்து நிறைவாகக் கொடுத்தவர்.

குருவாக அர்ச்சிக்கப்பட்ட காலத்திலிருந்து ஏழைமக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற வாஞ்சையில் அவர் எளிமையுடனும், தாழ்மையு டனும், பொறுமையுடனும் பணியாற்றியதை நான் கண்டேன். அவரு டைய மரணம் கூட அவருடைய தியாகவாழ்வை, பலி வாழ்வை மக்க ளுக்காக வாழும் வாழ்வை பிரதிபலித்து நின்றது.

ஆயருக்கு அன்புடன் கூடிய அமைச்சல், குருக்களுக்குத் தோழமை, மக்களுக்கு நிறைந்த பணி என்பன அவருடைய வாழ்வின் விழுமியங் கள். இறைஅரசைக் கட்டி எழுப்ப மக்களுடைய ஆன்மீக வாழ்விலும், உலக வாழ்விலும் மிகுந்த அக்கறை காட்டிப் பணியாற்றியவர். இத்தகைய

நன்மைத்தனம் நிறைந்த குரு எமது மறை மாவட்டத்திற்குக் கிடைத்த பெரியகொடை.

தன்னுயிரைக் காத்துக்கொள்ள விரும்புகிற வன் அதை இழந்துவிடுவான். என் பொருட்டு உயிரை இழப்பவனோ அதைக் காத்துக்கொள் வான் என்ற இறைவார்த்தை தாரகமந்திரமாகக் கொண்டு வாழ்ந்தவர் தான் இக்குரு.

இறைவன் கொடுத்த கொடைகளே போதும் என்ற நிறைந்த உள்ளத்தோடு வாழ்ந்தவர். நிறைந்த உள்ளத்துடன் வாழ்பவர்களும், இருப் பதைக் கொண்டு திருப்தியுடன் வாழ்பவர்களும் பல்லாண்டு வாழவேண்டும் என்று ஆசிப்ப தில்லை. மரணம் எப்போது வந்தாலும் அதை சந்திக்கத் தயாராய் இருப்பவர்கள் இவர்கள். அதில் இக்குருவானவரும் ஒருவர்.

இறைவன் நிச்சயமாக இவருக்கு இன்ப சாந்தி கொடுத்துள்ளார் என்பது எனது நம் பிக்கை, செபம். அவர் எமக்காய், எமது மக்க ளின் முழுமனிதவிடுதலை வாழ்வுக்காய் பரிந்து பேசுவார் என்பது நிச்சயம். இறைவன் என் றென்றும் வாழ்த்தப் பெறுவாராக.

அருட்தந்தை ச. இயூஜின் பிரான்சிஸ்
இயக்குநர்
கியூடெக் - கரித்தாஸ் யாழ்ப்பாணம்

குருவாக அர்ச்சிக்கப்பட்ட காலத்திலிருந்து ஏழை மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற வாஞ்சை யில் அவர் எளிமையுடனும், தாழ்மையுடனும், பொறுமை யுடனும் பணியாற்றியதை நான் கண்டேன். அவருடைய மரணம் கூட அவருடைய தியாகவாழ்வை, பலி வாழ்வை மக்களுக்காக வாழும் வாழ்வை பிரதிபலித்து நின்றது.

அமரர் அருட்பணி சறா - நான் கண்ட உத்தம குரு

1991ம் ஆண்டில் இருந்து 1992ம் ஆண்டு வரைஉதவிப் பங்குத் தந்தையாக பேராலயத்தில் பணி செய்தகாலம் எனது பணிவாழ்வில் பொற்காலம் என்று சொல்லவேண்டும். அருட்பணி கில்லறி ஜெபநேசன் அடிகளாருடைய தந்தைக்குரிய வழிநடத்தலுடன் பணிக்களத்திற்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நேரம் பேராலயத்திற்குள்ளே அடிக்கடி சுற்றிவலம் வருகின்ற இளைஞர்களில் அருட்பணி சறாஅவர்களும் ஒருவர். எதைக் கேட்டாலும் "ஓம் Father", "செய்வோம் Father" என்று புன்முறுவலுடன் அவர் அளித்த பதில்கள் இன்றும் என் காதில் ஒலித் துக்கொண்டு இருக்கின்றது. துடிப்பும், சேவை மனப்பான்மையும், சிறந்த தலைமைத்துவப் பண்பும் கொண்ட சறாவை காண்கின்ற போதெல்லாம் எனக்கொரு மதிப்பும் தனிப்பட்ட அன்பும் ஏற்பட்டது. இளையோர் மத்தியிலே வயதிலே சற்றுக் கூடியவராக இருந்தாலும் அவ ருக்கு இருந்த திறமைகள், தலைமைத்துவப் பண்புகள், அர்ப்பணிப் பாலும் எல்லோரும் இவரை சறாஅண்ணன் என்று அன்பாக அழைப்பது வழக்கம். எங்கு சென்றாலும் ஆலய வேலை என்றால் நேரம் தவறாமல் துடிப்போடு வந்துவிடுவார்.

ஒரு முறை அருட்பணி ஜெபநேசன் என்னுடன் பேசுகின்றபோது" சறா விற்கு குருவாக வருகின்ற ஆசை உண்டு", "அவருக்காகவும் மன்றா டும்" என்று கூறியது இப்போதும் ஞாபகத்திற்கு வருகின்றது. நான் மாற்றலாகி புதுப்பங்கிற்கு சென்ற போது சறா குருமடத்தில் இணைந்து

விட்டார் என்று கேள்விப்பட்டேன். சிறிய குருமட வாழ்க்கை இவருக்குக் கடினமாக இருக்கு மென்று நினைத்தேன். ஒரு முறை சிறிய குரு மடத்திற்கு நான் சென்ற போது ஏனைய மாணவர்கள் வயதிலே குறைந்தவர்களானா லும் இவரோடு பண்பாகவும் மதிப்போடும், மனம் திறந்தும் பேசுவதைப் பார்த்த போது சறாவின் உயர்ந்த பண்புகளை நான் மேலும் அறிந்து கொண்டேன். அருட்பணி ஜெபநேசன் அடிகளாருடைய இறப்பின் பொழுது அருட் பணி சறா அடிகள் மிகவும் மனம் கலங்கி இருந்த பொழுது நான் அவருக்கு ஆறுதல் கூறியது ஞாபகம் வருகின்றது. உருவத்திலே பெரியவராக இருந்தாலும் இளகியமனம் கொண்டவராக இருந்ததை நான் அறிந்தேன். நாரந்தனைப் பங்கிற்கு 1998ல் நான் பணியாற்றச் சென்றிருந்தேன். தீவுப்பகுதி 1990ல் இடம் பெயர்ந்து மீண்டுமாக 1996 தொடக்கம் குடியே றிக் கொண்டு இருந்தார்கள். அனைத்து குடும்ப பதிவுகள் தொலைந்தும் அழிவுற்றும் இருந்த நேரத்தில் அவற்றை மீண்டும் ஆவணப் படுத் தும் நோக்கோடு நான் செயற்பட்டுக் கொண்டு இருந்தேன். கிட்டத்தட்ட 3 மாதங்கள் இவ் வேலைகளைச் செய்வதற்குத் தேவை என்று கருதி சறாவை ஆயரிடம் கேட்டு விடுமுறை நாட்களில் அவருடைய உதவியை பெற்றுக் கொண்டேன். சறாவிற்கு இருந்த ஆத்ம வாஞ்சையாலும் துடிப் புள்ள பணியாலும் 01 மாத்திலேயே அந்த வேலைகளை அழகாக முடித்ததும் மட்டுமல்ல "இனி என்ன வேலை செய்ய வேண்டும்" என்று என்னைக் கேட்டார். நான் அதிர்ச்சி அடைந்து போனேன். ஓய்வு உறக்கம் இன்றி கடுமையாக உழைக்கின்ற பண்பு உள்ளவர் சறா.

அருட்பணி ஜெபநேசன் அடிகளாரோடு எனக் கிருந்த நெருக்கத்தாலும் சறாஅருட்பணி ஜெப நேசனோடு கொண்டிருந்த அன்பாலும் அவரு டையமுதல் திருப்பலிக்கு மறையுரையாற்றும் படி கேட்டுக்கொண்டார். நானும் அதைப்பெரும் பாக்கியமாகக் கருதி மறையுரையாற்றினேன். இது எனது உடல் இது எனது இரத்தம் என திருப்பலிவேளையில் மட்டுமல்ல குருத்துவம்; ஒவ்வொருகணமும் உடல், பொருள், ஆவி அனைத்தையும் கடவுளுக்காகவும் மக்களுக் காகவும் ஒப்புக்கொடுப்பதுதான் உண்மையான குருத்துவம் என்று கூறியது எனக்கு ஞாபகம் வருகின்றது. சறா குருவாக வந்து அதே துடிப் போடு, அதேவாஞ்சையோடு, அதே அர்ப்பணிப் போடு பணி செய்கின்ற போது அவருடைய பணிகளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். எனது பணி வாழ்விற்கும் அவரது பணியானது உற்சாகத்தைக் கொடுத்தது. மக்களுக்காகத் தன்னை முழுமையாகக் கொடுத்த சறா மக்களு டைய துன்பங்களில், வேதனைகளைச் சுமந்தவ னாக கடைசிப் போரின் போது முள்ளி வாய்க்கா லின் ஊடாகப் பயணித்தார். எல்லாருடைய வேத னைகளையும் தன் உள்ளத்திலே சுமந்தவனாக கனத்த இதயத்துடன் இராணுவத்தினுடைய அச்சுறுத்தல் மத்தியிலே பசியோடும் தாகத் தோடும் உடற் பலவீனங்களோடும், நடந்து சென்ற போது அவருடைய உயிரும் இறைவ னோடு சங்கமமானது. நித்திய குருவாகிய இயேசுவினுடைய உன்னத குருத்துவத்திலே இணைந்து கொண்டு இது எனது உடல் இது எனது இரத்தம் என்று புகழ்பாடி இறைவனுக்கு உகந்த பலியை ஒப்புக்கொடுத்தார் சறா வினுடைய ஆத்மா இறைசந்நிதானத்தில் அமைதி பெறுவதாக.

அருட்பணி ஜே. ஜே. மௌலிஸ்
பங்குத்தந்தை
புனிதஅன்னாள் ஆலயம்
பாண்டியன்தாழ்வு

உன்னதமான குரு

1975ம் ஆண்டின் இறுதிப் பகுதிகளில் அருட்தந்தை “சறா” எனக்கு அறிமுகமானார். பீடப்பணியாளராக அவர் பணிபுரிந்த காலத்தில் அவரை அறிந்து கொள்ள சந்தர்ப்பம் உண்டானது. யாழ் மறைக் கோட்டத்திலே பீடப்பணியாளர் சந்திப்புக்கள் நடைபெற்ற அந்த நாட்களிலே புனித யுவானியார் பீடப்பணியாளராக நானும் ஆசனக்கோவில் பீடப் பணியாளராக சறாவும் ஒன்று கூடல்களிலே பங்கெடுத்த ஞாபகங்கள் உண்டு. துடிப்புள்ள சிறுமாணவனாக எல்லோரையும் கட்டுப் படுத்தி, நிகழ்வுகளை ஒழுங்கமைத்து பொறுப்போடு செயல்பட்ட ஒரு பீடப்பணி யாளராக அன்று சறாவைக் கண்டு கொண்டேன். பலதரப்பட்ட திறமை கள் கொண்ட பீடப்பணியாளராக அன்று சறா எல்லோர் மனங் களிலும் இடம் பிடித்தார்.

பீடப்பணியாளராக அறிமுகமான நாம் பின்பு குருக்களாக ஒன்றாகப் பணிபுரியும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்தது. 2005ம் ஆண்டு காலப் பகுதியில் கிளிநொச்சியிலும், உருத்திரபுரத்திலும் ஒன்றாகப் பணிபுரிந் தோம். நேரகாலம் பாராமல் பணிபுரிகின்ற சறாவுக்கு நிகராக எவரையும் குறிப்பிட முடியாது. பங்குத்தந்தையாக மட்டுமல்லாமல் JRS வன்னி இணைப்பாளராக நியமனம் பெற்று சறா தனது உடல் வருத்தங்களை யும் பல வசதியற்ற தன்மைகளையும் பாராது அயராது உழைத்த ஒரு உன்னதமான குருவாக சறாவைக் கண்டு மகிழ்ந்தேன். அனைவரு டனும் மிகவும் அன்பாகப் பழகும் பண்பாளராகவும், எவரையும் மனம் நோகப் பண்ணாமல் தனது கடமையை திறம்பட ஆற்றிய ஒரு சமூக நேயம் கொண்ட குருவாகவும் திகழ்ந்தார். சறா அவர்கள் தனது

குருத்துவக் கடமைகளின் முதன்மையான பணிகளான அருட்சாதனங்கள் வழங்கல் திருப்பலி நிறைவேற்றல் கல்வி மறைக்கல்வி களிலே கவனம் செலுத்தல் போன்றவற்றில் எவ்வளவு ஆர்வத்தோடு தகுந்த ஆயத்தத் தோடு செய்தாரோ அதேவிதமாகத் தனது சமூக மேம்பாட்டுப் பணிகளிலும் சிறப்பாக பாராபட் சமில்லாமல் தியாக சிந்தையோடு செயற்பட்டார்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை மிகமிக மதித்து நேசித்தவர். தமிழ் இனம் துன்பங்களிலிருந்து விடுதலை பெற விடுதலைப் போராட்டமானது அவசியமானது என்பதை எவ்வித ஐயமும் இல்லாமல் நம்பினார். போரா டும் மக்களோடு அவர்களின் துன்பங்களில் பங்கெடுத்து, உடனிருந்து பயணிக்க வேண்டும் என்பதில் மிகத் தெளிவாகச் செயற்பட்டவர். யுத்தத்தின் இறுதி நாட்கள் அண்மித்துக் கொண் டிருந்த வேளையிலே ஒரு முறை சறாவுடன் தொலைபேசியில் உரையாடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. உரையாடலின் இடையே "சறா" அம்மா அக்கா தனியத்தானே. உமக்கும் உடல் நலம் நன்றாக இல்லை என்று அறிகின் றேன் இந்தப் பக்கம் வருவதை பற்றி யோசிக்க லாமே" என்று கேட்டேன். இங்கும் நிறைய மக்கள் வந்துவிட்டார்கள் அவர்களோடும் பணி யாற்றலாம் தானே" என்று கேட்டேன். சறா மிக உறுதியாக "எம்மை நம்பியுள்ள இந்த மக்களை இப்படியான இடர் நிறைந்தவேளை விட்டு வரு வது எனக்கு சரியாகத் தெரியவில்லை. எனக்கு அது விருப்பமுமில்லை. எனது வீட்டார் என்னை புரிந்து கொள்வார்கள். வீட்டார் எல்லோரும் மரியன்னையின் பாதுகாப்பில் உள்ளனர்" என் றார். சறாவின் வார்த்தையிலே உறுதியும் தெளி வும் தெரிந்தது. ஒரு விதத்திலே பெருமை

தமிழர்களின் விடுதலைப் போராட் டத்தை மிகமிக மதித்து நேசித்த வர். தமிழ் இனம் துன்பங்களிலி ருந்து விடுதலை பெற விடுதலைப் போராட்டமானது அவசியமானது என்பதை எவ்வித ஐயமும் இல்லா மல் நம்பினார்.

யாகவும் மறு பக்கத்திலே வேதனையாகவும் இருந்தது. குருக்கள் மக்களோடு வாழ்ந்தார்கள் இவர்களுக்காக இறந்தார்கள் என்று நாம் இன்று கூறுவதற்கு எமக்கு சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்தவர் இந்த அற்புதமான குரு.

சறா எமது குருத்துவத்திற்கு பெருமை தேடித் தந்தார். எமது மறைமாவட்ட மக்களின் இறைபணியாளர்களின் சாட்சியவாழ்வு பலரா லும் பேசப்படுவதற்கு சறாவின் வாழ்வும் பணி யும் சாவும் வலுச்சேர்த்து நிற்கின்றது.

சறாவின் தியாகம் நிறைந்த குருத்துவவாழ்வு எம் எல்லோருக்கும் பலமாக அமையட்டும். இவரது ஆன்மா இறைவனுள் ஆறுதல் அடை வதாக.

"நீதிமான்களோ என்றென்றும் வாழ்கின்றார் கள். அவர்களுக்குரிய கைம்மாறு ஆண்டவரி டம் உள்ளது. அவர்களைப் பற்றிய கவலை உன்னத இறைவனுக்கு உண்டு".(சா. ஞா 5:15).

அருட்தந்தை அ. ஜோனாலி யாவிஸ்
பருத்தித்துறை மறைகோட்ட முதல்வர்

சறா ஒரு சகாப்தம்

"கோதுமை மணிகள் மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது பயன்தர முடியாது". மானுட அவலத்தின் இமயத்தில் வசிக்கும் இந்நாட்களில் மரபுகளை மறந்து மானிடத்தைத் தொலைத்து மனிதனைத் தொழில் நுட்பத்தில் தேடும் காலம் இது. உதிரத்தை உறைய வைக்கும் எம்மவர் களங்களில் காவியம் படைத்த காவியநாயகர்கள் பலர், அதிலும் சிறப்பாக திருச்சபைத் தோட்டத்திற்கு உரமாக தங்கள் செந்நீரைக் கொடுத்த குருக்கள் பலர், விசுவாசத்திற்கு வித்தாகிப் போனார்கள். அதேபார்வையில் களம் தந்த காவியங்களில் அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளாரும் ஒருவர்.

பாதர் சறா என எல்லோராலும் செல்லமாகவும் அன்பாகவும் அழைக்கப்படும் அருட்தந்தை மரியாம்பிள்ளை ததேயுஸ் சறத்ஜீவன் கடவுளால் எம் மறைமாவட்டத்திற்குத் தரப்பட்ட பொக்கிஷம். ஒரு குரு என்பதற்கு மேலாக என் உற்ற தோழன் சறா என்றால் அது மிகையாகாது. 1968ம் ஆண்டு வைகாசித் திங்கள் 13ம் நாள் உதித்த வைகறைத் துளிர். பள்ளிப் பருவம் முதலே துடிப்பும் திறமையும் இணையப் பெற்றவர் இவர். கிறிஸ்துவில் தணியாத வேட்கையும் அன்னை மரியாளில் தீவிர அன்பும் கொண்டு எமக்கெல்லாம் உற்றதோழனாக விளங்கியவர்.

குருக்களிற்கு முன்மாதிரி

நண்பன் சறாவின் வாழ்விலிருந்து நான் பெற்றது, கற்றது பல. ஒரு குரு இப்படித்தான் வாழவேண்டும் என எனக்கு மட்டுமல்ல பலருக்கு

முன்னோடியாக விளங்கியவர். திருப்பலியில் ஆர்வம் கொண்ட இவர் நற்கருணை ஆண்டவ ரின் அன்பன் என்றே சொல்லிவிடலாம். சுயநலம் தேடாத, பெருமைப்படாத ஒரு குரு. ஆன்மீக சிந்தையுடன் எதிலும் எங்கும் புதுமை யைக் காணும் புதுமைப்பித்தன். குருமடவாழ் விலிருந்தே படிப்படியாகத் தன்னை இறைவ னுக்கு உடைத்துக் கொடுத்து 2003ம் ஆண்டு வைகாசி 14ம் திகதி இறைவனின் குருவாகத் திரு நிலைப்படுத்தப்பட்டு 2009 மே 18இல் முள்ளி வாய்க்காலில் தன்னை முழுதாக உடைத்துக் கொடுத்த கிறிஸ்துவின் அன்புச்சீடன் என் நண்பன் சறத்ஜீவன்.

தாய் தந்தையை இழந்தவர்களின் அம்மை அப்பன்

அருட்தந்தை சறா இறைவனால் கொடுக்கப் பட்ட அநாதைகளின் அம்மை அப்பன். எங்கள் குருமடவாழ்விலேயே சறாவின் இரக்ககுணத் தைப் பற்றி எங்களுடன் இருந்தவர்களுக்கு நன்கு தெரியும். குருமடத்தில் இருக்கும் வன்னி மாணவர்கள் விடுமுறைக்கு செல்லாதநாளில் அவர்களுடன் தேற்றரவாளனாக இருப்பார். நாம் விடுமுறை முடித்து குருமடம் திரும்பிய பின் சிலமாணவர்கள் கவலையாக இருந்தா லும் தான் சிரித்த முகத்துடன் எங்களுக்கு நகைச்சுவை சொல்லி கவலையை மறக்கவைப் பார். இப்பண்பு குருவாக வந்த பின்பும் அவரி டம் காணப்பட்டது. அநாதைப் பிள்ளைகளை அரவணைத்து அவர்களுக்கு நல்ல தந்தையாக தாயாக இருந்தார். இன்றும் அவர் பிரிவை ஜீரணிக்க முடியாமல் வாடும் உறவுகள் பல.

வறிய மாணவர்களின் சிறந்த ஆசான்

அருட்தந்தை சறத்ஜீவன் கல்விக்கு பெயர் பெற்ற ஒருவர். பாடசாலைக் காலம் தொட்டு அது அவரது தனிக்கலை. நான் சந்தேகமான பல கேள்விகளை அவரிடம் கேட்க அவர் இலகு

> குருக்களை போர் நடந்த இடத்தை விட்டு வெளியேற அழைப்பாணை கிடைத்தும் நான் என் மக்களுக்கா கவே குருவாக வந்தேன் எனி பணிகள் இறுதிவரை அவர்களுக்கே என்று பாதிக்கப்பட்ட மக்களில் கிறிஸ்துவைக் கண்டு சுவைத்தவர்.

வாக எனக்குப் புரியவைத்துள்ளார். ஆங்கிலத் தில் மிகவும் கைதேர்ந்தவர். சறா ஆங்கிலம் பேசினால் வார்த்தைகள் கேட்போர்செவியை இனிக்கச் செய்யும் திறமையான மாணவன் மட்டுமல்ல திறமையான ஆசானும் கூட.

சுனாமியின் போது இறைவன் தந்த ஆயன்

2004ம் ஆண்டு மார்கழி மாதம் 26ம் திகதி எமது நாட்டை மட்டுமல்ல உலகின் பல்வேறு இடங்களை உலுப்பிய ஒரு சோகம் என்றால் அது சுனாமி. இதனால் பல கரையோரப்பிர தேசங்கள் வாழ் மக்கள் தமது உயிர், உறவுகள் மற்றும் உடமைகளை இழந்தனர். அருட் தந்தை சறத்ஜீவன் அடிகள் முல்லைத்தீவில் பணியாற்றிய காலம் அது. இயற்கையின் இந்த கோரத்தாண்டவத்தால் முல்லைத்தீவு மட்டு மல்ல பல பிரதேசங்கள் சுடுகாடாய் மாறின. அருட்தந்தையும் தன்னுயிரைத் தவிரதனக்குரிய யாவற்றையும் இழந்து விட்டார். தானும் பாதிக் கப்பட்டாலும் ஒரு நல்ல ஆயனுக்குரிய பரி வோடு சுனாமியின் பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினார். பல அனர்த்தங்கள் நிகழ்ந்தாலும் இறைவன் மக்களுடன் கூட இருக்கிறார் என்பதை அவரது பிரசன்னம் மக்களுக்கு வெளிப்படுத்தியது. எந்தவிதக் கடினமான பணியென்றாலும் அந்தப்

பணியிலே தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றக்கூடியவர். இன்னும் சிறப்பாக மக்களுடைய துன்பதுயர இக்கட்டான சூழ்நிலைகளில் தனித்துநின்று உதவி செய்ய முன்வருபவர்.

யுத்தகாலத்தில் சிறந்ததொரு கவசம்

எமது இறுதிக்கட்ட மண்மீட்புப்போரிலே ஆயிரம் ஆயிரம் மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டது நாம் அறிந்ததே. ஆண்கள், பெண்கள் சிறுவர், முதியோர் என்ற பாகுபாடின்றி வகைதொகையாகக் குருதிக் கடலில் குளித்ததை உலகமே அறியும். ஆனால் அதிலும் தம் உயிரைப்பிறருக்காய் கொடுப்பதற்கு முன்வந்தவர்கள் தமிழர்கள் மனதில் இன்றும் இழையோடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். என் நண்பன் சறாவும் எம் நினைவில் நீங்காத நிலவு. குருக்களை போர் நடந்த இடத்தைவிட்டு வெளியேற அழைப்பாணை கிடைத்தும் நான் என் மக்களுக்காகவே குருவாக வந்தேன் என் பணிகள் இறுதிவரை அவர்களுக்கே என்று பாதிக்கப்பட்டமக்களில் கிறிஸ்துவைக் கண்டு சுவைத்தவர்.

2009-05-18 அன்று இரட்டைவாய்க்கால் பகுதியின் சாளம்பன் எனும் இடத்தில் போதிய மருத்துவவசதி இல்லாமையால் மரணத்தைத் தழுவிக்கொண்டார் என்றுநாம் கேள்விப்பட்டதுமே எம் மனதில் எதுவோ தைத்தது போல் இருந்தது.

அன்பின் சறா!
'பாரினில் குருவாக - உம்பணி
சிறக்கக் கண்டு
திருப்தியுற்ற இறைவன்
ஆயுட்காலத்தை குறைத்தங்கு
நித்தியத்தில் தொடர்ந்திட
விண்ணகம் நோக்கி
உம்மை அழைத்திட்டார் போலும்'
சந்திப்போம் ஒருநாள்
நாங்களும் உம்மை!

அருட்தந்தை எஸ் ஜே. சி. பாஸ்கரன்
அதிபர்
புனித மாட்டினார் சிறிய குருமடம்
யாழ்ப்பாணம்

வாழத்துடித்தவர்களோடு சாவைச் சந்தித்த சறத்ஜீவன் அடிகளார்

ஈழத் தமிழர் மட்டுமல்ல; உலகத்தமிழர் அனைவருமே கனவிலும் மறந்துவிட முடியாத அந்த கோர மே 18ம் நாளை நினைக்கும் போது இன்றும் இதயம் கனக்கிறது. தலை விறைக்கிறது. கண்கள் திறக்க மறுக்கின்றன. உணர்வுகள் ஒருங்கே உறைகின்றன.

வாழ்வதற்கான வழி தொலைத்து அன்றாடம் சாவோடு வாழ்ந்து கொண்டிருந்த இலட்சக்கணக்கான மக்களோடு தானும் ஒரு தமிழ் மகனாக, மக்களுக்கான ஓர் இறைபணியாளனாக வாழ்ந்த அருட்பணி சறத்ஜீவன் (சறா) அடிகளார் அந்த இறுதி நாளில் மரணித்தவர்கள், கொல்லப்பட்டவர்கள் வரிசையில் ஒருவரானார் என்ற செய்தி என் காதுகளை எட்டிய வேளையில் கனத்துக்கொண்டிருந்த என் நெஞ்சம் மௌனித்தே விட்டது. மூடியிருந்த விழிகள் அகலத் திறந்து விரிந்து நிலை கொண்டன. மௌனத்தின் மொழியிலே அருட்தந்தை சறாவை மீட்டிப்பார்கிறேன்.

கனவுகள் பல சுமந்து கர்த்தருக்காய் வாழப் புறப்பட்ட அவரது குருத்துவ அபிஷேகநாளை (மே 14, 2003) நினைக்கிறேன். "யாரை நான் அனுப்புவேன், என் மக்களின் விடுதலைக்காய்?" என்ற ஆண்டவரின் அழைப்புக்கு "எனை அனுப்பும், இதோ நான் இருக்கிறேன்" என்று பதில் கொடுத்தது இதற்காகத்தானா? என்று கேட்டது என் மனம்.

குருத்துவம் மகத்தானது மட்டுமல்ல அது ஆபத்தானதும் கூட. குருத்துவம் பணி வாழ்விற்காக மட்டுமல்ல; அது பலி வாழ்விற்குரியதும் கூட. "இதோ வருகிறேன்" என இறை அழைத்தலுக்கு பதில் கொடுத்த

இறை பணியாளன் சறத்ஜீவன் அடிகளார் தன் பணி வாழ்வை பலி வாழ்வாகவே வாழ்ந்து காட்டியவர்; தன்னை இழந்த கோதுமை மணி யாகியவர்.

வன்னி மண் கண்ட அந்த வக்கிரப் போர் அனுபவங்களை சொந்தமாக்கிக் கொண்டிருந்த எம் மக்களோடு தொடர்ந்தும் பயணிப்பேன், அவர்களுக்காய் தொடர்ந்தும் பணி செய்வேன் என்று உறுதி கொண்டு கிளிநொச்சி மாவட்டத் தில் உருத்திரபுரப் பங்குத் தந்தையாகவும் இயேசு சபை அகதிகள் பணி மையத்தின் இயக் குநராகவும் அருட்தந்தை அவர்கள் பணிபுரிந் தார். என்னுடைய குருத்துவ வாழ்வின் முதலா வது பணிக்காக நான் முல்லைத்தீவுக்கு அனுப் பப்பட்ட வேளையில் கிளி-முல்லை மறைக் கோட்டத்தில், எனது குருத்தோழமையில் சந் தித்த மறக்க முடியாத குருவாக சறா அவர்கள் மாறியிருக்கிறார். ஆரம்பத்தில் இடையிடையே தான் எம் சந்திப்புக்கள் இருந்தாலும் இறுதிக் கட்ட யுத்த இடப்பெயர்வுகள் எம்மையெல்லாம் ஒன்றாக வாழும்படி செய்திருந்தன.

அருட்தந்தையவர்களுடன் ஏற்பட்ட அந்த சந்திப்புக்கள், வாழ்வனுபவங்கள் அனைத்தை யும் மீட்டிப் பார்க்கும் போது அவரது ஏழ்மை யான உள்ளமும், எளிமையான வாழ்க்கை முறையும் எல்லோரும் அவரை நாடித் தேடி நன்மை பெற வைத்ததை எண்ணிப்பார்கிறேன். தனது பணியினை வேண்டி தேடி வரும் எல் லோரையும் மிகுந்த மதிப்போடும், அன்போடும் ஏற்று அவர்களது குறைகளை, கவலைகளை, ஆதங்கங்களை உள்ளத்தினால் செவிசாய்க் கும் உத்தம பண்பு அவருடைய தனித்துவமான இயல்பு. அவ்வாறு தேடிவரும் ஏழை மக்களின் துயர் போக்கும், துயர் பகிரும் ஒரு சமூகப்பணி யாளனாகி, ஓர் ஆன்மீக தந்தையாகி நின்றார்.

இடப்பெயர்வுகள் எண்ணுக்கணக்கில்லாது இடம்பெற எம் மக்கள் இருந்த அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக முள்ளிவாய்க்கால் வரை வந்து சேர்ந்தார்கள். JRS ன் பணி அங்கும் இடம்பெற்றது. ஏற்கனவே திட்டமிட்டு கொள் வனவு செய்துவைத்த அத்தியாவசியப் பொருட்க ளையும், குழந்தைகளுக்கான பால்மாவினை யும் சிறிதேனும் பகிர்ந்தளித்து ஏழைகள் பசிபோக்கும் உத்தமரானார். இவரது பணியி னால் பயன்பெற்ற ஒரு இந்து மத சகோதரி இவரைப்பற்றி ஒரு முறை என்னோடு பேசிய வேளையில் எனக்குக் கூறியதை உங்களோடு பகிருகிறேன். "மகிழ்ச்சியாக இருக்கிறவர்கள் மத்தியிலிருந்து கை தட்டுவதை விட அழுகிற வர்கள் மத்தியில் கொஞ்சம் ஆறுதலாக இருப் பது மேலானது என அடிக்கடி எமக்குக் கூறுவார் நம்முடைய அருட்தந்தை". இத்தகைய பக்கு வத்தில் தன்னுடைய பணி வாழ்வை வாழ்ந்தவர் தான் எம் அருட்தந்தை அவர்கள். இச் சகோதரி யின் அனுபவம் ஏழைகள், கைவிடப்பட்டவர்கள், துன்புற்றவர்கள் மத்தியில் அவர் கொண்டிருந்த ஆழமான பாசத்தையும் இரக்கத்தையும் கோடிட்டுக் காட்டுகிறது.

அருட்தந்தையின் கனிவான பேச்சும், அமை தியான தொனியும் எல்லோர் மனதையும் எளிதில் கவரும் தன்மை கொண்டிருந்தன. தன்னுடன் சேர்ந்து பணியாற்றிய சக குருத்தோழர்க ளோடும் அவருக்கிருந்த ஆழமான அன்பான உறவு அபரிமிதமானது. அனைத்து குருக்களதும் பணிவாழ்வில் ஏற்பட்ட இக்கட்டான இடர் நிறைந்த வேளைகளில் உடனிருந்து உறுதி யூட்டும் அவரது பாங்கு மிகுந்த முதிர்ச்சியா னது. குருக்கள் எங்கள் பணி வாழ்வு எப்போ தும் துன்பங்களையே தந்தாலும் துவண்டு போகாமல் எம் மக்களுக்காகவே நாம் இருக்கி றோம் என்பதை உணர்த்தி நின்றது அவரு டைய அமைதியான சாட்சிய வாழ்வு.

2009ம் ஆண்டு தவக்காலத்தையும், பாஸ்கா வழிபாடுகளையும் எங்களால் எப்போதுமே மறந்துவிட முடியாது. கிளி-முல்லை மறைக் கோட்ட கூட்டம் வலைஞர் மட ஆலயத்தின் பதுங்கு குழிக்குள் கூட்டப்பட்டது. முடிந்தவரை அத்தோடு இறுதிவரை எம் மக்களுடைய விசுவாச வாழ்வை உறுதிப்படுத்துவோம் என

எண்ணி குருக்கள், சிறு சிறு குழுக்களாக பாஸ்கா வழிபாட்டிற்காக பிரிக்கப்பட்டோம். மாத்தளன் தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை கடலோரமாய் தஞ்சம் கோரியிருந்த பல்லாயிரக் கணக்கான எம் மக்களுக்கு வலைஞர் மட ஆலயம், மாத்தளன், அன்பகம் இருந்த ஆரம்ப சுகாதார நிலையத்தடி, ஒற்றைப் பனையடி என நான்கு இடங்களில் நாம் பாஸ்கா வழிபாடு களை நடத்தினோம். அருட்பணியாளர்கள் சறா, ஸ்ரீபன் ஆகிய இருவரும் ஒற்றைப்பனையடி யில் வழிபாட்டிற்கு பல சிரமங்கள் மத்தியில் சென்று வந்தார்கள். பொழியப்பட்ட குண்டு மழைகளையும், பயணச்சிரமங்களையும் பொருட்படுத்தாமல் அங்கு சென்று வழிபாடு நடத்தினார்கள். பெரிய வெள்ளி வழிபாட்டினை எம்மால் தொடர்ச்சியாக நடத்தவே முடியாமல் போனது. சண்டை உக்கிரமடைந்து விட்டதால் துவக்கு சன்னங்கள் சரமாரியாக வழிபாட்டில் இருந்த எம்மை நோக்கியும் வந்து விழ அனை த்து மக்களும், திருப்பலி ஆடையுடன் குருக்க ளும் குப்புற விழுந்து சண்டை சற்று குறையு மட்டும் வழிபாட்டை ஒத்திவைத்தோம்.

இச் சூழலுக்கு மத்தியிலும் அழைத்தது ஆண்டவரே. அவரது சித்தம் எதுவோ அதுவே நடக்கட்டும் என்று சொல்லி ஒற்றைப்பனையடி யிலும் வழிபாட்டை நடாத்தினார்கள் எம் இரு குருக்களும். இந்த நாட்களில் இடம்பெற்ற திருப்பலிகள் வழிபாடுகளில் ஏராளமான மக் கள் கண்ணீரோடும் கலக்கங்களோடும் பங் கெடுத்தார்கள். இழப்புக்களுக்குள்ளும், இறப் புக்களுக்குள்ளும் பங்கெடுத்தார்கள். விசுவா சத்துடனும் பக்தியுடனும் பங்கெடுத்தார்கள். "ஆண்டவரே என் அருள், அவரே என் கோட்டை என்ற ஒரே விசுவாசத்தில் அவரிடமே கையேந்தி கண்ணீர் விட்டு வேண்டினார்கள்.

ஆம், முள்ளிவாய்க்கால் மண் அது. எம் மக்களின் விசுவாசத்தை, எதிர்நோக்கை பரீட் சித்துப் பார்த்த பாஸ்கா நிலம் அது; ஆன் மீகத்தைப் புடமிட்ட இரத்தக்களம் அது; சத்திய தேவனின் இருப்பை சந்தேகித்த பாலைவனப் பயணம் அது; இனமொன்றின் சரித்திரம் இரத்தத்தால் எழுதப்பட்ட உடன்படிக்கையின் இடம் அது. என்றும் நம் விசுவாசம் உறுதியாய் இருந்திட இன்றும் நாம் நின்று தியானிக்க வேண்டிய இடம் தான் இந்த முள்ளிவாய்க்கால். இமை மூடி ஒரு கணம் நினைத்தால் கடந்தவர் களுக்கு அது ஒரு பாஸ்கா அனுபவம், கடக்க முடியாது மாண்டவர்களுக்கும் அது ஒரு உயிர் ப்பு அனுபவம். இவ்விடத்தில் தான் அனைவ ருக்கும் விசுவாசம் முற்றிலும் சொந்தமாகியது; உயிர்ப்பு எதிர்நோக்காகியது.

இவ்விடத்தில் இருக்கும் போது தன்னுடைய பணியிலே இணைந்திருந்த ஒருவரிடம் அருட் தந்தையவர்கள் கேட்டார் "உயிரோட நீ உன்னு டைய வீட்டில் போய் திரும்பவும் இருப்பாயென நம்புகிறாயா?" என. விசுவாசத்தை சோதித்து உறுதிப்படுத்தும் இவ் வார்த்தைகள் அன்றி ருந்த உணர்வுக்குள் மிகவும் ஆழமானவையும் அகலமானவையும் தான். அன்று ஏப்பிரல் 19ம் நாள். இறுதியான மறைக்கோட்ட கூட்டம் கூடி யது. எம் மக்களது தொடர்ச்சியான இழப்புக்க ளும் காயங்களும் மென்மேலும் ஏற்றுக் கொள்ள முடியாது அதிகரித்துச் சென்று விட்ட சூழலில் குருக்களது தொடர்ச்சியான உடனிருப்புப் பற்றியும் மக்களது நிலைப்பாடுகள் பற்றியும் கலந்துரையாடிக் கொண்டிருந்தோம். எனக்கருகே இருந்த அருட்தந்தையவர்கள் என்னிடம் கேட்டார் "எங்கட மக்களுக்கு முடி வில் என்ன நடக்கும்?" இதற்கு என்னிடம் வார்த் தைகளில் உடனடியாக பதில் வரவில்லை. சற்று தாமதித்து,"இனிமேலும் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது" என்றேன். மக்க ளையே எப்போதும் எண்ணியபடி பணியாற்றிய அப் பணியாளனுடைய அந்தக் கேள்வி இன்றும் என் காதுகளுக்குள் கேட்டுக் கொண்டேயி ருக்கிறது. போர்க்காலத்தில் வாழத்துடித்த குருக்களாகிய எம்மைப் பார்க்காமல், அவர் தன்னைப் பார்க்காமல், மந்தைகளாகிய மக்க ளைப் பற்றிய அவருடைய இக் கேள்வி மிகுந்த ஆதங்கத்தோடும், கவலையோடும் கேட்கப்பட்

டது. மந்தையின் விடுதலைத் தேவையை அறிந்து பணியாற்றிய நல்லதொரு ஆயன் அவர் என இக் கேள்வி எனக்கு உணர்த்தி நின்றது.

ஏப்பிரல் மாதம் 24ம் நாள் வலைஞர் மடத்தி லும் நாம் இருக்க முடியாமல் போக குண்டு மழைக்குள் தப்பித் தப்பி தஞ்சமாயிருந்த, மீதியாயிருந்த முள்ளிவாய்க்காலுக்கு கடற்கரை யோரமாய் வந்து சேர்ந்தோம். இப்போது தூக்குவதற்கு எதுவுமில்லை, ஒரு சிறு பையைத் தவிர. சுமப்பதற்கு இப்போது எதுவுமில்லை, இழப்புக்களின் சுமையைத் தவிர.

இப்போது இந் நாட்களில் சுமந்ததெல்லாம் திருச்செபமாலையும் கல்லறை ஆண்டவரு டைய செபப்புத்தகமும் தான். ஏழைகள், பணக் காரர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், படித்தவர்கள், படிக்காதவர்கள், ஆண்கள், பெண்கள் என்ற எல்லா அடையாளங்களும் தொலைந்து போக, மறந்து போக ஒரேயொரு அடையாளம் மட்டும் மிஞ்சியிருந்தது - அது நாம் அனைவரும் படைத்தவரை மட்டும் நம்பி யிருக்கும் 'விசுவாசிகள்' என்பதுவே அவ் அடை யாளம். அதனால் தான் கைகளிலும், கழுத்து களிலும் காணப்பட்டது இச் செபமாலை.

பதுங்கு குழிக்குள் சொல்லப்பட்ட ஒரே யொரு செபம் இச் செபமாலை. இதற்கு முன்னர் தேராவிலின் வேளாங்கண்ணி ஆலய வளாகத்தில் அருட்தந்தை அவர்கள் கொட் டகை அமைத்து தமது JRS பணியாளர்களுடன் தங்கியிருந்தார். அவரது நலம் விசாரிக்க நான் அங்கு சென்ற போது திடீரென செல் வீச்சுக் களும், கிபீர் தாக்குதல்களும் அந்த இடத்தில் நடத்தப்பட்டன. உடனே நாம் அனைவரும் அங்கிருந்த பதுங்கு குழிக்குள் சென்றோம். அருட்தந்தையவர்கள் உடனடியாக செபமாலை சொல்வோம் எனக் கூறி செபத்தை ஆரம்பித்து வைத்தார். இப்பழக்கம் அவருடன் கூடப்பிறந் தது ஆகும். "காரணிக்கங்கள் சொல்லி முடிந் தால் இப்போது பாடலாகப் பாடுவோம்" என்று தன்னோடு இருந்தவர்களுக்கு அடிக்கடி சொல் வதை நான் நன்கு அறிவேன். இதனைப் பார்க் கும் போது அவருடைய மரியன்னைப் பக்தியும் விசுவாசமும் ஆழமானது எனத் துணியலாம். மேலும் பதுங்கு குழிக்குள் அவர் 'அடிக்கடி' ஆத்துமத்தை ஆண்டவரிடம் கையளிக்கும் செபத்தைச் சொன்னதை அவரோடு இருந்தவர் கள் இன்றும் நினைவு கூருவார்கள்.

இத்தகையதொரு பணியாளனது மரணச் செய்தியை என் மனம் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கவில்லை, பொய்யாகி விடக் கூடாதா இச் செய்தி என்று என் மனம் ஆதங்கப்பட்டது. இறையரசின் கனவுகளை சுமந்து காலமெல் லாம் பணிசெய்ய நினைத்தவரை கடவுள் தன்னருகே அழைத்தது என்னமோ அவரது சித்தமே. இறையரசின் கனவுகளை மட்டுமல்ல அருட்பணி சறா சுமந்தது. அந்தக் கனவுகளின் விளைவாக விளைந்த ஏழை மக்களின், அடக் கப்பட்ட மக்களின், காயப்பட்ட மக்களின், மரணங்களை சந்தித்த மக்களின், அனைத்து நாடுகளாலும் கைவிடப்பட்ட மக்களின் ஒட்டு மொத்த வலிகளையும் தான் இந்த இறைபணி யாளன் சுமந்தார். யார் கண்டது அனைத்து நாடுகளும் இத்தேசத்து மக்களைக் கை விடுவார் கள் என்று? பல வலிகளை, நோவுகளை சுமந்து, வீழந்தவர்களின், மாண்டவர்களின், கொல்லப் பட்டவர்களின் உடல்களைக் கடந்து வரும்போது வாழ யாருக்குத்தான் அர்த்தமாய் தென்படும்? ஏளனப் பேச்சுக்களும், ஏதிலிகளின் வீழ்ச்சிக ளும் இன்னும் வலிகளைக் கூட்டியதே ஒழிய குறைக்கவில்லை. மாண்ட நம் தேசத்து உறவு களுடன் மரணித்த எம் அருட்தந்தையை அந்த ட்றக்டர் வண்டியில் கண்டவர்கள் கதறியழுத வார்த்தைகள் அவரை தம் "தந்தையாகவே" ஏற்றன. நல்லாயனாய், பாசமிக அருட்பணியா ளனாய் வாழ்ந்த மக்களோடு விதையாகிய சறாவை மனதால் ஏந்தி அவர் வழி இறைப ணியை ஆற்ற கரம் இணைப்போம். நித்திய தேவனின் நிரந்தர அமைதி என்றும் அவருக்குண்டு.

அருட்தந்தை அ. கொன்பியூசியஸ் அமதி

Fr. Sara, Stood by his decision

Fr. Sarathjeevan, Jaffna Diocesan Priest who was the Coordinator of Jesuit Refugee Service (JRS) Vanni, he was a man who made a decision to stay with the suffering people and stood by that decision till the very end even to the end of sacrificing his life.

Rev.Fr. J.Joel SJ
Manresa Retreat House
Batticaloa

சறத்ஜீவன் ஒரு சாதனையாளன்

போருக்குப் பின்னர் சிறிது சிறிதாக மீண்டு கொண்டிருந்தது முல்லைத்தீவு. முல்லைத்தீவின் முன்னேற்றத்திலே பலதரப்பும் கவலையும் ஏக்கமும் கொண்டிருந்த அக்காலப்பகுதியிலே தனது குருத்துவப் பணியின் தொடக்க காலப்பகுதியை முல்லைத்தீவின் உதவிப்பங்குத்தந்தையாகக் கடமையாற்ற கிடைத்த சந்தர்ப்பத்தை அருட்பணியாளர் சறா நன்கு பயன்படுத்தினார். யுத்த நிறுத்த காலத்தைப் பயன்படுத்தி பலரும் பல முன்னேற்றகரமான செயற் பாடுகளிலே தீவிரமாக இறங்கியிருந்தார்கள். முல்லைத்தீவு சிறிது சிறிதாக செல்வம் கொழிக்கும் இடமாக மாறிக்கொண்டிருந்தது. 2004 டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட சுனாமிப்பேரலை முல்லைத்தீவை துவம்சம் செய்தது. இடத்தை மட்டுமல்ல மனித மனங்களையும்தான். இத்தனை அவலத்துக்குள்ளும் சறா தன்னையும் ஒருவராக்கிக்கொண்டார் எப்படியெனில் இப்பேரவலத்திலே அவரும் அனைத்தையும் இழந்து வெறும் கையுடன் துணிவோடு நின்றார்.

தம் உறவுகளை இழந்த தம் பங்குமக்களை ஒவ்வொருவராகச் சென்று சந்திக்கத் தொடங்கினார். இந்தப்பகுதியிலே வாழுகின்ற ஒவ் வொருவரும் பாதிக்கப்பட்டவர்களே என்ற உணர்வுடன் சுனாமியின் 31ம் நாள் நிகழ்வுகள் ஒழுங்மைக்கப்பட்ட வேளையிலே உளவியலாளர் களோடு தன்னையும் ஒருவராக இணைத்துப் பணியாற்றினார். சுனாமிக் காலத்திலே இவரின் பணிகளைப் பார்த்த வர்கள் வியக்கும் அளவுக்கு இவரின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

முல்லைத்தீவிலிருந்து இடமாற்றம் பெற்ற அருட்பணியாளர், உருத்திரபுரம் பங்குத்தந்தை யாகவும் அகதிகளுக்கான இயேசு சபை (JRS) வன்னி இணைப்பாளராகவும் செயற்பட்டார். அஞ்சா நெஞ்சமும் களைப்புறா உடலும் துணிவும் மிக்க தந்தையவர்கள் மக்கள் பணியில் தம்மை நாளுக்கு நாள் கரைத்துக்கொண்டே வந்தவராகும். தமிழர் வரலாற்றில் எப்பொழுதும் பேசப்படும் முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் களப்பலியான ஒரேயொரு அருட்பணியாளர் சறத்ஜீவன் அடிகளாரேயாகும். சறா நீ எம் நெஞ்சில் நிறைந்தவன், முல்லைத்தீவின் சுடு புழுதிக்குள் சுழன்று திரிந்தவன். உன்னை கடவுள் எம்மோடு வைத்திருக்க விரும்பவில்லை, தன்னோடு வைத்திருக்க விரும்பினார். கடவுளின் திட்டமே நிறைவேறியது. நீ சாதனைகள் ஆன்மீகத்தில் படைத்ததினால் கடவுளோடு ஒன்றாகக் கலந்துள்ளாய்.

நன்றி.

அருட்பணி செ. யூட் அமலதாஸ்

சறா நீ எம் நெஞ்சில் நிறைந்தவன், முல்லைத்தீவின் சுடு புழுதிக்குள் சுழன்று திரிந்தவன். உன்னை கடவுள் எம்மோடு வைத்திருக்க விரும்பவில்லை, தன்னோடு வைத்திருக்க விரும்பினார். கடவுளின் திட்டமே நிறைவேறியது. நீ சாதனைகள் ஆன்மீகத்தில் படைத்ததினால் கடவுளோடு ஒன்றாகக் கலந்துள்ளாய்.

சுனாமியும் அருட்பணி சறாவும்

சுனாமி அனர்த்தத்திலே அனைத்தையும் இழந்த முல்லைத்தீவு மக்கள் அனைவரும் முள்ளியவளையிலே உள்ள பாடசாலைகளிலே தங்க வைக்கப்பட்டனர். ஒரு ஊருக்கு ஒரு பாடசாலை என்ற அடிப்படையிலே மிகவும் நேர்த்தியான முறையிலே அனைத்தும் ஒழுங்கமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அனர்த்தம் பற்றிக் கேள்விப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து குருக்கள் சிலர் வந்திருந்தார்கள். சறாவின் நிலையைப்பார்த்த சில குருக்கள் யாழ்ப்பாணம் வருமாறு வற்புறுத்தினார்கள். ஏனென்றால் அவரிடம் மாற்றுடை எதுவும் இருக்கவில்லை, எனவேதான் அவர்கள் அவரை உடைமாற்றி ஓய்வெடுக்க அழைத்தார்கள். அவரோ இங்கே இவ்வளவு மக்களும் பணிகளும் இருக்க நான் எப்படி வரமுடியும் என்று மறுத்தேவிட்டார்.

பல பிள்ளைகள் பெற்றோரையும் பெற்றோர் பிள்ளைகளையும் கணவன் மனைவியையும் மனைவி கணவனையும் பறிகொடுத்து பரிதவித்து நின்றார்கள். இவர்களுக்கான உள ஆற்றுப்படுத்தலைஅன்னை இல்லத்தவர்கள் செய்துகொண்டிருந்தார்கள். அவ்வேளையிலே அருட்பணி சறா அவர்கள் ஒரு சில நல்ல உள்ளங்களிடமிருந்து விளையாட்டு உபகரணங்களைப் பெற்று அனைவரையும் விளையாட்டு மைதானத்திற்கு வரவழைத்து விளையாட அன்பு வற்புறுத்தல் செய்வார், ஏனையோரை விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர்களாக மாற்றுவார் ஏனென்றால் அவர்கள் தங்கள் கவலைகளை மறப்பதற்கும் இழப்புக்களிலிருந்து மீண்டெழுவதற்குமான ஓர் சந்தர்ப்பமாக இது அமையும் என அவர் நம்பினார்.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பாட சாலைகளே தற்காலிக முகாம்களாக மாறியது. முகாம்களிலே பணிபுரியவென அருட்தந்தை யர்களும் அருட்சகோதரிகளும் அருட்சகோதரர் களும் பல துறவற சபைகளிலுமிருந்தும் மறைமாவட்டங்களிலிருந்தும் குருமடங்களிலி ருந்தும் அனுப்பிவைக்கப்பட்டார்கள். அவர் களுக்கான உணவு தயாரிக்கும் பணியை அருட்தந்தையவர்கள் பொறுப்பேற்றுக்கொண் டார். தனது ஓய்வு நேரங்களைப்பயன்படுத்தி பாடசாலை முகாம்களிலே இழப்புக்களோடும் விரக்தியோடும் இருந்த மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறுவார். ஞாயிறு திருப்பலியின் முக்கியத்துவத்தை உணர்த்தி பங்குமக்கள் எப் பாடசாலையில் அதிகமாகவுள்ளார்களோ அங்கே திருப்பலிகள் நிறைவேற்ற ஆவன செய்வார்.

அருட்பணி சறாவின் வாழ்வின் எளிமை எது என்பதை அவரோடு வாழ்ந்த குருக்கள் துறவி யர்கள் அருட்சகோதரர்கள் அறிவார்கள். மாமூலை புனித அந்தோனியார் ஆலய மண்ட பமே அப்பகுதியில் உள்ள குருக்கள் தங்கக் கூடிய இடமாகவிருந்தது. அச் சிறிய மண்டபத் திலே 10க்கு மேற்பட்ட குருக்களும் அருட்ச கோதரர்களும் தங்கியிருந்தார்கள். தான் படுக்கும் பாயைக் கூட சில தருணங்களிலே தியாகம் செய்வார். முகாம்களிலே மக்கள் இப் படித்தானே படுக்கிறார்கள் நானும் இப்படியே செய்வேன் என்று கூறுவதைக் கேட்கலாம்.

2ம் கட்டமாக பாடசாலைகளை இயக்குவதற் காக மக்கள் இடைத் தங்கல் தற்காலிக குடிசை வீடுகளுக்கு மாற்றப்பட்டார்கள். அங்கு அருட் தந்தை சறாவின் பணி வித்தியாசமாக அமைந் திருந்தது. மக்களுக்கான நிவாரணம் வழங்கும் பணி ஒரு சில நிறுவனங்கள் தருகின்ற உதவி

சறாவின் நிலையைப்பார்த்த சில குருக்கள் யாழ்ப்பாணம் வருமாறு வற் புறுத்தினார்கள். ஏனென்றால் அவரி டம் மாற்றுடை எதுவும் இருக்கவில்லை, எனவேதான் அவர்கள் அவரை உடைமாற்றி ஓய்வெடுக்க அழைத்தார் கள். அவரோ இங்கே இவ்வளவு மக் களும் பணிகளும் இருக்க நான் எப்படி வரமுடியும் என்று மறுத்தேவிட்டார்.

யோடு இடம்பெற்றது. அனைத்து மக்களுக்கும் உதவிகளைப் பகிர்ந்து கொடுத்தல் கடினமான பணியாகவே இருந்தது. இருப்பினும் சறா தேவையானவர்களை இனங்கண்டு உதவி களைப் பெற்றுக்கொடுப்பார். முல்லைத்தீவின் பங்குத்தந்தையாகவிருந்த அருட்பணி யேம்ஸ் பத்திநாதர் அடிகளாருக்கு பெரும் பக்க பல மாக நின்று பணிகளை ஆற்றினார். அக்காலத் திலே இயேசு சபை அகதிகள் பணி (JRS) பல்வேறு விதமான பணிகளை இடைத்தங்கல் முகாம்களிலே ஆற்றிய படியினாலே இவருக்கு இயேசு சபை அகதிகள் பணி (JRS) நிறுவ னத்தோடு பெரும் ஈடுபாடு தோன்றியது. இதுவே இவரை பிற்பாடு வன்னிக்கான தொடர்பாளராக ஆக்கியதென்று கூறலாம். சறா வன்னி மக் களை நேசித்த குரு. மக்களின் பணியாளன். ஒட்டுமொத்தத்தில் மண்ணையும் மனிதர்களை யும் நேசித்த மறைப்பணியாளன்.

அருட்தந்தை செ. யூட் அமலதாஸ்

கல்வாரி பிரதிமை

குறுகிய வாழ்வும்
நீண்ட சாவுமென
நிர்ப்பந்தம் செய்யப்பட்ட
உனது விதியில்
எவ்வளவு வலிச்சுமையிருக்கிறது
தெரியுமா?

குருதி நிலத்தில்
பெருகிய தேவை
உனது குற்றமில்லாத
மாசற்ற இரத்தத்தை வேண்டிநின்ற
பலிகொடுப்பு
கல்வாரியின் பிரதிமையே!

வாழப்படவேண்டிய குருத்துவம்
காலைப்பனியாகியது
அகாலமானது

களங்கமற்ற ஒரு நட்பின்
அஸ்தமனம்
முள்ளாய் குத்துகிறது

பருகி பாதியில் சிந்தப்பட்ட
பாலுக்காய் அழும் குழந்தைபோல
இன்னும் உனக்கான தாகத்துடன்
நாம்!

நெல்முனையின் குறுக்கமாய்ப்போன
உன் வன்னிப் பணிநிழல்
ஏகாந்த பெருவெளியில்
எண்ணற்ற சாட்சியாய் நிற்கிறது

குருத்துவம் பிந்திக் கிடைத்ததும்
சாவு முந்திவந்ததும்
எதனாலென்று
உன்கல்லறையில்
ஒற்றைக்குரல் கேட்கிறது
ஆயினும்
இறைதிட்டமென்று
அமைதி செய்கிறது
இதயம்

விசையுறு பந்தினைப்போல
உடல் செல்லும்
ஒரு மனம்
கூரிய வாளினும் கூர்மையான
ஒரு மூளை
இரக்கம் காட்ட
என்றென்றைக்கும் ஈரமான இதயம்
இவற்றின் 'மொத்த உருவம்'
சறா!

எஸ். ஏ. அருட்செல்வன்

சறா - ஆழமான விடுதலை உணர்வுகொண்ட ஒரு தமிழ் குருமகன்

ஈழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ் கத்தோலிக்க திருச்சபையும் தன் பணியாளர்களை இழந்து வேதனைப்பட்டதை யாரும் மறக்கமுடி யாது. சிலர் கொல்லப்பட்டார்கள், சிலர் காணாமலாக்கப்பட்டார்கள், சிலர் விழுப்புண்ணடைந்தார்கள். அமரர் அருட்பணி மேரி பஸ்ரியன் தொடங்கி அமரர் அருட்பணி சறத்ஜீவன் வரை இத்துன்பவடுக்களை தமிழ் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் நாம் காணமுடியும்.

முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதி யுத்தத்தில் வேதசாட்சி மரணத்தை தழுவிக் கொண்ட அருட்பணி சறா என்னுடைய வகுப்புத் தோழன். நான் சிறிய குருமடத்தில் மாணவனாக இருந்த காலத்தில் யாழ் பேராலயத் திற்குத் திருப்பலிக்கு செல்லும் போது சறாவை ஒரு organist ஆகக் கண்டு இருக்கின்றேன். ஒரு சில வருடங்களின் பின்னர் பேராலயத்தில் organ போடும் அண்ணன் குருமடத்திற்கு வரப்போகிறாராம் என்ற கதை குருமட மாணவர்கள் மத்தியில் உலாவியது. சறாவின் பருத்த உருவம் எம் எல்லோருக்கும் அவரை ஒரு பெரிய மனிதனாகவே காட்டியது.

சறா குருமடத்தில் இணைந்து ஒரு குருமட மாணவனாக எம்மோடு வாழத்தொடங்கிய பின்னர்தான் சறாவின் எளிமை, தாழ்ச்சி, சகோதரத் துவம் அனைத்தையும் அனுபவிக்க முடிந்தது. சறா குருமடத்தில் இணைந்த நாளில் இருந்து நண்பன் சறாவின் உயிரற்ற உடலை வவுனியா வைத்தியசாலையில் கையொப்பமிட்டு பொறுப்பெடுத்து சறாவுக்காக இறுதித் திருப்பலி நிறைவேற்றிய நாள் வரை நான் சறா வோடு பயணித்த நாட்கள் மறக்க முடியாதவை.

சாந்தமே உருவான சறாவின் நினைவுகளை மீட்டிப்பார்க்கும்போது, இதயத்துள் வாழும் இறை வனின் அன்பின் ஓசை சறாவின் வாழ்வின் புனி தத்தை ஆழமாகத் தியானிக்கத் தூண்டுகிறது என லாம். "மரியாம்பிள்ளை ததேயுஸ் சறத்ஜீவன்" என்பதுதான் சறாவின் முழுப்பெயர். ஆனால் சறா, சறத், சறாஅண்ணா என்றுதான் இவரை எல்லோரும் அழைப்பர். இவரின் பெயரை உச்ச ரிக்கும் போதே சறாவின் மேன்மை, வாழ்வின் அழகு, வாழ்வின் முன்னுதாரணம், எவரையும் எளிமையாக ஈர்க்கும் அன்புகலந்த வார்த்தை கள், பணிவு, இறைபக்தி அனைத்தும் வெளிப்படும்.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணு கின்ற மனம் சறாவிடம் நிறையவே இருந்தது. ஏழைகள், ஆதரவற்றவர்கள் மட்டில் இரக்கம் கொண்ட ஒரு அருட்பணியாளனாக வாழ்ந்தது இவருக்குரிய ஒரு தனிச்சிறப்புதான். இவரின் குணத்திற்கு ஏற்ற விதத்தில் ஒரு பணிப்பொறுப் பும் கிடைத்தது. அதுதான் JRS இணைப்பாளர். இயேசுவைப் போன்று எல்லோரிடமும் இரக்கம் காட்டி அக்கறை கொண்டு நன்மை செய்து வாழ்ந்த நண்பன் சறாவின் பாதச்சுவடுகள் அழகானவை. எத்தனையோ பல விழுமியங்களையும் ஆற்றல் கள், திறமைகளையும், தன்னகத்தே கொண்டி ருந்தாலும் எதிலும் எச்சந்தர்ப்பத்திலும் பெருமை கொண்டவராக சுயநல நோக்கோடு வாழ்ந்த வரில்லை சறா.

சறா ஒரு அருட்பணியாளனாக இருந்தா லும், தனது குருத்துவப் பணிக்கு உரிய திறமை களைக் கொண்டிருந்தாலும் பல் திறமைகள் அவ ரிடம் இருந்ததை நான் கண்டு அனுபவித் தேன். இவர் ஒரு நல்ல organist, படவரைஞர் (Draftsman),சிறந்தசமையல் திறமை கொண்ட வர். இப்படிப் பலவற்றைக் குறிப்பிடலாம். தன் னால் மற்றவர்களுக்கு எந்தக் கஸ்ரமும் ஏற்படக் கூடாது என மிகவும் அவதானத்துடன் வாழ்ந்த மனித நேயம் கொண்ட ஒரு மனிதன்.

அருட்பணி சறா உருத்திரபுரம் பங்குதந்தை யாக இருந்த போது ஒரு நாள் நான் அவரை சந்திக்கச் சென்றிருந்தேன். அன்றைய தினம் நான் அவருடன் இரவு தங்கிநின்று செல்ல வேண்டி ஏற்பட்டது. சாதாரணமாக சறா நித் திரை கொள்ளும் போது சத்தமாகக் கொறட்டை விடுவார். அவருடைய சத்தத்துக்கு எனக்கு நித்திரை வரவில்லைத்தான். சாமத்தில் சறா திடீர் என்று எழுந்து நேசன் என்று கூப்பிட்டார். "நான் பதில் கொடுத்தேன். நான் உம்முடைய நித்தி ரையை குழப்பிறன் போல இருக்கு, நீர் நித் திரை கொள்ளும் பிறகு நான் படுக்கின்றேன்" என்று கூறினார். நான் சொன்னேன் "ஒரு பிரச்ச னையும் இல்லை நீர் படும்" என்று. இப்படி நித் திரையில் கூட மற்றவருக்கு இடையூறு ஏற்ப டக்கூடாது என்று யோசிப்பவர்தான் சறா.

"தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு எவரிடமும் இல்லை." என்ற தனது குருவாகிய இயேசு ஆண்டவரின் வார்த்தைகளை தனக்குரியதாக்கிக் கொண்ட சறாவுக்கு ஆண்டவர் அமைத்துக் கொடுத்த தளம்தான் 2004ல் ஏற்பட்ட சுனாமியில் பாதிக் கப்பட்ட மக்களுக்கு ஆற்றிய பணியும் விடுத லைப் போராட்டத்தின் இறுதி நேரம் வரை ஆற்றிய பணியும் ஆகும். இப்படிப் பாதிக்கப்பட்ட மக்களுடைய துயர் துடைக்கும் பணியில் இவர்

இவருடைய உருவச்சிலைக்குப் பக்கத்தில் முள்ளிவாய்க் காலில் கொல் லப்பட்ட மக்களுக்காக நினைவுத் தூபியும் உள்ளது. இந்த இடத்தில்தான் முள்ளி வாய்க்காலில் கொல்லப்பட்ட மக் களுக்காக முதல் தடவையாக இராணுவ கெடுபிடியைத் தாண்டி அஞ்சலி செலுத்த முடிந்தது. இதற்கு காரணம் சறாதான்.

தளராமலும், மிக அர்ப்பணிப்போடும் பணி செய்ய இவருக்கு உறுதியைக் கொடுத்தது இவர் தன் பெற்றோரிடமிருந்து பெற்ற ஆழமான விசுவாசமும், அவரிடம் காணப்பட்ட இறை பக்தியுமே. குருக்களின் பாதுகாவலியான தேவ தாயாரிடம் அதிகம் பற்றுக் கொண்ட குருவா கவும் இவர் வாழ்ந்தார். இவர் ஒரு குரு மட்டும் அல்ல ஆழமான விடுதலை உணர்வு கொண்ட தமிழ் மகனும் கூட. அந்த உணர்வுதான் அவரை முள்ளிவாய்க்கால் வரை மக்களோடு செல்லத் தூண்டியது.

மரணித்த பின்னர் சாதித்தவன் சறா என்று சொன்னால் அது மிகையாகாது. உருத்திரபுரம் தூய பற்றிமா அன்னை ஆலய வளாகத்தில் சறாவுக்கு ஒரு சிலை அமைக்கப்பட்டுள்ளது. இது சறாவின் வகுப்புத் தோழர்களாகிய எமது முயற்சியால் உருவாகியது. இவருடைய உருவச்சிலைக்குப் பக்கத்தில் முள்ளிவாய்க் காலில் கொல்லப்பட்ட மக்களுக்காக நினைவுத் தூபியும் உள்ளது. இந்த இடத்தில் தான் முள்ளி வாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்காக முதல் தடவையாக இராணுவ கெடுபிடியைத் தாண்டி அஞ்சலி செலுத்த முடிந்தது. இதற்குக் காரணம் சறாதான். சறா என்ற குருவினால் தான் நாம் அன்றைய தினத்தில் மக்களுக்கும் அஞ்சலி செலுத்த முடிந்தது.

சறாவோடு பயணித்த கால அனுபவங்கள் நிறைய உண்டு. ஆனால் அவை அனைத்தை யும் பதிக்க இப் பதிவேடு போதாது. நண்பன் சறாவின் ஆத்மா சாந்தியடைய தொடர்ந்தும் பிரார்த்திப்போம்.

வகுப்புத் தோழன்
Fr. செ.நேசன்
நிதியாளர்
யாழ் மறைமாவட்டம்

“காலங்கள் பல கடந்தோடிய போதும்
கனவாகிப்போகாதோ
நீ எம்மைப் பிரிந்து விட்டாய் என்ற செய்தி”

அருட்பணி சறத்ஜீவன் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் பல ஆகிவிட்டபோதும் அவர் விட்டுச்சென்ற நினைவுகள் எமது மனங்களில் இன்றுவரை நிலைத்து நிற்கின்றன. மீண்டுமாக நினைக்க முடியாத அந்த வன்னியின் கொடிய யுத்தம் தந்த கணப்பொழுதுகளை ஒருகணம் நினைக்கின்றேன். குருமடத்தில் என்னுடன் தொடங்கிய உறவு அவரின் இறுதி மூச்சுவரை என்னுடன் நீடித்தது. அருட்பணி சறத்ஜீவன், இளை ஞனாக குருமடத்தில் கால்பதித்துவிட்ட போதும் சிறிய வயதினர் எம்மு டன் ஒன்றாக அன்பாக, அரவணைப்புத்தந்து பணிவாழ்வுப் பயணத்தில் சிறந்த வழிகாட்டியாக நடந்து வந்தார். குருத்துவத்தில் நல்ல குருத் தோழனாக என்னுடன் பயணித்து ஆன்மீகம் மற்றும் பொதுப்பணி வாழ்வின் அர்ப்பணம் என்பவற்றிற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார்.

பலிக்களத்தில் சறாவுடன் ஒரு பயணம்...

குருத்துவப் பணிவாழ்வுப் பயணத்தில் அருட்தந்தை சறாவுடன் இணைந்து பணியாற்ற வன்னியில் நடந்த கொடிய யுத்தத்தில் எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. வன்னிப்பெருநிலப்பரப்பில் கொடிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பாதுகாப்பு வலயங்கள் என இராணு வத்தினரால் அறிவிக்கப்பட்ட பல இடங்களிற்கு மக்களுடன் சேர்ந்து

நாமும் பயணித்தோம். அவ்விடங்களிற்கெல்லாம் அருட்தந்தை சறாவும் எம்முடன் கூடப் பயணித்திருந்தார். இறுதியாக பாதுகாப்பு வலயம் எனக் கூறப்பட்ட வலயர்மடப் பகுதிக்கு எல்லோரும் வந்து சேர்ந்தோம். அங்கும் குண்டுகள் பொழியப்பட்டு கொலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அருட்தந்தை சறாவும் எம்முடன் இணைந்து உடலாலும் உள்ளத்தினாலும் தைரியம் தந்து பணியாற்றினார்.

நான் அடிக்கடி சறாவைப்பார்த்துக் கூறுவேன், "பாதர் நீங்கள் யாழ்ப்பாணம் போங்கள், நாங்கள் இருந்து வாறம் சனத்தோடு" என்று கூறிய போதும் "இல்லை நான் கடைசிவரை சனத்தோட இருக்கவேணும், எங்கட சனம் பாவம். நான் போகவில்லை மரியதாஸ்" என்று உறுதியாக மறுத்துவிடுவார்.

பாதுகாப்பு வலயத்திலும் எறிகணைத்தாக்குதல்கள் அதிகரித்து மக்கள் துன்பப்பட்டுக் கொண்டு இருந்த அக்காலத்தில் அருட்தந்தை சறா மரணத்திற்கு அஞ்சாதவராய் சாதாரண உடையிலே தோளில் ஒரு பையையும் போட்டுக் கொண்டு மக்களுடன் ஒருவராகச் சேர்ந்து அவர்களிற்கு தன்னால் இயலுமானவரை உதவி செய்வார்.

அன்று யுத்தம் நிறைவுபெற்ற நாள்... 2009-05-18ம் திகதி. எங்கும் புகை மண்டலம். ஆங்காங்கே இறந்த உடலங்கள் சிதறிக்கிடந்தன. அவ் உடலங்களைக் கடந்து நடந்து வந்து ஒரு லொறிக்கு அருகில் அமர்ந்திருந்தோம். எம்முடன் அருட்தந்தை சறாவும் கூட இருந்தார். அந்நேரம் இராணுவத்தில் ஒருவர் எம்மிடம் வந்து "தலைவர் செத்துப்போய்விட்டார்" என்று கூறினார். உடனே சறாவின் சுயநினைவு ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டதை நான் உணர்ந்து கொண்டேன்.

உடலாலும் உள்ளத்தாலும் பலமிழந்திருந்த போது மீண்டுமாக எம்முடன் இணைந்து மக்களுடன் நடந்து ஓர் ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தோம். அப்போது பட்டினி கிடந்து சோர்ந்த உடலும், தளர்ந்துபோன மனமும் அருட்தந்தை சறாவை மெல்ல தரையில் சாய்த்தது. உடனடியாக அருட்தந்தையை ஓர் உழவுஇயந்திரத்தில் ஏற்றி இரட்டை வாய்க்காலிற்கு கொண்டு சென்றோம். அங்கு அவரிற்கான மருத்துவ சேவை வழங்கப்பட்டது. அப்போதுதான் கனவில் கூட நான் எண்ணிப்பார்த்திராத அந்த செய்தி அருட்தந்தை சறா இறந்துவிட்டார் என இடியாய் வந்தது.

இராணுவத்தின் 58ம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி எம்மை அழைத்து சறாவின் இவ் இழப்புச் செய்தியை பற்றிக் கூறி தன்னுடைய தொலைபேசி மூலம் ஆயர் அவர்களுக்கு அழைப்பை ஏற்படுத்தித் தந்தார். அப்போது ஆயராக இருந்த அதிமேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையிடம் நான் இச் செய்தியை அறிவித்துவிட்டு அந்த இராணுவத்தளபதியிடம் சறாவின் உடலத்தை நாங்கள் கொண்டுசெல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். உடனே ஒரு பேருந்து ஒழுங்கு செய்து தந்தார்கள். அதில் அருட்தந்தையின் உடலத்தை ஏற்றி என்னுடன் அருட்தந்தை நேரு, இன்னும் சிலரும் சேர்ந்து வவுனியா வைத்தியசாலையில் உடலத்தை ஒப்படைத்தோம்.

உடனே எங்களை முகாமிற்குள் அனுப்பியதால் எங்களால் தொடர்ந்து ஏனைய நடவடிக்கைகளைப் பார்க்க முடியவில்லை. 2009.05-20ம் திகதி காலை நீதவான் முன்னிலையில சாட்சி சொல்ல வேண்டுமென்றதும் சென்று அனைத்து விடயங்களையும் சாட்சியமாகக் கூறிவிட்டு வந்தேன்.

அருட்தந்தை சறாவின் உடலத்தையாவது இறுதியாக அவருடைய அன்புத்தாய் பார்க்க வேண்டும் என்ற ஆசையுடனே அவரின் உடலை கொண்டுவந்தேன். ஆனால் என்னுடைய அந்த எண்ணம் பொய்த்துப்போய்விட்டது. இவ்வளவு தூரம் வரை உடலத்தை கொண்டுவந்தும் சறாவின் முகத்தைத் தாய்க்குக் காட்டமுடியவில்லை என்ற உணர்வு இன்றும் என் மனதை வேதனைப் படுத்துகிறது. அவ்உணர்வு என் மனதை குடைந்து கொண்டே இருக்கிறது.

பாதுகாப்பு வலயத்திலும் எறிகணைத் தாக்குதல்கள் அதிகரித்து மக்கள் துன்பப்பட்டுக் கொண்டு இருந்த அக் காலத்தில் அருட்தந்தை சறா மரணத் திற்கு அஞ்சாதவராய் சாதாரண உடையிலே தோளில் ஒரு பையையும் போட்டுக் கொண்டு மக்களுடன் ஒரு வராகச் சேர்ந்து அவர்களிற்கு தன் னால் இயலுமானவரை உதவி செய்வார்.

அர்ப்பணிப்பின் சிகரம், பாசத்தின் பிறப் பிடம், ஆன்மீகத்தின் அருட்தோப்பு, இறுதிவரை தான் நேசித்த மக்களுடன் கூட இருந்து மக்க ளிற்காகத் தன்னைப் பலியாக்கிய தியாகத்தின் பிறப்பிடம் அருட்தந்தை சறா.

இப்போது தான் சறாவின் ஆன்மீகத்தின் உள் உணர்வைப்பற்றி நினைக்கிறேன். 2009-05-14ம் திகதி அன்று சறாவின் குருத்துவ திரு நிலைப்படுத்தல் நினைவு நாள். பதுங்கு குழியில் இருந்தபோது "பாதர் இன்றைக்கு உங்கட குருப்பட்ட நாள் பூசை வையுங்கோ" என்று கூறி னேன்... "இல்லை மரி. நான் பூசை வைக்க வில்லை" என மறுத்துவிட்டார். அவர் பூசைக்கு ஆயத்தமில்லை என நினைத்து நான் அன்று நன்றித்திருப்பலியை ஒப்புக்கொடுத்தேன். இப்போது தான் நான் உணர்கிறேன். தன் பணிவாழ்வின் உயர்நிலையை அடைந்து ஆண்டவருள் தன்னை பலியாக ஒப்புக்கொடுக் கப்போவதை அன்றே அருட்தந்தை சறா உணர்ந்துவிட்டார் என்பதை...

மக்களுடன் மக்களாக வாழ்ந்து மக்களிற் காகத் தன்னை அர்ப்பணித்த சறாவின் அர்ப்பண வாழ்வு என்றும் என் பணிவாழ்வின் முன்னே பயணிக்கும்.

"உடலால் நீ எம்மைவிட்டுப் பிரிந்துவிட்ட போதும் நீ விட்டுச்சென்ற பணித்தடத்தில் உன் நினைவுகள் சுமந்து பயணித்துக்கொண்டு இருக்கிறோம்..."

அருள்பணி. எ. செ. கி. மரியதாஸ்

இடப்பெயர்வே வாழ்வாக...

நிலையற்ற உலகை நிலையென நினைத்து நிம்மதி இழந்து தவிக்கும் எம்மவர் மத்தியில் இவ்வுலகம் நிலையற்றது ஆனால் நிலையான மறுவுலக வாழ்விற்காக நாம் பாடுபட்டு உழைக்க வேண்டும் என்ற இயேசுவின் போதனையின் உண்மைத் தன்மையை தன் வாழ்வில் அனுபவித்து அதைத் தன்னுடைய வார்த்தையினால் மட்டுமல்லாது செயலினாலும் போதித்த உத்தமர் அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளார் என்று சொன்னால் அது மிகையாகாது.

இவர் 1968ம் ஆண்டு 13ம் திகதி அமரர் திரு. மரியாம்பிள்ளைக்கும் அவரது துணைவி திருமதி கசில்டாவுக்கும் நான்காவது பிள்ளையாக மஸ்கெலியாவில் உள்ள பொகவந்தலாவையில் பிறந்து, தலைமன்னாரில் தன்னுடைய முன்பள்ளிக் காலத்தை முடித்து, 1974ல் யாழ்ப்பாணம் வந்தார். பிறப்பில் ஆரம்பித்த அவரின் இடமாற்ற அனுபவம் அவரின் இவ்வுலக வாழ்வின் நிலையற்ற தன்மையின் உண்மையை உணர்த்தியிருக்கும் என்று நம்பலாம்.

1993ல் புனித மடுத்தினார் சிறிய குருமடத்தில் இணைந்த இவர் 1994ல் புனித சவேரியார் பெரிய குருமடத்தில் காலடி பதித்த ஓர் ஆண்டில் அவலங்கள் நிறைந்த இடப்பெயர்வு வாழ்வை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எட்டு வருட பெரிய குருமட வாழ்வில் எட்டு இடங்களுக்குக் குறையாத இடப்பெயர்வு வாழ்வை அனுபவித்தார். ஒவ்வொரு இடப்பெயர்வுகளும் பயங்கரமான எறிகணை வீச்சுக்கள் மற்றும் விமானக் குண்டு வீச்சுக்கள் மத்தியிலே தான் இடம் பெற்றது. குருத்துவ

உருவாக்கல் காலத்தில் இப்படியான நிலையற்ற இவ்வுலக வாழ்வின் அனுபவத்தை இறைவன் இவருக்கு அதிகமாக உணர்த்தியிருக்கின்றார்.

இந்த உருவாக்கல் காலத்திலேயே இவர் இவ்வுலகின் நிலையில்லாத் தன்மையை பல இடங்களில், பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி இருக்கின்றார் என்பதை அவருடைய நெருங்கிய நண்பனாக வாழ்ந்த என்னால் துணிந்து கூற முடியும். ஒரு உதாரணத்திற்கு, நாங்கள் எல்லோருமே கஷ்டப்பட்டு ஒவ்வொரு வருட இறுதி தேர்வுக்கும் ஆயத்தம் செய்து அந்த தேர்வின் முடிவில் நீண்ட ஒரு விடுமுறை காலத்தை மகிழ்ச்சியோடு எதிர்பார்த்திருப்போம். ஆனால் இவரிடம் அந்தத் தருணத்தில் என்ன உணர்கின்றார் என்று கேட்டால்,"இந்த லீவு என்ன கண்ணை மூடி திறப்பதற்குள் முடிந்துவிடும்" என்று எந்த எதிர்பார்ப்பும் இல்லாத ஒரு ஞானியின் போக்கில் பதில் கூறுவார். அவர் என்னிடம் அடிக்கடி "ஆசைகளும், எதிர்பார்ப்புக்களுமே எங்கள் வாழ்வின் துன்பத்திற்கு காரணம்" என்று கூறுவார்.

அவரது 35வது பிறந்த நாளின் மறுநாள் 2003 மே 14ம் திகதி அவர் குருத்துவ அபிஷேகத்தைப் பெற்று 6 மாத காலம் யாழ்ப்பாணம் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் உதவிப் பங்குக் குருவாக அரும் பணியாற்றினார். இந்தக் குறுகிய காலத்திலே சிறுவர், சிறுமியர், இளைஞர், யுவதிகள், ஏழை எளியவர்கள் மத்தியிலே பணியாற்றி பலருடைய மனங்களில் பதிவானார். அதன் பின்னர் 2003 டிசம்பர் மாதத்தில் முல்லைத்தீவு பங்கின் உதவிப்பங்குத்தந்தையாக ஒரு வருடம் சேவையாற்றிய அவர் 2004 டிசம்பர் மாதம் 26ம் திகதி சுனாமி அலையில் தன்னுடைய உடமைகள் எல்லாவற்றையும் இழந்த நிலையிலும் அதைப் பொருட்படுத்தாமல் பாதிப்புற்ற மக்களுக்கு உதவிக் கரம் கொடுப்பதிலேயே தன் நேரத்தைச் செலவு செய்தார். இந்த அனுபவம் அவருக்கு அழிந்து போகும் செல்வத்தின் தன்மையை வெளிப்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமேதுமில்லை. உடமைகளையும், உறவுகளையும் இழந்து தவித்த மக்கள் மத்தியில் தானும் ஒருவராக அவர்களுக்கு ஆறுதல் அளித்த தருணங்களை இன்னும் அம்மக்கள் பசுமரத்தாணி போல் தம் இதயத்தில் பதித்து வைத்துள்ளனர்.

அதனைத்தொடர்ந்து அவர் மாமூலை புனித அந்தோனியார் ஆலயத்திற்கும், பின்னர் செல்வபுரம் புனித அன்னாள் ஆலயத்திற்கும் இடம்பெயர்ந்து பணிகளாற்றினார். பின்னர் உருத்திரபுரம் புனித பற்றிமா ஆலயப் பங்குத் தந்தையாக 2005 மார்ச் நியமனம் பெற்ற இவர் ஏழு உப ஆலயங்களையும் பொறுப்பெடுத்து வழிநடத்தினார். பல சவால்கள், வசதியின்மைகள் மத்தியிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான இயேசு சபை அகதிகள் பணியகத்தின் (JRS) இணைப்பாளராகவும் ஆயரின் வேண்டுகோளுக்கு இணங்கி அர்ப்பணத்துடன் பணியாற்றினார். 2008ம் ஆண்டு மார்கழி மாதம் இலங்கை JRS குழும கலந்துரையாடலில் அவரது பணியின் அனுபவத்தைக் கூறும் போது கண்கள் கலங்கின என அறிகின்றோம். சறத்ஜீவன் அடிகளார் "எனக்காகவும் எம் மக்களுக்காகவும் செபியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார் இதில் தீர்க்கதரிசனமாகத் தன்னைக் காரணம் காட்டி உயிர் இழந்த அனைவரையும் செபத்தில் நினைவு கூர அழைப்பதை அவதானிக்கலாம்.

உருத்திரபுரத்திலிருந்து 2008 ஒக்ரோபர் மாதம் 3ம் திகதி இடம்பெயர்ந்து, ஏறத்தாள 18 இடங்களுக்கு இடம்பெயர்ந்து ஈற்றில் முள்ளிவாய்க்கால் இறுதிச் சமரின் பின் இறுதியாய் எஞ்சியவர்களுடன் வெளியேறுகின்ற பொழுது பசி பட்டினியால் உடலில் பலம் இழந்து, மக்களின் அவலச் சாவுகளின் நிமித்தம் உள்ளத்தின் வேதனை தாங்க மாட்டாமல் மாரடைப்பால் 2009 மே 18ம் திகதி பிற்பகல் 3 மணியளவில் இவ்வுலக நிலையற்ற வாழ்வை முடித்துக் கொண்டார். இயேசுக் கிறீஸ்துவின் நல்லாயனாகத் தன் ஆடுகளுக்காய் உயிர் துறந்த இந்த உத்தமனின் பூதவுடல் நல்லடக்கச் சடங்கு வவுனியா,

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சிறப்புத் திருப்பலிகளுடன் நிகழ்ந்தேறியது. சுருங்கச் சொல்லின் பிறப்பில் இவரது வாழ்வில் ஆரம்பித்த இடப்பெயர்வுகளின் வாழ்க்கை இவரது இறப்பிலும் தொடர்ந்து நிகழ்ந்ததை அவதானிக்கலாம்.

இயேசுக் கிறிஸ்துவின் ஊழியனாகத் தன்னை அர்ப்பணித்து 'அழிந்து போகும் செல்வங்களைக் கொண்டு அழியாத சொத்துக்களை விண்ணகத்தில் சேர்த்து வையுங்கள்' என்ற போதனையை சாதனையாக்கிய ஒரு உன்னத பிறவி அமரர் அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளார்.

பத்து வருடங்கள் குருத்துவப் பயிற்சியை பெற்று (1993 - 2003), 6 வருடங்கள் குருவாக அளப்பரிய சேவையாற்றி (2003 - 2009), தன்னுடைய 41 வது வயதுடன் (1968 - 2009) இவ்வுலக வாழ்வை முடித்து எமக்கெல்லாம் சவால் நிறைந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த இவரின் வாழ்வு எனும் கொடைக்காக இறைவனுக்கு நன்றி கூறுவதோடு, இவரது ஆன்மா நித்தியத்துக்கும் புனிதர்களின் தோழமையில் இறை மாட்சியில் பூரித்திருக்க பிரார்த்தித்து நிற்கின்றேன்.

பிறரின் நல்வாழ்வுக்காக தன் வாழ்வையே உருக்கி வாழ்ந்து, மரணித்த இந்த உத்தமனின் வாழ்வு, அவருடன் பழகிய எவராலும் ஒரு போதும் மறக்க முடியாது. ஆகவே அவரது நினைவில் வாழுகின்ற அனைவரும் அவரிடம் விளங்கிய அரிய நற்குணங்களை எம்முடையதாக்கி வாழவும் அவரின் நினைவாக ஏழைகளின் நல் வாழ்வுக்காக உதவிக்கரம் நீட்டும் 'அருட்தந்தை சறத்ஜீவன் நிதியம்' என்ற அமைப்புக்கு இயன்ற ஆதரவை வழங்கவும் வேண்டி முடிக்கின்றேன்.

"... மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்கின்றேன்.."

(மத். 25:40).

அருட்தந்தை மோ. சோபன் ஜூபஸ்
குருத்தோழன்

உருத்திரபுரத்திலிருந்து 2008 ஒக்ரோபர் மாதம் 3ம் திகதி இடம் பெயர்ந்து, ஏறத்தாள 18 இடங்களுக்கு இடம்பெயர்ந்து ஈற்றில் முள்ளி வாய்க்கால் இறுதிச் சமரின் பின் இறுதியாய் எஞ்சியவர்களுடன் வெளியேறுகின்ற பொழுது பசி பட்டினியால் உடலில் பலம் இழந்து, மக்களின் அவலச் சாவுகளின் நிமித்தம் உள்ளத்தின் வேதனை தாங்க மாட்டாமல் மாரடைப்பால் 2009 மே 18ம் திகதி பிற்பகல் 3 மணியளவில் இவ்வுலக நிலையற்ற வாழ்வை முடித்துக் கொண்டார்.

சிரித்த முகம் கண்டு...

அருட்தந்தை சறத்ஜீவன் என்றதும் என் கண்ணுக்குள் தெரிவ தெல்லாம் அந்தக் கன்னங்களில் குழி விழுந்த அவரது களங்கமற்ற சிரித்த முகம் மட்டுமே. எனது குருமட வாழ்வு 1990ம் ஆண்டு புனித மாட்டினார் குருமடத்தில் ஆரம்பமானது. ஞாயிறு திருப்பலிக்காய் மரியன்னை பேராலயத்திற்கு நாங்கள் செல்வது வழக்கம். அங்கேதான் நான் முதல் முதலாய் சறத்ஜீவன் எனும் மனிதனைக் கண்டேன். பின்னர் 1993ம் ஆண்டு அவரைக் குருமடத்தின் அதிபர் அலுவலகத்தின் முன்பாகக் கண்டு, ஒரு கணம் திகைத்து நின்றேன். காரணம், குருவாக வரவேண் டும் என்ற ஆர்வத்தோடு புனித மாட்டினார் சிறிய குருமடத்தில் இணைய வந்திருக்கும் ஒரு பெரிய மனிதனைக் கண்டது, எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நான் மட்டுமன்று, அன்று சிறிய குருமடமே அவரைஆச்சரியமாகப் பார்த்தது. ஏனென்றால், அன்று வரைக்கும் சிறிய குருமடத்தில் சிறியவர்களே புதிதாக வந்து இணைவதைப் பார்த்துப் பழகிய எமக்கு ஒரு பெரியவரை சிறிய குருமட மாணவனாகப் பார்ப்பது ஒரு புதுமையே. ஒருசில நாட்களாக, சிலருக்கு ஆச்சரியம், சிலருக்கு ஒரு இனம் புரியாத நகைப்பு. இவற்றின் மத்தியில் சறத்ஜீவன் என்னும் அந்தப் பெரிய மனிதர் தனது அழகான புன்னகையால் மட்டுமே எமக்கு விடை சொல்லிக்கொண்டு தனது வாழ்வை சிறிய குருமடத்தில் ஆரம்பித்தார்.

நாட்கள், நாங்கள் அறிந்து கொள்ளாமலே நகர்ந்து சென்றன. “சறத்ஜீவன்” இப்போது எம்மத்தியில் “சறா”வானார். எல்லோரும் அவரை சறா என்றும், சறா அண்ணா என்றும் அன்போடு அழைக்கத்

தொடங்கினோம். அவர் ஒரு போதும் தன்னை வயது கூடிய ஒருவராக உணர்ந்து கொள்ள வில்லை. அவ்வாறு நாம் உணர்ந்து கொள்ள ஒரு போதும் அவர் எமக்குச் சந்தர்ப்பம் அளிக்க வுமில்லை. எம்மோடு ஒருவராக, இயல்பாகவே சகோதர நட்புடன் பழக ஆரம்பித்தார். தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை மிகவும் பொறுப்புடன் செய்யும் அவர், எப்போதெல்லாம் மற்றவர்களுக்குத் தனது உதவி தேவைப்பட் டதோ, அப்போதெல்லாம் சலிப்பின்றி உதவிக் கரம் நீட்டினார். அர்ப்பணிப்புடன் கடின உழைப் பைக் காட்டுவது அவரது வாழ்வின் சிறப்பம்சமா கும். யானையின் பலமும், எறும்பின் சுறுசுறுப் பும் அவரிடம் நான் கண்டு, வியந்தவிடயம். அவரிடம் காணப்பட்ட இப்பண்புகளுக்குக் கார ணங்களை நான் பின்னைய நாட்களில் கண்ட றிந்தேன். குடும்பத்தின் பின்னணியும், நீண்ட கால சாரணர் பயிற்சியும், அவரின் கடின உழைப்பிற்கும், அர்ப்பணத்திற்கும் அடியத்தி வாரமாக அமைந்தன.

எமது குருமட நாட்களில் சறா எம் எல்லோ ருக்கும் ஒரு மூத்த சகோதரனாக மாறினார். நாம் சினம் கொள்ளும் நேரங்களில் சமாதானப் படுத்துவார். மனம் உடைந்த காலங்களில் ஆற்றுப்படுத்துவார். முரண்படும் போது அறிவு ரைகள் வழங்குவார். இவ்வாறு அவர் பல வழிக ளில் எமக்கு ஒரு முதிர்ச்சியுள்ள மூத்த சகோத ரனாகவே அருகில் இருந்தார். சில சந்தர்ப் பங்களில் வேண்டும் என்றே நாம் அவரைச் சீண் டிப் பார்ப்போம். கிண்டலடிப்போம். ஆனால் அவரோ, புன்னகை என்னும் ஆயுதம் கொண்டு அவை அனைத்தையும் எதிர்கொள்வார். இப் படிப்பட்ட குழந்தை மனதிற்குள்ளே ஒரு கர்ச் சிக்கும் சிங்கம் ஒன்றும் உறங்கிக்கொண்டு இருப்பதையும் நான் கண்டுள்ளேன். எங்கே அநீதி நடக்கின்றதோ, அங்கே அந்தச் சிங்கம் சினம் கொண்டெழுவதை பல தடவைகள் கண் டிருக்கின்றேன். உண்மையை சொல்ல வேண் டும், நீதிக்காய் குரல் கொடுக்கவேண்டும் என்ப தில் அவரிடம் மாற்றுக்கருத்தில்லை.

சறாவின் வாழ்விலும் பேச்சிலும் எப்போ துமே எளிமை இருக்கும். ஏழைகளை அன்பு செய்வதிலும், ஏழ்மையாக இருப்பதிலும் சறாவுக்கு நிகர் சறாவேதான். அதனாலே தான் அவர் இறந்தபின்னும் அவரதுபெயரில் பல ஏழைச்சிறார்கள், குடும்பங்கள் இன்றும் ஆறு தலடைகின்றனர். சில வேளைகளிலே அவர் கோபப்படுவதையும் பார்த்திருக்கின்றேன். ஆனால், சறா கோபம் சாதித்ததை நான் ஒரு போதும் காணவில்லை. ஒரு குழந்தை போன்று மறுக ணமே அதை மறந்துவிட்டு உறவாடும் குழந் தையுள்ளம் அவரிடம் இருந்தது.

எமது பெரிய குருமடவாழ்வின் பெரும்பகுதி இடம்பெயர்வுகளுடனேயே இடம்பெயர்ந்து சென்றது. மிருசுவில், உருத்திரபுரம், மடு மீண் டும் கொழும்புத்துறை பின்னர் மடுத்தீனார் குரு மடம், பண்டத்தரிப்பு மீண்டும் கொழும்புத் துறை என்று எட்டு வருடங்களும் எங்கள் வாழ்வு பூனை குட்டி காவிய கதைதான். ஆனாலும் அந்த நாடோடிவாழ்க்கையின் அழகிய அனுப வங்களை நாம் ஒரு போதும் மறந்துவிடமுடி யாது. இந்த இடம்பெயர் வாழ்வில் சறாவுடனான எனது சகவாழ்வு அ னுபவம் சற்றுவித்தியாசமா னது. அவரது வழமையான பண்புகளோடு பல சந்தர்ப்பங்களிலே, விசேடமாக எமது மடுத் திருப்பதி உருவாக்கற் காலங்களிலே, அவர் குருமடக் குடும்பத்தின் தாயாகமாறி நின்ற தைக் கண்டேன், அனுபவித்தேன். நாம் அனு பவித்த அசௌகரியங்களுக்குள்ளே பல தட வைகளில் எமக்குச் சமையல் செய்துதர ஊழியர் கள் அற்ற நிலைகள் ஏற்பட்டன. அப்போதெல் லாம் வசதிகளற்ற அகதிமுகாம், அடுப்பங்கரை யில் அகப்பையுடன் எம் எல்லோருக்கும், குரு மடக் குடும்பம் முழுவதற்குமே ஒரு அன்னை யாக மாறி, சுவையான உணவு பரிமாறுவார்.

சறாவுக்குள்ளே எப்போதுமே ஒரு தீ அணை யாது எரிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அது விடுதலைத் தீ; எமது இனம் விடுதலை பெறவேண்டும், தமிழர் போராட்டம் வெற்றி பெறவேண்டும் என்பது அவருக்குள்ளே தீயாய்

அணையாது எரிந்து கொண்டிருந்தது. அத னால் அவர் எப்போதுமே தாயக விடுதலைப் போராட்டத்தையும், அதற்கான தியாகங்களை யும் நன்றாகவே மதிப்பார். எம் மண்ணின் மீது பற்றும், எம் மக்களின் மீது மிகுந்தபாசம் கொண்டவராகவே அவர் இருந்தார். தனது தனிப் பட்ட வாழ்வில் எத்துன்பத்தையும் தாங்கிய அவருக்கு பிறர் துன்பத்தைத்தாங்கும் மன வலிமையில்லை என்றே நான் சொல்வேன். அதனால் மக்களின் துயர் கண்டு எப்போதும் கவலை கொள்ளுவார். வன்னி மண்ணின் யுத்த கால உடன் பணியாளர் என்ற வகையில், அவர் மக்களின் அவலநிலை கண்டு, துடிதுடித்து நின்ற பல சந்தர்ப்பங்களை நான் என் கண் ணால் கண்டுள்ளேன். தன் உடல் நலனைப் பாராது மக்களிற்காய் தன்னைக் கொடுத்து நின்ற சிறந்த இயேசுவின் பணியாளன் அருட் தந்தை சறா.

2009, ஜனவரி 8ம் நாள் நானும், சில குருக் களும், துறவிகளும் வன்னிமண்ணை விட்டு சில தேவைகள் கருதி ஒட்டிசுட்டான் நெடுங் கேணியூடாக வவுனியா வந்து சேர்ந்தோம். நாம் வவுனியா வந்த பின்னர், மீண்டும் திரும்பி எங்கள் மக்களிடம் செல்ல முடியாத அளவிற்கு வன்னியின் நிலமை மிகவும் மோசமாகியது. மக்கள் துரத்தப்பட்டு குறுகிய நிலப்பரப்பினுள் இராணுவத்தால் முடக்கப்பட்டனர். மக்களோடு மக்களாக குருக்களும், துறவிகளும் இடம் பெயர்ந்து சென்றனர். இறுதியாக எல்லோரும் முள்ளிவாய்க்காலுக்குள் முடக்கப்பட்டு விட்டனர். பதுங்கு குழி வாழ்க்கைக்கு எல்லோ ரும் பழக்கப்பட்டனர். அன்று முள்ளிவாய்க் கால் எம்மக்கள் அனைவருக்கும் இருள் சூழ்ந்த பள்ளத்தாக்காய் மாறியது. சாவின் நிழல் சூழ்ந் துகொள்ள, அங்கே ஒரு இனமே குற்றுயிரா கியது. அந்தக் குருதிக் காட்டுக்குள் ஒப்பாரியும் புலம்பலும் எம் மக்களின் வாய்மொழியாகியது. அன்று பதுங்குகுழிகளே பலருக்கு புதைகுழிக ளாகின. வளர்த்த நாய்களுக்கு எஜமான்களின் உடலங்களே உணவாகியது. இந்தக் குருதிக் காட்டுக்குள் தான் சறா என்னும் இந்தப் பணியா ளனும் பணியாற்றினார். அங்கே அவர் மனமு டைந்து நின்றார் என்றனர் அவருடன் உடனிருந் தவர்கள்.

மே 18ம் நாள் விடிந்தது. தாயக மண்ணில் யுத்தத்தின் சத்தம் மட்டும் ஓய்ந்தது. இப்போது, அங்கே எஞ்சியவர்களுக்கு, பிணக்காடுகள் ஊடாக ஒரு பயணம் தொடர்ந்தது. நாய்களுக் கும் நரிகளுக்கும் எம்மவர் உடலங்கள் உண வாகிக் கொண்டிருந்தன. கனவுகள் உடைக்கப் பட்ட சாம்பல் மேடாய் அன்று அக்களம் தெரிந் தது. வேதனை, சொல்ல முடியாத வேதனை, துயர், அது தாங்க முடியாத துயர். அழுவ தற்கோஅங்கிருந்த யாருக்கும் உடம்பில் நீரில்லை. அதனால் கண்ணீரின்றி, அவர்களது நாவைப் போலவே, கண்களும் காய்ந்துவிட் டன. மக்கள் துயர் கண்டு துடிக்கும் நம் தந்தை சறா, சொந்த மக்கள் நிலைகண்டு, தாயக மண்ணின் துயர்கண்டு, விடுதலையின் வீழ்ச்சி கண்டு, மனமுடைந்து நின்றார் என்கின்றனர் அவரது உடனிருப்பாளர்கள். அங்கே சறாவின் இதயத்துடிப்பு நின்றது. புன்னகை தொலைந்த முகத்துடன் சறா என்னும் நற்பணியாளன் அந் நாளிலே மண்ணை முத்தமிட்டான். மடிந்து போனார் சறா என்று நாம் கண்ணீர் சிந்தி னோம். அவருடன் சேர்ந்து எம் கண்ணீர்த்துளி களும் அன்று மண்ணை முத்தமிட்டன. “கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந் தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்.” (யோவா 12:24). “நல்ல ஆயன் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்” (யோவா 10:11) என் கண்களுக்குள் இப்போதும் தெரிவது சறாவின் சிரித்த முகம் மட்டுமே.

அருட்பணி. தே. ரவிராஜ்

சறாக்குட்டி !!

சறாக்குட்டி!!
இப்படித்தான் சிறிய, பெரிய
குருமடங்களில் இவர்
அழைக்கப்பட்டார்.
அந்தப் பெயர் இவர்
குருவாக வந்த பின்னும் தொடர்ந்தது...

உடம்பு கொஞ்சம் பெரிது தான்
மனமும் உணர்வும் குழந்தை தான்...
முகம் கொஞ்சம் மொத்தம் தான்...
செல்வாக்கான கண்கள் உண்டு...
மொத்தத்தில் கொஞ்சம் ஒழுங்கற்ற உடம்பில்
ஒழுங்கான அன்பின் படைப்பு...
இது சறாக்குட்டியின் வெளித்தோற்றம்.

பிஞ்சுமனம் வெள்ளைஉள்ளம்
கொஞ்சும் மொழியில் கள்ளமில்லா வார்த்தைகள்
மிஞ்சும் கலைத்துவம் கொள்ளை கொள்ளும் இசை ஆற்றல்
கெஞ்சும் உணர்வுகள் வெள்ளம் போல வாழ்க்கைப் பாடம்
அத்தனையும் ஒருங்கே அமையப்பெற்ற அன்பின் வடிவம்.

ஞாபகப்படுத்தினேன்!! ஒரு நாள் பெரிய குருமடத்தில்
விளையாட்டு விழா
இரண்டு இல்லங்கள் எட்டியன், பொன்னையா
சறாவும் நானும் எட்டியன் இல்லம் இன்னும் பலரோடு
வினோத உடை நிகழ்வு முதல் இடம் எடுக்க வேண்டும்
ஆயத்தப்படுத்தினோம் சறாவை இரண்டாம் வகுப்பு
பிள்ளை போல நீலக் காற்சட்டை, வெள்ளை சேட்டு,
அலுப்பினாத்தி குத்தி சேட்டிலே ஒரு லேஞ்சி
றிங்ஸ் போத்தலுக்குப் பதிலாக பெரிய பெப்சி போத்தல்
அதன் மூடிக்குப் பதிலாக சூப்பி ஒண்டு

சப்பாத்து மேசும் காலில் போட்டு
பின்னுக்கு கொழுவும் பாக் ஒன்றும்
விறகு கொண்டு வரும் வண்டிலில்
ஏற்றி வந்தோம் சறாவை பத்துப் பேர்
வண்டிலை இழுத்தும் வந்தோம்...

நடுவர்கள் விழுந்து சிரிக்க
சறாக்குட்டி சூப்பியாலே பெப்சி குடிக்க...
வினோத உடையில் எமது இல்லம்
பெற்றது முதலாம் இடம்!

ஞாபகப்படுத்தினேன்!!
எம் தொடர் உறவின் பயணத்திலே
2008ம் 2009ம் ஆண்டுகள்
மறக்க நினைத்தாலும் முடியாதவை...
அந்தக் கொடூரமான நாட்களின்
கசப்பான தருணங்களை எப்படிச் சொல்வது...
2008 நவம்பர் 01 ல்
சறாக்குட்டியைச் சந்தித்தேன்.

“பயப்படாதே இயேசு நம்மோடு இருக்கிறார்.
எமது இனத்தோடும், சனங்களோடும் இருக்கிறார்”
இது இவரின் முதல் வார்த்தை என்னைக் கண்டதும்
தெளிவான, தெம்பான வார்த்தைகளை
எப்போதுமே சொல்லித் திடப்படுத்துவது
இவரின் பிறவிக்குணம்.

2009ல் உக்கிரமடைந்தது போர்...
வன்னிப் பெரு நிலப்பரப்பு எங்கும் குண்டு மழை
படிப்படியாக நில ஆக்கிரமிப்பு
இறப்புக்களின் நிலை மிக அருகிலே இருந்தது...
எதுவும் செய்ய முடியாமல் தவித்த வேளை
வன்னி அகதிப்பணியின் இயக்குனரான இவர்
தன்னிடமிருந்த அத்தனையையும் மக்களோடு
பகிர்ந்து கொண்டார்.
இருந்தோம் இரணைப்பாலையில்
இருக்க முடியவில்லை
சாவுகளைக் கண்டு கண்டே
சலிப்படைந்து விட்டது உள்ளமும் மனமும்
சறாவுக்கு நானும் எனக்கு சறாவும்

அவஸ்தை கொடுத்துக் கொண்டோம்...
அப்போது கூட ...

“பயப்படாதே இயேசு கைவிடமாட்டார்
நாங்கள் தோற்க மாட்டோம்”
இது தான் அவரின் வார்த்தைகள்...

பயங்கரங்கள் அருகிலே மிக அருகிலே தெரிய
இடம் பெயர்ந்தோம் வலைஞர் மடம் நோக்கி
அங்கே செபமாலை மாதா கோவில்
எல்லோரும் போய்ச் சேர்ந்தோம்...
சறாவும் நானும் ஒரு சிறிய தகரக் கொட்டில் போன்ற
ஒரு இடத்தில்...
ஒரு கட்டில், ஒரு பாய், உடுப்பு பாக்கே எங்கள் தலையணை,
சறா பாயுடன் கீழே நான் பாயில்லா பலகையில்
உறக்கமில்லாத இரவுகள்...
செபமாலையை கையிலே வைத்துக் கொண்டு
விழித்திருப்போம் எப்போதும்...

அப்போது தான்...
நான் ஞாபகப்படுத்துகின்றேன்!!
சறாஅடிக்கடி நெஞ்சைப் பிடிப்பதை...
“என்ன சறாக்குட்டி நெஞ்சுக்க நோகுதா?”
என்று கேட்டேன்.
“இல்லையடா! நாங்க தோக்கப் போறம் போலகிடக்கு
சனமும் சாகுது, எங்களுக்கு ஒண்டும் இல்லாமப்
போகப் போகுதடா !!”
என்று கூறிக் கொண்டே தனது நெஞ்சைப்
பிடிப்பார் இதயப் பக்கத்திலே...

வெளுத்துப் போன கண்களுடனும்
களைத்துப் போன உடம்புடனும்
சலித்துப் போன மனதுடனும்
சறாவைக் காண்பது மிகவும் கஷ்டமாக இருந்தது.

இறுதியில் முடிவுக்கு வந்தது யுத்தம்
ஏராளமான மக்களைக் காணவில்லை
உயிரற்ற உடல்களினாலே நிரம்பியது வன்னி
பார்க்கும் இடமெங்கும் செத்துப்போன எம் உறவுகள்
கண்களை மூடிக் கொண்டு
நெஞ்சை அழுத்திப் பிடித்தோம்...

அப்போதுதான் அந்த மாபெரும்
அன்பின் பொக்கிஷத்தை !!
சறாக்குட்டியை இழந்தோம்...

மக்களுக்காகவே வாழவும் சாகவும் துடித்த
அந்தமகான்...
தன் இனத்து மக்களோடு தன்னையும்
கரைத்துக் கொடுத்தான்...
சரித்திரமானான்...

சறா...
நீ வாழ்கிறாய் எம் இதயத் துடிப்பில்
நீ வாழ்கிறாய் எம் விடுதலை உணர்வுகளில்
நீ வாழ்கிறாய் எம் தேசத்தின் தென்றல்களில்
நீ வாழ்கிறாய் எம் அன்பின் பயணங்களில்
நீ வாழ்கிறாய் எம் தியாகத்தின் இருப்புக்களில்
நீ எப்போதும் வாழ்வாய் எம் தமிழ் மொழியும்
இரத்த சாட்சிய திருச்சபையும் வாழும் வரை...

உன்னைஞாபகப்படுத்தியது
நண்பன்
பாலதாஸ் பிறையன்

"பயப்படாதே இயேசு நம்மோடு இருக்கிறார்.
எமது இனத்தோடும், சனங்களோடும் இருக்கிறார்"
இது இவரின் முதல் வார்த்தை என்னைக் கண்டதும்
தெளிவான, தெம்பான வார்த்தைகளை
எப்போதுமே சொல்லித் திடப்படுத்துவது
இவரின் பிறவிக்குணம்.

ஏழைகளின் நண்பன்

மறைந்த அருட்தந்தை சறத்ஜீவன் எமக்கெல்லாம் ஒரு காலக் கண்ணாடி போன்றவர். அவரிடம் காணப்பட்ட இலட்சியக் கனவுகள் அதிகம். அவற்றுள் பங்குத்திருச்சபைகளை வளர்க்க வேண்டும் என்ற ஆசை, ஈடுபாடு கொண்ட பொது நிலையினரை திருச்சபைக்குள் ஈர்க்கவேண்டும் என்ற ஆசை, குடும்பங்கள் ஒன்றிணைந்து வாழவேண்டும் என்ற ஆசை, இளைஞர்கள், யுவதிகளிடையே உயிர்த்துடிப்புள்ள செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படவேண்டும் என்ற ஆசை, மனிதாபிமானம் நிறைந்த போராட்டங்கள் வெல்லப்படவேண்டும் என்ற ஆசை, விடுதலையின் இலட்சியங்கள் வெல்லப்பட வேண்டும் என்ற ஆசை. இவ்வாறான இலட்சியங்களைத் தாங்கி நின்ற அருட்தந்தையின் வீரம் நிறைந்த செயற்பாடுகள் இயேசுவின் இலட்சியப் பயணங்களோடு ஒன்றிணைந்தவையாகவே காணப்படுகின்றன.

மக்களோடு மக்களாக வாழவேண்டும், மக்களின் துன்பங்களைத் தாங்க வேண்டும், மக்களின் தொண்டனாகத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஒரு பற்று ஆழமாக இருந்ததன் காரணத்தினால் தான் அவர் போராட்டத்தின் இறுதிக்கட்டத்திலும் புன்னகை நிறைந்த முகத்தோடு போரின் அனைத்துக் காயங்களையும் வடுக்களையும் தன் உடலிலும் இதயத்திலும் சுமந்து வீரம் நிறைந்த மக்களினதும், தியாகிகளினதும் மண்ணான முள்ளிவாய்க்காலில் தன்னை அர்ப்பணித்ததை யாம் அறிவோம். அவர் மறைந்தாலும் அவரது நினைவலைகள் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது.

ஏழைகளுக்காய் வாழ்ந்து ஏழைகளின் மனங்களில் தன்னைக் காத்திரமான முறையில் அடையாளப்படுத்திய மறைந்த அருட்தந்தையின் இதயக்கனவுகள் நனவாகவும் அவரது ஆன்மா இறைவனின் தூய திருக்கூட்டத்தில் இடம்பெறவும் எனது செபங்களை அவருக்காக ஒப்புக் கொடுக்கிறேன்.

சகோதர குரு
அருட்தந்தை ம. அன்ரனி அமலதாஸ்

நினைவழியா உருவம்

தமிழினம் கதிகலங்கிய நேரம். பல தசாப்தங்களாக உரிமைகளுக் காக உணர்வுகளோடு போராடி ஆயிரம் ஆயிரம் இளையவர்களின் குருதியினாலும் வீரத்தினாலும் குறித்துக் காண்பிக்கப்பட்ட ஈழ விடுதலைப் போர் ஏகோபித்த சர்வதேச கூட்டு சாணக்கிய முன்னெடுப்பு களினால் நசுக்கப்பட்ட அல்லது தலை துண்டிக்கப்பட்ட கனத்த நேரத் தில் யாழ். திருச்சபையின் காதுகளுக்கு எட்டியது அருட்பணியாளன் சறாவின் மரணம். அரச இயந்திரத்தினால் அள்ளி வீசப்பட்ட வதந்திக் குண்டுகளில் இதுவும் ஒன்றாகிவிடாதா என்று ஏங்கிய போதும் மீண்டும் மீண்டும் சுனாமியைப் போல வந்த செய்தி 'அருட்பணியாளன் சறா உயிரோடு இல்லை'.

உன் திரு யாழில் என் இறைவா பல பண்தரும் நரம்புகள் உண்டு அதில் என்னையும் ஒரு நரம்பாக ஏற்றிடுவாய் என்ற தாகூரின் ஏக்கமே அருட்பணியாளன் சறாவின் பணி வாழ்வுக்கான ஒரு கதைச் சுருக்கம். மனதைப் போன்ற உருவம். எதையும் நன்றாகச் செய்ய வேண்டும். அதைக் கவனமாகச் செய்ய வேண்டும் என்ற உறுதிப்பாடு. சிறிய அறிமு கம், சில காலப் பழக்கம். ஆனால் அன்று அவருடன் பகிர்ந்தவை இன் றும் பசுமையாய் இருக்கின்றது. அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒளி விழா. அனைத்தும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. என்னை அழைத்துக் கொண்டு போய் அறையில் அமரச் செய்து குருமட வாழ்வை கரிசனையோடு கேட்டார். நானோ ஒளிவிழா வேலைகளை செய்து முடிக்க வேண்டும் என்று அவதிப்பட்ட போது" Do your best, leave the rest to God' என்று புன் முறுவலோடு கூறிய வார்த்தைகளின் அர்த்த த்தை நான் உணர்ந்த நேரங்கள் எண்ணிலடங்காதவை.

போர் உக்கிரமடைந்தாலும் கலவரப்படாத ஆழமான நெஞ்சுரம் ஆண்டவர் அவருக்கு கொடுத்த கொடையே. பத்து மாதங்கள் பிள்ளையை சுமந்து தவியாய்த் தவித்ததாய் பிள்ளையை பவுத்திரமாக உலகத்துக்கு கொடுத்துவிட்டு கண்மூடிய நிகழ்வைப் போல காப்பாற்றிக் கொண்டு வந்த மேய்ப்பனின் ஆடுகள் பாதுகாப்பாகக் கரையேறிய போது மேய்ப்பன் உயிரோடு இல்லை. குருத்துவத்தின் உயர்வு, முடிவு, தொடக்கம் பலி. அருட்பணியாளன் சறாவின் முடிவு மரணமல்ல, அது நைவேத்தியப் பலி.

இஸ்ராயேல் மக்களைக் குறித்துஆண்டவர் மோசேக்கு இவ்விதமாகக் கூறினார் "பாலுண்ணும் குழந்தையை ஏந்தி செல்பவள் போன்று இவர்களை மார்போடு ஏந்தி, அவர்கள் மூதாதையருக்கு நான் வாக்களித்திருந்த நாட்டுக்குக் கொண்டுசெல்" (எண். 11:12). மோசே ஆண்டவர் சொற்படியே அவர்களைக் கொண்டு போனார். ஆனால் மோசே வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குள் செல்லவில்லை. மரத்த கால்களுடனும் சோர்ந்த கைகளுடனும் அவன் வாக்களிக்கப்பட்ட நாட்டைப் பார்த்தவாறு மரணித்தான். அருட்பணியாளன் சறாவும் பெரும்பாலும் அப்படியே ஓர் தலைவனானான். உரிமைக்காக சிந்தப்பட்ட இரத்த பூமியின் மேல் நின்று கட்சி அரசியல் நடத்தும் துரோகிகளின் நாட்டிலும் போரின் அவலங்களை மறந்து போதையின் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்ற இளையவர் மட்டிலும் சுருங்கக் கூறின் பாவத்தின் தேசத்தில் அவன் வாழ்வது இறைவனின் சித்தமில்லை போலும். அழிக்கப்பட்ட ஆயிரமாயிரம் ஆத்துமாக்களுடன் வெண்ணிற ஆடையுடன் அருட்பணியாளன் சறாவின் ஆத்துமாவும் இறைவனின் பாதத்தில் நீதிக்காய் குரலெழுப்பும் என்பதில் ஐயமேதுமில்லை.

அருட்பணி ஜே. எல்மோ அருள்நேசன்

உன் திரு யாழில் என் இறைவா பல பண்தரும் நரம்புகள் உண்டு அதில் என்னையும் ஒரு நரம்பாக ஏற்றிடுவாய் என்ற தாக்ஷரின் ஏக்கமே அருட்பணியாளன் சறாவின் பணி வாழ்வுக்கான ஒரு கதைச் சுருக்கம். மனதைப் போன்ற உருவம். எதையும் நன்றாகச் செய்ய வேண்டும். அதைக் கவனமாகச் செய்ய வேண்டும் என்ற உறுதிப்பாடு. சிறிய அறிமுகம், சில காலப்பழக்கம். ஆனால் அன்று அவருடன் பகிர்ந்தவை இன்றும் பசுமையாய் இருக்கின்றது.

இயேசு அடியவன் சறாவின் இறுதி 24x60x60 நொடிகள்

முன்னுரை

இப் பதிவு வெறும் கற்பனையுமன்று உண்மையுமன்று. ஈழப்போரின் இறுதி நாட்கள் பற்றி பக்கச்சார்பற்ற ஊடகங்கள் மற்றும் நூல்கள் மூலமாகப் பெற்ற தரவுகள் இதன் பின்புலமாக அமைகின்றன. இறைமகன் இயேசுவின் அடியவனாக இறுதி மூச்சு வரை தனது அழைப்பின் கசப்பான காடியைக் குடித்து தனது வாழ்வு முழுவதையும் மக்கள் பணிக்காக அர்ப்பணித்து, தன்னை நம்பியிருந்த மக்கள் ஒவ்வொருவரிலும் இறைவனின் திரு உருவைக் கண்டு, அவர்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டிய வேளையில் அருகில் இருந்து தன் அழைத்தலுக்குச் சான்று பகரத், தன் இன்னுயிரை நீத்து யாழ். மறைமாவட்ட அருட்பணித் தியாகச் செம்மல்கள் வரிசையில் இடம் வகிக்கும் அமரர் சறாவின் உள்ளத்தில், போரின் இறுதிக் கட்டத்தில், எழுந்து அலைமோதிய எண்ணத் திவலைகள், சிந்தனைக் கீற்றுகள் எவை எவையாக இருந்திருக்கும் என்னும் ஊகத்தில் இக் கட்டுரை வரையப்படுகின்றது. எவருடைய உள்ளத்தையும் புண்படுத்தும் நோக்கம் இல்லை; எப்பிரிவினரையும் குற்றம்சாட்டும் எண்ணமும் இல்லை.

நீ.மரிய சேவியர் அடிகள்

இடம்: முள்ளிவாய்க்கால்
சூழல்: பல திங்கள் பதுங்கு குழி வாழ்க்கை
காலம்: 2009 மேதிங்கள் 17ம் நாள்
நேரம்:**பிற்பகல் 2.45 மணி**

மக்கள் நடமாட்டம் எவ்வளவோ குறைந்து விட்டது. எங்கும் துப்பாக்கி வெடி ஓசைகள் அபசுரங்களாக ஒலித்துக்கொண்டு இருக்கின்றன. தொடர்ச்சியாக மூன்று நாட்கள் உணவு இன்றி பசியாய் இருந்த களைப்பு என்னை மட்டுமன்றி, என்னுடன் உள்ள எல்லோரையுமே வாட்டி வதைக்கின்றது. எமது பதுங்குகுழியை விட்டு வெளியே செல்ல முனைகின்றோம். முடியவில்லை! விடாமுயற்சியின் பலனாக எம்முடன் இருந்த ஒரு சில இளைஞர் வெளியே தவழ்ந்து தவழ்ந்து செல்கின்றார்கள். அவர்கள் மீள வரும் பொழுது, காலைக்கடன் முடிக்கச் சென்ற வேளை நெற்றியில் குண்டு பட்டு இறந்து போன இளவாலை விளானை சேர்ந்த ஓர் இளைஞனின் உடலையும் இழுத்து வந்து எமது பதுங்கு குழி அருகிலிருந்த ஒரு கிடங்கில் போட்டு மூடுகிறார்கள்.

பிற்பகல் 3.00 மணி

எமது பதுங்கு குழிக்கு அருகில் இன்னும் ஒரு குழியிலிருந்த இருவர் எம்முடன் வந்து, "இனி நாங்கள் என்ன செய்யலாம்?" எனக் கேட்கின்றார்கள். "குருக்களாகிய உங்களை நம்பித் தான் நாங்களும் அருகில் இருக்கிறோம்" எனக் கூறுகின்றனர். அச்சம் ஒரு புறமும் செய்வதறியாது நிற்கும் திகைப்பு மறுபுறமும் உடல் பசியிலிருந்த அவர்களது உள்ளங்களை எம்மிடம் ஆறுதல் தேட வைத்தன. அவல நிலையில் உள்ளவர்க்கு ஆன்மீகம் துணைநிற்கும் என்பதை உணர்கின்றேன். எம்முடைய மக்கள் உயிருக்கு போராடிக்கொண்டு இருக்கும் வேளையில் இயேசுவின் அரவணைக்கும் அன்புக்குச் சான்று பகரும் அருளை எனக்கு இறைவன் அளித்ததிற்கு இக் கல்வாரிக் களத்திலும் நான் விண்ணகம் நோக்கி நன்றி கூறுகின்றேன். ஆயின், எமது பரிதாப நிலையை மக்கள் நடமாட்டம் எதுவுமில்லாத சூழல் மேலும் வலுப்படுத்துகின்றது. போர்க்களத்தில் ஆங்காங்கே ஒலிக்கும் துப்பாக்கி வெடிச் சத்தங்களும் பெரிய குண்டுகளின் நெஞ்சை உதற வைக்கும் ஓசைகளும், நாம் சித்திரவதை முகாம் ஒன்றில் இருப்பதைப் போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. நேரம் செல்லச் செல்ல நிலைமை மோசமாகிக் கொண்டு இருக்கின்றது. என்ன கொடுமை! சில நேரத்தில், பாரிய குண்டுகளின் வெடிச் சத்தம் செவிகளைத் துளைத்து செவிடாக்குவது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. ஒவ்வொரு அதிர்வும் இளைத்து போயுள்ள எனது உடலை பாதித்துக் கொண்டே இருக்கின்றது.

பிற்பகல்: 4.00 மணி

அருட்தந்தை ஒருவரிடமிருந்த சீ.டி.எம்.ஏ. தொலைபேசிக் கருவி ஊடாக எமது நிலைமைகளை யாழ் ஆயருக்கும் கொழும்பில் இருந்த ஒரு சில குருக்களுக்கும் தெரியப்படுத்துகிறோம். அவர்கள், முள்ளிவாய்க்கால் படை நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருக்கும் படையதிகாரியுடன் தொடர்பை ஏற்படுத்தி எமது நிலைமையை தெரியப்படுத்துவதாகக் கூறுகின்றார்கள். ஒரு சில நிமிடங்களின் பின் அவர்கள் எம்மிடம் தொடர்பு கொண்டு தாம் கூறியபடி பொறுப்புப் படையதிகாரியிடம் அனைத்துத் தகவல்களையும் கூறியதாக எமக்குத் தெரிவிக்கின்றனர். அத்தோடு, படையினரை அண்மையில் காண நேர்ந்தால், வெள்ளைக் கொடியுடன் பதுங்கு குழியை விட்டு வெளியே வந்து அவர்களுடன் உரையாடும் படி அறிவுறுத்தல் தருகின்றார்கள். இச் செய்தி சோகத்தில் ஆழ்ந்திருந்த நம்மவருள் பலருக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் அளிக்கின்றது.

பிற்பகல்: 5.00 மணி

வெள்ளைக் கொடிகள் ஆயத்தமாகின்றன. ஆயின் யார் யார் வெளியே செல்வது? நீண்ட உரையாடல் தொடர்கின்றது. ஈற்றில் ஒரு முடிவு

க்கு வருகின்றோம். அன்பகப் பிள்ளைகள் இருவர், சிங்கள மொழியில் பேசக் கூடிய முதிய வர் ஒருவர், அருட்தந்தையர்கள் இருவர் ஆகிய வர்களுடன் நானும் செல்வதற்கு உடன்பாடு எட்டப்படுகின்றது.

பிற்பகல்: 6.00 மணி

எம்முடன் தங்கி இருந்த ஒரு சிலர், படையின ரைக் கனரக ஆயுதங்களுடன் காண்கின்றார் கள். அச்சம் மேலிட்டாலும், பதுங்கு குழியை விட்டு வெளியே செல்வதற்கான முதலாவது முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. வெளியே வருகின்றோம். அப்படி வந்த எமக்கும் படையி னருக்கும் சற்றுத்தூரம் இருப்பினும் அவர்க ளுடன் உரையாட முற்படுகின்றோம். பதிலாக, அவர்கள் கோபமாக எம்மைப் பேசி துப்பாக் கியால் சுடத் தொடங்குகிறார்கள். நாம் மிக அவ தானமாக இருந்தமையால் விரைவாக ஓடி வந்து எமது பதுங்கு குழிக்குள் பாதுகாப்பைத் தேடிக்கொள்கின்றோம். உயிருக்குப் போராடும் வேளையில் நமது கையில் உள்ள தொலை பேசி இறைவன் நமக்கு அளித்த உடன்பாட்டின் பேழை போல் மாறியுள்ளது. வானகத் தந்தையே! நன்றி! கோடான கோடி நன்றிகள்... நமது முயற்சி பற்றி தொலைபேசி ஊடாக அப் பகுதியின் படை நடவடிக்கைக்கு பொறுப்பாய் இருக்கும் படைத் தளபதிக்கு அறிவிக்கின்றோம். அதற்கு அவர் கூறிய பதில்: "படையினர் ஒரு போதும் மக்களைக் குறிவைத்துச் சுட மாட் டார்கள். நீங்கள் துணிந்து வெளியே வந்து, படையினரை நோக்கிச் செல்லுங்கள்."அவ் வார்த்தைகளை நம்பி நாம் வெளியே சென்ற போது படையினர் எம்மை நோக்கி சூடு நடத்தினார்கள் என்பதை அவர் ஏற்கின்றார் இல்லை. இருந்தும், அவர் கூறியதற்கு அமைய நாம் வெளியே வரு கின்றோம்.

படையினருடன் உரையாட முனைகின்றோம். மீண்டும் துப்பாக்கிச் சூட்டின் அச்சுறுத்தல். இம்முறையும் மயிர் இழையில் உயிர் தப்பி பதுங்கு குழிக்குள் தஞ்சம் புகுகின்றோம்.

இரவு: 7.00 மணி

தொலைபேசி வழியாகப் பலருடனும் தொடர்பு கொண்டு பேசுகின்றோம். எமக்கு சாதகமான எதுவும் நடக்காது போலும்! இறைவனுடைய சித்தம் அதுவானால் அதுவே நடக்கட்டும்! இருள் அரக்கனுடைய அதர்ம ஆட்சி எல்லா இடமும் எம்மைச் சூழ்ந்து பரவியுள்ளது. பதுங்கு குழிக் குள் இருந்து வெளியே எதையும் எவரையும் கண்ணாலே பார்க்க முடியவில்லையே! இனி வெளியில் செல்வது தற்கொலைக்குச் சமன் என்பது உறுதி. என்ன நடந்தாலும் பரவாயில்லை. இரவுப் பொழுது முடிய, நாம் உயிருடன் தப்பி இருந்தால் காலையில் மீண்டும் முயற்சி செய் வோம் என்னும் முடிவினை எடுக்கின்றோம்.

இரவு: 8.00 மணி

முல்லைத்தீவு சிறுவர் இல்லத்துக்குப் பொறுப் பாக இருந்த முகுந்தன் ஆசிரியர் கடுமையான உடல் நலக் குறைவால் உயிருக்காகப் போரா டிக் கொண்டிருக்கின்றார். எம்மிடம் எவ்வகை யான மருந்தும் எள்ளளவும் கிடையாது. குடிப்ப தற்கு நீரும் இல்லை. நீருக்காக வெளியே செல் லவும் இயலாது. வெளியே சென்றால், படையி னரின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக வேண் டும் என்னும் அச்சம். எமது நிலையோ கையறு அவல நிலையே!.

இரவு: 9.00 மணி

எம்முடன் உள்ள ஒவ்வொருவர் முகத்திலும் களைப்பின் பின்னணியில் சோக ரேகைகள் படர்ந்து காணப்படுகின்றதை என்னுடைய கையில் எரிந்து கொண்டு எவ்வேளையிலும் அணைந்து போகும் நிலையிலுள்ள அரிக்கன் விளக்கின் ஒளியில் காண்கின்றேன். 'சோதனை மேல் சோதனை போதுமடா சாமி' என்ற பாடல் ஏனோ நினைவுக்கு வருகின்றது.

இரவு: 10.00 மணி

கைக்குண்டுச் சத்தங்கள் எமக்கு மிக அண்மையில் கேட்டுக் கொண்டு இருக்கின்றன. ஒரு சிலரின் கூக்குரலும் அச் சத்தங்களுடன் அவைக்கும் மேலாகக் கேட்கின்றது. எங்களைப் போல் பதுங்கு குழிக்குள் பாதுகாப்பிற்கு இருந்த மக்களின் அவலச் சத்தம் என்று எண்ணுகிறேன்.

இரவு: 11.00 மணி

வெடிச் சத்தங்களும் அவல ஓலங்களும் சுடு காட்டை நினைவுபடுத்துகின்றன. நாம் தங்கியிருந்த பதுங்கு குழிக்கு இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. ஒரு வேளை, படையினர் எமது பதுங்கு குழியையும் தாக்கலாம் என்ற எண்ணத்துடன் ஒரு வாயிலில் வயது முதிர்ந்த அம்மா ஒருவரையும், மறு வாயிலில் அருட்தந்தை ஒருவரையும் காவலுக்கு வைக்கின்றோம். தாக்குதல் ஏற்பட்டால் அவர்கள் தம்மை அடையாளப்படுத்துவதற்காகவே அப்படிச் செய்தோம்... பருகுவதற்குத் தண்ணீரின்றி உயிருடன் போராடிக்கொண்டிருந்த முகுந்தன் ஆசிரியரின் மூச்சு சடுதியாக நின்று விடுகின்றது. அவர் சேட்டுமம் இழுத்த படி இறந்து விட்டார். ஓலமிட்டு அழுவதற்கு எவரிடமும் உடல் வலு இருக்கவில்லை. அதுவும் முடியாத அவலநிலை! என்ன செய்வது! எல்லோரையும் மரண அச்சம் ஆட்கொண்டிருக்கின்றது. பெரிய சத்தமில்லாது செபமாலை ஓதுவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

நள்ளிரவு: 12.00 மணி

செபமாலை சொல்லியபடி தூக்கத்துடன் போராடுகின்றேன். சரியாகக் களைத்து விட்டேன் போல் தெரிகின்றது.

நள்ளிரவு: 01.00 மணி

ஆழ்ந்த உறக்கம் இல்லை. நான் எழும்ப முனையும் போதெல்லாம், யாரோ தலையில் அடிப்பது போன்ற உணர்வு.

நள்ளிரவு: 02.00 மணி

உறக்கத்தில் அம்மாவைக் காணுகின்றேன். கறுப்பு உடை அணிந்த பெண் துறவி போல் எனக்குக் கைகளைக் காட்டுகின்றார். அவளது முகம் வாடியிருக்கின்றது. அவளது அன்பான கரங்களைப் பற்றி, ஏன் வாடி இருக்கின்றீர்கள் என்று கேட்பதற்கு முயற்சிக்கின்றேன். முடியவில்லை! மீண்டும் தலையில் யாரோ பலமாக அடிக்கின்றார்கள்.

நள்ளிரவு: 03.00 மணி

நல்ல உறக்கம். உலகம் முழுவதும் அதிர்ந்து உருண்ட வண்ணம் என்னையும் என்னுடன் நின்றவர்களையும் (யார் யார் என அடையாளம் காண முடியவில்லை) நிலைகுலையச் செய்கின்றது. உலகத்தின் முடிவோ? மீண்டும் தலையில் யாரோ பலமாக அடிக்கின்றார்கள். எழும்ப முயற்சிக்கின்றேன் இன்னும் நான் உயிரோடு தான் இருக்கின்றேன்.

விடியல்: 04.00 மணி

எழும்ப முடியாத உறக்கம். கனவு! கறுப்புக் கொடி பிடித்த சிலர் என்னை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் யார் யார் என அறிவது கடினமாய் உள்ளது! சற்று உற்று நோக்கும் பொழுது, அவர்கள் எனது சகோதரர்கள் போல் தெரிகின்றது. நித்திலா அக்கா, தம்பி சக்தி, சூரிய ஜீவன் அண்ணன் இன்னும் பலர் கறுப்புக் கொடியை அசைத்த வண்ணம் என்னை நோக்கி வருகின்றார்கள். மரினா அக்கா மட்டும் வழமையான புன்சிரிப்பின்றி தனது சபையின் வெள்ளை உடுப்புடன் வந்து கொண்டிருக்கின்றாள். அவர்கள் அனைவரையும் அண்மிக்க முயல்கின்றேன். முடியவில்லை! அப்படி முயலும் ஒவ்வொரு முறையும் ஏதோ ஒரு குழிக்குள் விழுகின்றேன். எழுந்து பார்க்கும் பொழுது யாரையும் காணவில்லை. மீண்டும் தலையில் யாரோ அடிக்கின்றார்கள். திடுக்கிட்டு எழும்புகின்றேன்.

வைகறை: 05.00 மணி

உறக்கத்தில் மீண்டும் கனவு. புனித முடியப் பரைச் சுற்றி எதிரிகளின் கூட்டம்! சரமாரியாகக் கற்களை அவர் மேல் வீசுகின்றார்கள். தனது எதிரிகளை மன்னித்துக் கொண்டே வானத்தை மேல் நோக்கிப் பார்க்கின்றார். நானும், அவரு டன் சேர்ந்து, வானத்தைப் பார்க்கின்றேன். என்ன காட்சி! மிகப் பெரும் ஒளி! அந்த ஒளி யின் நடுவில் ஓர் உருவம். அதைப் பார்ப்பதற்கு கோடிக் கண்கள் வேண்டும். முடியப்பர், அக் காட்சியில் பரவசமாகிய கோலத்தில், எதிரிக ளின் தாக்குதலின் விளைவாக உயிரைத் துறக்கின்றார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த என்னுடைய தலையில் மீண்டும் யாரோ அடிக் கின்றார்கள். திடுக்கிட்டு எழும்புகின்றேன். எனது வலது கை செபமாலையை அழுத்தமாகப் பற்றிக் கொண்டிருந்தது. அந் நிலையில் தான் உறங்கியிருக்கியிருப்பேன் போல் தெரிகின்றது. எனக்கு அருகில் அருட்தந்தை ஒருவர் வந்து, "என்ன சறா! அடிக்கடி திடுக்கிட்டு எழும்புவ தும், பின்பு படுப்பதுமாகவே இருந்தீர்! எழும்பும் ஒவ்வொரு முறையும் குழிக்கு மேலே போடப் பட்டிருந்த மரக் குற்றியில் தலை அடிபட்டது. நோ ஏதாவது இருக்கிறதா என்று பாரும் எனப் பரிவுடன் கூறுகின்றார்.

காலை: 06.00 மணி

வெளியே சற்று அமைதி நிலவுகின்றது. இருள் இன்னும் முற்றாக நீங்கவில்லை. எம்மோடு இருந்த சிலர் வெளியே செல்கின்றார்கள். காலைக் கடனை முடிப்பதற்கு செல்கின்றார்கள் போலும். சற்று நேரத்தின் பின்பு, குடி நீரும் அள்ளிக் கொண்டு வருகின்றார்கள்.

காலை: 07.00 மணி

பொழுது விடிந்து விட்டது. பதுங்கு குழிக்குள் இருந்த எல்லோரும் சற்று நிம்மதியுடன் காணப் படுகின்றனர். பக்கத்துப் பதுங்கு குழிக்குள் இருந்த ஒரு சிலர் வெளியில் நடமாடுகின் றார்கள். பல நாட்கள் உணவும், நீண்ட இரவு கள் உறக்கமும் இல்லாது களைத்திருந்தது அவர்களுடைய உடல் அசைவுகளில் தென்பட் டது. அவர்களது முகங்களிலும் கொட்டை எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்த சோகத்தைக் காணமுடிகின்றது.

காலை: 08.00 மணி

யாழ் ஆயருக்கும் மன்னார் ஆயருக்கும், நாம் இருந்த இடத்திலேயே உயிருடன் இருக் கின்றோம் என்னும் செய்தியை, தொலைபேசி ஊடாக அறிவிக்கின்றோம். அதற்கு மன்னார் ஆயர் அழுகையுடன் தெரிவித்த பதில் ஆறு தலையும் நம்பிக்கையையும் அளித்தது: "நாம் எல்லா முயற்சிகளையும் எடுத்து விட்டோம். நீங்கள் எங்கு, எந் நிலையில் உள்ளீர்கள் என் பதை எல்லா மட்டத்திலும் அறிவித்து விட்டோம். படை அதிகாரிகள், அரச அமைச்சர்கள், வெளி நாட்டுத் தூதுவர்கள் அனைவருடனும் தொடர் பில் இருக்கின்றோம். மனம் தளர வேண்டாம். கடவுளை மன்றாடிக் கொண்டிருங்கள். அவர் தான் உங்களை இனிக் காப்பாற்ற முடியும்."அச் செய்தியைப் பற்றி நாம் எமக்குள் உரையாடிக் கொண்டிருந்த பொழுது, கடற்கரைப் பக்கமாக இருந்து படையினர் இருவர் எமது பதுங்கு குழியை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார் கள். முன்னைய படையினரைப் போல் துப் பாக்கி ஏந்தி இருந்தும், எங்களை நோக்கியோ வானத்தை நோக்கியோ சுடாமல், எமது பதுங்கு குழியை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார் கள். மிக அருகில் வந்து, "நீங்கள் குருக்களா?" என வினவுகின்றனர். நாம் அச்சம் தணிந்தவர் களாக தலையாட்டுகின்றோம். படைத்தளபதி ஒருவர் தம்மை அனுப்பியதாகவும் எங்களைத் தேடியே வந்ததாகவும் கூறுகின்றார்கள். அத்து டன் ஓர் எச்சரிக்கையையும் விடுக்கின்றனர்: "வெளியிலே நடமாட வேண்டாம். கண்ட இடத் தில் சுடுவதற்கு இராணுவத்தினருக்கு உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. உங்களைக் கண்டா லும் சுடுவார்கள்... நாம் திரும்பி படைத்தளப

தியிடம் சென்று நீங்கள் தங்கியிருக்கும் சரி யானஇடத்தை தெரியப்படுத்துவோம். உங் களை நாம் வந்து அழைத்துச் செல்லும்வரை நீங்கள் வெளியே செல்ல வேண்டாம்."

காலை: 09.00 மணி

இனம் தெரியாத நிம்மதி! விரைவாக எமது சிலுவைப் பயணம் ஒரு முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கையின் ஒளி அனைவர் முகங்களிலும் வீசத் தொடங்குகின்றது. இடத்திற்கிடம் மாறிச் சென்ற பொழுது எம்மிடம் இருந்த பொருட்கள் பலவற்றை கைவிட்டு வரவேண்டிய கட்டாயம் இருந்தது. இப்பொழுது, எம் ஒவ்வொருவரிட மும் 'எம்முடையது' என எஞ்சியிருந்த அற்ப சொற்பத்தைத் தேடி ஒன்று சேர்த்து ஒரு பொதிக் குள் போட்டுக் கட்டும் பணியில் தீவிரமாக ஈடு படுகின்றோம்... ஏனோ தெரியவில்லை நேரம் மெல்ல மெல்ல அரக்கிக் கொண்டு இருக்கின் றது. "உள்ளே இருங்கள். நாங்கள் வந்து உங்களை அழைத்துச் செல்வோம்" என ஆறு தல் மொழி கூறிச்சென்ற படைவீரர் எவரும் இன் னும் ஏன் வரவில்லை என்ற கேள்வி எழும்புகின் றது. அக் கேள்வி, மணித்துளிகள் செல்லச் செல்ல, ஏமாற்ற உணர்வாக எம்மில் துளிர்விடு கின்றது. பொறுத்திருந்து பார்ப்போம், நல்லதே நடக்கும் என்று ஒரு புறமும், பல்லாயிரம் மக்க ளுக்கு நடந்ததுதான் நம்முடைய விதியும் என்ற அச்சம் மறு புறமும் பதற்றத்தை ஏற்படுத்துகின் றது. எதிர்பார்த்து எதிர்பார்த்து நிம்மதி இழந்த வர்களாக எம்முள் பலரும் மாறுகின்றனர். நானும் அதற்கு விதிவிலக்கு அன்று.

பகல்: 10.00 மணி

சடுதியாகக் கிளம்பிய துப்பாக்கிகளின் வெடிச் சத்தம் எம்மைச் சூழ நிலவிய மயான அமைதியைக் குலைக்கின்றது. எம்மைச் சுற்றி யுள்ள அனைத்துப் பதுங்கு குழிகளையும் படை யினர் சூழ்ந்து கொண்டார்கள் போல் தெரிகிறது. எம்மவருள் ஒருவர் மிக அவதானமாக நடுக்கத் துடன் வெளியே தலையை நீட்டிக் கண்ணோட் டமிடுகின்றார். அவருடைய முகம் கறுக்கின்றது அதில் அச்ச உணர்வு தென்படுகின்றது. தடு மாற்றத்துடன், "கறுப்புத் துணியை முகத்தில் அணிந்த படைப்பிரிவினர் சுற்றி வளைத்து நிற்கின்றார்கள். இனிச் செபம்தான் எமது ஒரே தஞ்சம்" எனக் கூறுகின்றார். கறுப்புத் துணியால் முகத்தை மூடிப் போரிடும் படையினர் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள், ஈவிரக்கமற்றவர்கள் என்பதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். எனது கையிலுள்ள செபமாலையை இன்னும் இறுக் கமாகப் பிடித்துக் கொள்கிறேன்.

பகல்: 11.00 மணி

எம்முள் ஒரு சிலர் மரண அச்சத்தில் உறைந் திருந்தனர். நாம் நம்பிக்கையை இன்னும் இழந்து போகவில்லை. தாமதிக்காது தீர்க்க மான முடிவை நாம் எடுக்க வேண்டும். "வெள் ளைக்கொடியுடன் வெளியே சென்று படையி னருடன் பேசிப் பார்ப்போம்." அவ்வாலோச னையை ஏற்றுக்கொண்ட எமக்குள், யார் யார் வெளியே சென்று பேசுவது என்பதில் முரணான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. வெளியில் சென்றால், படையினர் கேட்டுக் கேள்வியின்று சுட்டுக் கொல்வார்கள் என்ற அச்சம் அனைவரையும் ஆட்கொண்டிருப்பது தான் கருத்து வேற்றுமைகளுக்குக் காலாக இருந்தன. அரைமணி நேரத்துக்கும் மேலான வாத விவாதங்களுக்குப் பின், ஒரு அருட் தந்தை, ""நான் செல்வதற்குத் தயார்" என்கின் றார். அமைதி! பேசுவதற்கு எல்லோரும் தயங்கு கின்றனர். துணிச்சலை வரவழைத்துக் கொண்டு "நான் வரமாட்டேன்" என்கின்றார் ஒருவர். ஒரு சிலர் "நான் போகமாட்டேன்" என்று தனித்த னியாக முணு முணுக்கின்றனர். "உங்களுடன் நானும் வருகின்றேன்" என்றேன் நான். இந்தத் துணிவு, எனக்கு எங்கிருந்து வருகின்றது? என் கைகளில் இருந்த செபமாலைதான் தருகின்றது என எண்ணுகின்றேன். வெள்ளைக் கொடியை ஏந்திய வண்ணம் பதுங்கு குழியை விட்டு நாம் இருவரும் செல்கின்றோம். வானத்தை நோக்கித்

துப்பாக்கிச் சூடுகளை நடத்திய வண்ணம் படையினர் எம் இருவரையும் சுற்றிவளைத்துக் கொள்கின்றனர். முகங்களை மூடிய இத்தனை படையினரும் எங்கிருந்து வந்தார்கள் என்பது தெரியவில்லை. நன்கு பயிற்சி பெற்றவர்கள் என்பது மட்டும் விளங்குகின்றது. புத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள், அனைத்து சமயத் தலைவர்களுக்கும் மதிப்பளிப்பவர்கள் என்பது உறுதியாகின்றது. எமக்கு எத் தீங்கும் இழைக்கவில்லை. பதுங்கு குழிக்குள் இருந்த அனைத்து அருட்தந்தையர்களும் வெளியே வர பணிக்கப்படுகின்றனர். அவர்கள் வெளியே வருகின்றார்கள். படையினர் மத்தியில் பதற்றம் ஏதும் இல்லை. அருட்தந்தையர்களைத் தொடர்ந்து, பதுங்கு குழியில் இருந்த சிறுவர்கள், பொதுமக்கள் என அனைவரும் வெளியே வர, படையினர் மத்தியில் குழப்பம் ஏற்படுகின்றது. போராளிகள் தான் வருகின்றார்கள் என்று படையினர் கணிப்பது போல் தெரிகின்றது. நாம் நின்ற நின்ற இடத்திலேயே முழந்தால் படியிட பணிக்கப்படுகின்றோம். ஆண்கள் அனைவரும் தத்தமது மேலாடைகளை அகற்றி விடும்படி கடும் தொனியிலான கட்டளை பிறக்கின்றது. மேற் சட்டைகளை கழற்றியபடி அனைவரும் கைகளை உயர்த்திய வண்ணம் முழந்தால் படியிட்டு இருந்த காட்சி, எம் சிலுவைப் பாதையில் பதினான்கு நிலையினுள் ஒன்று போலும். படையினரிலும் பல் வகைப்பட்ட மனிதர்கள் இருக்கின்றனர். முரட்டுத்தனமான ஒருவர், அருட்தந்தை ஒருவரின் அருகே வந்து, துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டபடி, "நீ ஒரு எல்.ரி.ரி.ஈ. துவக்கு ஏந்தி சண்டை பிடித்த நீ, தோத்துப் போய், துவக்கை எறிந்து விட்டு வெள்ளை அங்கியுடன் நிக்குறாயா?" அவன் அப்படிச் சொல்வது தனது கடமை உணர்ச்சியாலோ என்னவோ! ஆனால், அவனை யார் தான் தட்டிக்கேட்க முடியும். கடும் தொனியில் ஒருவன் சீறிச் சினந்து கத்திக்கொண்டிருக்கின்றான். அவனுக்கு அருட்தந்தை ஒருவர் தன்னிடமிருந்த சி.டி.எம்.ஏ. தொலைபேசியைக் காட்டியபடி அவனுடைய மேலதிகாரியோடு அவனைப் பேச வைப்பதற்காக முயற்சி மேல் முயற்சி செய்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றேன். விநாடிகள் நகர நகர அவருடைய முயற்சி பலனளிக்கின்றது. அவன் அவரிடம் மூன்று வினாக்களை எழுப்புகின்றான்:

- நீ கூறும் ப்றிகேடியரின் பேர் என்ன?
- அவர் இப்ப எங்கை இருக்கிறார்?
- அவற்ற இலக்கம் உனக்கு எப்பிடித் தெரியும்?

மிகுந்த கோபத்துடன் எழுப்பப்பட்ட கேள்விகள் சிங்களத்திலும் அரைத் தமிழிலும் கேட்கப்பட்டன. அவ்வேளை, "எல்லாரையும் சுட்டுக் கொல்ல எங்களுக்கு ஓர்டர். நீங்கள் எல்லாரும் எல்.ரி.ரி.ஈ. உங்க எல்லாரையும் சுட்டுக்கொல்லப் போறம்" என இன்னுமொரு படைவீரன் அச்சுறுத்துகின்றான். சுட்டுப் பொசுக்கும் வெயிலுக்குச் சமனான தொனியில் படையினர் அப்படி நடப்பது அவர்கள் கடமையின் தர்மம் போலும்!

மதியம் 12.00 மணி

படையினரில் ஒரு பகுதி, சற்றுத் தள்ளி அக்கம் பக்கம் சென்று, காயம் அடைந்தவர்களையும் களைத்து இழைத்துப் போய் இருந்தவர்களையும் அழைத்து வந்து எம்முடன் சேர்த்து விடுகின்றனர். நீண்ட நேர கெஞ்சலுக்கும் காரசாரமான பதிலுக்கும் பின் ஒரு படைவீரன் தொலைபேசி ஊடாகப் படையதிகாரியோடு பேச இணக்கம் தெரிவித்து அவருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள, நாம் அனைவரும் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றோம். நீண்ட நேரம் அங்கு நிலவிய கொதி நிலை சற்றுத் தணிந்து கொள்கின்றது. இருப்பினும், படையினரின் கடுங்கோபம் அடிக்கடி வெடிக்கின்றது. அருட்தந்தையர்கள் அனைவரும் உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றோம்.

எம் குழுவில் இருந்த பெண்களை உடற் சோதனை செய்ய ஒரு பெண் பணிக்கப்பட்டு, இராணுவத்தினரின் முன்பாகவே அச் செயல் நடைபெறுகின்றது.

பிற்பகல் 01.00 மணி

ஐந்து வயதுச் சிறுவர் தொடக்கம் அறுபது வயதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் வரை எம் முடன் இருந்தனர். எல்லோருடைய கழுத்திலும் செபமாலை போடப்பட்டிருந்தது. கோபத்தில், ஒரு சில படையினர், அச் செபமாலைகளை அறுத்து எறிகின்றனர். காயப்பட்டவர்களின் காயங்களை உரித்துக் கடுமையான சோதனை களை மேற்கொள்கின்றனர். அச் சோதனை களின் பின் பதுங்கு குழியிலிருந்து எமது பொதி களை எடுத்து வர நாம் அனுமதி கோருகின் றோம். படையினரும் உடன்படுகின்றனர்.

நன்றி கலந்த உள்ளத்தோடு, எமது சிறிய பொதிகளை நாம் எடுத்து வர, ஒவ்வொரு பொதி யும் அவிழ்க்கப்பட்டு அதற்குள் இருந்த பொருட் கள் மிக நுணுக்கமாக ஆராய்ச்சி செய்யப்படு கின்றன. நான் என்னுடைய பொதியை எடுத்துக் கொண்டு அருட்தந்தை ஒருவருக்குப் பின்னால் வந்து நிற்கின்றேன். சடுதியாக எதிர்பார்க்க முடியா வகையில் சினத்துடன் காணப்படும் படைவீரன் ஒருவன் எனக்கு கிட்டே வந்து எனது நெஞ்சில் பலமாகக் குத்துகின்றான். அதிர்ச்சியு டன் மூர்ச்சையற்றுக் கீழே விழுகின்றேன். எல்லாம் இருண்டது போல் தோன்றுகின்றது. அடியின் வேகம் இன்னும் அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றதோ? யாரோ ஒருவர் என்னைத் தூக்கி எழுப்புகின்றார். இப்போது தான் எனக்கு உணர்வு வருகின்றது. கீழே குனிந்து என்னைத் தூக்கியவர் ஒரு அருட்தந்தை! எழும்பும் போதே நெஞ்சு வலி அதிகமாக இருப்பதை உணர்கின்றேன். பலத்த அடி நெஞ்சில். ஈட்டியால் குற்றியது போன்ற அடி எனது சாவிற்கு முன்னறிவித்தலோ? இல்லை. இல்லை... ஏனோ என்னால் சரியாகப் பார்க்க முடியவில்லை. அப்போதுதான், நான் அணிந்திருந்த கண்ணாடியும் என்னுடைய பொதிக்குள் இருந்த பொருட்களும் நிலத்தில் சிதறியிருப்பதை மங்கலாகப் பார்க்கின்றேன். அவ் வேளை ஒரு படையதிகாரி எனக்கு அரு கில் வருகின்றார். இன்னுமொரு அடி விழப்போ கின்றதோ! என்ற ஏக்கத்துடன் அவரைப் பார்க் கின்றேன். அப்படி விழுந்தால் நான் செத்து விடு வேன் என்ற அச்சம் என்னை நிலை தடுமாறச் செய்கின்றது. எனக்கு மிக அருகில் வந்த அந்த அதிகாரி, என்னிடம் மன்னிப்புக் கேட்கின்றார். அதுமட்டுமல்ல, என்னைத்தாக்கிய படைவீர னையும் கடுமையாகக் கடிந்து கொள்கின்றார். இது கனவா அல்லது உண்மையாகத்தான் நடக்கின்றதா? இயேசுவின் கல்வாரிப் பயணம் என் நினைவுக்கு வருகின்றது. இயேசுவைக் கன்னத்தில் அறைந்த பொழுது, தட்டிக்கேட்க ஒரு நிக்கோதேமு இருந்தார். இயேசுவைக் கற்றூணில் அடிக்கவும் சிலுவையைச் சுமக்க வும் அச் சிலுவையில் அறையப்படவும் ஆணை யிட்டவன் ஒரு அரசியல் வாதி. இயேசுவுக்கு நடந்த எக் கொடிய செயலையும் எவ்வதிகாரி யும் கண்டிக்கவில்லை.

ஆனால் எனக்கு நடந்த நிகழ்வுக்காக படை யதிகாரி ஒருவர் மன்னிப்புக் கோருகின்றார். இத்தகைய மாண்பு மிக்க பண்பாளர்கள் இருக் குமட்டும் மனிதம் வாழ்ந்து கொண்டிருக் கும்... படையினரின் அனுமதியுடன், நாம் இருந்த பதுங்கு குழிக்குள் இறந்து போயிருந்த முகுந் தன் ஆசிரியரின் உடலையும், இரு நாட் களுக்கு முன் குண்டுபட்டு இறந்திருந்த றோய் என்பவரின் சடலத்தையும், இரு வேறு கிடங்கு களுக்குள் அடக்கம் செய்கின்றோம். "காயப் பட்டவர்களை ஏலுமானால் நீங்களே கூட்டிக் போங்கள்" எனப் படையினர் எம்மிடம் கூற, நாமும் உடனடியாகவே நமக்குக் கிடைத்த தடிகள், சாக்குகளைப் பயன்படுத்தி சில தூக்கிகளைச் செய்து, ஒரு சிலரை மட்டும் அங்கிருந்து எம்முடன் கொண்டு வர முடிகின்றது.

மற்றவர்களை என்ன செய்வது? இக்கட்டான சூழ்நிலை! காயப்பட்டுக் கிடந்த சிலர் எமது சங்கடத்தை உணர்ந்து, "எங்களால் நீங்கள் சிரமப்பட வேண்டாம் எங்களை விட்டு விட்டு நீங்கள் போங்கள்" எனக் கூறுகின்றனர். அவர்களை அங்கே விட்டுச் சென்றால் அவர்களுக்கு என்னாகுமோ என்ற அச்சம் எம்மை ஆட்கொள்கின்றது. ஆயினும், படையினர் எம்மை இரண்டு குழுக்களாகப் பிரித்து, தம்முடன் நடந்து வரச் சொல்லுகின்றனர். வேறு வழியின்றி நாம் போகின்றோம். முள்ளிவாய்க்கால் பிரதான வீதி மட்டும் போகின்றோம். நான் காணும் அவலக் காட்சிகள் எனக்குச் சோகத்தையும் களைப்பையும் தருகின்றன. குடும்பம் குடும்பமாக இறந்து போய்க் கிடக்கும் மக்கள்! உடலுறுப்புக்கள் சின்னாபின்னமாக சிதைக்கப்பட்டுச் சிதறிக் கிடந்த சடலங்கள்! பற்றி எரியும் நிலையில் வாகனங்கள்! வாகனங்களுக்கு அடியில் அரைகுறையாக எரிந்து போன சடலங்களும், சிதைந்து போன சதைத் துண்டங்களும், தேடுவாரற்றுக் கிடந்த துப்பாக்கிகளும், வெடிக்காமல் கிடந்த குண்டுகளும், நரகத்துக்குள் நடப்பது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்துகின்றது. படைவீரன் ஒருவன் பாதையோரத்தில் விழுந்து கிடந்த காயப்பட்ட போராளியின் நெற்றியில் துப்பாக்கி முனையை வைத்துக் கோபமாக ஏதேதோ கூறிக்கொண்டிருந்த காட்சி! தனிப்பட்ட துப்பாக்கி வெடிகளின் சத்தம். இலக்கிய வகுப்பில் எனது ஆசிரியர் புறநானூற்று போர்க் காட்சிகளை பற்றிக் கூறியது நினைவுக்கு வருகின்றது. எங்கு பார்த்தாலும் நெருப்பின் மயம்! இனிமேல் இங்கு மக்கள் வாழ முடியுமா? பேய்கள் மட்டும் தான் நடமாட முடியும். அனைத்தும் சேர்ந்து எனது நெஞ்சில் பேரதிர்ச்சியை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. நாம் வெறும் கால்களுடன் நடந்து கொண்டிருக்கின்றபடியால் எரியூட்டப்பட்டுக்கொண்டிருக்கும் நெருப்புத் தளங்கள் எமது வெறும் கால்களைப் பதம் பார்க்கின்றன. நடக்கவே முடியவில்லை. எனக்குச் சோர்வு ஏற்படுகின்றது. அருட்தந்தை ஒருவர் கட்டாயப்படுத்தி எனது உடுப்புப் பொதியை என்னிடம் இருந்து பெற்று, நடக்க முடியாமல் திண்டாடும் என்னைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு வருகின்றார். மேலும், அன்பகச் சிறுவர் இருவரை எனக்கு உதவி செய்யும் படி பணிக்கின்றார். எனது உடலில் உள்ள சோர்வு போன்றே உள்ளத்திலும் ஏற்படுகின்றது. அப்படி இருந்தும், உதவி செய்த அந்த அருட் தந்தையிடம் சொல்லுகின்றேன், "என்னால முடியும், நான் தனிய நடந்து வருவன்." எனக்குப் புரிகின்றது இனிமேல் என்னால் நடக்க முடியாது என்று. எரிதணலாக வெந்து கொண்டிருக்கும் இப் பாதையில் படுத்து உறங்க வேண்டும் போல் தோன்றுகின்றது. அவ்வளவு களைப்பு. ஆனால், இரண்டு அன்பகச் சிறுவர்களும் வான தூதர்களைப் போல் என்னை ஏந்திக்கொண்டு வருகின்றார்கள்.

நாம் செல்லும் வீதியின் இரு மருங்கிலும் இப்பொழுது படையினரின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. சடுதியாக, படையினர் எல்லோரும் வானத்தை நோக்கி துப்பாக்கிகளை உயர்த்தி, பெருமிதத்துடன் வேட்டுக்களை தீர்த்துக்கொண்டிருக்கின்றனர். எதுவோ ஒரு முக்கியமான செய்தி அவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டும் என எண்ணுகின்றேன். நடை பிணங்களாகச் சென்று கொண்டிருந்த எங்களைப் பார்த்து, "உங்கட தலைவர் அவுட். செத்துப் போனார். இனிமேல் நீங்கள் எங்கட அடிமைகள்" என்று வெறுப்புடன் எம்மைப் பார்த்து உரக்கக் கத்துகின்றார்கள். ஒரு சிலர் காறித் துப்புகின்றார்கள். படைவீரன் ஒருவன் எனக்கு அருகில் வந்து, "டே மொட்டையா, உன்ர தலைவர் எங்க? செத்திட்டார்! நீ இனி அடிமை" என்று கூறுகின்றான். எனக்குப் பெரிய அதிர்ச்சியாக இருக்கின்றது. நான் எவ்வாறு அடிமையாக முடியும்? இயேசுவின் அடியவன் நான், எவ்வாறு மனிதருக்கு அடிமையாக முடியும்! என்னுடைய முகத்தில் வெளிப்பட்ட அதிர்ச்சியைப் பார்த்த ஒர் அருட் தந்தை, "சறா! இதெல்லாம் பொய்! நீ நம்பியிடாத, நாங்

கள் யாருக்கும் அடிமை இல்லை" என்கின்றார். ஒரே குழப்பமாக இருக்கின்றது. நான் அடிமை யாவதா? யார் அடியவனாக என்னை அழைத் தாரோ அவரிடம் செல்வது தான் மேல்! என் உடல் எல்லாம் அதிகமாக வியர்க்கின்றது. அயர்வும் ஏற்படுகின்றது.

பிற்பகல் 02.00 மணி

முள்ளிவாய்க்காலுக்கு வெளியே ஒரு பெரிய மரத்தின்கீழ் எல்லோரும் வந்து சேர்ந்து நிற் கின்றோம். நாவரளுகின்றது! தண்ணீருக்குத் தவிக்கின்றது! எனக்கு மயக்கம் வருகின்றது! என்னை அழைத்தவரின் குரல் காதுகளில் தூர ஒலிக்கின்றது.

பின்னுரை

மரத்தின் கீழ் இருந்தவர்களுடைய அவல நிலையைப் பார்த்து
தண்ணீர்ப் போத்தல்கள், பழ வெல்லம் (குளுக்கோஸ்), பிஸ்கட் முதலியவற்றைக்
கொடுத்தார்கள். தண்ணீர் மற்றும் பழ வெல்லம் பருகியவர்கள்
தெம்பு பெற்று எழுந்தனர். ஆயின், பல முயற்சிகள் எடுத்தும்
இருவருக்கு மட்டும் எந்த உதவியும் செய்ய முடியவில்லை.
அதில் ஒருவர் அருட்தந்தை சறா. நிலைமையைப் புரிந்து
கொண்ட மற்ற அருட்தந்தையர்கள், மயக்கநிலையில்
இருந்த இருவரையும், இன்னும்அவசர மருத்துவசிகிச்சை
தேவைப்பட்ட சிலரையும் மருத்துவமனைக்கு எடுத்துச்
செல்லும்படி இரந்து கேட்டதன் பயனாக ஓர் உழவு இயந்திரத்தில்
இரட்டைவாய்க்காலில் உள்ள சாளம்பன் என்ற இடத்திற்கு
கொண்டு செல்லப்பட்டார்கள். அங்கு மருத்துவசிகிச்சை
எதுவும் அளிக்கப்படவில்லை. அரைமணி நேரம் கழித்து அதிகாரி
ஒருவர் அங்கு வந்த போது, எல்லோரும் அவரின் காலில் விழுந்து
அழுது, அவ்விருவரையும் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லக்
கெஞ்சிக் கேட்டனர். அதிகாரியும், மூர்ச்சித்துமயக்க நிலையில்
கிடந்த இருவருக்கும் உடனடியாக ஊசிகள் ஊடாக குளுக்கோஸ்
ஏற்றுவதற்கு கடும் முயற்சி எடுத்தார். அவ் அதிகாரியின் முயற்சியால்
இருவர் உடலிலும் குளுக்கோஸ் ஏற்றப்பட்டது. ஆயினும், சாளம்பனில்
சறாவின் மூச்சு நின்றுவிட்டது. அவரின் மூச்சு அடங்கிய அந்தக்
கணப்பொழுது கிட்டத்தட்ட

பிற்பகல் 2.45

"என்னால முடியும்,
நான் தனிய நடந்து வருவன்."
மறக்க முடியா இச் சொற்களே
துறவி சறாவின் இறுதிப் பேச்சு.
நடக்க முடிந்தது அவரால்
இறைவன் திருவடி நிழலுக்கு
நிரந்தர விடுதலை தேடி!

சறா நீர் சாகவில்லை எம் நினைவுகளில்
நினைப்போம்!திடுக்கிடுவோம்!!
நினைவுவரும் வேளைகளில்!!!

சறத் ஜீவன் அடிகளார்! தமிழர் தம் சரித்திரத்தில் சாகாவரம் பெற்ற சற்குரு ! தழிழரின் கனவுகளுக்கு சமாதி கட்டப்பட்ட போது அச்சமாதிக் குள் உறைந்து போன உத்தமகுரு! போராட்டம் மௌனிக்கப்பட்ட போது மௌனித்த மண்ணின் மைந்தன்! தமிழர்களின் கல்வாரியான முள்ளிவாய்க்கால் வரை சிலுவை சுமந்த இயேசுவின் சீடன்!

நாம் நீந்திக்கடந்த நந்திக் கடல் நெருப்பாற்றில் குருதி கொப்பளித்த ஆயிரமாயிரம் நெஞ்சங்களில் நம் குருவின் இறுதிப் பயணத்தில் இணைந்து கொண்டவன் என்பதால் அந்த இதயத்துடிப்புகளை இங்கு பதிவு செய்கிறேன் .

இறுதிப் போரின் போது யாழ் ஆயரின் செயலாளராக நான் பணி யாற்றிய காலமதில் செல் வீச்சில் தன் காலை இழந்த வசந்தசீலன் அடிகளாரை கொழும்பு தனியார் மருத்துவமனையில் பராமரித்துக் கொண்டிருந்த வேளை, 2009 வைகாசி 18ம் திகதி அன்று மாலை 6.00 மணிக்கு அன்றைய யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை யாழிலிருந்து என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அருட்பணி சறத்ஜீவன் அடிகளார் முள்ளிவாய்க்கால் பகுதியில் இன்னுயிர் ஈந்த துயரச் செய்தியை பகிர்ந்ததுடன் அவரின் உடலம் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் வவுனியா மாங்குளம் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அதனைப் பொறுப்பேற்று கொழும்பு எடுத் துச் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் கொண்டு வருமாறும் என்னைப் பணித்தார்.

ஆயர் அவர்களின் பணிப்புரைக்கு அமை வாக மறுநாள் (19.05.2009) நான் தாண்டிக்குளம் சென்று இராணுவ அதிகாரிகளுடன் உரையாடி இராணுவ அம்புலன்ஸ் வண்டியில் அடிகளா ரின் உடலத்தை ஏற்றி வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று ரண களமாகக் காட்சியளித்த அவ்வைத்தியசாலை யில் குவிந்திருந்த பிணக்குவியல்களோடு அடிகளாரின் உடலத்தையும் நகர்த்தி சட்டரீ தியான அனுமதி பெற்று அடிகளாரின் திருவு டலைப் பெற்றுக்கொண்டோம். அன்று மாலை வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் அடிகளாரின் திருவுடல் வைக்கப் பட்டு மாலையில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மற்றும் மன்னார் குருக்கள் இறைமக்கள் இணைந்து இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச் சின் அனுமதியுடன் அன்று இரவு அடிகளாரின் உடலத்தை கொழும்புக்கு எடுத்து வந்தேன். சறா அடிகளாரின் உடலை யாழ் கொண்டு வரும் நோக்குடன் றேமன் மலர்ச்சாலையில் ஆறு நாட்கள் வைத்திருந்தோம்.

யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு தனியார் விமான சேவைக்குப் பாதுகாப்பு அமைச்சு அனு மதி வழங்காத காரணத்தினால் அடிகளாரின் உடலத்தை ஆறு நாட்கள் மலர்ச்சாலையில் வைத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது இராணுவ விமானத்தில் எடுத்துச் செல்லும் முயற்சியும் பலனளிக்கவில்லை. இறுதிவரை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காத நிலையில் யாழ் ஆயரின் பணிப்புரைக்கமைய அடிகளாரின் உடலம் கொழும்புவாழ் குருக்கள் துறவியர், இறைமக்கள் மத்தியில் வைகாசி 26ம் நாள் மாலை ஐந்துமணிக்கு மின்சாரத்தில் தக னம் செய்யப்பட்டது. தகனம் செய்வதற்கான மின் ஆளியை நான் நடுங்கும் கரங்களுடன் அழுத்திய வேளை என்னுடலும் உள்ளமும் மின்சாரத்தால் தாக்கப்பட்டது போன்று துடித் தமை இன்றும் என் நெஞ்சைப் பிழியும் சோக மாகவே உணர்கின்றேன். யாழ் மறை மாவட்டத்தைப் பொறுத்தவரை தகனம் செய் யப்பட்ட முதவாவது குருவாக சறத்ஜீவன் அடிகளாரே விளங்குகின்றார்.

அடிகளாரின் அஸ்தியை நாம் யாழ்ப்பாணம் எடுத்துச் சென்று 30ம் திகதி வைகாசி 2009 அன்று யாழ் மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் தலைமையிலான கூட்டுத் திருப்பலியின் பின்னர் கொஞ்செஞ்சிமாதா சேமக்காலையில் குருவின் பணியும் வாழ்வும் தூய காணிக்கை யாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

சறத்ஜீவன் அடிகளார் 14ம் திகதி வைகாசி 2003 அன்று இறைவனின் குருவாகத் திரு நிலைப் படுத்தப்பட்டார். வன்னியின் இறுதிப் போர்க்காலக்கட்டத்தில் கிளிநொச்சி உருத் திரபுரம் பத்திமா ஆலயப் பங்குத்தந்தையாக இறை பணியாற்றி இடப்பெயர்வு அவலங்களைச் சுமந்து மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்து விசுவமடு தேராவில் ஆலயத்தில் பல்லாயிரக்க ணக்கான மக்களுக்குத் திருப்பலி ஒப்புக் கொடுத்து பின்னர் நீண்டபயணமாக முள்ளி வாய்க்கால் வரை துன்பச்சிலுவை சுமந்த மக்க ளுக்கு சீமோனாக, வெரோணிக்கம்மாளாகத் தோள்கொடுத்தவர். இறுதியில் இளைத்துக் களைத்து மண்ணில் சாய்கிறார். “கோதுமை மணி நிலத்தில் விழுந்து மடிந்தாலொழிய மிகு ந்த பலன் தராது” இயேசுவின் வாக்கு இவரது வாழ்வாகிவிட்டது.

அருட்பணி சறத்ஜீவன் தியாகிகளின் செந் நீர் சிந்திய மண்மீது விழுந்த இறையரசின் வித்து!

அவ்வித்திலிருந்து எழும் விருட்சத்தில் ஆகா யத்துப் பறவைகள் மட்டுமல்ல நம் ஆன்மாக் களும்...

நினைப்போம்!
திடுக்கிடுவோம் !!
நினைவுவரும் வேளைகளில் !!!

அருட்திரு. எஸ். எமினீசிலி றொஹான்

அருட்தந்தை சறத்ஜீவன் - ஒரு ஞாபகம்

கடைசி யுத்தம் நடந்து முடிந்த கடைசி நாளான 18 மே மாதம் 2009ம் ஆண்டு பாதர் சறாவும் அவருடன் இருந்த 4 குருக்களும் 80 வரையான சிறுவர்களும் ஏனையவர்களும் பங்கரில் இருந்து வெளியில் வந்தார்கள். பல விதமான விசாரணைகளுக்குப் பின் அவர்கள் போக அனுமதிக்கப் பட்டார்கள். வழியில் கண்ட பல காட்சிகள் சறாவின் மனதை வெகுவாகப் பாதித்தது. அவருடன் நடந்தவர்களில் ஒருவர் சொன்னார்: பாதர் சறா "இதை என்னால தாங்க ஏலாமல் இருக்கு" என்று பல தடவைகள் சொல் லியபடியே பாரமான தனது பைகளையும் சுமந்து வந்தார். ஏனெனில், பல மனித உடல்களின் நடுவேயும் பல எரிந்துகொண்டிருந்த இடங்களி னூடாகவுமே இவர்கள் நடந்து வரவேண்டியிருந்தது.

சறத்ஜீவன் 1968ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி பிறந்தார். அவர் சிறுவயதிலிருந்தே தான் ஒரு குருவாக வரவேண்டும் என்று ஆவலாய் இருந்தார். ஆனால் அவருக்கு ஏற்பட்ட குடும்பப் பொறுப்புக்கள் காரண மாக, 1993ம் ஆண்டிலே குருமடத்தில் இணைந்து 2003ம் ஆண்டுமே 14ம் திகதி குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

முல்லைத்தீவில் உதவிப்பங்குத்தந்தையாக 2004ம் ஆண்டு பணி யாற்றிக் கொண்டிருந்த போது 2004 டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட சுனாமிப் பேரவலத்தில் தனது உடமைகள் அனைத்தையும் இழந்தார். அவர் பணி யாற்றிய பேதுருவானவர் ஆலயம் உட்பட அவரது அறைவீடும் சுனாமி அனர்த்தத்தில் அழிக்கப்பட்டுவிட்டது. அருட்தந்தை சறாவும், அருட்

தந்தை ஜேம்ஸ் பத்திநாதனும் புனித சூசையப் பர் சுருபம் இருந்த இடத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்துக்கொண்டு இருந்ததால் பலமக்களு டன் இவர்களும் காப்பாற்றப்பட்டார்கள். அருட் தந்தை சறா, அங்கிருந்த ஒரு சில குருக்களோடு இணைந்து இறந்தவர்களை ஆசீர்வதித்து அடக்கம் செய்வதிலும் ஏனைய மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதிலும் மும்முர மாக ஈடுபட்டிருந்தார். சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மாமூலை என்னும் இடத்தில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்திலுள்ள மண்ட பத்தில் பல வசதிக்குறைவுகளுடனும் தங்கியி ருந்து அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பணியாற்றினார். பெப்ரவரி மாதம் 2004ம் ஆண்டு மாமூலைக்குச் சென்று அவரைப் பார்த்தபோது, அவரின் பணியை என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது. 75 அடி ஆழமான கிணற்றிலிருந்தே அவருக்கும், அங்கு வந்து தங்கிநின்று மக்க ளுக்குப் பணியாற்றிய அருட்சகோதரர்களுக்கும், சமையலுக்கும் தேவையான நீரை விடியற்காலை யில் எழும்பி தானே தொட்டியை நிரப்புவார். தன்ன லமற்று பிறரின் தேவைகளை உணர்ந்து, அதைச் செய்யும் மனப்பக்குவம் சறாவிடம் நிறையவே இருந்தது. எதையும் அன்போடுதான் செய்வார். எந்தக் கடினமான பணியென்றாலும் அதனை மனமுவந்து நிறைவேற்றுவார்.

கடைசி யுத்தகாலத்தில் இடம் பெயர்ந்து முள்ளிவாய்க்காலில் இருந்தபோது உணவிற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. மக்களோடு மக்களாக கியூவில் நின்று தன்னுடன் இருந்த வர்களுக்காக உணவை அவர் பெற்றுக்கொண் டதாக அதனை நேரில் பார்த்த பெண் என்னிடம் தெரிவித்திருந்தார். பங்கரில் வாழ்ந்த நாட்களில் எல்லோரையும் உறங்கவிட்டு தான் மட்டும் நித் திரை கொள்ளாமல் விழித்திருந்ததாக அவரு டன் இருந்த சிறுவன் ஒருவன் என்னிடம் சொன் னார். சறா பாதரினால் தான் தாங்கள் உணவு உண்டதாக அவருடன் இருந்தபலர் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். வெளியில் உணவு வாங்குவதற்காக செல்லும் முன் "மன்றாடுங்கள் உணவு கிடைக்க வேண்டும்" என்று அங்குள்ள பிள்ளைகளிடம் சொல்லிவிட்டுச் சென்று, உண வுப்பொருட்களுடன் சறா திரும்பிவருவார். பலத்த செல்வீச்சுகளுக்கு மத்தியிலேயே அவர் உணவு தேடச் செல்ல வேண்டிய நிலையிருந்தது. எல் லோரும் உணவு உண்டுவிட்டார்கள் என்று உறுதி செய்த பின்னரே, பாதர் சறா மிகுதியாக ஏதாவது இருந்தால் தான் உண்ணுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

சிலதடவைகள் தான் நான் அவருடன் உரை யாட அரியசந்தர்ப்பங்கள்கிடைத்தன. அழைப்பைப் பெறுவதும் மிகவும் கடினமான செயலாகத் தான் இருந்தது. கடவுள் அருளால் நாங்கள் மிக வும் குறுகிய நேரமாவது தொடர்புகொள்ள முடிந்தது. ஒரு முறை அவருடன் கதைத்த போது, "அக்கா என்னை வரச் சொல்லி பிஷப்பிடம் (ஆயரிடம்) கேட்டாயா?" என்று கேட்டார். நான் சொன்னேன் "இல்லை சறா, நான் கேட்கவில்லை" என்று. அவர் அதற்குச் சொன்னார் "அக்கா நான் மக்கள் வரும் போது மக்களுடன் தான் வருவேன். பிஷப்பிடம் எதுவும் கேட்க வேண் டாம்". நான் சொன்னேன் "சறா உன்னுடைய விருப்பம் தான் என்னுடைய விருப்பம்". எப் போது கேட்டாலும் அங்குள்ள ஆபத்தான நிலைகளை சொல்லமாட்டார். தான் சுகமாக இருப்பதாகத் தான் சொல்லுவார். சறா மிகவும் உறுதியாக இருந்தார்... மக்களுடனேயே தான் வெளியில் வருவேன் என்று, மக்களை விட்டு வருவதற்கு சறா ஒரு போதும் எண்ணியிருக்க வில்லை.

அவருடன் வந்தவர்களில் ஒருவர் சொல்லிய சம்பவங்கள் இவை. ஒருமுறை இடம்பெயர்ந்து உழவு இயந்திரத்தில் பயணித்துக்கொண்டி ருந்த போது, பாதர் சறா அவர்களிடம் சென்று

அவர்களிடம் இருந்தபெற்றோல் கானை வீசும்படியாகச் சொல்லியிருக்கிறார். சிறிது தூரம் பயணித்ததன் பின்னரும் பாதர் சறா மீண் டும் சென்று பெற்றோல் கானை வீசிவிட்டீர் களா? என்று கேட்டு அதனை தூர வீசச் செய்தி ருக்கிறார். அவர்கள் பயணித்துக் கொண்டி ருக்கும் போதே எறிகணை ஒன்று அதன் மேல் வீழ்ந்து, அது தீப்பிடித்து எரிவதை அவர்கள் பார்த்தார்கள். பாதர் சறாவின் அறிவுரையால் தாங்கள் காப்பாற்றப்பட்டதை அவர் விபரித்தார்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில், பலத்த எறி கணை வீச்சு நடந்து கொண்டிருந்த போது, அவர்களில் ஒரு சில பிள்ளைகள் மதிலின் அரு கில் பதுங்கியிருந்தார்கள். அப்போது மதில் உடைந்து வீழ்ந்துவிட்டது. எறிகணைவீச்சு சிறிது ஓய்ந்ததும், எல்லோரும் கடந்து செல்ல முற்பட்ட போது பாதர் சறாமட்டும் அந்த உடைந் துகிடந்த மதில் கற்களை அகற்ற வேண்டும் என்று பிடிவாதமாகக் கேட்டுக்கொண்டு, அவற்றை அகற்றிய போது, ஒருசில பிள்ளைகள் அந்த இடிபாடுகளுக்கிடையில் இருந்து உயிருடன் காப்பாற்றப்பட்டார்கள்.

இறுதி நாட்களில் பல நாட்களாக உணவோ தண்ணீரோ அவர்களுக்குக் கிடைக்கவில்லை, குறைந்தது கடைசி 3 நாட்கள் சிறிதளவும் கிடைக்கவில்லை. அவர்கள் நடந்து வந்து கொண் டிருந்தபோது, செம்பு ஒன்றில் ஒருவருக்கு சிறிதளவு நீர் கிடைத்தது. அவர் அதிலே குடித் துவிட்டு, களைத்துப்போயிருந்த பாதர் சறா விற்கும் குடிக்ககொடுத்தார். அப்போது சறா கேட்டது "நீ குடித்துவிட்டாயா?". அவர் 'ஓம்' என்று சொன்னதன் பின்னரே பாதர் சறாஅதனைக் குடித்ததாகச் சொன்னார். சறாவிற்கு எப்போதும் மற்றவர்கள் நலனில்தான் அக்கறை அதிகம், தன்னுடைய வருத்த துன்பங்களை, தன்னு டைய தேவைகளை ஒரு போதும் முன்னிலைப் படுத்தியது கிடையாது. சறா ஓர் அபூர்வப்பிறவி.

"எங்களுடைய மக்களுக்கு இனி என்ன நடக்கும்?" என்பதுவே பாதர் சறாவின் மனதில் ஆழமாகப் பதிந் திருந்தது. அதனை அவருடன் இருந்த சகோதர குருக்களிடமும் கேட்டுள்ளார்.

அதனால்தான் என்னவோ பலருடைய உள்ளங் களில் இன்னும் நினைவுபடுத்தப்படுகிறார்.

கடைசி நாள், 18ம் திகதி மே மாதம், அவர் கள் அனைவரும் பங்கரில் இருந்து வெளியே வந்ததன் பின்னர், அங்கு நின்றவர்களின் அனைத்து சோதனைகளையும் முடித்து, தொடர்ந் தும் நடந்து கொண்டிருந்தார்கள். 4 கிலோ மீற்றர் அளவு தூரம் பாதர் சறாவும் ஏனையவர் களும் தகிக்கும் வெயிலிலும், எரியும் வாகனங் கள் கட்டிடங்களின் ஊடாகவும் இறந்த உடல்க ளின் ஊடாகவும் நடந்தார்கள். பாதர் சறா வெறுங் காலுடன் தான் தனது பாரமான பைகளையும் சுமந்து நடந்தார். அவரிடம் ஜே.ஆர்.எஸ் நிறு வனத்தின் அனைத்து கணக்குகளும் முக்கிய மான பொருட்களும் இருந்தன. ஒரு கட்டத்தில் நெஞ்சுவலியால் தடுமாறத் தொடங்கினார். அப்போது அவருடன் நடந்து வந்த இரு இளை ஞர்கள் அவரிடம் இருந்த பைகளை வாங்கிக் கொண்டனர். 12 மணியளவில் தொடர்ந்து நடக்க முடியாமல் இருந்ததால், ஒரு மரத்தடியில் பாதர் சறாவை இருத்திவைத்தார்கள். சுயநினைவற்ற நிலையிலிருந்த பாதர் சறாவை சிறிது நேரத் தின் பின்பே டிறாக்ரர் ஒன்றில் ஏற்றி அவர்கள் சாளம்பன் என்ற இடத்திற்கு அழைத்து செல்ல முடிந்தது. அங்கு ஒழுங்கான மருத்துவ வசதி கள் இருக்கவில்லை. சேலைன் மட்டும் ஏற்ற முடிந்தது. பாதர் சறாவை ஒரு இளைஞன் மடி யில் வைத்திருக்க, 3 சேலைன் ஏற்றிய பின்பு

4வது சேலைனை ஏற்றிக் கொண்டிருந்த போது, பாதர் சறாவின் இரு கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்ததாக அந்த இளைஞன் குறிப்பிட்டார். தான் அதனைத் துடைத்து விட்டதாகவும் சொன்னார். அதன் பின்பு, ஒரு சிறு மூச்சோடு பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் உயிர் அவரை விட்டுப் பிரிந்தது. 'தமிழ் மக்கள் எல்லாவற்றையும் இழந்து விட்டோம்' என்று தன் சுய நினைவற்ற நிலையிலும் கண்ணீர் விட்டாரா என்று எண்ணத் தோன்றுகிறது. **"எங்களுடைய மக்களுக்கு இனி என்ன நடக்கும்?"** என்பதுவே பாதர் சறாவின் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. அதனை அவருடன் இருந்த சகோதர குருக்களிடமும் கேட்டுள்ளார்.

12.06-2014 அன்று அருட்தந்தை ஒருவரைச் சந்தித்தேன், சறாவின் பெயரால் பாதர் சறத் ஜீவன் நிதி உதவித்திட்டத்தை தொடங்கியிருப்பதாகக் குறிப்பிட்டேன். அவர் உடனே சொன்னார். "பாதர் சறா என்றும் வாழ்வான்". தொடர்ந்தும் அவர் கூறினார், பாதர் சறாவின் உடலை தான் பஸ் மூலம் வவுனியாவிற்கு கொண்டு வந்து நீதிவானிடம் கையளித்ததாக. யாழ்ப்பாணம் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் தாங்கள் கொண்டுவந்ததாக சொன்னார். தாங்கள் முகாமில் இருந்த போது பாதர் சறாவின் உடலைத் தகனம் செய்ததைக் கேள்விப்பட்டு தானும் இன்னுமொரு அருட்தந்தையும் மிகவும் அழுததாகக் குறிப்பிட்டார். பத்து நாட்களுக்கு மேல் வவுனியாவிலிருந்து கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள மலர்ச்சாலையில் பாதர் சறாவின் உடல் வைக்கப்பட்டிருந்தது. விமானம் மூலம் கொண்டு வருவதற்கு பல முயற்சிகள் செய்தும், கொண்டு வர முடியவில்லை. பாதர் சறாவின் கல்லறை யாழ்ப்பாணத்தில் இருந்தால் தான் நாங்கள் சென்று தரிசிக்க முடியும் என்ற காரணத்தினால் உடலைக் கொண்டுவர முடியாத நிலையில், தகனம் செய்து அஸ்தியைக் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டது. 26ம் திகதி மே மாதம் 2009ம் ஆண்டு பாதர் சறாவின் உடல் தகனம் செய்யப்பட்டு 28ம் திகதி அஸ்தி விமானம் மூலம் கொண்டுவரப்பட்டது. அருட்சகோதரி ஒருவர் அதைக் கொண்டுவந்தார். ஆயரின் செயலராக அப்போது இருந்த அருட்தந்தை ரொஷான், அருட்தந்தை சறாவின் உடலை வவுனியாவில் பொறுப்பெடுத்ததில் இருந்து தகனம் செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார். பாதர் சறாவின் அஸ்தி 30ம் திகதி மே மாதம் 2009ம் ஆண்டு யாழ் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஒவ்வொரு மாதமும் 18ம் திகதி நான் அங்கு சென்று மெழுகுதிரிகள் கொழுத்தி பாதர் சறாவிடம் மன்றாடுவது எனது வாழ்வில் ஒன்றாகிவிட்டது. சறா என்அன்புத் தம்பி என்னுடன் இருப்பதாகவே நான் உணர்கின்றேன். அருட்தந்தை ஒருவர் சொன்னது போல பாதர் சறா என்றுமே வாழ்வான்.

நித்திலா மரியாம்பிள்ளை

Rev. Fr. Sarathjeevan - a Remembrance

The concern of late Rev. Fr. Sara was on the whole of the people. He cared deeply about them, their wellbeing and their future. His question to his fellow priests, who were with him in the bunker, was always: "**What will happen to our people now?**"

On the last day of the war, when Fr. Sara and 80 others came out of their bunkers to go home, they had to walk through endless piles of dead bodies and several vehicles that had caught fire. Someone accompanying Fr.Sara said that he would not stop repeating the words: "I cannot bear this, I cannot bear this". "இதைஎன்னாலதாங்க இயலாமல் இருக்கு". He was much affected by the scene around him, and he was tired from not having any meals or water for several days. One person claimed that they had not had food or water for the past 3 days. Many people came out alive before the 17th of May 2009, but Fr. Sara and the 80 people with him were the only ones who came out alive on the 18th day of May.

Sara walked on his bare feet under the hot sun, as it was impossible to walk with slippers in the sandy areas. I still have his slippers in the bag he carried them in. Walking for 4 km under the burning sun after not having eaten for three days is indeed an impossible task; Fr. Sara's exhausted body ended up fainting.

Sara was born in Bohawanthalawa on May the 13th, 1968; on the feast of Our Lady of Fatima. He was named Thaddeus Sarathjeevan, but was nicknamed "Sara". He was a chubby and

cheerful baby. He was very active; from a young age he enjoyed climbing trees, especially coconut trees. He was the only person in our family who knew how to do this. My mother used to tell us about how Sara was affected by diphtheria as a baby, but was saved by God and 18 injections. God knew Sara was not ready to die yet, not during his infancy. He knew Sara would accomplish great things later in life, and that his life would be given for others- for the people he loved so dearly.

There were many such occasions where Sara's life was spared by God. One of them was during the tsunami tidal waves in 2004, on December 26th, when he was miraculously saved from the roaring waves which hit Mullaithivu. His parish house and Church were completely washed away. It was God's will to keep him on earth until the last day of the war in Mullivaikal, the 18th of May 2009. Then God called him for eternal rest.

A memorial statue was built at Fatima's Church, Uruthirapuram, in remembrance of Fr. Sarathjeevan and the other people who died with him in the war. This was inaugurated on the first year anniversary after his death, the 18th of May 2010, with the effort of the priests who had known him.

Fr. Sara was a clever man and was always persistent in trying to help others whenever he could.

Someone from Uruthirapuram, who was displaced alongside Fr. Sara, narrated the following event: as they were moving from one place to another, Fr. Sara came and told them to throw away the petrol-filled container they were carrying with them in a tractor. When Fr. Sara noticed they had forgotten to do this, he ran up to them and told them to get rid of it immediately. The very second they threw it away, they saw a bomb shell hit the container, blast it, and erupt a huge fire. Luckily, nobody got hurt, because they had followed Fr. Sara's wise instruction and thrown the petrol away. They thanked Fr. Sara for his advice; it had saved their lives

On a different occasion, shells were falling all over Mullivaika. One of the shells hit a wall and made it collapse. Everyone was trying to move away, but Fr. Sara insisted on clearing the fallen wall. Once they cleared the debris of the wall, they found several children who were caught underneath it. The children were rescued and they survived.

Many of the people I have met who were with Fr. Sara told me that it was due to him that they could eat. They told me Fr. Sara would request them to pray while he went out to find food for the children, the priests and the other people who were with them. Every single time he came back with food. He would stand in the long queue and wait patiently in order to bring food back to the hungry people. Meals were scarce and the price was high, but through prayer and his trust in the Lord, Fr. Sara would always manage to bring something back. The priest in charge of the Jesuit Refugee Services (JRS) also sent him money so he could help the people who were with him. Fr. Sara loved the people of Vanni very much; he treasured them in his heart.

Once, while talking to me on the phone, he asked: "Acca, did you ask the Bishop to request me to come out?". I told him I had not. He then said :"Acca, do not ask for any favor. I will come out with the people. Until then, I will be with them". That was his very firm reply. I said to him, "Your wish is my wish". "உன்னுடைய விருப்பம் தான் என் விருப்பமும்". He was satisfied. I could not insist that he should come out, leaving the

people behind. I felt very sad, on one hand, that he did not come out, but on the other hand, I admired his courage to stay in Vanni amidst heavy shelling, bombings and shootings for the sake of his people. God gave him strength and wisdom to make that decision.

Fr. Sara died on Monday the 18th of May 2009 at about 3.00 p.m. I visit his tomb on the 18th of each month and light two candles for him. I think of him and pray for him every day and every minute. I still preserve his clothe-rack in the almyrah with his clothes. I've also kept his travelling bag and his shoulder bag with its content, which he carried until the last day. They were brought to me by the children whom he loved.

The priest in charge of the JRS at the time met me during the funeral days of Fr. Sara and told me that Fr. Sara carried all of the JRS account books. The priest had received them all safely. It was a big traveling bag. He wondered how Sara carried all of the heavy books with him. Fr. Sara was a very sincere person. He was determined in writing the accounts every day.

Once, when I was at the Church of Our lady of Fatima, Uruthirapuram, Sara was doing all the accounts for the JRS till the early morning. He travelled to Vavuniya for a meeting which would take place on the same day, early morning. I was worried about his health because he had not slept that night, since he was so concerned about his duties. We could not give him enough money from home. He managed his expenses from the salary paid by the JRS (he was serving as a JRS coordinator) and with the monthly payment he got for being a diocesan priest.

One day, while I was at Uruthirapuram counting the small amount of money from the collections at mass, I asked Sara how the money would be spent. "Acca, this is what the priests live off." My heart was filled with sadness, because I wished, and still wish I could give my brother more money to support him, but I did not have enough to do so.

Fr. Sara cried at the JRS meeting which was held in December 2008 at Trincomalee. He had requested the priest in-charge of JRS to "Pray for me and for my people". While he said this, his eyes were filled with tears.

When Fr. Sara was at Uruthirapuram, I used to visit him during weekends and spend time with him. During the Church feast, I went there twice and stayed there. That was one of the very few occasions where I got the chance to spend several days with him. He was the Parish Priest of the church of Our Lady of Fatima, Uruthirapuram from 2005 to 2006. In August 2006, the A-9 road was closed and I could no longer travel to see him. Fr. Sara came home in 2007 by ship, and in March 2008 by plane, because we told him that we would pay for the cost of his plane ticket. He came to baptize Merryjan, our brother Sakthi's 3rd son. This was the last time I saw him. I had no idea at that time that I would never see him again. I kissed him and said good bye to him when he was about to leave in the early morning to the place where all passengers going to the airport gather (Sinhala Maha Vid. Ground).

Fr. Sarathjeevan was working in the Mullaithivu Parish as an Assistant Parish Priest when the tsunami tidal waves hit Mullaithivuin on December 26th, 2004. We did not hear anything from him or about him for 3 days. Later, we heard that he had lost all of his belongings in the tsunami and escaped while saying Holy Mass near St.Joseph's statue near the road side, only a short distance from the seashore. He lost all of his belongings, including his ordination photo albums. The only thing he had left was his cassock, which he was wearing. After the tsunami, Sara gave a helping hand by rescuing dead bodies, blessing them and burying them in mass graves with the other priests and people of that area.

I went to Mamulai and met him in January 2005 after the tsunami. They were living in a hall built next to St. Antony's Church, Mamulai. He was busy all the time helping the Internally Displaced People living in the schools and at the welfare centers. I spent 10 days with him and returned. Sara was a very kind person at heart. I am sure I will never any other person like Sara. He lived his life for others.

Early in 2005, he was appointed as the Parish priest of Uruthirapuram parish, and was displaced 18 times from October that year until his death in 2009. When the people were displaced from the parish, he was the last person to leave. He was concerned about his parishioners. Hence, he waited until the last family had left the place.

I met a lot of people who narrated their accounts with Fr. Sara and who told me about his work for the people. They said he would always be the last person to eat, because he wanted to make sure that everybody got food. He would only eat the leftovers. There was always a shortage of food during their life in the bunker. Others told me that he would stay awake while everyone was sleeping in the bunker, so he could alert them in case something happened.

A priest who was working with Sara at Valaignarmadam and who shared a tent with him told me that Sara would be the last one to go to sleep, to prevent his snoring from waking others. He always cared about other's wellbeing, this was far more important to him than his own comfort.

Another priest who was friendly with my brother told me the following: "I will let everyone know that there is no priest like Fr. Sara. "பாதர் சறா உன்னதமான, உத்தமமான ஒரு குரு. அவரிடம் சுயநலம் என்ற ஒன்றே இல்லை. மக்களுக்காகவே வாழ்ந்து, இறந்தார்" என்று சொன்னார்" . This priest was close to my brother; he was by his side until his last breath.

He told me that after finishing all of the checks on the last day, May the 18th 2009, Sara had trouble walking. There was still a long way to go, so the priest got some water from the SL army and brought it to Fr. Sara. Because the priest knew Sara would always put others before him, he asked "Did you drink the water?" to make sure he had not given it to someone else. "Yes", Fr. Sara replied. Later on, Fr. Sara felt a great pain in his chest, so he had to sit down under a tree. As he lost consciousness, two of his 'children' helped him on to a tractor to take him to the makeshift hospital at Irrataivaikal. Three bottles of saline were given to him. When the 4th bottle of saline was injected, they saw tears falling from his eyes. His friend, the priest who told me this, wiped Fr Sara's tears as he breathed his last breath.

I still don't know why Fr. Sara cried that day. During his life, we never saw Sara crying, apart from two times; during his last

breath, and at the JRS meeting in 2008. May be he cried during his last breath because he felt the defeat of the Tamil people in the last war at Vanni. Maybe he cried because he thought the Tamils had lost everything. But it was certainly not because he was afraid of dying; Sara did not fear death, not even at a young age.

Fr. Sara cried at the JRS meeting which was held in December 2008 at Trincomalee. He had requested the priest in-charge of JRS to "Pray for me and for my people". While he said this, his eyes were filled with tears.

Father Sara was always firm in his wish to help others; even from an early age. One day, a young Sara, who was a seminarian at the time, and another boy were going out to buy fish for the 90 people living with them. 'Certain people' approached them and wanted to take the boy. "You have to join us", (எங்களோடு இணைந்து கொள்ள வேண்டும்"), they demanded. Fr. Sara held the boy's hand very firmly, and said that he could not allow that. They refused to listen to him, and said they would go speak to their boss. When they came back and insisted again, Sara, still holding the boy's hand, said that this boy belonged to the community. But they continued insisting and being unpleasant to them. Fr. Sara further said that priests are here for others, and that if the priests left, there would be no one to care for the people. (They did not feel that the international community was caring about their suffering). "If you take him, I would sit here and not move until you release him." (சறா சொன்னாராம் "நான் இதிலேயே சப்பாணி கொட்டிக் கொண்டு இருப்பேன், நீங்கள் அவரை விடுவிக்கும் வரைக்கும்".) The boss could not do anything when confronted with Fr. Sara's firmness. Thus, he allowed them to go.(ஓகே பாதர் நீங்கள் கூட்டிக் கொண்டு போங்கள்").

If I were to say one thing about Fr Sara's life, it would be the fact that God was truly with him, especially in the times of ruthless war, in the bombings, shelling and shootings and all types of hardship, in his bunker life. God the Father's real presence must have been with Fr .Sara. Otherwise, he would not have had this much courage to bear all of the sufferings he underwent.

Nithila Mariampillai
(Fr Sara's sister)

அமரர் அருட்பணி சறத்ஜீவன் அடிகள்
நினைவகலா நினைவுடன் 8 ஆண்டுகள்

“வளரும் பயிரை முளையிலே தெரியும்” என்ற பழமொழியை, நற்செய்தியில் குறிப்பிடும் நல்ல நிலத்தில் வீழ்ந்த விதை நற்பயனைத் தரும் என்ற பொருள் பொதிந்த வார்த்தைகளை அமரர் அருட்பணி சறத்ஜீவன் அடிகளாரின் வாழ்க்கையில் வாழ்வாகக் காண முடிந்தது.

அமரர் அருட்பணி சறத்ஜீவன் அயலில் வாழ்ந்த போது அவர்களின் குடும்பத்தின் ஆன்மீகப் பற்றுறுதி மிக்க வாழ்க்கை செப, தப, தான வழிகாட்டலில் முன்மாதிரிகையை சிறுவயதிலிருந்தே கண்டுணர முடிந்தது.

துடிப்புமிக்க இளமைப் பருவத்தை ஆலயப்பணிகளில் பீடப்பணியாளராய், பாடகர் குழாம் இசைமீட்டு இன்பம் கண்ட பொழுதுகளில் தாழ்ச்சியின் மாதிரியாக” இறை இன்பத்தை சுவைக்கும் இளைஞனாக” வளர, குடும்பத்திலும் அயலவரினுடனிருப்பிலும், ஆன்மீக வழிகாட்டிகளின் அன்பு உறவாடலிலும் அர்ப்பணவாழ்வுக்கு ஆயத்தமானதைக் காணமுடிந்தது.

பெற்றோரின் அறிவாற்றலுடன், ஆன்மீகப் பற்றுறுதியிலும், அயலவர்களுடனான நன்மைதீமைகளில் கலந்து வாழும் நட்புறவும் மதிப்புமிக்க ஆசிரிய குடும்பமாகவும் மதிக்கப்பட வாழ்க்கை முறை பிள்ளைகளிலும் பற்றிக்கொண்டதைக் கற்று வளர்ந்த சறத்ஜீவன் தனது குருத்துவ அர்ப்பண வாழ்வின் புனிதம் காப்பதில் பணிகளால் முன்மாதிரியாக

வாழ்ந்ததை அவரது பணித்தளங்களில் கண்டு உணர வைத்து வழிகாட்டியாக வாழ்ந்தார் என்பதற்கு அவரால் உருவாக்கப்பட்ட இளையோர், பெற்றோர்கள், பங்குமக்கள் குழுமங்களே சாட்சி பகர்வது சான்றாகும்.

நவீன கால பகட்டான வாழ்வுக்கு அடிமையாகாது, தன் உடல் நலத்தைவிட தன் பணியில் முழுமன அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தியது மட்டுமல்லாது, தன்னோடு பணியாற்றுவோரிலும் கரிசனைகொண்ட வாழ்வால் இறைபக்தியிலும் உண்மை நீதிக்காக அர்ப்பணிப்போராகவும் உருவாக்குவதில் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியதால் பலர் மனங்களில் நினைவில் நிலைத்து வாழ்ந்து, துறவறம் என்பது இக்கால கட்டத்தில் சுலபமானது அல்ல என்பதனைச் சிந்திக்க, சமூகம் பல விமர்சனங்களை முன் வைக்கவும் , முனையும் வேளை அதன் வாழ்வுக்கு உரிய சவால்கள், வரையறைகள், எதிர் பார்ப்புக்கள் மக்களிடத்தில் பலதாக இருந்த போதிலும் இவற்றைக் காத்து வழிநடத்தும் தற்துணிவுள்ளோரே தமது துறவுக்கு சாட்சியமாக வாழ்வதற்கு தகுதியானவர்கள் என்பதற்கு சறத் ஜீவன் அடிகள் ஓர் எடுத்துக்காட்டாகும். தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் சக்தியை ஆன்மீக வலுவூட்டலில் பெறுகிறார். இதனை எதிர் கொள்ள முடியாது தவிப்போருக்கு அமரர் அருட்பணி சறத்ஜீவனின் வாழ்க்கை ஓர் முன்மாதிரியானது.

அமரர் அருட்பணி சறத்ஜீவனுடன் பழகிய பொழுதுகள் இன்னும் பசுமையான நினைவகலா நினைவாகவே உள்ளது. அவரது தொடர் பாடல், அணுகுமுறை, பிறரது தேவைகளை நிறைவேற்ற முன்னெடுக்கும் பணிவான முயற்சிகள் எதையும் தவிர்க்க முடியாத அளவு அன்புக் கரிசனைகள் மட்டில் மீளக் கொண்டு செயற்படவைக்கும் ஆற்றல் கொண்டவை. நெருக்கடியான பல விடயங்களை மிக இலகுவாக அவர் கையாளும் மென்மையான உரையாடல் பணியை இலகுவாக்க எமக்குக் கற்றுத்தரும்.

அவரது இறுதித் தருணங்களில் கூடிவாழ்ந்தோரின் அனுபவப் பகிர்வுகளைக் கேட்ட போதெல்லாம் தன்னைவிடப் பிறரது பாதுகாப்புக்கும், உணவுத் தேடலுக்குமாகவும் இழப்புக்கள் துயரின் மத்தியிலும் மிகவும் அக்கறையுடன் ஆறுதலாய் தன்னலம் பாராத சேவையால் துன்பத்தை சுமக்க, ஆன்மீகத் தேடலால் மக்களைத் திடப்படுத்தும் அரிய பணிகளில் ஈடுபாட்டுடன் பயணித்த பொழுதுகளில் தான் அவரது இறுதிப்பயணம் தன்னையே பலியாக்கி அர்ப்பணவாழ்வுக்கு அர்த்தமாக வாழ்ந்து வரலாறானார் என்பது நினைவகலா நினைவாகத் தொடர்கிறது.

பிறப்பிற்கான வாழ்வின் அர்த்தங்கள் வாழ்ந்தபின் பலர் மனங்களில் நினைவில் வாழும் பணிகளே சாட்சி சொல்லும் அடையாளமாகும். இதுவே இன்று நினைவில் நிற்கும். அருட்பணி சறத்ஜீவன் அடிகளாரின் வாழ்வு பலர் வாழ்வில் நீங்காத நினைவில் நிலைத்துள்ளது. இவை எமக்கோர் அனுபவப் பாடமாகவே அமைந்துள்ளது.

செ. யோசேப்பாலா
உளசமூகச் சீராளன்
10/2 தியோகு பாதை
மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்

மனிதருள் மாணிக்கம்

அருட் தந்தை சறத் ஜீவன் அறக்கொடை நிதியத்தின் செயலாளர், சகோதரி நித்திலா மரியாம்பிள்ளை அவர்கள், தனது சகோதரன் அருட்தந்தை மரியாம்பிள்ளை ததேயுஸ் சறத்ஜீவன் நினைவாக ஆரம்பித்துள்ள அறக்கொடை நிதியத்தின் எட்டாவது அகவைகள் நிறைவுக்காக வெளியிடும் மலருக்கு, என்னுடைய ஆக்கத்தையும் தருமாறு கேட்டபோது, நான் எனது தகுதியற்ற நிலையை உணர்ந்தேன். எனது வாழ்வில் அருட் தந்தை ததேயுஸ் சறத்ஜீவன் அடிகளாரை நான் என்றுமே நேரில் சந்தித்தோ, அல்லது தொலைபேசியிலோ தொடர்பு எதுவுமே அற்ற நிலையில் எதனைப் பதிவு செய்ய முடியும்?. எனினும், சறத்ஜீவன் அடிகளாரைக் குறித்து சிறிது காலமென்றாலும் தெரிந் திருக்கும், மொன்றியல் மீட்பின் அன்னை மறைத்தள முன்னாள் பங்குத் தந்தை அருட்தந்தை யூட் அமலதாஸ் அடிகளார், மற்றும் இரணைப் பாலை புனித பாத்திமா முன்பள்ளி ஆசிரியை, செல்வி பரிமளா செலஸ் தீன் ஆகியோருடனான உரையாடலின் தொகுப்பினை இதன் கீழ் எனது பதிவாக பணிவோடு சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

ஒவ்வொரு ஜீவராசியினதும் சுதந்திரம் எனப்படும் உயிர் மூச்சு அடக்கப்பட்டு, ஒடுக்கப் பட்டு, உரிமைகள் பறிபோகும்போது அவர்கள் பொங்கி எழுவது இயற்கை. மக்கள் தமது உரிமைகளை மீண்டும் பெறுவதற்காக பல்வேறு போராட்டங்களில் வெற்றி கண்டாலும், இன்றும் பலர் போராடிக்கொண்டே இருக்கின்றார்கள். இவ்வாறு அடிமைத்தனத் தில் ஒடுங்கி வாழ்ந்த மக்கள் தாம் விடுதலை பெற இறைவேண்டலுடன் இணைந்த பக்தி முயற்சிகளில் ஈடுபட்டு, தம்மையே அர்ப்பணித்து

உடல், பொருள், ஆவியைத் தியாகம் செய்யும் போது இறைவனின் துணையும், உதவியும் கிடைத்ததை எவரும் மறுக்க முடியாது.

எமது தாயகத்தில் 2009 மே மாதத்தில் இடம் பெற்ற இறுதி யுத்த காலத்தில் போராளிகளும், அரச படையினரும் தமது தனிப்பட்ட நோக்கம், குறிக்கோள் என்பவற்றை ஒரு புறம் ஒதுக்கி, சக மனித உயிர்களைக் காப்பாற்ற மனிதாபிமான உணர்வோடு செயற்பட்டிருப்பின், எத்தனையோ அப்பாவி உயிர்கள் அநியாயமாகவும், அவல மாகவும் இறப்பதிலிருந்து தடுத்திருக்கலாம் என்பது எனது பணிவான அபிப்பிராயம். எனி னும், இறுதி யுத்த காலத்தில் அத்தகைய உண ர்வு படைத்தவர்களில், தனது மந்தையின் குரலை நன்கறிந்த நல்ல ஆயனாக, தனது அரிய இனிய உயிரையே இழந்தவராக, எனது வாழ்வில் நான் என்றுமே சந்தித்திராத யாழ் மறை மாவட்ட அருட்தந்தை சறத்ஜீவன் மரியாம்பிள்ளை அடிகளாரை இனங்கண்டு கொண்டேன்.

2009 மே 18ம் நாளில் பொழுது கரையும் நேரம், கந்தகப் புகையுடனான நெருப்பும் படிப் படியாக மறைந்து, மனித அலறல்களும், ஒப் பாரிகளும் மூச்சடங்கி, ஆங்காங்கே ஓரிரண்டு வெடி ஓசைகளின் மத்தியில், "கஞ்சிக் கொட்டில் கள்தான் எமக்குத் தஞ்சம், பட்டினிச் சாவின் விளிம்பில் நிற்கிறோம்" என முள்ளிவாய்க் காலிருந்து அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளாரது குரல் கேட்டதாக கடந்த 2009 - 05 - 10ம் திகதிய பாதுகாவலன் பத்திரிகையில் வெளிவந்த முன்பக்கச் செய்தி கல்வாரியில் சிலுவையில் தொங்கிய நமதாண்டவர் இயேசு வின் "தாகமாயிருக்கிறேன்" என்று ஒலித்தது போன்று எனது மனச்சாட்சியை உலுக்கியது.

திருப்பாடல் 137ஐப் படிக்கும் எவரும், பாபி லோனில் அடிமைப்படுத்தப்பட்டு துயருற்ற மக் கள் சிந்திய கண்ணீரையும், கதறிப் புலம்பிய தையும் உணர்ந்து கசிந்துருகுவார்கள் என்பது பலரது கருத்தாகும். இறுதி யுத்த நாட்களில், "யார் இந்த அருட்தந்தை சறத்ஜீவன் அடிக ளார்?" என்றறியும் ஆவலுடன், மொன்றியல் மீட்பின் அன்னை மறைத்தளத்தில் பணியாற் றிய அருட்தந்தை யூட் அமலதாஸ் செபஸ் தியாம்பிள்ளை அடிகளாரிடம் விபரமறிந்தேன். எமது தாயக மண்ணின் விடுதலை வேள்வியின் மத்தியிலும், தமது குருத்துவ மேய்ப்புப்பணி ஆர்வத்தால், தம்மையே ஆகுதியாக்கிய அருட் பணியாளர்கள் வரிசையில், இறுதிப்போரின் இறுதி வரை மக்களோடு மக்களாக வாழ்ந்து நோயாளியாகி, சறத்ஜீவன் அடிகளார் உயிர் துறந்ததாக அறிந்து வேதனை அடைந்தேன்.

தமது பிள்ளைச் செல்வங்களை அறிவு, ஆற் றல், இறை நம்பிக்கை மற்றும் மொழி, கலா சாரப் பண்பாடுகளின் விழுமியங்களோடு வளர்ப்பதில் பெற்றோரது பங்களிப்பு முதன் மையானது. சறத்ஜீவன் என்ற குழந்தை, தனது ஆரம்ப உடல், உள வளர்ச்சியினை தாயார் திருமதி கசில்டா மங்களநாயகி அம்மையாரி டமிருந்து பெற்றிருப்பது, முதிர்வயதிலும் அம்மையாரது அசையாத, ஆழமான விசுவாச உணர்விலிருந்து காணமுடியும். அவ்வாறான ஆரம்ப வளர்ச்சியை, சிறுவன் ததேயுஸ் சறத் ஜீவன், தனது தகப்பனார் ஆசிரியர் திரு, மனு வல் மரியாம்பிள்ளை அவர்களிடமிருந்து பெற்றி ருப்பார் என்பது எனது அசையாத நம்பிக்கையா கும். இதனால், ஆசிரியப் பெருந்தகை திரு. மரியாம்பிள்ளை மங்களநாயகி தம்பதியினர் இறை வழிநடத்துதலோடு தமது பிள்ளைச் செல்வங்களை வளர்த்தெடுத்துள்ளனர் என்பது கண்கூடு.

இறைவனே கதியென நம்பியிருந்த திரு. மரியாம்பிள்ளை மங்களநாயகி தம்பதியினர் குடும்பத்திலிருந்து 5 பிள்ளைகளில் மூத்த சகோதரி மரினா திருச்சிலுவைக் கன்னியர் சபையில் அருட்சகோதரியாகத் தனது வாழ்வை இறைபணியில் அர்ப்பணித்துள்ளார். இளை ஞன் சறத்ஜீவனும் 2003 மே 14ல் இறை திருவு ளத்தால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். எனினும், அன்றைய இறைவாக்கினர் ஏசேக்கி யேல் காலத்தில் நிகழ்ந்தவாறு, அருட்தந்தை

சறத்ஜீவன் அடிகளார் பணியாற்றிய உருத்தி ரபுர ஆலயம் பாதிக்கப்பட்டு, அழிவுகளின் மத்தியில் அகதிகளான மக்களோடு அகதியா கப் பங்கர்களுக்குள் வாழ்ந்த அடிகளார் நெஞ் சுரத்தோடு, தலை நிமிர்ந்து நின்று இறைபணி ஆற்றியுள்ளார். தனது பங்கையும், ஆலயத்தை யும் இழந்தாலும் அவரிடமிருந்த இறை விசுவா சத்தையும், அன்னை மரியா மீதான நம்பிக்கை யையும் எந்த நிலையிலும் இழக்கவில்லை. கொடிய பயங்கரத்தின் மத்தியிலும் நாளாந்த திருப்பலி ஒப்புக்கொடுத்து, மக்களை பங்கருக் குள் ஒன்றுசேர்த்து செபமாலை செபிப்பதிலும் ஈடுபட்டதனை, இறுதி நாட்களில் முள்ளிவாய்க் காலில் பங்கருக்குள் உடனிருந்த இரணைப் பாலை புனித பாத்திமா முன்பள்ளி ஆசிரியை செல்வி பரிமளா செலஸ்டீன் மூலமாக அறிந் தேன். இவ்வாறான இறை ஊழியரை நேரில் சந் திக்க முடியவில்லையே எனப்பெரிதும் கவலைப் படுகிறேன். இறுதி யுத்தம் முடிவடைந்து தாய கம் வந்தபோது, அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளாரது அன்புத் தாயார், மற்றும் சகோதரி நித்திலா ஆகியோரை இரு தடவைகள் சந் திக்க, எனது மனைவி மேரி சகிதம் என்னையும், அழைத்துச்சென்ற அருட்தந்தை செ.அன்புராசா (அ.ம.தி.) அவர்களது அன்புப் பணியையும் இவ் வேளையில் நன்றியோடு பதிவுசெய்ய விழை கின்றேன்.

இன்றைய நுகர்ச்சிக் கலாசார உலகில், ஒரு சிலரது சுயநலமே பலரது இன்னல்களுக்கு கார ணமாகின்றது. எனினும், தனது தொடர்ச்சியான இரத்ததான அறச்செயலால் இலங்கை செஞ் சிலுவைச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரா யுள்ள, அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளாரின் இரத்தத்தோடு மனித நேயத்தைத் தவிர சுயந லம் கலந்திருக்கவில்லை. கொல்லும் குண்டு களுக்கு மத்தியில் பல்வேறு சவால்கள், போராட்டங்களோடு இறை ஆன்மீகத்தை வளர்ப்பதில் அல்லும் பகலும் அரும்பாடுபட் டுள்ளார். போரின் இறுதி நாள் வரை மக்களோடு மக்களாக, பங்கரிலும், வெய்யிலின் அகோரத் தின் களைப்பிலும், பசியிலும், கவலையிலும், நோயாளியாகி இந்தக் கொடுமைகளை என் னால் தாங்க முடியாதென சறத்ஜீவன் அடிக ளார் உயிர்துறந்தது "பிதாவே எனது ஆவியை உமது கரங்களில் ஒப்படைக்கிறேன்" என்ற நமதாண்டவர் இயேசுவின் கல்வாரிக் குரலாக எனது காதுகளில் ஒலிப்பது போன்று உருவகப் படுத்தி மிகவும் வேதனையடைந்தேன்.

சமூக வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உல கெங்கிலும் தமது இனிய, அரிய உயிர்களை அர்ப்பணித்தவர்கள் வரிசையில் அருட்தந்தை சறத் ஜீவன் அடிகளாரும் போற்றப்பட, சறத் ஜீவன் அறக்கொடை நிதியத்தால் முன்னெடுக் கப்படும் அன்புப்பணிகள், நல்ல உள்ளங்கள் பலரது ஆதரவுடன் மேலும் முன்னேற்றமடைய ஆசிக்கின்றேன். எல்லாம் வல்ல இறைவன் வானக வீட்டில், அருட்தந்தை சறத் ஜீவன் அடிகளாரது ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியை வழங் கியருள வேண்டுதல் செய்பவர்களோடு, பூவோடு சேர்ந்த நாராக எனது மனைவி, மற்றும் பிள்ளை களோடு நானும் இணைந்து, நமதாண்டவர் இயேசுவிடம், அன்னை மரியாள் வழியாக வேண் டுதல் செய்கின்றோம். வளர்க அருட்தந்தை சரத்ஜீவன் நிதியத்தின் அறப்பணிகள்.

இயேசுவுக்கே புகழ்!!! ... மரியே வாழ்க!!!

கனடா, மொன்றியலிலிருந்து
சூசைமுத்து அல்பிரட் ஞானராஜா

அருட்பணி சறாவின் கடைசி நாட்களின் நினைவுகள்

தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு இல்லை என்ற இயேசுவின் இறைவார்த்தைக்கு அமைய தன் வாழ்வை தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்து இறுதிவரை பணிசெய்து தன் உயிரை இறைவனிடம் கையளித்தார்.

நான் இளைஞனாக வாழ்ந்த காலப்பகுதியில் முல்லைத்தீவு பங்கில் உதவிபங்குத் தந்தையாக பாதர் சறா வந்திருந்தார். நான் சறா பாதரை இளைஞனாக முதன் முதலாக சந்தித்தவேளை தொடக்கம் அவர் இறுதி யாக மரணித்த வரை என்னோடு ஒரு சகோதரனாக, நண்பனாக, ஆலோசகராக, வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். எம் பங்கு மக்களில் சிறியவர் தொடக்கம் பெரியவர் வரை மிகுந்த பாசமும் அன்பும் கொண்டவராக நல்ல சிறந்த வழிகாட்டும் ஆயனாக இருந்தார். 2004 சுனாமியில் எம் முல்லை மக்கள் உறவுகளையும், உடமைகள் அனைத்தையும் இழந்து நின்ற வேளையில் அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதருடன் இணைந்து எம் மக்களிற்கு நம்பிக்கை ஊட்டி இறை விசுவாசத்தில் எம்மை வழி நடத்தியவர் அருட்பணி சறா.

யுத்த இறுதிநாட்களில்..

முல்லைத்தீவுப் பங்கில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற அருட் தந்தையை மீண்டும் வலையன் மடத்தில் சந்தித்தேன். நாலுபக்கமும் யுத்தம் சூழ இறுதியாய் வன்னியில் இருந்த எல்லா மக்களும் அருட்

தந்தையர்கள், அருட்சகோதரிகள், தாய், தந்தையை இழந்த பிள்ளைகள், பொதுமக்கள் என வலைஞர்மட ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தோம். அங்கே இருந்தவர்களின் உணவிற்கு மீன் வாங்க பையோடு அருட்பணி சறா செல்வார். அவர் என்னையும் கூட்டிக்கொண்டு செல்லும் போது மக்கள் படும் அவலங்களைக் கண்டு மிகுந்த வேதனையோடு 'பாவம் சனங்கள்' என அடிக்கடி கூறுவார். பின்பு திடீரென இராணுவத்தினர் கிட்ட நெருங்க முள்ளிவாய்க்காலிற்குக் கலைக்கப்பட்டோம். அப்போது துப்பாக்கிச் சன்னங்கள் வந்து கொண்டிருந்த வேளையில் சுடுமண்ணுக்குள் செருப்பும் அறுந்து பாதர் சறா ஓடியவேளையில் நானும் அவரோடு கூட ஓடிவந்தேன். அந்தவேளையில் கப்பல் ஊடாக வெளியே செல்ல கூடியநிலை இருந்த போதும் 'மக்கள் பாவம் நான் மக்களை விட்டிட்டு போகமாட்டேன் எனக் கூறி முள்ளிவாய்க்காலில் பங்கருக்குள் வாழ்ந்திருந்தார். அப்போது பங்கருக்குள் தான் எங்கள் வாழ்க்கை. தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள், ஏனைய அருட்தந்தையர்கள் அருட்பணி மரியதாஸ், அருட்பணிஸ்ரீபன், அருட்பணி நேரு, அருட்பணி அல்பிரட் இவர்களும் மக்களோடு கூட இறுதி யுத்தம் வரை கூட இருந்தார்கள்.

இறுதி நாட்களில் பங்கருக்குள் பாதர் சறா நித்திரை கொள்ளமாட்டார். "நான் கீழேபடுத்தால் இரண்டு மூன்று பேர் படுக்க முடியாமல் போயிரும் சிறிய இடம், நான் நித்திரை கொள்வேன் நீங்கள் படுங்கடா" என்று சிறுவர்களை தன்னுடைய மடியில் நித்திரை கொள்ளவிட்டு சப்பாணி கொட்டிக் கொண்டு நித்திரையில் தூங்கி தூங்கி விழுவதும் பங்கர் குத்தியோரம் அல்லலுறுவதும் இப்பவும் கண்ணுக்குள்ள நிக்குது. ஆயர் குருக்களின் உயிருக்கு ஆபத்து கப்பலால் வரட்டாம் என பங்கருக்குள் இருந்த ஏனைய அருட்தந்தையர்கள் கூறிய போது பாதர் சறா 'மக்களுக்காகப் பணி செய்ய வந்தனாங்கள். மக்களை விட்டிட்டு போக இயலாது கடைசிமட்டும் மக்களோடு கூட நின்றிட்டு பிறகு போய் My Lord எங்களை மன்னிச்சுக் கொள்ளுங்க என்று கூறினாபோச்சு' என கூறினார். பாதர் சறா 'கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப்பார்க்கக் கூடாது' என்ற இறைவார்த்தைக் கமைய வாழ்ந்தார்.

பெரிய சமையல், சமையல் முடிந்ததும் எல்லாரையும் சாப்பிடவாங்க என்று கூப்பிட்டால் ஒரு நாளும் முன்னுக்கு போய் சாப்பிடமாட்டார், எல்லாரும் சாப்பிட்ட பிறகுதான் எனக்கும் ஏதும் இருந்தா தாங்க என்று வாங்கி சாப்பிடும் சிறந்த குணநலம், பிறர் நலம் கொண்டவர் பாதர் சறா.

கடவுள் எங்களைக் கைவிடமாட்டார் ஏதாவது ஒரு முடிவு கிட்டும் என அடிக்கடி கூறுவார். இறுதியாக 18 மே 2009 காலை இராணுவத்தினர் எம் பங்கருக்குள் இருந்த எல்லோரையும் வெளியே வரச் சொல்லி உடல் பரிசோதனை செய்தார்கள். பின்பு எங்களை அழைத்து சென்ற வேளை சறா பாதர் ஒரு பிரயாணப்பையை பின்னுக்குக் கொழுவிய வண்ணம் முன்னுக்கு நடந்து கொண்டிருந்தார். 'பாதர் குண்டு இருக்கு, றோட்டில கவனம் செத்த பிணங்களை தாண்டும் வேளை பாதர் வெடி இருக்கும்' என கூறி வந்தேன். 'ஓமடா தெரியுது நீ கவனமாய் நட' இரண்டு பேரும் கதைத்த வண்ணம் வந்தோம். இடை வெளியில் களைத்து டிப்பர், ஏனைய வாகனங்களிற்கு அருகில் றோட்டில் இருந்த வேளை இராணுவத்தினரிடம் தண்ணீர் வாங்கிக் குடித்தார்கள். அப்போது பாதர் நான் வாங்கிகொண்டு வாறன் எனக் கூறி தண்ணீர் குடிச்சிட்டு பாதருக்கும் கொண்டுபோய் கொடுத்த வேளை "நீ தண்ணீர் குடிச்சிட்டியா?" என்று கேட்டார் "ஓம் பாதர் நான் குடிச்சிட்டன்" என்ற பின்பே தண்ணீர் குடித்தார். அந்த கடைசி நேரத்திலும் பிறர் நேசம் கொண்ட உத்தமமான மனிதன், பிறருக்காகவே தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தவர் பாதர் சறா. பின்பு மீண்டும் வீதியால் நடந்து சென்றவேளை பாதர் சறாவின் கால்கள் தடுமாறியவேளை நான் பாதரைப் பிடித்தேன். ஏனையவர்களும் ஓடிவந்தார்கள். ஒரு புளியமரத்தின் கீழ் கதிரையில் பாதரை இருத்தினோம். பின்பு

பாதர் மரியதாஸ், தர்சன் என எல்லோரும் சேர்ந்து தேநீர் கொடுத்தோம். பாதர் குடிக்கவில்லை. அவரால் கதைக்க முடியவில்லை, குடிக்க முடியவில்லை. பின்பு இராணுவத்தினரின் உழவு இயந்திரத்தில் பாதரை ஏற்றினோம். நானும் பாதரோடு கூடவே இருந்தேன். என்னோடு ஒரு சகோதரியும் வந்தார்.

எங்களை பளையடி கடற்கரை பிரதேசத்திற்கு இராணுவத்தினர் கொண்டு சென்றனர். அங்கு இராணுவத்தினர் பாதரை ரைக்ரறால் இறக்கக்கூடி உதவி செய்யவில்லை. நாங்கள் கஸ்ரப்பட்டு பாதரை இறக்கினோம். ஒரு தகரக் கொட்டிலின் கீழ் பாதரை எனது மடியில் வைத்திருந்தேன். பாதருக்கு குளுக்கோஸ் ஏற்றினார்கள். குளுக்கோஸ் ஏற்றிய போது நானும் அந்த சகோதரியும் பாதரை காப்பாற்றுங்கோ என அழுதோம். குழுக்கோஸ் ஏற்ற ஓகே என கூறினார்கள். கடைசிமட்டும் பாதரை காப்பாற்றுவார்கள் என நினைத்தோம். நான் 'பாதர் கண் திறங்க, பாதர் எழும்புங்க' என அவரது முகத்தை தடவி அழுதேன். இறுதியில் அவரது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. பின்பு இறுதி மூச்சு இழுத்து எனது மடியில் புனிதர் பாதர் சறா மக்களுக்காக தனதுஉயிரை இறைவனிடம் ஒப்படைத்தார்.

பத்திநாதன் செபஸ்ரியன்

இறுதி நாட்களில் பங்கருக்குள் பாதர் சறா நித்திரை கொள்ளமாட்டார். "நான் கீழேபடுத்தால் இரண்டு மூன்று பேர் படுக்க முடியாமல் போயிரும் சிறிய இடம், நான் நித்திரை கொள்வேன் நீங்கள் படுங்கடா" என்று சிறுவர்களை தன்னுடைய மடியில் நித்திரை கொள்ள விட்டு சப்பாணி கொட்டிக் கொண்டு நித்திரையில் தூங்கி தூங்கி விழுவதும் பங்கர் குத்தியோரம் அல்லலுறுவதும் இப்பவும் கண்ணுக்குள்ள நிக்குது.

நினைவுகளில் நீங்காத அருட்பணியாளன்

மனிதர்களை நல்வழிப்படுத்த இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொக்கிசமே எங்கள் அருட்பணி சறத்ஜீவன் அடிகளார் அவர் தனது வாழ்வை இறைபணிக்காக அர்ப்பணித்து இறுதிவரை மறைவாழ்வின் மறைத்துவத்திற்கு மதிப்பளித்து வாழ்ந்தார். எமது உருத்திரபுரம் பங்கில் இவரது பணி நான்கு ஆண்டுகளே நீடித்தது ஆயினும் பல வருடங்கள் எம்முடன் பழகிய உணர்வு எல்லோரிடமும் தேங்கிக்கிடக் கிறது. குருவாக எங்கள் இல்லங்களை அன்புடன் தரிசித்த நினைவுகளே எமது அழியாச் சொத்தாகி நிற்கிறது. எந்த நிகழ்வு நடைபெற்றாலும் சரியாகவும் நேர்த்தியாகவும் நடைபெற வேண்டும் என்பதில் அக்கறை யுடன் செயற்பட்டு அனைத்து ஆலயங்களிலும் அன்பியக் குழுக்களை உருவாக்கி அனைவரையும் ஆலயச் செயற்பாடுகளிலும் பக்திச் சபை களிலும் அங்கத்துவம் பெற வழிசமைத்தார்.

எந்த வேளையில் அவரை நாடிச் சென்றாலும் வரவேற்று உபசரிப் பதில் வல்லவர். இயல்பாகவே அவரிடமிருந்த இரக்க சுபாவம் ஏழைகள், கைவிடப்பட்டோர், நோயாளர் மட்டில் அவரை மிகுந்த கரிசனை கொள்ள வைத்தது. இவர்களை விசேடவிதமாகக் கண்காணித்து உதவிகளும் புரிந்துள்ளார். அவரிடம் உதவி பெற்ற பிற சமய மக்களும் அவரை இன்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றனர். பரந்து விரிந்த எமது பங் கிலே ஆறு ஆலயங்கள் காணப்பட்ட நிலையில் ஏழாவதாக செல்வா நகர் கிராமத்தில் இறைமக்களின் ஆன்மீகத் தேவைகருதி அமைதியின் அரசி ஆலயத்தை நிறுவினார். அனைத்து ஆலயங்களிலும் வழிபாடு

களை ஒழுங்குபடுத்தி இறைமக்களை விசுவாசத்தில் நிலைபெறச் செய்ததுடன் பங்குமக்கள் ஒவ்வொருவரையும் அறிந்தும் அக்கறை கொண்டும் இருந்தார். எல்லோரது பெயரையும் ஞாபகத்தில் நிறுத்தி உரையாடும்போது அதனை வெளிப்படுத்தி நின்று மக்களுக்கும் தனக்குமான உறவைப் புனிதப்படுத்தினார்.

தமிழ் மொழியையும் தமிழர்களாகிய எமது பண்பாடு கலாசார விழுமியங்களையும் விருப்புடன் மதித்துச் செயற்படும் இவர் உழவர் திருநாளாம் தைப்பொங்கல் விழாவை ஆலயத்தில் சிறப்புற நிகழ்த்துவார். தனது அன்பினால் அனைவரையும் ஆட்சி செய்து பங்கிலுள்ள பக்திச் சபைகள்வளர உதவினார். விசேடவிதமாக இளைஞர்கள் வழிதவறிப் போகாமல் வாழ நல்ல ஆலோசனை வழங்கி நல்வழிப்படுத்தியதுடன் யுத்தகாலத்தில் பல இளைஞர்களுக்கு காப்பாளனாக இருந்து உயிர்காத்தார். தமது பங்குப் பணிகளுக்கு மேலதிகமாக JRS நிறுவன இயக்குனராகச் செயற்பட்டு யுத்தகாலத்தில் பலர் வாழ இவர் தனது உடல் உபாதைகளையும் பொருட்படுத்தாது உழைத்தார். இடப்பெயர்வு காரணமாக அனைத்து மக்களும் வெளியேறிய பின்னர் தான் அவர் உருத்திரபுரத்தை விட்டுச் சென்றார். அவ்வாறே யுத்தம் தனது கொடூரக்கரங்களால் அழுத்திய வேளையிலும் மக்களோடு மக்களாக வாழ்ந்து மடிந்தவர். “வாழ்வது நானல்ல என்னில் வாழ்வது கிறிஸ்துவே” என்னும் புனித சின்னப்பரின் மொழி தலுக்கேற்ப அவரது வாழ்நாள் அமைந்திருந்தது. அடிகளாரின் சேவைக்காலம் எமது பங்கின் பொற்காலமாக இருந்தது. “நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்” எனக் கூறுவார்கள். என்றும் எம் நினைவுகளில் அருட்பணியாளருக்காக செபங்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அ.சிம்சன்போல்,
கிராம அலுவலர்,
கிளிநொச்சி.

தமிழ் மொழியையும் தமிழர்களாகிய எமது பண்பாடு கலாசார விழுமியங்களையும் விருப்புடன் மதித்துச் செயற்படும் இவர் உழவர் திரு நாளாம் தைப்பொங்கல் விழாவை ஆலயத்தில் சிறப்புற நிகழ்த்துவார்.

மற்றவர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த உத்தமர்

2005 ம் ஆண்டு எனது மறையாசிரியர் பயிற்சி நிறைவு விழாவில் உருத்திரபுரப் பங்கு சார்பாக பங்குத்தந்தை புதிதாக வருகை தந்திருந் தார். ஆனால் எனக்கு இவர் யார் என்று கூடத் தெரியவில்லை நான் எனது பங்குச் சுவாமியை சந்திக்கவேண்டுமென்ற நோக்கோடு ஒரு குருவான வரிடம் இவர்களில் யார் பாதர் சறா? என்று கேட்டேன் அவர் மறு மொழி யாக நான் தான் என்று கூறினார்.

பாதர் சறாவுடன் சில கணங்கள் பழகிய போது இவரை எனக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. பிறகு எனது பங்கில் நான் முதல் முதலில் மறைக்கல்வி ஆசிரியராகப் பணியாற்றினேன். மறையாசிரியர் ஆதலால் இவருடன் பழகுவதற்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது.இவரிடம் இருந்து நான் நல்ல பண்புகளைப் பெற்றுக்கொண்டேன். எனக்கு இவருடன் பழகுவதற்கு முன்பு கோபம் வரும் மற்றவர்கள் கூப்பிட்டால் ஓம் என்று பதில் சொல்ல மாட்டேன். இப்படியான கூடாத குணங்கள் என்னிடம் காணப்பட்டது. இவருடன் பழகும் போது இவற்றைக் கண்டுபிடித்து இவற் றுக்கு நல்ல உதாரணங்கள், கதைகள் மூலம் என்னைத்திருத்தினார் அருட்சகோதரிகள் என்னைக் கூப்பிட்டு பேசும்போது திருப்பி சரியான பதிலையும் கூற வேண்டாம் என்றும் திருப்பிக் கூறினால் அவர்களுக்கு கோபம் வரலாம் என்றும் கூறுவார். இப்படியான தந்தையாகவும், தாயா கவும் நல்ல நண்பனாகவும் என்னிடம் பழகினார்.

ஞாயிற்றுக் கிழமைகள் என்றால் இவரைக்காணமுடியாது தனது பழைய மோட்டார் சைக்கிள் ஒன்றை எடுத்துக் கொண்டு ஊற்றுப்புலம்,

கோணாவில், உருத்திரபுரம், ஜெயந்திநகர் என்று பல இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுத்து காலை 11.00 மணி 11.30க்கு வந்து தனது காலையுணவை உட்கொள்வார். எமது பங்கை 5 வலயங்களாக பிரித்து வலயங்களை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். எமது பங்கில் அருட்தந்தை பணியாற்றத்தொடங்கிய திலிருந்து பீடப்பணியாளர் சபை, மரியாயின் சேனை, இளைஞர் ஒன்றியம், திருப்பாலத்துவ சபை, என்று பல சபைகளை உருவாக்கி அவற்றை தலைமை தாங்கி நடாத்தினார்.

இவர் பங்கோடும் தனது பங்குமக்களோடும் தனது பணியைச் சிறப்பாக ஆற்றிக் கொண்டிருந்த போது, இவரிடம் மேலும் ஒரு பாரிய பொறுப்பை ஒப்படைத்தனர். அது தான் யேசு சபை அகதிகள் பணி J.R.S கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளராகக் கடமையாற்றினார். இவர் J.R.S இணைப்பாளராகப் பொறுப்பை ஏற்கும் போது இவர் அனுபவம் இல்லாதவரானாலும் இரு பணியாளர்களுடன் இப்பணியை ஆற்றத்தொடங்கினார். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மக்களுக்குப் பணிபுரிய “நல்லாயன்” அனுப்பப்பட்டார். எங்கு தேவைகள் உள்ளனவோ அங்கெல்லாம் பணித்தளங்கள் நிறுவப்பட்டன. ஏழைகள், கைவிடப்பட்டவர்கள், விதவைகள், பெற்றோரில்லாத பிள்ளைகள், போரினால் பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு நிதியுதவி, கல்விசார்பான பொருட்கள், உடைகள், போன்ற இன்னும் பல உதவிகள் செய்து வந்தார். பங்குப் பணிதனையோ அல்லது J.R.S அகதிப்பணிதனையோ இறைசித்தத்தின் கீழ் தான் ஆற்றி வந்தார். இவர் எங்களுக்கெல்லாம் கிடைத்த மிகப்பெரிய சொத்து, இறைவன் தந்த கொடை. இவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் இவருடைய நினைவுகள் எம்மை விட்டு ஒருபோதும் நீங்காது. இவருடைய பணிகள் மென் மேலும் வளர்ச்சியடைந்து விருத்தியடைந்து வளர்ந்து கொண்டிருக்கும் வேளையில் போர் முழக்கம் கிளிநொச்சி மாவட்டத்தை அண்மித்தது

2008 ம் ஆண்டு 9ம் மாதம் 2ம் திகதி எமது J.R.S அலுவலகம் கிபீர் அடித்ததன் காரணமாக மூடப்பட்டது. பாதர் சறா இரவு பகல் பாராது மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் மற்றும் உடமைகளை வழங்கி வந்தார். உருத்திரபுரத்திலிருந்து பொருட்களை உழவு இயந்திரத்தில் ஏற்றி வட்டக்கச்சி கல்மடுவிலுள்ள புனித அந்தோனியார் ஆலயத்திற்குக் கொண்டு வந்தார். ஆலய வளாகத்திலுள்ள J.R.S மாலைக் கல்விக் கொட்டகைக்குள் எமது J.R.S அலுவலகமும், பங்கு பணிமனையும் இயங்கி வந்தது. இடம் பெயர்ந்து பாதிக்கப்பட்ட மக்கள், காயப்பட்ட மக்கள் என பல மக்களுக்கு நிதி, உலர் உணவு மற்றும் பல உதவிகள் செய்து வந்தார். பாதர் சறாவிடம் இல்லை என்ற வார்த்தை மட்டும் வராது.

ஒரு சில மாதங்களின் பின் மீண்டும் ஓர் இடப்பெயர்வு. மறுபடியும் பொருட்களை உழவு இயந்திரத்திலும், லொறியிலும் ஏற்றி அனுப்பிவிட்டு தான் மட்டும் கல்மடுவில் இருந்தார். நாம் மூங்கிலாறில் வேளாங்கண்ணி மாதா கோயிலில் அடைக்கலம் புகுந்தோம். பாதர் சறா கல்மடுவிலிருந்து அவதியுறும் மக்களை ஏற்றி அனுப்பிவிட்டு கடைசியாக வந்தார். கல்மடுவில் இருந்த காலங்களிலே எமது பணியாளர்களைக் கொண்டு மூங்கிலாறில் கொட்டகை அமைத்து வைத்திருந்தார். இவரிடம் இறை செயல் காணப்பட்டது. முன் கூட்டியே அறிந்து செயற்பட்டார்.

பின்பு மூங்கிலாறு என்னும் இடத்தில் எமது பணியை ஆற்றி வந்தோம். பாதர் சறா குழந்தைகளுக்கான பால் மா பக்கற்றுக்களை வாங்கி வைத்திருந்தார். இது தட்டுப்பாடான பொருள். இப் பொருட்களையெல்லாம் மக்களுக்குக் கொடுத்தார். முக்கியமாக அழுது கொண்டு வரும் மக்களோடு மரத்துக்கு கீழ் வைத்து ஆறுதல்கூறி அனுப்பி வைத்தார். பாதர் சறா எமக்கு கூறுவார் “நீங்கள் அலுவலகத்தில் இருக்கும் போது உங்களிடம் எதிர்பார்ப்புக்களோடு வரும் மக்களை, உதவி கேட்டு வரும் மக்களை இருத்தி

வைத்து ஆறுதலான வார்த்தைகளால் கதைத் துவிட்டு அனுப்பினாலே ஆறுதல் அடைந்து கவலை இல்லாமல் போவார்கள்" என்று கூறு வார். ஏன் என்றால் அவருக்கு யாரும் கவலைப் படக்கூடாது. எல்லோரும் அன்பாகவும் சந்தோச மாகவும் தான் இருக்க வேண்டும்.

சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் மீண் டும் இடப்பெயர்வு. அகோர செல்வீச்சுக்கள், விமானக் குண்டு வீச்சுகள், மற்றும் தாக்குதல் களுக்கு மத்தியில் உழவு இயந்திரத்தில் உண வுப் பொருட்களை ஏற்றி, எம்மையும் அதில் ஏற்றிவிட்டு தான் மட்டும் அந்தப் பழைய மோட் டார் சைக்கிளில் எம் உழவு இயந்திரத்திற்குப் பின்னால் வந்து கொண்டிருந்தார். பின்னர் சுதந்திரபுர புனித அந்தோனியார் ஆலயத்தில் கொட்டகை அமைத்து பாதர் சறா உணவின்றி பரிதவித்த மக்களுக்கு உலர் உணவு வழங்கி மக்களை ஆற்றுப்படுத்தினார்.

பாதர் சறா மக்களோடு மக்களாக இடம் பெயர்ந்து, உறங்க இடமின்றி, உண்ண உண வின்றி அகாலமரணமடையும் ஒவ்வொரு மக்களுக்காகவும் நாட்டின் சமாதானத்திற்கா கவும் திருப்பலி ஒப்புக்கொடுப்பார். திருப்பலி யின் போது அவர் கண்களில் நீர் கசிவதையும், அவரின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் உயிர் வாழும் எம் ஒவ்வொருவரின் மனமாற்றத்திற் கான ஒன்றாக அமைவதையும் எத்தனையோ முறை அவர் ஒப்புக் கொடுத்த திருப்பலிகளில் கண்டுள்ளேன்.

பின்பு சுதந்திரபுரத்தில் இருந்து இரணைப் பாலைக்கு இடம்பெயர்ந்து போனோம்.அங்கு கியூடெக் நிறுவனதினருடன் இணைந்திருந் தோம். அங்கு எமது J.R.S குடும்பம் பெரிதா னது. பாதர் சறாதான் உணவிற்கு பொறுப்பாயி ருந்தார். ஒரு குடும்ப பொறுப்பானவர் மாதிரி தேவையான உணவுப் பொருட்களை வாங்கி வருவார். இப்படி அங்கு சில நாட்களில் பின்னர் 2009ம் ஆண்டு விபூதி புதன் அன்று ஒரு சந்தி யும் சுத்த போசனமும் இருந்து பங்கருக்குள் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

ஒவ்வொரு நாளும் மாலை 7.30 மணியென் றால் பங்கருக்குள் அழகிய வழிபாடு ஒன்றை பாதர் சறா நடாத்துவார். இவருடைய வாழ்வு செப, தவ, சமூக தொண்டுகளாக காணப்பட் டது. பின்னர் இடம்பெயர்ந்து வலஞர் மடத்தில் ஆலயத்தில் பாதர் ஜேம்ஸ் பத்தினாதருடன் இருந்தோம். பின்னர் இவருடன் இருந்த பாதர் வசந்தசீலன் அகோர செல்வீச்சில் தனது காலை இழந்தார். அத்தோடு இவருடன் இருந்த கமிலஸ் என்பவருடைய தங்கை லோஜி செல் தாக்குதலில் இறந்தார். இவரை அடக்கம் செய் துவிட்டு கவலையோடு வீடு திரும்பினார். லோஜி அவரின் பங்குப் பிள்ளை அவரின்அப்பா கோயில் மூப்பர்.

பின்பு முள்ளிவாய்க்காலிலும் அகோர செல்வீச் சுக்களில் இவர் பங்கரின் வாசலிலிருந்து ஒரு வரையும் வெளியில் விடாமல் கண்ணை இமை காப்பது போல் எங்கள் அனைவரையும் காத்து வந்தார். ஆனால் இவர் எம்மை விட்டுப் பிரிந்து சென்றதை நினைக்க எம்மனம் கலங்கி வேதனை அடைகின்றது. இவர் மற்றவர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த உத்தமர் இவர் போற் றப்பட வேண்டியவர்.

நி. செல்வராணி

மண்ணில் மடிந்த நெல்மணி நீ ...

“சறத்ஜீவன்” என்ற ஒரு
மானுடப் பிறவி அது
மூவொரு இறையவனின்
அற்புதக் கொடையாகும்

“அருட்பணி சறா” வாகி
யாழ் திருமறையை அலங்கரித்து
மறைசாட்சி போல் இறந்து
மனங்களிலே நிறைந்துவிட்டாய்

ஆழமான விசுவாச குடும்பமதில்
கருவாகி உருவாகி வளர்ந்ததனால்
மனதார விருப்புடனே துறவு கொண்டு
யேசுவுக்காய் உன் வாழ்வை அர்ப்பணித்தாய்

நின் பணியின் பாதைகளில்
கல்வாரி நீ கண்டு
எண்ணில்லா கசையடிகள் தாங்கி நின்று
முள்முடிகள் சிரசினிலே ஏற்றதுடன்
கனமான சிலுவைகளைச் சுமந்து வந்தாய்

தன் துன்பம் தனை மறந்து இயேசுபிரான்
பெண்களுக்கு ஆறுதல் சொன்னது போல்
கண்ணீரோடு உன் பின்னே வந்தவர்க்கு
ஆறுதலும் அபயக்கரமும் நீ கொடுத்தாய்

உயிர்தனை கொடுப்பதுவே உண்மையான
அழைப்புக்கு இலக்கணமாய் இருப்பது போல்
அடுத்தவனை கரையேற்றி விட்டுவிட்டு
நின்வாழ்வை ஆகுதியாய் மாற்றிவிட்டாய்

பல்வேறு பரிணாமம் கொண்டவனே
திருப்பீடம் தனை நீ அழகு செய்தாய்
இசையாலே இறைவனுக்குப் புகழ் சேர்த்தாய்
இளையோரை உருவாக்கி பெருமை கண்டாய்
திருமறையில் மணம் வீசும் மலரானாய்
அகதிகட்கு உதவிக் கரம் நீட்டி நின்றாய்
இறுதியிலே கிறிஸ்துவைப் போல் உயிர்நீத்தாய்

வான் மண்ணும் காற்றும் கடல்நீரும்
அழிந்து தான் இவ்வுலகு மறைந்தாலும்
வேதத்தின் சிறு குற்றும்
இறையாட்சிப் பண்புகளும்
அழியாது இருப்பது போல்
உன் நினைவு மறையாது
மனங்களிலே நிலைத்திருக்கும்

தன் மக்கள் மீட்புக்காய் உயிர் நீத்த
கிறிஸ்துவின் விலையில்லா மரணம் போல்
உன் இறப்பும் உண்மையிலே தியாகம் தான்
நற்செய்தி சொல்லுகின்ற நெல்மணி போல்
மண்ணிலே விழுந்து உனையழித்து
பன்மடங்கு பலன்களை நீ கொடுத்தாய்

இறை யேசு பாதத்தில் அமர்ந்திருந்து
புனிதர்கள் தோழமையில் உறவு கொள்ளும்
உம் நினைவில் வாழுகின்ற எம்மவர்க்கு
மூவொரு இறைவனிடம் பரிந்துரையும்

இ.அ. அமலரட்ணம்

[1]ஆண்டவரே, எங்களுக்கு நேரிட்டதை நினைந்தருளும்!
எங்கள் அவமானத்தைக் கவனித்துப்பாரும்.
[2]எங்கள் உரிமைச்சொத்து அன்னியர்கைவசம் ஆயிற்று
வீடுகள் வேற்று நாட்டினர் கைக்கு மாறிற்று.
[3]நாங்கள் தந்தையற்ற அனாதைகள் ஆனோம்! எங்கள்
அன்னையர் கைம்பெண்டிர் ஆயினர்!
[4]நாங்கள் தண்ணீரை விலைக்கு வாங்கிக் குடிக்கிறோம்!
விறகையும் பணம் கொடுத்தே வாங்குகிறோம்!
[5]கழுத்தில் நுகத்தோடு விரட்டப்படுகிறோம்!
சோர்ந்துபோனோம்! எங்களுக்கு ஓய்வே இல்லை!
[6]உணவால் நிறைவு பெற, எம் கையை எகிப்தியர்,
அசீரியரிடம் நீட்டினோம்!
[7]பாவம் செய்த எம் தந்தையர் மடிந்து போயினர்! நாங்களோ
அவர்கள் குற்றப்பழியைச் சுமக்கின்றோம்!
[8]அடிமைகள் எங்களை ஆளுகின்றார்கள்! எங்களை அவர்கள்
கையினின்று விடுவிப்பர் எவரும் இல்லை!
[9]பாலைநில வாளை முன்னிட்டு, உயிரைப் பணயம் வைத்து
எங்கள் உணவைப் பெறுகிறோம்!
[10]பஞ்சத்தின் கொடுந்தணலால் எங்கள் மேனி அடுப்பெனக்
கனன்றது!
[11]சீயோன் மங்கையர் கெடுக்கப்பட்டனர்! நகர்களின்
கன்னியர் கற்பழிக்கப்பட்டனர்!
[12]தலைவர்கள் பகைவர் கையால் தூக்கிலிடப்பட்டனர்!
முதியோர்களையும் அவர்கள் மதிக்கவில்லை!
[13]இளைஞர் இயந்திரக் கல்லை இழுக்கின்றனர்! சிறுவர்
விறகு சுமந்து தள்ளாடுகின்றனர்!

புலம்பல் 5:1-13

'வன்னி' பற்றிய கரிசனை வேண்டும்

ஏன் இக்குறிப்பு?

அருள்பணி. சறத்ஜீவன் அடிகளாரின் நினைவாக வெளியிடப்படும் ஒரு மலருக்கு அவருடனான அநுபவங்களை எழுதலாம் என முதலில் நினைத்தேன். பின்னர் அவரைப்பற்றிய அநுபவங்களைப் பலரும் எழுதுவார்கள் என இன்னுமொரு எண்ணம் உதித்ததால் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து 08 ஆவது ஆண்டு கடக்கயிருக்கும் நிலையில் வன்னிப் பிரதேசம் இன்று சந்திக்கும் சவால்கள் சில வற்றை தொட்டுக் காட்டுவது இக்காலத்தில் பயனுள்ளதாகும் என்பதானால் இச்சிறு குறிப்பினை எழுதலாம் என எண்ணினேன்.

உண்மையில், சறத்ஜீவன் அடிகளார் தம் பணிக்காலம் முழுவதும் வன்னிப் பிரதேசத்தை மையமாகக் கொண்டு பணியாற்றி இருக்கிறார். அத்துடன் வன்னியில் அவர் பணிசெய்த காலம்(2005-2009) போர்க்காலத் தின் மிக உச்சப் பயங்கரங்கள் நிறைந்த காலமாகும். மேலும் வன்னிப் பிரதேசத்தில் பணிசெய்வதில் அவர் திருப்தியும் மனநிறைவும் கண்ட வர். இன்னும் போர்ப் பயங்கரங்கள் சூழ்ந்துவந்த வேளையிலும் வன் னிப் பிரதேசத்தை விட்டு வெளியேற வாய்ப்பிருந்தும் தன் மந்தைகளை விட்டுச் செல்லாது அவர்களுடன் வழிநடக்க, உடனிருக்க, உறுதி பூண்டு இறுதிக் கணம்வரை வன்னியிலேயே இருந்து உயிரையும் ஒப்படைத்தவர்!

அதனால், இப்பிரதேசத்தின் இன்றைய ஒருசில நிலமைகளை பகிர்ந்துகொள்வது சறத்ஜீவன் அடிகளாருக்கு நான் செய்யும் ஓர் அஞ்சலியாகும் என்பதனாலும், வன்னிப் பிரதேசத்தில் போரினால் பாதிப்புற்ற மக்களுக்குப் பயனுள்ள சில பணிகளை முன்னெடுக்க பொறுப்புள்ள அரச, அரச சார்பற்ற, சமய, சமூகத் தலைவர்களுக்கும்,

தனிப்பட்ட நபர்களுக்கும் இச்சிறு குறிப்பு ஒரு தூண்டுதலாக அமையும் என்பதாலும் இதனை இவ்வாறு ஆக்க நினைத்தேன்.

இன்றைய சூழலில் இத்தலைப்பில் எவ்வளவோ எழுதமுடியும்! எனினும் குறிப்பிட்ட நாள்களுக்குள் இதனை ஒப்படைக்கவேண்டி இருந்ததினால் சில விடயங்களைத் தொட்டுச் செல்வதாக மட்டுமே இப்பணியைச் செய்கிறேன்.

வன்னி பற்றிய சிறுகுறிப்பு

வன்னித் தேர்தல் தொகுதியில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆயினும் 'வன்னிப் பிரதேசம்' எனப் பொதுவாக மக்கள் குறிப்பிடுகிறபோது அது வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை முழுமையாகவும் மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கியிருக்கிறது என நடைமுறையில் காணலாம்.

இவ்வாறான இவ்வன்னிப் பிரதேசம் நாட்டின் எந்தவொரு பிரதேசமும் பட்டிராத மிகக் கொடூரமான அவலங்களைக் கடந்த மூன்று தசாப்தங்களைக் கடந்து நடந்துவந்தஆயுதப் போரில்சந்தித்திருக்கிறது. அதிலும் குறிப்பாக மிக உக்கிரமமான போர் நடைபெற்ற 2008, 2009ஆம் ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான மனித உயிர்களைக் காவுகொண்டும், பலநூறு மக்களை அவயவங்களை இழக்கச்செய்தும், ஆயிரக்கணக்கான பெண்களை விதவைகளாக்கியும், ஆயிரமாயிரும் குழந்தைகளை அனாதைகளாக்கியும், ஆயிரக்கணக்கான மக்களை நடைபிணங்களாகவும், இன்னும் கோடிக்கணக்கில் பெறுமதியான பொருள்சேதங்களையும், ஆறாத வடுக்களையும்ஏற்படுத்தி இருக்கிறது.

இவ்வாறு, இரத்தக்கறை படிந்த வரலாற்றை இலங்கை அரசு உலக சரித்திரத்தில் உருவாக்கி விட்டது எனலாம். 'முள்ளிவாய்க்கால்' என்ற சொல்லும், இடமும் தமிழர்கள் அழிக்கப்பட்டதன் அடையாளக் குறியாக உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படுவதில் இருந்து தமிழர்கள் வன்னிப் பிரதேசத்தில் பட்ட அவலங்களைப் புரிந்துகொள்ளலாம்.

இப்பின்னணியில் இன்று வன்னிப்பிரதேசம் பல சவால்களைச் சந்தித்த வண்ணமாக இருக்கிறது. 'புனர்வாழ்வுத் திட்டங்கள் இடம்பெற்றுள்ளன', 'வாழ்வாதாரம் வழங்கப்பட்டுள்ளது', 'தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன', 'வடக்கில் வசந்தம்' என்று சொல்லப்பட்டாலும் மக்களின் இழப்புக்களோடு ஒப்பிடுகையில் யானைப் பசிக்கு சோளப்பொரியைப் போலவே புனர்வாழ்வு - வாழ்வாதாரப் பணிகள் ஆற்றப்பட்டுள்ளன.

காப்பற் றோட்டுக்கள் போடப்பட்டிருக்கலாம், போக்குவரத்து சீர் செய்யப்பட்டிருக்கலாம், தொடர்புசாதனங்கள் தடையின்றி இருக்கலாம் ஆயினும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கான தீர்வுகள் இன்னும் கிடைக்கவில்லை. உதாரணமாக, மக்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த தங்கள் கிராமங்கள், தொழில்பார்த்த கடற்கரைகள் போன்றவை இன்னமும் விடுவிக்கப்படாமல் இராணுவ ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. ஆக, மக்களின் அன்றாட வாழ்வுக்கான பிரச்சினைகளுக்கான தீர்வுகளே காண முடியாதபோது எவ்வாறு அடிப்படைப் பிரச்சினையான அரசியல் தீர்வு கிடைக்கப்போகிறது என்பது மலையாக எழுந்து நிற்கும் பெரும் கேள்வியாகும்.

முன்னெடுக்கப்படும் தகவல் சேகரிப்பு

வடமாகாண சுகாதார அமைச்சானது வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களினதும் ஒரு குடும்பம்கூட விடுபடாதவாறு முக்கியமான தொரு புள்ளிவிபரத்தை - கணக்கெடுப்பை - தகவல் சேகரிப்பை 2016ஆம் ஆண்டில் ஆரம்பித்திருக்கிறது. வடமாகாண சுதாதார அமைச்சின் இப்புள்ளிவிபரம் நிறைவுறும் பட்சத்தில் வடமாகாணத்தில் இயலாமையுடன் வாழும் அல்லது மாற்றுத்திறனாளிகளாக வாழும் வெவ்வேறு வகைப்பட்ட மக்களின் முழுமையான, துல்லியமான தொகையினைப் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் விபரம் முழுமை பெற்றுள்ள நிலையில் 2017ஆம் ஆண்டின் நிறைவில் ஏனைய நான்கு மாவட்டங்களின் புள்ளிவிபரமும் பெறப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் புள்ளிவிபரத்தைப் பார்க்கிறபோது இயலாமையுடன் வாழும் நபர்களின் (persons with disabilities) அல்லது மாற்றுத்திறனாளிகளின் (differently abled) தொகை நாம் நினைக்கிற எண்ணிக்கையைக் காட்டிலும் மிகப்பெரும் தொகையாக இருப்பது புரியும். அத்துடன் சமுதாயத்தின் இயலாமையுடன் வாழும் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் வாழ்வுக்குத் தேவையான நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் இன்னும் நிறையவே இருக்கின்றன என்பது தெரியவரும்.

உதாரணத்திற்குக் கிளிநொச்சி

கிளிநொச்சியில் 13, 131பேர் இயலாமையுடன் வாழும் நபர்களாக இருக்கிறார்கள். இவர்களில் 1, 447 பேர் அசைய முடியாதவர்களாகவும், 3, 342 நபர்கள் பார்வை அற்றவர்களாகவும், 3960 பேர் நடப்பதில் சிக்கல் உள்ளவர்களாகவும், 1670 பேர் கேட்கும் திறன் அற்றவர்களாகவும், 487 பேர் பேச்சுக் குறைபாடு உள்ளவர்களாகவும், 875 பேர் மனோநிலை பாதிக்கப்பட்டவர்களாகவும், ஏனையோர் வெவ்வேறு இயலாமையுடன் வாழுகிறவர்கள் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் ஒரு மாவட்டத்தில் இயலாமையுடன் வாழும் மக்களின் தொகை இவ்வளவு என்றால் ஏனைய நான்கு மாவட்டங்களின் தொகையும் வந்துசேரும்போது, இயலாமையுடன் வாழும் நபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் வடமாகாணம் எதிர்கொள்ளும் - எதிர்கொண்டிருக்கும் சவால் எத்தகையது என்பதை ஓரளவுக்கேனும் புரிந்துகொள்ளலாம்.

உடனடிக் கவனிப்புப் பெறவேண்டிய பணிகள்

ஆகவேதான், போரின் பின்னரான புனர் வாழ்வுப் பணிகளில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டிய பணிகளாகப் பல பணிகள் குவிந்து கிடப்பினும் சில பணிகள் உடனடியான கரிசனையை சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பெறவேண்டி இருக்கிறது.

1) அவற்றில் வெவ்வேறு பிரிவினருக்கான ஆற்றுப்படுத்தல் வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து வழங்கப்பட வேண்டிய அவசியம் நிலவுகிறது. போரின் பின்னர் ஆற்றுப்படுத்தல் பணி செய்யப்பட்டிருந்தாலும் கிரமமாக இப்பணி அனைத்துத் தரப்பினரும் பயன் பெறும் படியாக முழுமையாக முன்னெடுக்கப்படவில்லை என்றுதான் கூறவேண்டும். ஆற்றுப்படுத்தல் அனைத்து மட்டத்தினருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் ஒரு பொறிமுறை உருவாக்கப்படுகிற பொழுது அது பலருக்கு ஆரோக்கியமான மனவளத்தை மேம்படுத்த உறுதுணையாக இருக்கும்.

போரின் பின்னரான காலப்பகுதியில் மிக அதிக அளவில் இடம்பெற்ற - பெறுகிற தற் கொலைச் சம்பவங்களும், வீதி விபத்துக்கள் ஏற்படக் காரணமாய் இருந்த காரணிகளும், தம் குடும்பங்களைக் கைவிட்டு வாழும் வளர்ந்தோரின் எண்ணிக்கையும், பெரும் எண்ணிக்கையானவர்களின் குடிப்பழக்கமும்நீண்ட காலப் போரின் பின் விளைவுகளால் ஏற்படுபவை.

ஆக, ஆற்றுப்படுத்தல் பணி எவ்வாறு இப்போது பாடசாலைகளில் உருவாக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல அனைத்து மக்களும் ஆற்றுப்படுத்தலைப் பெறக்கூடிய வகையில் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படுவது, மக்கள் உள வடுக்களில் இருந்து மீண்டு ஆரோக்கிய மனவளத்தைக் கட்டியெழுப்ப பெரும் உதவியாக அமையும்.

2) படுக்கை நோயாளிகளும், அவயவங்களை இழந்தவர்களும், இயலாமையுடன் வாழும் நபர்களும் விசேட கவனிப்பைப் பெறவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருப்பினும் இன்னும் அநேகமானவர்கள் அடிப்படை வசதிகளைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதை நடைமுறையில் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அனைத்து விடயங்களிலும் இவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கிற சூழல் உருவாக

அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

3) முன்னாள் போராளிகளும், பெண்களைத் தலைமைத்துவமாய்க் கொண்ட குடும்பங்களும் பாதுகாக்கப்பட வேண்டிய, பராமரிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களும் வாழ்வாதார வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டிய பெரும் தேவையிருக்கிறது.

4) தொழிற் பயிற்சிகளையும், தொழில் முயற்சிகளையும், தொழிற் சாலைகளையும் உருவாக்க வேண்டிய தேவை எழுந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான இளையோர் வேலை வாய்ப்பற்று இருக்கிறார்கள் அல்லது அவர்களுக்கேற்ற தொழில்கள் கிடைக்காத நிலை உருவாகியிருக்கிறது. ஒருசில ஆடைத் தொழிற் சாலைகளும், கைத்தொழில் பேட்டைகளும் அமைக்கப்பட்டிருந்தாலும் போதிய தொழில் வாய்ப்பின்மையும், ஊதியம் இல்லாத நிலைகளையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

5) அரச திணைக்களங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், சமய சமூக அமைப்புக்களும் செய்கிற பணிகளை ஒருமுகப்படுத்த வேண்டிய ஒரு முக்கிய தேவை உருவாகியிருக்கிறது. ஒவ்வொருவரும் தாம் நினைக்கிற - விரும்புகிற பணிகளை முன்னெடுக்கிற நிலைமைகளே நிலவுகின்றன. அவற்றை விடுத்து, தேவைகளைப் பொறுத்து சேவைகளை வழங்கக்கூடியதான பொறிமுறைகள் உருவாக்கப்படும்பொழுது தேவையில் உள்ள அனைவரும் பயன்பெறும் நிலையை உருவாக்க முடியும்.

6) பொருளாதார வளத்தை இழந்தவர்கள் அதனை மீளக் கட்டியெழுப்ப வழிகாட்டுதல்கள் கொடுக்கப்படவேண்டி இருக்கிறது. நுண்நிதி நிறுவனங்களில் கடன்களைப் பெற்ற பலநூறுபேர் போரில் மிஞ்சியதைக் கூட இழந்துபோய் கையறு நிலையில் இருப்பதையும், பல்வேறு வகைப்பட்ட சிக்கல்களுக்குக் குறிப்பாகக் குடும்பப் பெண்கள் சிக்கித் தவிப்பதையும் நோக்கலாம்.இது இன்னும் பல சமூகப் பிரச்சினைகளுக்கும், குடும்பப் பின்னடைவுகளுக்கும், சமுதாய பிறழ்வுகளுக்கும் வழிவகுத்திருக்கிறது. ஆகவே, பொருளாதார வளத்தை முன்னெடுக்கக் கிராம மட்டத்திலான பொருளாதார வழிகாட்டல்கள் அளிக்கப்படவேண்டும்.

7) காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப வன்னிப் பிரதேசத்தில் பெருவாரியாக மேற்கொள்ளப்படும் விவசாய முன்னெடுப்புக்களைத் தொடர ஆவன செய்யவேண்டி இருக்கிறது. நெற் பயிரோடு, ஏனைய சிறுதானியப் பயிர்களை அதிகமாக மேற்கொள்ளும் நிலைகளை உருவாக்குவது, மேட்டு நிலங்களில் நெற் செய்கையைத் தவிர்த்து சிறுதானிய அல்லது குறுகியகாலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது போன்றவற்றை ஊக்குவித்தல் போன்றவை முன்னெடுப்பதன் வழியாக வன்னிப் பிரதேசத்தை வளமாக்க ஆவன செய்ய முடியும்.

நிறைவாக...

இலங்கையில் வடமாகாணம் அதிலும் வடமாகாணத்தின் வன்னிப் பிரதேசம் போர்க் காலத்தில் பல்வேறுபட்ட பின்னடைவுகளைச் சந்தித்த ஒரு பிரதேசம். இப்பிரதேசம் மீண்டும் கட்டி எழுப்பப்பட, சீரமைக்கப்பட குறிப்பாக இயலாமையுடன் வாழும் நபர்கள் ஆகக்குறைந்தது சாதாரணமாக வாழக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்த எம்மாலான வழிவகைகளை மேற்கொள்ள முற்படுவோம்.

அருள்பணி. செ.அன்புராசா, அமதி
இயக்குநர், 'அமதிக்கரங்கள்'
லிபாரா நலனோம்பு மையம்,
A9 வீதி, மாங்குளம்.

Concern about 'Vanni' is needed

Why this note?

First I thought of writing about late Fr. Sarathjeevan and then changed my mind thinking that other people will write about him. I just thought of writing about the present situation of Vanni as the war ended 8 years back.

Actually Fr.Sarathjeevan served mostly in Vanni during his mission work. He served from 2005 to 2009 when the war was escalating. He was happy to work in Vanni. He had got many chances to leave the war zone but opted to remain with the suffering people till his last breath.

Writing about the present situation of Vanni would be a tribute to him. This also will help the Govt. NGOs, and other religious and social leaders to plan out strategies for the people of Vanni.

Note about Vanni

Vanni region faced immense war during the period 2008, 2009. Thousands of people were killed, hundreds of people became amputees,thousands of women became widows, many thousands of children became orphans and many others became lifeless persons.

In this context Vanni region faces many challenges.

Data collection

Northern Province Health Ministry had started to collect data in the five districts including each and every family in the year 2016. When this task is completed, there will be exact details about the persons with disabilities. NP Health Ministry had already completed the data collection in Kilinochchi and other districts will be completed in the year 2017.

For example Kilinochchi

In Kilinochchi there are 13,131 persons with disabilities. Among them 1,447 cannot move, 3,342 lost eye sight, 3,960 unable to walk properly, 1,670 lost hearing ability, 487 speechless and 875 became mentally ill.

The matters needing immediate attention

1. Counseling;All the people need awareness and counseling. In the post war scenario there is an increase in number of suicides, road accidents, adults abandoning the family and drug addiction.
2. The bed-ridden and persons with disabilities, need pecial attention and care.
3. Women ex-combatants and women headed families have to be protected and be cared for. And they need livelihood assistance.
4. Need of entrepreneurship. Thousands of youth are unemployed.
5. Coordinating the activities of government and Non-governmental , private sectors and the activities of Religious and Social organisations.
6. Guidance for those who lost their economy,especially highly intruded micro-financing companies in the Vanni region and lots of families are affected by them.
7. Proper guidance for the agricultural activities according to the climate changes in the Vanni region.

Rev. Fr. S. Anpurasa OMI

சமாதானம் ஒரு 'பொருளா?'

முன்னுரை

அருள்திரு சறத்ஜீவன் அவர்களை இருமுறை சந்தித்த ஞாபகம். இறுதியாகச் சந்தித்தது வன்னியில். அது போர்க்காலம். சிறிய உரையாடல், அவர் வன்னியில் ஒரு மனத்திருப்தியுடன் பணிபுரிந்து வாழுகின்றார் என்று உணர்ந்துகொண்டேன். மக்களுடன் வாழ்ந்து, அம்மக்களின் துன்ப துயரங்களில் கலந்து இறுதியாக ஆயிரக்கணக்கான மக்களின் சாவில் தன்னையும் சங்கமமாக்கிக் கொண்டார். அவர் ஒரு தியாகி. அவரைப்பற்றி எழுத எனக்கு அருகதையில்லை.

ஞாபகம்

முப்பத்தாறு ஆண்டுகளாக நடைபெற்ற கொடிய போரில் படுகொலை செய்யப்பட்டோரை நான் அடிக்கடி நினைப்பதுண்டு. காலத்துக்கு காலம் ஏற்படுத்தப்பட்ட இனக்கலவரத்தில் கொலை செய்யப்பட்ட மக்களை நான் அடிக்கடி நினைப்பதுண்டு. மனம் வருந்துவதுண்டு. இம்மக்களுக்கு நீதி கிடையாதா என்று மனம் ஏங்கியதுண்டு. இக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் பொழுது ரவிராஜ் உடைய கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட அனைவரும் 'விடுதலை' பெற்றுள்ளார்கள். எந்த சிங்கள, பௌத்த அரசிலும், எந்த சிங்கள பௌத்த ஜனாதிபதியின் ஆட்சியிலும் தமிழர்களுக்கு நீதி கிடைக்குமென்று நான் இனியும் நினைக்கத் தயார் இல்லை.

உள்ளக விசாரணையின் முடிவை நல்லரசின் ஜனாதிபதி ஏற்கனவே திட்டவட்டமாகக் கூறிவிட்டார். போர் முடிந்து ஏழு வருடங்களுக்கு

மேலாகியும், காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்கள் இல்லை. சரணடைந்தவர்கள் பற்றிய தகவல்கள் இல்லை, பறிபோன மக்களின் காணிகள் முழுமையாகத் திருப்பி ஒப்படைக்கப் படவில்லை. பௌத்த சிலைகள், பௌத்தர்கள் கிஞ்சித்தும் இல்லாத இடங்களில் தோன்றுகின்றன. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், தமிழர் செறிவாக வாழும் இடங்களில் நடைபெறுகின்றன. இந்தத் திட்டமிட்ட குடியேற்றம் இன்று நேற்று துவங்கியதல்ல. டி. எஸ்.சேனநாயக்க காலத்திலேயே ஆரம்பமானது.

இலங்கையின் இன அழிப்பு வித்தியாசமானது. இது படிப்படியாக நடைபெறுவதினால் தங்களைத் தாங்களே நாகரிகத்தின் உச்சக் கட்டத்தில் வாழும் நாடுகள், மனித உரிமை மீறல்களுக்குக் குரல் கொடுக்கும் நாடுகள் என்று கூறிக்கொள்ளும் நாடுகள் இப்படிப்பட்ட இன அழிப்பை, இன அழிப்பாக ஏற்றுக்கொள்ளா. ஆனால், உண்மை அதுதான்.

"குற்றங்கள் தண்டிக்கப்படாமையே சிறீ லங்காவின் அவலம்" என்று ஆங்கிலேயே வரலாற்று ஆசிரியரும் ஊடகவியலாளருமான டேவிட் செல் போன் 1977இல் நடைபெற்ற தமிழினக் கொலைகளின் பின்னணியில் எழுதினார். இக்கூற்றை, பின்னர் வந்த சிறீ லங்காவின் அரசுகள் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளார்கள். இனியும் நிரூபிப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. சுயநலன் கருதி இதற்கு ஒத்தூதும் மதத்தலைவர்கள் இந்நாட்டில் இருக்கவே இருக்கிறார்கள். இது, இம் மதங்களின் அவலம். கல்விகற்றோர் கசடறக் கற்காது அதற்கேற்ப வாழாது பதவிகளுக்காகத் தங்கள் ஆன்மாவை விற்று அநீதியை நியாயப்படுத்துகிறார்கள். இது, இந்நாட்டுக் கல்வியின் அவலம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு ஈழத்தமிழர் ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். 'ஏமாற்றத்தில் தான் நம்பிக்கை' என்ற ஒரு மனநிலையில் ஈழத்தமிழினம் சிக்கிக் கொண்டது. இது தமிழினத்தின் அவலம். இவற்றை யெல்லாம் ஏன் நான் இங்கு எழுதுகின்றேன் என்று வாசகர்கள் கேட்கலாம்.

சமாதானம் பேசுவோர்

இப்படிப்பட்ட ஒரு பின்னணியில்தான் சமாதானம் பேசுகின்றார்கள். ஏமாற்றும் அரசியல் வாதிகளும் பேசுகின்றனர். அவர்களுக்கு உடந்தையாக செயற்படும் மதத்தலைவர்களும் பேசுகின்றனர். அரசு சார்பற்ற நிறுவனங்களும் பேசுகின்றன, முப்படைத் தளபதிகளும் பேசுகின்றனர், தமிழினத்தை அடிமைப்படுத்தி ஆட்சி செய்யவேண்டுமென்போரும் பேசுகின்றனர். பௌத்த சிங்களம் - ஒரு கொடி, ஓர் இனம், ஒரு மொழி, ஒரு மதம் என்று அடித்துச் சொல்வோரும் பேசுகின்றனர்.

சமாதானத்தோடு இன்னொரு சொல்லையும் இணைத்து 'ஒப்புரவும் சமாதானமும்' என்று சொல்வோரும் உண்டு. இவர்கள் எல்லாம் பெரும்பான்மையும் ஈழத்தமிழர்களுக்கு அதுவும் இலங்கையின் வட கிழக்கே வாழும் ஈழத் தமிழர்களுக்கே 'ஒப்புரவு-சமாதானம்' தேவை என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட பேச்சு இலங்கையின் தென்பகுதியில் - அதாவது சிங்கள மக்கள் மத்தியில் பேசுவது குறைவு இல்லை என்றும் துணியலாம். அடக்கப்படுவோருக்குத் தான் ஒப்புரவு-சமாதானமா? அடக்குவோருக்கு ஒப்புரவு-சமாதானம் இல்லையா?

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல, ஒடுக்கப்படுவோரை மிதித்துக்கொண்டே மிதிப்போர் சமாதானம் பேசும் விந்தை இந்த நாட்டில் மட்டும் தான் நடக்கிறதா? இதில் உள்ள முரண்பாட்டைக் கூடக் காணாதவர் சமாதானம் பேச முடியுமா?

ஒரு பொருளா?

சமாதானத்தை கட்டியெழுப்புவோம் என்றும், சமாதானக் குழுக்களை (Peace-clubs) உருவாக்குவோம், சமாதானப்பயிற்சிகளை வழங்குவோம் - என்று கொடிகட்டி வருவோரும் உண்டு. கட்டியெழுப்புவதற்கு சமாதானம் என்ன ஒரு பொருளா?

நீதி

இந்த நாட்டில் வாழும் ஈழத்தமிழர்களுக்கும், மலைநாட்டில் மிகவும் கேவலமான முறையில் ஒடுக்கப்பட்டுவரும் மலைநாட்டுத் தமிழர்களுக்கும், இஸ்லாமியருக்கும் நீதி கிடைக்குமட்டும் இந்த நாட்டில் சமாதானத்திற்குப் பேச்சே இல்லை. இந்த நீதி வழங்கலை இழுத்தடிப்பதற்கு இனியும் கால அவகாசம் இல்லை. இன்று, இல்லையென்றால் என்றும் இல்லை. ஆகவே, சமாதானமும் இல்லை.

இந்த சமாதானம் பேசுவோரின் இரட்டை வேடம் இருக்குமளவும் சமாதானம் இல்லை. இந்த சமாதானம் பேசுவோரின் இரட்டைவாதம் குடிகொள்ளுமட்டும் சமாதானத்திற்கு இட மில்லை. அகத்தே சமாதானம் இன்றி புறத்தே சமாதானம் பேசுவதுதான் இரட்டைவாதம் (dualism).

சமாதானம் என்றால் என்ன?

சமாதானம் **அகத்தே** இருந்து வருவதே யொழிய புறத்தில் இருந்து வருவதல்ல. ஆகவே, வெளியில் இருந்து சமாதானத்தை மக்களி டையே புகுத்த முடியாது. சமாதானம் ஒரு தனி நபரில் ஆரம்பமாகின்றது. ஆரம்பமாகவேண் டும். எங்ஙனம்? மனிதர்களாகிய நாமனைவரும் பிறக்கும் பொழுது கருத்தோ, உணர்வோ பதி யாத உள்ளத்துடன் (tabularasa) பிறக்கின் றோம். வளரும்பொழுது உள சமூகத்தொடர்பு களால் அந்த உள்ளம் பிளவுபட ஆரம்பிக்கின் றது. காலத்தினூடாக அவரவர் உளவள சமூக கலாசார தொடர்புகளால் இந்தப் பிளவு பெரிதும் சிறிதுமாக வளர்கின்றது. இந்தப்பிளவினாலும் முரண்பாடுகளாலும் மனித உள்ளம் அகத்தே ஓர்ஒற்றுமையின்றி (unity) வாழுகின்றது.

மனிதர் மிருகமாக மாறுவதற்கும், மிருகங் களைவிடக் கேவலமாக நடந்து கொள்வதற்கும் இந்த அகப்பிளவு, அகத்தே உருவாக்கப்பட்ட முரண்பாடுகள் அடித்தளமாக அமைகின்றன.

திடீர் கொலைகள், திட்டமிட்ட கொலைகள், சிறுவர் துர்பிரயோகம், கொள்ளை, திட்டமிட்ட பெருங்களவுகள், சிறு களவுகள், பொய், பதவிப் போராட்டம், அதிகாரவெறி, அடக்குமுறைகள்,- சுருங்கச்சொன்னால் அனைத்துத் தீமைகளும், மனிதம் அல்லாத அனைத்திற்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது இந்த அகப்பிளவு. அக முரண்பாடு. அகத்தே ஒற்றுமை அல்லது ஐக்கி யம் இல்லாமையே என்று துணியலாம்.

இந்த அகப்பிளவினாலேயே நான் என்னில் இருந்து பிரிக்கப்படுகின்றேன். நான் என்னில் இருந்து பிரிக்கப்படும் பொழுது நான் என்னை மற்றவர்களிடமிருந்தும், சூழலில் இருந்தும் பிரித்துவிடுகின்றேன். இந்தச் சூழலில்தான் வன் செயல் ஆரம்பமாகின்றது. இந்தப் பிரிவினால், நான் மற்றவர்களை எதிரியாகப்பார்க்கின்றேன். மற்றவர்களை எனக்கு ஓர் அச்சுறுத்தலாகப் பார்க்கின்றேன். அத்தகைய அச்சுறுத்தலை அழிக்கவேண்டும், அகற்றவேண்டும் என்ற எண்ணம் தோன்றும் பொழுது வன்செயல் உரு வாகின்றது.

பிரிக்கப்பட்டதை ஒன்றிணைக்கும் பொழுது அகத்தே ஓர் ஒற்றுமை (unity) தோன்றும். ஒரு முழுமை தோன்றும். அங்குதான் சமாதானம் தோன்றும். சாந்தி நிலவும். பிளவுபட்டதை இணைக் கும் பொழுது தான் சமாதானம் வெளித்தோன் றும். சாந்தி நிரந்தரமாகும்.

சமாதானத்தை நாம் கட்டி எழுப்ப அது ஒரு பொருளல்ல. சமாதானம் உள்ளத்தின் ஆழத் தில் உண்டு. ஆனால், அகப்பிளவினாலும் முரண் பாட்டாலும் அந்த சமாதானம் மறைக்கப்பட் டுள்ளது: அழிக்கப்படவில்லை.

வெளியில் தோன்றும் பேரழிவுகளின் ஆழத் தில் ஓர் ஒழுங்குண்டு. (there is order beneath the chaos). அதே போன்று, மனிதரின் விரும் பத்தகாத, ஒழுக்கத்துக்கு ஒத்துவராத செயல்க ளின் பின்னர் அவர்களுடைய ஆளுமையின் ஆழத்தில் ஒரு தெய்வீகம் உண்டு, ஓர் அமைதி உண்டு, அங்கு சமாதானம் உண்டு. அந்த ஆழத்

திற்குச் செல்வது ஒரு பயணம். இப்பயணத்தை மேற்கொள்பவர்கள் அந்த ஆழத்தில் உள்ள சமாதானத்தை அனுபவிப்பார்கள். இவர்கள் தான் சமாதானத் தூதுவர்கள். பானையில் இருந்தால்தான் அகப்பையில் வரும். என்னுடைய உள்ளத்தில் சமாதானம் இருந்தால்தான், அதாவது நான் அகத்தே சமாதானத்தை அனுபவித்தாலே ஒழிய நான் ஒரு சமாதானத் தூதுவனாக முடியாது. என்னில், என்னுள் இல்லாத ஒன்றை நான் மற்றவர்களுக்குக் கொடுக்கமுடியாது. ஆம், சமாதானம் ஒரு பொருள் அல்ல: அது, அகத்தே உணரப்படும் ஓர் அனுபவம். நான் என்னுடன் ஐக்கியமாகும் ஓர் அனுபவம் (at one with oneself).

உனக்குப் பகைவர்கள் உண்டா? எதிரிகள் உண்டா? அவர்களுடன் உறவாடு. அவர்களுடன் நட்பாகு. இது, சமாதானத்திற்கு வழி. நடந்தவற்றினால், கசப்பான அனுபவங்களினால் உலகைப் பார்க்கின்றாயா? உறவாடு, நட்பாகு. இது, சமாதானத்திற்கு வழி.

சிங்கள மக்கள் தமிழர்களை எதிரிகளாகவும் அச்சுறுத்தலாகவும் பார்க்குமட்டும் சமாதானக் கதவுகள் மூடப்பட்டுத்தான் இருக்கும். அதே போன்று தமிழர் சிங்களவர்களை எதிரிகளாகவும், அச்சுறுத்தலாகவும் பார்க்கும் மட்டும் சமாதானப் பேச்சிற்கு இடமில்லை.

போரின் பின்னர் சமாதானமா?

போர்க்காலத்தில், ஒரு சமாதானச் செபம் சொன்னார்கள். மக்களைச் சொல்லவைத்தார்கள். ஆனால், போரின் காரணங்களை உய்த்தறிந்து, அவற்றைப் புரிந்துகொண்டு. நீதி நிலவ செயற்பட்டார்களா? இல்லை, போர் முடிந்ததும் அச்செபம் சொல்லப்படுவதில்லை. ஏன்? நாட்டிற்கு சமாதானம் 'வந்து' விட்டதா? சில இலங்கையர் அதுவும் சில துறவிகள் போரின் காரணத்தை அறியாது அறிய விரும்பாது, வெளி நாடுகள் செல்லும் பொழுது "இப் பொழுது போர் முடிந்து, சிறீ லங்காவில் சமாதானம் உண்டு" என்று அயல்நாட்டவர்களுக்குச் சொல்லுகின்றனர். போர் முடிந்தும் நிறை வேற்றப்படாத பல விடயங்களை மேலே நான் எழுதியுள்ளேன்.

சிறுவர்கள் சிலரை அவரவர் கலாசார உடைகளில் உடுத்தி அவர்களை ஒன்றாக வைத்துப் படமெடுத்து விளம்பரம் செய்கிறார்கள். இதற்கு சில ஊடகங்களும் ஒத்துப்பாடுகின்றன. இது, சமாதானத்தின விளம்பரமா? அன்றேல், மக்களை ஏமாற்றும் விளம்பரங்களா?

அநீதியை ஏற்றுக்கொள்ளுதல் சமாதானம் இல்லை. (Passive acceptance of injustice is not peace). முரணாக, அவ்வகையான ஏற்றுக் கொள்ளுதல் சமாதானத்திற்கு ஓர் அச்சுறுத்தலாகவே அமையும்.

மலை உரையின் மகத்துவம்

இயேசு தனது பணிவாழ்வின் துவக்க உரையில் அழகாகவும் ஆழமாகவும் சொன்னார்:

"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்" (மத்.5:9)

அதாவது, பிளவுபட்டதை ஒன்றிணைக்கும் பொழுது அகத்தே ஓர் ஒற்றுமை (unity) உருவாகும். அந்த ஒற்றுமையில், முழுமையில் (wholeness) ஒரு தெய்வீகத்தை அனுபவிப்பார்கள். மனிதரில் இந்த தெய்வீகம் உண்டு. "இறைவன் சாயலாக நாம் படைக்கப்பட்டோம்" இந்த சாயல்தான் அந்த தெய்வீகம். ஆயினும், மனித வளர்ப்பில், உளவள சமூகத்தாக்கங்களினால் அந்தத் தெய்வீகம் மறைக்கப்பட்டு எட்டாத் தூரத்தில், மேலெழுந்தவாரியான வாழ்வில் அனுபவிக்கமுடியாத ஆழத்தில் உண்டு. இந்தத் தெய்வீக அனுபவம்தான் "கடவுளின் மக்கள்" என்ற உணர்வு. அதாவது, "நான் கடவுளில்" என்ற உணர்வு. இவர்கள் தான் சமாதானத் தூதுவர்கள்.

இப்படிப்பட்ட சமாதானத் தூதுவர் அரசியல் வாதிகளிடையே உள்ளார்களா? மதத்தலைவர்களிடையே உள்ளார்களா? அரசசார்பற்ற

நிறுவனங்களில் உள்ளார்களா? இவர்கள்பால் எச்சரிக்கையாக இருப்பது தமிழினத்தின் பொறுப்பு.

மறைஉரையை உன்னிப்பாகப் பாருங்கள். மத்தேயு எழுதிய நற்செய்தியில் ஐந்தாம் அதிகாரம் 6-9 வரையிலான வசனங்களைப் பாருங்கள். அவற்றினிடையே இழையோடும் தொடர்பினைப் பாருங்கள்.

"நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர்...

"இரக்கம் உடையோர்...

"தூய்மையான உள்ளத்தோர்..." தான்

"அமைதி ஏற்படுத்துவோர்". ஆகவே அமைதிக்கு முன்னர் தூய்மை, இரக்கம், நீதி இருத்தல் வேண்டும்.

நீதியின்றி சமாதானம் இல்லை

இன்று சமாதானம் பேசுவோர், நீதியை மறந்து விடுகிறார்கள், இல்லை மறுத்து விடுகிறார்கள். ஒப்புரவு பேசுவோர் நீதி பேச, நீதியை நிலைநாட்ட மறுக்கிறார்கள். இவர்கள் சமாதானத் தூதுவர் அல்லர். இவர்கள் ஏமாற்றுவோர். இவர்களை இனம்கண்டு ஒதுக்குவது தமிழினத்தின் கடமை. ஏமாற்றத்திலேயே நம்பிக்கை வளர்த்த தமிழினம் அந்த உளவளச் சிக்கலில் இருந்து விடுபடவேண்டும். அடிமைகளாக வாழப் பழகிக்கொண்டால், காலப்போக்கில் அடிமைகளென்ற உணர்வே இன்றி மரத்துப் போவோம். இதை உணர்ந்தவர்கள் அடிமைப் படுத்துவோர். இவர்கள்தான் "ஒப்புரவு-சமாதானம்" பேசி வடகிழக்கிற்கு படைஎடுப்போர். இவர்கள் "கடவுளின் மக்கள்" அல்லர். இவர்கள் அகத்தே பிளவுபட்டோர். தம்முள் முரண்பட்டோர், போலிகள்.

முரணாக, இயேசு சுட்டிக்காட்டிய சமாதானத் தூதுவர் ஞானிகள். அனைத்தையும் துறந்துவாழும் உண்மையான துறவிகள். (நிறுவனமாக்கப்பட்ட துறவிகள் அல்ல). தம்மையே வெறுமையாக்கி, அந்த வெறுமையில் நிறைவு காணும் ஆன்மீகத்தவர். இவர்கள் எங்கே? அங்கே சமாதானம் உண்டு: அங்கே அமைதி நிலவும்.

– கரவையூர்ச் செல்வம்

Peace is not an Object

Introduction

Every now and then, a word would prop up, then it is repeated ad nauseam, misused and eventually even abused. One such word is “peace” used here in Sri Lanka during the latter part of the 36 year long war, and used more often soon after the war. Many organizations, NGOs, and even some institutions of the Catholic Church used this word often. They began talking about ‘peace building’ as if peace is build from the outside like building a house for example. Some religious organizations were talking about ‘peace clubs,’ as football clubs!

Soon, they joined another word to this peace and used a phrase “reconciliation and peace.” Strangely, this often happened mostly in the North and East of Sri Lanka but hardly ever in the South! Are they saying it is the oppressed who need to reconcile with the oppressor? Or, the defeated need to talk reconciliation with the victor? Who is to reconcile with whom?

Present Situation

It’s nearly seven years since the war was brought to a close with defeat of the LTTE. Who are the people who rejoiced and even celebrated thanksgiving Masses? Who suffered most in this prolonged war? Who lost most? Until today the rights of the Thamils have notbeen given. The whereabouts of the women and men who surrendered to the armed forces during the end of the war

are not revealed still to the kith and kin. The successive governments are tight-lipped about those who have disappeared. However, there is no limit to lip-service at the same time. It is this dualism or divisiveness that creates mistrust in our "good governance," as well as in the Thamil politicians.

There are Thamil political prisoners who are languishing in the prisons in the South who until this writing have not been brought to courts for a trial. It's nearly 20 years since these men have been in prison, which is equivalent to a life-time sentence. What are the charges against them? The land of the Thamil people in the North and East that were forcibly taken by the armed forces and the police have not been given back to the owners. Although some land has been given. Although the 'white van' syndrome is no more the 'syndrome' of arresting young men in the North continues as of this writing. The people of the North and East are increasingly losing their trust not only in the 'good governance' but also in their own representatives, namely the TNA. From the day of our Independence, the Thamils in this country (including the Estate Thamils, obviously an unwanted distinction) have been continuously cheated. So much so they seemed to have learnt that it is only in being cheated they can have hope. This is a pattern of learning behaviour which is self-defeating and self-destructive. Under these circumstances, who has the right to speak about reconciliation and peace to whom? While continuing to oppress the oppressed, the oppressor speaks of reconciliation and peace to the oppressed. Strange indeed!

No Justice, No Peace!

Further, the women and men who speak of reconciliation and peace do not speak about justice at all. Has justice been meted out to the people in any way? The president of the good governance has categorically said the armed forces will not be taken to courts under any circumstances. The government seems to say that because the armed forces won the war for us or saved the country from being divided they should not be tried for any crime. One can praise the armed forces for defeating the LTTE, but that does not excuse them of crimes committed against humanity.

Soon after the 1977 pogrom, David Selbourne, the British historian and journalist visited SriLanka and eventually wrote an article in the then Illustrated Weekly of India. The opening sentence of that article is: *"The tragedy of Sri Lanka is that crime goes unpunished."* How true it is! The successive governments in Sri Lanka have always let the guilty go free. How many broad daylight murders like for example the killing of the editor of the Sunday LeaderWickramasinghe, and more recently the Tamil Parliamentarians Pararajasekaram and Raviraj have not been justly tried. My prediction is, based on what David Selbourne said, this country will continue to commit crimes and the criminals will go free especially when the suspects are from the armed forces, the police and the politicians. One can understand where this country will end up.

Silence of the Religions

All major religions of this country have colluded with crime while speaking and even praying for peace. Could these pharisaical-prayers be heard? This is the further tragedy of this country. Please think honestly. A small country like ours, with all four major religions thriving externally, how much of blood have we shed in the name of religion and race? Do not forget the mass killings that took place with the JVP uprising. Has there

been any justice meted out to anyone? In such a background, reconciliation and peace is a far cry!

Peace

Peace is not something that can be built from the outside. Nor,could it be discussed in 'peace clubs' and some resolutions taken for others. Peace is an inner experience of a person.

When we are divided within there will be no peace. When we are disconnected with ourselves within there will be no peace. Divisiveness is all over not only in this country but in the whole world. The world is dividing itself more than uniting, and they call themselves civilized. We may have reached a peak in technology but that does not mean that we are in the peak of civilization. The economists have repeatedly said down the years that there is enough resources in the world for all to live. The greediness of a few who do not want to share the resources is the sin of the world. It is this greediness that is also raping the earth for the benefit of a few. Unfortunately, this greediness is increasing.

Jesus came to unite and not to divide. But, in the name of Jesus there are so many divisions. The human beings are very divisive. Satan is in divisiveness. This is the root of all sins and evil.

Look at the beatitudes that have universal values. The beatitudes are integral and looked at as one flowing from another. Let me reflect on a few that are relevant to this article.

"*Blessed are those who hunger and thirst for righteousness, for they will be filled."* Mt. 5:6

"Blessed are the merciful, for they will receive mercy." Mt. 5:7

"Blessed are the pure in heart, they will see God!" Mt. 5:8

"Blessed are peacemakers, for they will be called children of God." Mt.5: 9.

First, we are called to be righteous, just , then merciful to others. We need to be pure in heart, and we will be pure in heart if we are not divided within, if we are not disconnected from within, and if we are not divisive within we will experience the divine in us. These are the people who are righteous, just, merciful, compassionate,and pure in heart who could facilitate the process for peace in others. Because they are at peace with themselves.

How can someone who is not peaceful within, who are not at peace with themselves help others to experience peace? These women and men that the beatitudes speak of are the great wise women and men a country can be proud of. Do we have such women and men amidst us? What have our religions produced? More hatred, more division, more conflict, and more oppression. Are these religions worthy of being religions? Are not our religions more an obstacle to peace than a help? A reform of our religions as practiced now and promoted is urgently called for. Will our religious leaders hear this cry of our people in the first place?

A Way Forward…

Contemplation is the key to a renewed humanity that is capable of seeing the world and other subjects in the world with freedom. And what is this freedom? Rowen Williams, the former Archbishop of Canterbury says: *"freedom from self-orientation."*It is the recognition that life isn't all about me. Until you're free from yourself, you can't be free in the spiritual sense. You can have political or economic freedom, but if you are not free

from your own ego, from your own centrality inside your own thinking, I don't think you are free at all. In fact, your actions and behaviour will be totally predictable. Everything will revolve around your security, survival, self-protection, self-validation, self, self, self !

Those who have freed themselves from self -orientation are the people who can truly be the peacemakers in this world.These are the women and men who will be peacemakers. Do we have them in this country? Will our religions pave the way for such women and men to arise from among us?

S.M. Selvaratnam

Politico, Socio, Economic and Cultural issues of North and East in the Post armed conflict Era

ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரான வடக்கு மற்றும் கிழக்குத் தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு விவகாரங்கள்

1. போரும் மனித குலமும்

மனித வரலாறு, எவ்வளவு பழமையானதோ, அதே போன்றுதான், போரும் மனித வரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே இருந்து வருகிறது. நிலம், இயற்கை வளங்கள், நீர், இவற்றைத் தனதுடைமையாக்கிக் கொள்ளப் போர் நடைபெற்று வருகிறது. மேலும், இனத்தின், மொழியின், மதத்தின் பெயரால், தத்தம் மேலாண்மைகளை நிலை நாட்டுவதற்காகப் போர் தொடுக்கின்றனர். வரலாற்றில் நடைபெற்ற போர்களில் மதத்தின் பெயரால் நடந்த போர்கள்தான் அதிகமாகவும், அதிக உயிரிழப்புக் களையும், அதிக சொத்தழிப்புக்களையும் ஏற்படுத்தியவையாகக் காணப் படுகின்றன. தற்போது மத்தியகிழக்கு நாடுகளில் நடைபெறும், பெரும் உயிரிழப்புக்களை உள்ளடக்கிய போரும் மதத்தின் பெயரால் நடை பெறுகிறது. இன்று போரை வரையறை செய்யும்போது, இறையாண்மை கொண்ட இரு நாடுகளுக்கிடையில் நடைபெறும் வன்முறைப்பட்ட மோதலை 'போர்" என்றும், ஒரு நாட்டினுள் இன, மத, மொழியின் பெயரால் நடைபெறும் மோதலை 'உள்நாட்டுப் போர்' என்றும் வரையறை செய்யலாம்.

போருக்கு அடிப்படையாக அமைவது முரண்பாடுகள் (conflict) என 'முரண்பாட்டுத்தீர்வு' கற்கைகள் எமக்குக் கூறுகின்றது. மேலும், இக் கற்கையானது, குடும்பம், இனம், சமூகம், சமுதாயம், நாடு எதுவாக இருந்தாலும் முரண்பாடுகள் இல்லாமல் இருக்கமுடியாது என வாதிடுகின்றது. மனித இனம் இருக்கும் வரைக்கும் முரண்பாடுகள் இருக்கத்தான் செய்யும். முரண்பாடுகள் தொடரும் வரை போர் மனித வரலாற்றின் சமூகப் பொருண்மையாகும் (social phenomenon), 'முரண்பாட்டுத்தீர்வுக்" கற்கையானது முரண்பாடுகளைத் தவிர்க்க அல்ல, மாறாக எவ்விதம் முகாமைப்படுத்துவது அல்லது முரண்பாட்டுக்கு முகம்கொடுப்பது எனக் கற்பிக்க முயல்கின்றது. அதாவது, முரண்பாட்டினை உடன்பாட்டிற்குத் திசை திருப்பத் தேவையான செயற்பாடுகளைச் சுட்டி நிற்கின்றது.

'போர்' எப்போதும் தீயது (evil) ஆயினும், உலக வரலாற்றில் போருக்குப் பின்னர்தான் மேம்பாடு, (அபிவிருத்தி), அவற்றிற்கான கட்டுமானங்கள் செயற்திறனுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும். ஒரு வகையில் போர் பல நாடுகளின் சமூக, பொருளாதார, பண்பாட்டுக் கட்டமைப்பு மாற்றங்களுக்கு வித்திட்டது எனலாம். இரண்டாம் உலகப்போரிற்குப் பின்னரான சூழமைவு, ஐக்கிய நாடுகள் சபை (UN) என்ற பாரிய வலைப்பின்னலைக் கொண்ட கட்டமைப்பை கருக்கொள்ள வைத்தது. அது இன்று வல்லரசுக்களின் மேலாண்மை நாடுகளின் பிடியில் சிக்குண்டு திசைதிருப்பப்பட்டாலும், அதனால் ஏற்பட்ட, ஏற்படுகின்ற நேர்மறை, எதிர்மறை விளைவுகளின் செல்வாக்கு "ஒரு புதிய உலகை" உருவாக்கியுள்ளது. அதன் விளைவுகளை, மனித உரிமைகள், அவை மீறும் போது வகைகூறல், பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தவிர்த்தல், மத, இன, மொழி, பால் என்ற அடிப்படையில் ஏற்படும் பாகுபாடுகளைக் குறைத்தல் அல்லது கதைத்தல் போன்ற விவகாரங்களை முன்னிலைப்படுத்தி முரண்பாடுகளை முகாமைப்படுத்துவதில் மனித இனம் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது. எனவே 'போர்கள்' வரலாற்றின் திருப்புமுனைகளாக மாறியிருப்பதையும் அவதானிக்கலாம்.

கடந்த மூன்று தசாப்தங்களாக உள்நாட்டுப் போர் இலங்கையின் வடக்குக் கிழக்கில், சமூக, பொருளாதார, உளவியல், பண்பாட்டுத் தாக்கங்களைத் தோற்றுவித்துள்ளது. இத்தாக்கங்கள், தமிழ் சமூகத்தின் பண்பாட்டை ஒருவகையில் 'போர்ப்பண்பாடாக' மாற்றியுள்ளது (culture of war). ஆயுதப்போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டாலும் 'போர்ப் பண்பாட்டின்' விவகாரங்கள் (issues) தொடர்கின்றது. இதனால் தமிழ் சமுதாயத்தில் பல புதிய பொருண்மைகளை அவதானிக்கலாம்.

2. ஆயுதப்போராட்டத்தின் முடிவும் - இனப்பிரச்சினையும்

இரண்டாயிரத்து ஒன்பது, வைகாசித் திங்கள் பத்தொன்பதாம் நாள், இலங்கையின் மூன்று தசாப்தங்களுக்கு மேலான ஆயுதப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகக் கணிக்கப்படுகின்றது. தமிழர்களின் மரபுவழி ஆயுதப் போர் முடிவடைந்துள்ளது. அதற்கு மேலாக, இலங்கையில் ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக இருந்த அரசியல், இன, சமூகப் பிரச்சினை முடிவிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக (தெற்கின்) அரசியல்வாதிகளும், ஊடகங்களும் குறிப்பிடுகின்றன.

சமூகப் பிரச்சினை என்பது பற்றிய ஒரு செயற்பாட்டு வரைவிலக்கணத்தின் தேவை இக்கட்டத்தில் காத்திரமாய் அமைகின்றது. அமெரிக்க சமூகவியலாளரான ஏள் றுபிங்ரன் (Earl Rubinton, 1987) என்பவர் தனது நூலில் (The Study of Social Problems) கூறியுள்ள வரைவிலக்கணம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

"செல்வாக்கு நிறைந்த மக்கள் தொகுதியினரின் விழுமியங்களுக்கு ஒவ்வாததாய் அமைந்து

காணப்படும் ஒரு சூழ்நிலையும், அச் சூழ் நிலையை மாற்றியமைப்பதற்கு ஒரு திருத்த நடவடிக்கை அவசியம் என அச் செல்வாக்கு நிறைந்த மக்கள் தொகுதி கருதினால் அச் சூழல் ஒரு சமூகப்பிரச்சனையாகும்".

எமது நாட்டில் யார் இந்த செல்வாக்குச் செலுத்தும் மக்கள் தொகையினர் என்ற வினா விற்கு, பெரும்பான்மையினரான பௌத்த சிங்க ளவரே விளங்குகின்றனர். இவர்களின் நிலைப் பாடு இலங்கை தமக்கே சொந்தம், மறுபுறத்தில் தமிழர்களின் நியாயபூர்வக் கோரிக்கைகளான சுயநிர்ணயம், தமிழர் ஒரு தேசிய இனம், தமிழ் மரபுவழித்தாயகம் போன்ற நிலைப்பாடு முரண் படுகின்றது. இச் சூழலை நாம் ஒரு சமூகப் பிரச்சனையாக வரையறுக்கலாம். இச் சமூகப் பிரச்சனை நீண்டகால சமூகப்பிரச்சனையாகக் காணப்படும் ஒரு சமூகப்பொருண்மையாகும். மேற்கூறிய வரைவிலக்கணத்தின் அடிப்படை யில் இலங்கையில் இனங்களுக்கிடையிலான சமூகப் பிரச்சினை முடிவுக்கு வரவில்லை. ஆயு தப்போர் முடிவுற்றாலும் ஏற்பட்ட முரண்பாட் டுக்குத் தீர்வு காணாத ஒரு சூழ்நிலை தொடர்ந்து நிலவுகிறது.

ஜெறோம் மனிஸ் (Jerome Mannis) என்பவர் ஒரு மாதிரி சட்டகத்தின் மூலம், ஆயுதப்போர் ஒரு ஆரம்பநிலை சமூகப்பிரச்சினையாகவும், இரண்டாம், மூன்றாம் நிலைப்பிரச்சினைகள் ஆரம்ப நிலை சமூகப்பிரச்சினையின் விளைவு களே எனக் கூறுகின்றார். (பின்னிணைப்பை பார்க்கவும்.) ஆரம்ப நிலைச் சமூகப்பிரச்சினை (போர்) ஒரு உறங்கு நிலையில் இருந்தாலும், இரண்டாம், மூன்றாம் நிலைப்பிரச்சினைகள் வடக்குக் கிழக்கு சமூகத்தில் இன்னும் தொடர்ந்து பல எதிர்மறைப் பின்விளைவுகளைத் தோற்றுவித் துக்கொண்டிருக்கின்றது.

3. போரும் பண்பாட்டு மாற்றங்களும்

வடக்குக் கிழக்கின் போர் சமூகவியலை விளக் குதல் இன்றியமையாததாகும். மூன்று தசாப்த போர் கணிசமான சமூக பின்விளைவுத் தாக்கங் களை ஏற்படுத்தியுள்ளது. இதனைப் புரிந்து கொள்வதற்கு சமூக ஒழுங்கமைவின்மைக் (social dis-organization) கோட்பாடு உதவியாக அமைகின்றது. இச் சமூகப் பொருண்மையினை மூன்று பிரதான நிலைகளில் நோக்கலாம்.

3: அ) நியம, மறுநிலை (Normlessness)

நியமம் என்பது 'இப்படித்தான் நடத்தைகள் இருக்கவேண்டும்' என்னும் நிலையை குறிப்ப தாகும். சமூகத்தில் விதிகள், நியமங்கள் இல்லா நிலை காணப்படுமேயானால் அங்கு சமூக சீர் குலைவு காணப்படும் என சமூக ஒழுங்கமை வின்மையாளர்கள் வாதிடுவார்கள். உதாரண மாக 1995ல் ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வு, கணிசமான அளவு நியமமறுநிலையைத் தோற்று வித்தது எனலாம்.

வடகிழக்கில் தமிழர்களிடையேயுள்ள சமூ கக் கட்டமைப்பை நோக்கும்போது, தமிழ் சமூக அமைப்பென்பது அடிப்படையில் அதிகார அடுக்குகளையுடையது. அந்த அதிகார அடுக்கு முறையானது சாதியத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தது. தமிழ் பாரம்பரிய சமூக அமைப்பென்பது பௌதீக ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் வேளாள சாதியினரின் முதன்மையுடையது. மேலும் காலணித்துவ ஆட்சியாளரும் தமது ஆட்சியை தடங்கலின்றித் தொடர்வதற்கு வேளாளர்களது சமூக மேலாண் மையைப் பலப்படுத்தும் செயற்பாடுகளையே மேற்கொண்டனர். ஆனால் இடப்பெயர்வுகள், சாதிய மேலாண்மை, தீண்டாமை போன்ற பாரம் பரிய நியமங்களைக் கணிசமான அளவு மாற்றி யது என்பதே உண்மை. விடுதலைப் போராட்ட இயக்கங்கள், மொழி ஒடுக்கு முறைக்கு எதிராக மட்டுமல்ல, சமூக ஒடுக்கு முறைக்கு எதிராக வும் மக்களைச் சிந்திக்க வைத்ததுடன், செயற் பாடுகளிலும் முனைப்பாக ஈடுபட வைத்தன .

இடப்பெயர்வுகள் சமூகத்திலிருந்த பல பாரம்பரிய செயற்பாட்டு முறைமைகளையும் மாற்றியமைத்தன. யாழ்ப்பாணத்தின் நில இடக் குறிச்சிகள் பொதுவாக சாதியின் அடிப்படை

யில் அமைந்திருப்பது நோக்கத்தக்கது. இடப் பெயர்வின் போது ஏற்படுத்தப்பட்ட முகாம் வாழ்வு இத்தகையதொரு சாதிய அடிப்படை வாழ்விடங் களின் சூழமைவை மாற்றிவிட்டது. இருபத்தாறு வருட வலிகாமம் வடக்கு இடப்பெயர்வு வாழ்வு, இந்நிலையை விளக்க நல்ல உதாரணமாக அமைகின்றது.

3: ஆ) பண்பாட்டு முரணியல் நிலை (Culture conflict)

ஒன்றுக்கு மேற்பட்ட நியமங்கள் ஒன்றுக் கொன்று இடைவினை கொள்ளும் போது முரண் பாடுகள் ஏற்படலாம். உதாரணமாக புலம்பெயர் தமிழர்களின் பண்பாட்டு நியமங்கட்கும் மேலைத் தேச பண்பாட்டு முறைமைகட்கும் இடையில் இடைவெளி காணப்படுகின்றது. தமிழர்களின் நியமமாக திருமணத்தினூடாக 'ஒருவன் ஒருத் திக்கு' என்றிருக்கையில் மேலைத்தேச பண் பாட்டு நியமமாக திருமணமாகாமல் இணக்கத் தின் அடிப்படையில் ஆண் பெண் கூடிவாழும் நிலை காணப்படும் போது, பண்பாட்டு முரண் பாடு ஏற்படுகின்றது.

போரின் விளைவுகள் தமிழர் சமூகக் கட்ட மைப்பில் பாரிய மாற்றத்தினையும், இடைவெளி யையும் ஏற்படுத்தியுள்ளது. பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சமூக விழுமியங்கள், நியமங்கள், விதிகள், வழக்காறுகள் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் புரட் சிக்குப் பின், பொதுவாக நடைமுறையிலிருந்த கூட்டுக்குடும்ப வாழ்வு மாற்றமடைந்து தனிக் குடும்பமாக (கருக்குடும்பமாக) வேறு ஒரு தளத் திற்கு மாற்றப்பட்டுள்ளது. இது பல நாடுகளில் நடைபெற்றாலும், வடகிழக்கில் இடப்பெயர்வு காரணமாக, கிராமங்களில் குறிச்சிகளிடையே ஒருங்கிணைந்த கூட்டுக்குடும்ப வாழ்வு தனிக் குடும்பமாக மாற்றமடைந்துள்ளது. போருக்குப் பின்னரான மீள்குடியமர்வு சூழமைவில், மீண் டும் கிராமிய குறிச்சிகளிடையே ஒருங்கிணைந்த கூட்டுக்குடும்ப வாழ்வு ஏற்படுவதற்கான சாத் தியம் இல்லை. காரணமெதுவெனில், கணிச மானவர்கள் புலம் பெயர் அகதிநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே பாரம்பரிய விழு மியங்கள், நியமங்கள் பேணப்படுவதற்கான சாத்தியம் குறைவடைந்துள்ளது.

3: இ) சமூக உடைவு அல்லது ஒழுங்கமைவின்மை

கோட்டன் (P.B.Horton) கன்ட் (CL Hunt) என்பவர்களின் கூற்றுப்படி சமூக ஒழுங்கு (Social order) என்பது, மக்களின் செயல்பாடுக ளுக்கும், நடத்தைக் கோலங்களுக்குமிடையே யுள்ள ஒரு ஒழுங்கு முறைமையே. உதாரண மாக நகரங்களில் பல்லாயிரக்கணக்கான வாக னங்கள், விபத்துகளின்றி ஓடிக்கொண்டேயிருக் கின்றது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் கள் வெவ்வேறு இடங்களில் உழைத்து, மக் களின் அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தவண்ணமிருக்கின்றனர்.

சமூகத்திலுள்ள தனி நபர்கள், தங்கள் வகி பாகங்களையும், கடமைகளையும், மற்றவர் களுக்காக செய்யும் போதும், ஒருவரொருவரு டைய உரிமைகள் மதிக்கப்படும் போதும், சமூக ஒழுங்கு சமுதாயத்தில் பேணப்படுகின் றது. பெரும்பான்மையான மக்கள் கடமைகளை யும் உரிமைகளையும் மதித்து செயல்படும் போது சமூக ஒழுங்கு ஏற்படுகின்றது. மக்கள் இப்படிச் செயற்படுவதற்கு சமூகத்தில் காணப் படும் பொறிமுறையாக 'சமூகக் கட்டுப்பாடுகள்' (social control) அமைகின்றது.

சமூக ஒழுங்கு என்பது சமூக ஸ்திரத்தன்மை யிலும் (social stability) தங்கியுள்ளது. துர்க்கை யீம், பர்சன் போன்ற சமூகவியலாளர்கள், நிகழ் காலத்திற்கும், கடந்த காலத்திற்குமிடையே தொடர்ச்சி (continuity) காணப்படாதுவிடின் சமூக ஒழுங்கு இருக்கமாட்டாது என்பர். மேலும் சமூக ஒழுங்கிற்கும் மாற்றங்களுக்குமிடையே இணை ப்பு உண்டு. சமுதாயம் என்பது இயங்கியல் தன்மைகொண்டது. எனவே மாறிக்கொண் டேயிருக்கும். சமூக ஒழுங்கிற்கும், மாற்றத்திற்

குமிடையிலான தொடர்பு முரண்பாடானது அல்ல. ஆனால் மாற்றங்கள் அதிவேகமாக அமையுமானால் சமூக அமைப்பானது அதன் ஒழுங்கை (order) இழந்து, சமூக உடைவிற்கு வழிவகுக்கும்.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் போரின் காரணமாக இச் சமூக ஒழுங்கிற்கான தன்மை கள் பல வழிகளில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. போரின் காரணமாக, மாற்றங்கள், படிப்படியாக அமையாது, துரிதமாக நடைபெற்றுள்ளது. சமூக ஸ்திரத்தன்மை குலைக்கப்பட்டுள்ளது. சமூக விழுமியங்கள், நியமங்கள், வழக்காறு கள் கடைப்பிடிக்கப்படவில்லை. இதன் காரண மாக சமூக ஒழுங்கு பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

4. சமூகத்தில் போரின் தாக்கங்களும் விளைவுகளும் (Impact and Outcome)

போரின் தாக்கங்களாக, நியமமறு நிலை, பண்பாட்டு முரணியல் நிலை, சமூக உடைவு அல்லது ஒழுங்கமைவின்மை போன்ற விவகா ரங்கள் பற்றி சுருக்கமாக மேலே பார்த்தோம். இவற்றின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளை (நாம் பார்த்த சட்டகத்தில் மூன்றாம் நிலை) சுருக்கமாக நோக்குவோம்.

இலியட் ஆர்சன் (Eliot Arason, 1960) என்பவரின் 'சமூக இன்மைப்படுத்தல்' (theory of social deprivation) கோட்பாடு போரின் விளை வுகளை விளங்கிக்கொள்ள உதவியாக அமை கின்றது. சமூக இன்மைப்படுத்தல் என்பது சமூகப் புலங்களில் நிகழ்ந்த போரினால் உரு வாக்கப்பட்ட சமூகப் பொருண்மையாகும். சமூக இன்மைப்படுத்தலினால் ஏற்படும் தாக் கத்தினை இரு தளங்களில் சுருக்கமாக நோக் குவோம்.

4.1 உளச் சமூகத்தாக்கங்கள் (Psyco-social impact)

4.1:1 உளரீதியான பிரச்சினைகள் (Psyco based problems)

4.1:2 சமூகரீதியான பிரச்சினைகள் (Social based problems)

4.2 சமூக பண்பாட்டுத் தாக்கங்கள் (Socio-cultural impact)

4.2.:1 எதிர்மறை சமூக இயக்கம் (Negative social dynamics)

4.2:2 எதிர்மறை குடும்ப இயக்கம் (Negative family dynamics)

4.1 உளச் சமூகத்தாக்கங்கள் (Psyco-social impact)

சமூக உளவியலாளர்களின் நோக்கில் போரி னால் ஏற்படும் தாக்கங்களும் விளைவுகளும் ஆழமாகவும் காத்திரமாகவும் அமைகின்றது என்பர். பாதிப்புக்குள்ளானவர்கள் உளப்பிறழ் வுக்கு உட்படுகின்றனர். அதாவது ஏக்கம், பதக ளிப்பு, மனஅழுத்தம், போன்ற உளமந்த நிலை யினை (mental retardation) இவை உருவாக்கு கின்றன. மேலும் போர்ச் சூழலில் சமூகமயமாக் கப்படும் இளம் சந்ததியினர் வக்கிர உணர்வு டன் காணப்படுவர். இதனால் இவர்களின் சொல், செயல் என்பவற்றில் எதிர் உணர்வைக் காணக் கூடியதாகவுள்ளது. இதனால் சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலை காணப்படுகின்றது. எமது சமூகத்தில் தற்போது காணப்படும், குழுச்சண்டைகள், போதைவஸ்துப் பாவனைகள் சமூகத்திற்கு எதிரான நடவடிக் கைகளாகக் கருதப்படுகின்றது.

போரின் சமூகவியலைப் புரிந்து கொள்ள "ஆளிடைக் கவர்ச்சிக் கோட்பாடு" (theory of Interpersonal attraction or gain and loss theory) உதவியாகவுள்ளது. ஒருவருடன் நெருங்கிப் பழகிவந்தாலும் வேறொருவர் இடையில் வந்து உங்களைப் புகழ்ந்து பாராட்டி சில வெகுமதி களை அளிக்கும் போது புதியவரின் முக்கியத் துவம் பெரிதாகக் கணிக்கப்படுகின்றது. இங்கு 'ஆளிடைக் கவர்ச்சி' வலுப்பெறுகின்றது.

போர்ச் சூழலில் தப்பிப்பிழைக்கும் முகமூடி தரித்த வாழ்க்கைக்கு நிர்பந்திக்கப்பட்டவர்கள்

போர் முடிந்த சூழலிலும் சுயநலத்திற்காக சந்தர்ப்பவாத நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பது சமூகப் பொருண்மையாகக் காணப்படுகின்றது. சூழலிற்கேற்ப தமது கருத்துக்கள், எண்ணங்கள் போன்றவற்றை மாற்றித் தப்பிப்பிழைக்கும் சமூகப் போக்குக் காணப்படுகின்றது. பந்தம் பிடித்தல், பதவிக்காக, பணத்திற்காக எதையும் சகித்துப்போகும் நிலை, போருக்குப் பின்னரான நடத்தைக் கோலங்களாக இருக்கின்றன. இந்நிலை எதிர்கால சந்ததியினரின் இருப்பைக் கேள்விக்குறியாக்குவது மட்டுமல்லாது, முயற்சியாண்மை (entrepreneurship) கடும் உழைப்புப் போன்ற உயர்ந்த விழுமிய வீழ்ச்சிக்குக் காரணமாக அமையும் நிலை போருக்குப் பின்னரான தமிழ்ச் சமூகத்தில் காணப்படுகின்றது.

4.2 சமூகப் பண்பாட்டுத் தாக்கங்கள் (Socio-cultural impact)

போரின் காரணமாகப் பல சமூகப்பிரச்சினைகள் இனங்காணப்படுகின்றது. இவற்றில் முன்னிலைப்படுத்தப்படுவது பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் அதிகரித்த எண்ணிக்கை ஆகும். ஆணாதிக்கக் குடும்ப அமைப்பு வாழ்வு முறைமைக்கு சமூகமயமாக்கப்பட்ட சமூகத்தில், குடும்பப் பெண், குடும்பத் தலைமைத்துவத்தை ஏற்கும் நிலைப்பாடானது, பல சவால்களுக்கு வழிவகுக்கின்றது. போருக்குப் பின்னரான சமூகத்தில் இத்தகைய குடும்ப அமைப்பு, புதிய வடிவமாக சமூகக் கட்டமைப்புக் கூறுகளில் உள்வாங்கப்படுகின்றது. விதவைகள் என்னும் சமூகநிலை, தமிழ் சமூகத்தில் அந்தஸ்து குறைந்ததாகவே கணிக்கப்படுகின்றது. எனினும் பெண்ணிய சிந்தனைகளின் தாக்கம், அரசசார்பற்ற நிறுவனங்களில் பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள், பட்டறைகள் போன்றவற்றினால் விதவைகள் பற்றிய பார்வைகளில் வேறுபட்ட நிலைப்பாட்டைத் தமிழ் சமூகம் அணுக முற்படுவது, நேர்மறையான அணுகுமுறையாகக் கணிக்கப்படுகின்றது.

போருக்குப் பின்னரான சூழல் தமிழ் சமூகத்தின் இரட்டைத்தன்மையை துல்லியமாகக் காட்டி நிற்கின்றது. போராட்ட காலத்தில் பெண் போராளிகளை, காவல் தெய்வங்களாக மதித்துப் பேணிய சமூகம், போருக்கு பின்னரான சூழலில், போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை வேண்டாதவர்களாக, ஒதுக்கி நிற்கும் நிலை தமிழினத்தின் சுயநலப்போக்கையும், இரட்டைத்தன்மை மனப்பாங்கையும் தெளிவாகக் காட்டிநிற்கிறது. தமிழ் சமூகத்தில் இருக்கும் மதநிறுவனங்களும் இவ்விடயத்தில் மக்களை நெறிப்படுத்தவில்லை. பாதிக்கப்பட்ட பெண் போராளிகள் மட்டில், அவர்களின் உரிமைக்காக குரல் எழுப்பாதது, வேதனைக்குரியது மட்டுமல்லாமல், வெட்கத்துக்குரிய செயற்பாடுமாகும்.

திருமண வாழ்வைப் பொறுத்தமட்டில் விவாகரத்துக்கள், பிரிந்திருத்தல் போன்றவை அதிகரித்த போக்காகவே இருப்பது குடும்ப ஒழுங்கமைவின் சமூக பொருண்மையாகக் காணப்படுகின்றது. அகதிவாழ்வு, உள்ளக இடப்பெயர்வுகள், குடும்பப் பிரிவுகள், பிரமாணிக்கமின்மை, குறைந்த வயதுத் திருமணம் போன்றவற்றிற்கு காரணமாயுள்ளது. போருக்குப் பின்னரான சூழலில் மேற்கூறிய காரணங்களுடன், நவீன தொழில்நுட்பங்கள், செல்லிடத்தொலைபேசிகள் போன்றவற்றின் அதிகரித்த பாவனையும் பிறிதொரு காரணமாகக் கணிக்கப்படுகின்றது.

மதுப்பாவனை, போதைப்பொருட்களின் பரிமாற்றங்கள், மற்றும் பாவனை என்பவை பெரியவர்கள், இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துச் செல்லும் போக்குக் காணப்படுகின்றது. போருக்குப் பின்னரான சூழலில் சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கை குறைப்பு, கடலோரப் பாதுகாப்புக் கண்காணிப்புக் குறைப்பு, நாட்டின் எப்பகுதிக்கும் இலகுவான போக்குவரத்துப் போன்ற காரணிகளினால் இப்பொருட்கள் கடத்தப்படுவது இலகுவாக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் இலகுவழியில் துரிதமாக, குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கும் மனநிலையின் வெளிப்பாடாகவே இந்நடவடிக்கைகள் கருதப்படுகின்றன.

போரின் பின்னரான சூழமைவில், சிறுவர் துஸ்பிரயோகம், திருமணமாகாமல் தாய்மை அடைதல், ஏற்கனவே திருமணம் செய்தவர்கள் ஏமாற்றப்பட்டுத் திருமணம் செய்தல், கருச்சிதைவு, நெருங்கிய உறவினர்களால் ஏமாற்றப் பட்டு கர்ப்பம் தரித்தல் போன்றவை, பல்வேறு சமூகக் காரணிகளால் நடைபெறுகின்றன. தமிழ் பண்பாட்டில் காணப்பட்ட குடும்ப விழுமியங்கள் 'ஒருவன் ஒருத்திக்கு", குடும்ப பிரமாணிக்கம், பிள்ளைகளுக்காகப் பெற்றோரின் தியாகம் போன்றவை குறைபட்டு அல்லது இல்லாமல் போகின்ற தன்மை காணப்படுகின்றது.

மேலும் வெளித்தெரியும் சமூகப்பிரச்சனையாக களவு, கொள்ளை, பணமோசடி, சீட்டுப் போட்டு ஏமாற்றுதல் போன்றவையும் காணப்படுகின்றது. போராட்ட காலத்தில் இயக்கங்களுக்குப் பயந்து இச்செயல்களில் ஈடுபடாதவர்கள், தற்போது லஞ்சங்கள் கொடுத்து இக்குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இளைஞர்களின் உளப்பண்பாடானது ஒரு விலகல் பண்பாடாகவே (deviant culture) காணப்படுகின்றது. குழுவாக மது அருந்துதல், புகைத்தல், குழுமோதல் போன்றவை சமூகத்திற்கு ஒவ்வாத விலகல் பண்பாடாகக் கருதப்படுகின்றது. போருக்குப் பின்னரான ஒருவித 'போலிச் சுதந்திரம்'. இந் நடவடிக்கைகளுக்குக் காரணமாகவுள்ளது. மேலும் இளைஞர் மத்தியில் செல்வாக்குப் பெறும் வீடியோக் கலாசாரம், இணையக் காட்சியறை கலாசாரம் (Internet café culture) போன்றவற்றின் பாவனையும் அதிகரித்துச் செல்கின்றது. இச் செயற்பாடுகள், போரின் பின்னரான சூழலில், உலகமயமாதல், திறந்த பொருளாதாரச் சந்தையின் பின் விளைவுகளாகக் கருதப்படுகின்றது.

மாற்றுத்திறனாளிகளின், அநாதைகளாக்கப்பட்டவர்களின் அதிகரிப்பினால் சமூகத்தில் தங்கியிருப்பவர்களின் நிலை ஒரு சமூகச் சுமையாக அமைகின்றது. போரினால் அங்கவீனமாக்கப் பட்டவர்களின் தொகை, வன்னி இறுதிப் போருக்குப் பின்னர் அதிகரித்துள்ளது. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில், உறவினர்களில், வெளிநாட்டில் வாழும் உறவுகளில் 'தங்கியிருக்கும்' நிலை காணப்படுகின்றது. தங்கியிருக்கும் கலாசாரமானது சமூகபொருளாதார அபிவிருத்திக்கு ஒரு தடைக்கல். போருக்கு பின்னரான இச் சூழல், முயற்சியின்மை, சவால்களுக்கு அல்லது ஆபத்துகளுக்கு (Risk taking) முகம் கொடுத்தல், பொருளாதார, சமூக முதலீடு போன்ற அபிவிருத்தி விவகாரங்களைப் பெரிதும் பாதிக்கும்.

5. அரசியல் தீர்வும் - பொருளாதார அபிவிருத்தியும்

மரபுவழி ஆயுதப் போர் முடிவடைந்த சூழலில் முரண்பாட்டுத் தீர்வில் நல்லிணக்கம் (Post armed conflict and reconciliation) காத்திரமான கருத்தியலாகக் காணப்படுகின்றது. சமாதான உடன்படுத்தலின் மூலம் முரண்பாட்டினை உடன்பாட்டிற்குத் திசை திருப்புகின்ற அடிப்படைக் கூறுகளை இது உள்ளடக்குகின்றது.

நல்லிணக்கம் பற்றி ஜோண் போல் டெட்ராக் (John Paul Dederach) என்பவர் நான்கு முக்கிய விவகாரங்களை முன்வைக்கின்றார்.

1. உண்மை
2. நீதி
3. இரக்கம்
4. சமாதானம்

ஜோண் போல் டெட்ராக்கைப் போன்றே இன்று சர்வதேசமும், நல்லாட்சி என்று அழைக்கப்படும் தற்போதைய இலங்கை அரசும், நிலை மாற்று நீதி (Transitional Justice - TJ) என்ற பொறிமுறையை முன்வைக்கின்றன. நிலை மாற்று நீதி நான்கு விடயங்களை முன்வைக்கின்றன.

1. உண்மைகளைக் கண்டறிதல் (truth seeking)
2. பொறுப்புக் கூறும் தன்மை அல்லது குற்ற வழக்குத் தொடர்தல் (நீதியை நிலைநாட்டல்) (Criminal prosecution)

3. இழப்பீடுகள் (reparations)

4. மீள் நிகழாமை (non recurrence)

சுருங்கக் கூறின் நல்லிணக்கம் என்பது முரண்பாட்டின் வழி தொடரும் ஒரு அத்தியாவசிய செயற்பாங்காகும். மேலும் இது ஒரு தன்னிச்சையானதும் (a voluntary act) யாராலும் வலிந்து சுமத்தப்படாததுமான ஒரு செயலாகும்.

நல்லிணக்கம் பற்றி மேற்குறித்த கருத்தின் அடிப்படையில் நோக்கும் போது இலங்கையில் நல்லிணக்கத்திற்கான எந்தவொரு முயற்சியும் ஆக்கபூர்வமாக, தூரநோக்குடன் திட்டமிட்டு செயற்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. முரண்பாட்டிற்குப் பின்னரான நல்லிணக்கத்திற்கு இரண்டு அணுகுமுறைகள் முன்வைக்கப்படலாம்.

1. முரண்பாட்டிற்கான காரணிகளின் அடிப்படையில் நல்லிணக்கம்
2. மீள் கட்டுமான அபிவிருத்திக்கான நடைமுறை மாதிரி நல்லிணக்கம்

ஆயுதப்போர் முடிவுற்று உடனடிச் சூழமைவில் இன்றைய அரசு இரண்டாவது அணுகுமுறையையே தெரிவு செய்துள்ளதாக அரசின் செயற்பாடுகளிலிருந்து அறியக்கூடியதாகவுள்ளது. வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் போன்ற அபிவிருத்தி, மீள்கட்டுமானத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் முன்னைய அரசாங்கம் இரண்டாவது அணுகுமுறையையே தெரிவுசெய்தது என்பது தெளிவாகின்றது.

எனவே போருக்குப் பின்னரான சூழலில் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்திற்கு எவ்வித ஆக்கபூர்வமான திட்டங்களும் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படவில்லை. அபிவிருத்தியை பொறுத்தமட்டில் கூட, பாதிக்கப்பட்ட மக்கள், அல்லது அவர்களின் பிரதிநிதிகள் உள்வாங்கப்படவில்லை. அனைத்தும் தலைநகரிலேயே தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது. அபிவிருத்தி முன்னுரிமைகள் மக்களின் அபிவிருத்தித் தேவைகளுக்காக இல்லாது ஒரு சிலரின் இலாபங்களுக்காகத் தீர்மானிக்கப்படுவதாக அமைந்தது.

போருக்குப் பின்னரான சூழலில் தொடரும் சமூகப்பிரச்சினைகளாக, காணாமல்போனோர் விவகாரம், விசாரணைகள் இன்றி தடுப்புக்காவலில் உள்ளோர் பிரச்சினைகள், இராணுவத்தினரால் விடுவிக்கப்படாத மக்கள் குடியிருப்புக்கள், இளைஞர்களுக்கிடையே அதிகரித்து வரும் குழு, வாள்வெட்டுச் சம்பவங்கள், அதிகரித்த வீதி விபத்துக்கள், போதைவஸ்துப் பாவனை அதிகரிப்புப் போன்றவை காணப்படுகின்றது. எனவே போருக்குப்பின்னரான சூழலில் துப்பாக்கி வேட்டுக்கள், பீரங்கிகளின் சத்தம் ஓய்ந்தாலும், பொருளாதார சுதந்திரம் இன்மை, மனித உரிமைகள் மீறல்கள் போன்றவையே இன்றைய சமூகப் பொருண்மைகளாகும்.

மேலும், 2015ல் பதவிக்கு வந்த 'நல்லாட்சி' என அழைக்கப்படும் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக எதிரும் புதிருமாகவிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக்கட்சியும் இணைந்து உருவாக்கிய, இந் நல்லாட்சி, தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு நன்றாக அமையும் எனப் பெரும் எதிர்பார்ப்புடன் கருதப்பட்டது. புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டுத் தமிழ் சமூகத்தில் காணப்படும் மேற்கூறிய பிரச்சினைகள் ஓரளவுக்கேனும் தீர்க்கப்படும் என்ற எதிர்பார்ப்புக்கள் படிப்படியாகக் குறைந்து செல்லும் நிலையே காணப்படுகின்றது. எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாகி, விரக்தி நிலையை மீண்டும் தமிழ் மக்கள் உணரத்தொடங்கி விட்டனர். இச் சூழலில் நாம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் எவை?

முடிவுரை

ஆயுதப்போருக்குப் பின்னரான சூழல் தமிழ் மக்களுக்குப் பல சவால்களையும், அதே சமயம் பல சந்தர்பங்களையும் தருகின்றது. இந்தச் சூழலைச் சாதகமாக மாற்றுவது, தமிழ் மக்கள், சிங்கள மக்கள், தமிழ் மக்களின் தலைமைத்

துவம், இலங்கை அரசு ஆகிய தரப்புக்களின் பொறுப்பாகும். எனவே இச் சந்தர்ப்பத்தை (opportunity) சாதகமாக்கிக் கொள்ள கீழ்குறிப் பிட்ட விவகாரங்களில் எமது பார்வையைக் குவிமையப்படுத்தலாம்.

1. போருக்குப்பின்னரான யதார்த்தத்தைப் புரிந்து, தரிசன நோக்குடன் செயற்படும் தலை மைத்துவத்தை (தலைவர்களை அல்ல) தமிழ் மக்கள் சாதி, மதம், பிரதேசம் கடந்து தெரிவு செய்ய வேண்டும். தெரிவதோடு அவர்களின் செயற்பாடுகள் மட்டில் விழிப்புணர்வும், தொடர் உரையாடல்களும் இருத்தல் வேண்டும்.

2. புதிய அரசியலமைப்புத் தொடர்பாக, தமிழ் மக்களின் அபிலாசைகள், எதிர்காலப் பாதுகாப்பு, அடையாளங்கள் பேணுதல் போன்றவற்றில் தெளிவான பார்வையுடன், அரசியல் கொள்கை களின் மறுசீரமைப்பை முன்வைத்தல்.

3. நல்லாட்சியை உள்ளடக்கிய, ஜனநாயக, மனித உரிமைகளை வலியுறுத்தும் அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்குதல்,

4. கீழ்மட்ட மக்களை வலுவூட்டல் (empo-werment), பால்நிலைச் சமத்துவத்தைப் பேணு தல், போரினால் அங்கவீனமாக்கப்பட்டவர்கள், விதவைகள், சிறார்களின் அபிவிருத்தியை முன் னெடுக்கக் கூடிய கட்டமைப்புக்களை உருவாக் குதல், அத்துடன் அவை பற்றிய சமூகப் பிரக்ஞை களை ஏற்படுத்துதல்

5. முழு மனித, முழு சமூக அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பொருளாதார வளர்ச்சி தந்திரோபாயங்களை வகுத்தல். குறிப்பாக அறிவுசார் பொருளாதாரம் (knowledge based economy), பொருளாதாரச் சுதந்திரம் போன்ற விவகாரங்களில் கவனம் செலுத்துதல்

6. உறுதியோடு, சுதந்திரமாகச் செயல்படும் சிவில் சமூகத்தின் கட்டமைப்பு மிக அவசிய மானதாகும். அத்தோடு நடுநிலமையோடு செயற்படும் தொடர்புசாதனங்களின் (பத்திரி கைகள், சமூக வலைத்தளங்கள்) உருவாக்கம்,

7. தமிழ்ச் சமூகத்தின் புத்திஜீவிகளின் சமூக ஈடுபாடு, மக்களை அரசியல் ரீதியாக அணிதி ரட்டல், அரசியல் தலைமைத்துவத்திற்குப் புத் திஜீவிகளின் ஆலோசனைகள், கருத்துப்பரிமாற் றங்கள் மேற்கொள்ளல்,

8. புலம்பெயர் தமிழ் மக்களின், பங்களிப்புக் களை, ஆக்கபூர்வமான முறையில் வழிநடத்து தல், மற்றும் அவர்களின் பொருளாதார, அறிவு ரீதியான முதலீடுகளைச் சரியான முறையில் பயன்படுத்துதல், தமிழ் பிரதேசங்களுக்குக் கொண்டுவருதல்

9. சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் கடந்து உண்மை, ஆன்மீகத்தை வளர்க்கும் மதங்கள் (மதநிறுவனங்கள் அல்ல), தமிழர் பண்பாட்டின் புனிதத்துவத்தைப் பேணும் விழு மியங்கள், நியமங்களைக் காக்கும் சமூக அமைப் புக்களை உருவாக்குதல்

10. தமிழ் சமூக தேசியத்தின் கூறுகளான, மொழி. அடையாளங்கள், தமிழர் தாயக அலகு, இணைந்த வடகிழக்குப் போன்ற விடயங்களில் சகல தரப்பினரும் (அரசியல் தலைமைகள், சிவில் சமூகம், புத்திஜீவிகள், புலம்பெயர் தாயக மக்கள்) ஒன்று சேர்ந்து மேற்கூறியவற்றைப் பேசும் பொருளாக்கி, அதை சர்வதேச மட்டத் திற்கு எடுத்து செல்வதற்கான தந்திரோபாயங் களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல்

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மனநிலை இரண்டாம் மகா யுத்தத்தின் பின் ஜேர்மனியில், ஜப்பானில் வாழ்ந்த மக்களின் மனநிலை போன்று இருக்கவேண்டும். ஒன்றி ணைந்து சாம்பலிலிருந்து எழுவோம் என்ற உணர்வு இன்றியமையாதது. இல்லையேல் சாம்பலில் தமிழ் சமூகம் சங்கமமாகி வரலாறா கிவிடும். இது உருவாகுவதற்கான அல்லது உருக்குலைவதற்கான வரலாற்றுத் தடம். நாம் சிந்திக்க வேண்டிய தடம் எது என்பதை இன்றே உறுதியாகத் திறந்த மனத்துடன் தீர்மானிக்கும் வரலாற்றுக் கடப்பாடு தமிழ் மக்கள் முன்னே நிற்கின்றது.

அருட்தந்தை கி.ஜோ ஜெயக்குமார்

வரைபு - 1

கருதுகோள்படுத்தப்பட்ட செல்வாக்கின் பிரகாரமாய் சமூகப்பிரச்சினைகள் வகைப்படுத்தலுக்கான சட்டகம்

(A Paradigm for classifying social Problems on the basis of hypothesized influences)



இலங்கைத்தீவில் நிலைமாறுகால நீதியும் ஈழத்தமிழரின் எதிர்காலமும்

நிலைமாறுகால நீதி என்கின்ற விடயம் இன்று இலங்கைத் தீவில் ஒரு முக்கிய பேசுபொருளாகி உள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்காவின் அரச படைகளுக்கும் இடையிலான ஆயுத மோதல்களுக்கு முள்ளிவாய்க்காலில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதன் பின்னர் இலங்கைத்தீவில் நீடித்த அமைதியும் மீள் இணக்கப்பாடும் ஏற்பட நிலைமாறுகால நீதியை நடைமுறைப்படுத்தும் பொறிமுறைகள் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புக்கள் அக்கறை வெளிப்படுத்தி வருகின்றன. இந்நிலையில் நிலைமாறுகால நீதி என்றால் என்ன? இலங்கையில் அதனை முன்னிட்டு அமைக்கப்படுவதாக வாக்களிக்கப்பட்ட விடயங்கள் எவை? அவற்றின் உண்மை நிலை என்ன? நீதியை நிலைநாட்டுதல் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளின் அணுகுமுறைகள் எவ்வாறு உள்ளன? இவற்றுள் ஈழத்தமிழரின் எதிர்கால தேசிய இருப்புக்குப் பயன் தரக் கூடிய அணுகுமுறை எதுவாக இருக்கலாம் போன்ற விடயங்களை இக்கட்டுரை உசாவ முனைகிறது.

நிலைமாறுகால நீதி

“மனித உரிமை மீறல்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் வேதனைகளை, துயர்களைத் துடைக்க மேற்கொள்ளப்படும் நீதித்துறை சார்ந்த மற்றும் சாராத நடவடிக்கைகளே நிலைமாறு கால நீதி

எனப்படுகிறது. இது குற்றவிசாரணை, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுக்கள், இழப்பீடுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மற்றும் பல்வேறு அமைப்புசார் சீர்திருத்தங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்" இவ்வாறு நிலைமாறுகால நீதிக்கான சர்வதேச மையம் நிலைமாறுகால நீதியை வரையறுக்கிறது. இது பற்றி ஐ.நாவின் பொதுச்செயலாளருடைய வழிகாட்டு அறிக்கை கடந்தகாலக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல், நீதியை நிலைநாட்டுதல், மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்தல் என்பன வற்றின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

மொத்தத்தில் ஒரு நாடானது போர் அல்லது சர்வாதிகார ஆட்சி போன்றவற்றைக் கடந்து வருகின்ற போது அவை உண்மையான நிலை பேறான அமைதியையும் மீளிணக்கப் பாட்டையும் பெறும் பொருட்டு இடைப்பட்ட காலத்திலே அவசியமாக மேற்கொள்ளப்படவேண்டிய பல விடயங்களின் தொகுப்பே நிலைமாறுகால நீதியாகும். முரண்பாடுகளுக்கூடாகவும், சர்வாதிகாரங்களுக்கூடாகவும் கடந்து சென்ற பல்வேறு நாடுகளின் அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட பாடங்கள் தற்போதைய நிலைமாறுகால நீதியின் உள்ளடக்கமாக அமைய வேண்டிய விடயங்களை வடிவமைத்துள்ளன. அந்த வகையில் இன்று நிலைமாறுகால நீதியின் தூண்களாகப் பின்வரும் நான்கு விடயங்களும் கருதப்படுகின்றன.

உண்மையை வெளிப்படுத்தல்

ஒரு நாட்டில் ஆயுத ரீதியான உள்ளூர் மோதல்கள் இடம்பெறும்போது, ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராட்டங்களின் போது அல்லது ஒரு சர்வாதிகார ஆட்சியின் போது பல்வேறு விதமான மனித உரிமை மீறல்களும், போர்க் குற்றங்களும் மனித இனத்துக்கெதிரான குற்றங்களும் ஏன் இன அழிப்பு முயற்சிகளும் இடம்பெறுவதற்கு நிறையவே சாத்தியங்கள் உண்டு. இக்குற்றங்களில் ஈடுபடும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அவற்றை சாட்சியங்களற்றுச் செய்யவும் செய்தவற்றின் சாட்சியங்களை அழித்து அவற்றை மறைத்து விடவுமே முயற்சிகளைச் செய்யும். ஆயினும் இதனால் பாதிப்புக்குள்ளானவர்கள் பெரும் துன்பங்களையும், மன உளைச்சல்களையும் அனுபவிப்பர். ஆகவே இத்தகைய நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் நடந்த உண்மைகளை அறிவதற்கு உரித்துடையவர்கள் ஆகிறார்கள். பொய்மைகளின் மீது நீடித்த அமைதி கட்டியெழுப்பப்பட முடியாது. ஆகவே பாதிப்புக்குள்ளானவர்கள் அல்லது தரப்புக்கள் நடந்து முடிந்தவை பற்றிய உண்மையை அறிந்து ஆறுதலடையும் போது மட்டுமே அவர்களுக்கு மீள் இணக்கப்பாட்டில் ஈடுபாடு மலரும். இல்லையேல் தொடரும்மனக் கசப்புக்கள் பிரச்சினைகளைப் புதிய தளத்துக்கு எடுத்துச் செல்லக்கூடும்.

இலங்கையில் போரின் இறுதி நாட்களில் தமது உறவுகளை இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்தவர்கள் தமது பிள்ளைகள் பற்றிய உண்மையை வெளிக்கொணருமாறு கோரி நடாத்தும் போராட்டம் 100 நாட்களையும் கடந்து தொடர்கிறது. ஆயினும் அரச தரப்பிலிருந்து நீடித்த மௌனமும் போராட்டங்களை இடைநிறுத்தும் முயற்சியுமே பதிலாகக் கிடைக்கிறது. இந்நிலையில் போராடும் மக்களும் அவர்கள் சார்ந்த தமிழர் தரப்பும் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்படுகின்றனர். இது படிப்படியாக மீள் இணக்கப்பாட்டின் மீதான நம்பிக்கையிழப்புக்கு இட்டுச்செல்கிறது. நிலைமாறு கால நீதியை நிலைநாட்டுவதற்கு அவசியமான பொறுப்புக்கூறலில் இருந்து அரச தரப்பு நழுவ முற்படும்போது அது ஒட்டுமொத்தமாக நீடித்த அமைதிக்கான முயற்சிகளைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

நீதியை நிலைநாட்டுதல்

உண்மைகள் வெளிவந்து குற்றமிழைத்தவர்கள் அடையாளம் காணப்படும் போது அவர்

கள் மீதான உரிய நீதி விசாரணையும், குற்றங் களுக்குரிய தண்டனையும் வழங்கப்பட வேண் டும். அந்த விசாரணையும் தீர்ப்பும் நம்பகத் தன்மையுள்ள தரப்புகளால் மேற்கொள்ளப்பட வேண்டும். குற்றங்களை இழைத்த தரப்பே குற்றவிசாரணையும் மேற்கொள்வதென்பது நீதியை கேலிக்குள்ளாக்கும் ஒரு செயலாகும். நீதியின் மீது கட்டப்படாத அமைதி அத்திபாரம் இல்லாத வீட்டுக்கு ஒப்பானது. அது எந்த நிமி டத்திலும் சரிந்து விழலாம். ஆகவே இழைக் கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் நீதி நிலைநாட் டப்படுவது நீடித்த அமைதிக்கு இன்றியமையா ததாகும். நீதி விசாரணை, தண்டனை என்ப வற்றுக்குப் பதிலாக மன்னிப்பை வழங்கும் முயற் சிகள் தென்னாபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்டி ருப்பது உண்மையே. ஆயினும் குற்றவாளிகளை மன்னிப்பதா அல்லது அவர்களுக்குரிய தண் டனை வழங்கப்பட வேண்டும் என்று கோருவதா என்பது பாதிக்கப்பட்டவர்களின் உரிமையே என்பதை ஒருபோதும் நிராகரிக்க முடியாது.

இலங்கையைப் பொறுத்தவரையில் நீதியை நிலைநாட்டுவதற்குப் பின்வரும் விடயங்களைச் செய்யத்தயாராக இருப்பதாக சிறிலங்கா அரசாங்கம் 2015இல் தெரிவித்தது. பொதுநல வாய மற்றும் ஏனைய பிற நாடுகளிலிருந்து அழைக்கப்படும் நீதிபதிகள், வழக்குத்தொடுநர் கள், சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் அடங்கிய குற்றவிசாரணை அமைப்பொன்றை ஏற்படுத்துதல். அதன்மூலம் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சிறுபான்மை மதச்சமூகங்கள், சிவில்சமூகம், வழிபாட்டுத்தலங்கள் போன்றவற்றுக்கு எதிராகத் தாக்குதல்களை மேற்கொண்ட சந்தேக நபர் களை விசாரித்தல், சித்திரவதை, பாலியல் வன் புணர்வு, பாலியல் வன்முறை ஆகியவற்றில் ஈடுபட்டோரைப் பொறுப்புக்கூற வைத்தல் போன்ற விடயங்களைச் செய்வதாக வாக்களித்தது. ஆயி னும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் முன் தான் ஏற்றுக்கொண்ட மேற்சொன்ன கடப்பாடுகளிலிருந்து அரசாங்கம் படிப்படியாகப் பின்வாங்கி வந்துள்ளது. தற்போது உள்ளூர் விசாரணை மட்டுமே பிறநாட்டு நீதிபதிகளுக்கு இங்கு இடமில்லை எனத் திட்டவட்டமாக அது தெரிவித்துள்ளது. ஆயினும் அப்படிப்பட்ட உள் ளூர் விசாரணைப் பொறிமுறை ஒன்றைக்கூட இன்னும் அரசாங்கம் ஏற்படுத்தவில்லை. இந் நிலையில் நிலைமாறுகால நீதி நிலைநாட் டப்பட அவசியமான பொறுப்புக்கூறல் என்கின்ற விடயத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இழப்பீடுகளுக்கான உரிமை

நடந்து முடிந்த வன்முறைகளால் பாதிப் புக்கு உள்ளானவர்கள் நியாயமான இழப்பீடு களைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவர்களா கின்றார்கள். அவர்களுக்குரிய இழப்பீட்டுத் திட்டமொன்றை அறிவித்து நடைமுறைப்படுத்த அரசு கடப்பாடுள்ளதாக இருக்கிறது. பாதிப்புக் குள்ளானவர்கள் நடந்த உண்மையை அறிந்து நீதி நிலைநாட்டப்பட்டதைக் கண்டு தமக்குரிய கணிசமான இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளும் நிலையில் தான் மீள் இணக்கப்பாடு சாத்தியம்.

இந்நிலையில் இலங்கையில் சிறிலங்கா அரசாங்கம் இழப்பீட்டுக்கான பணியகம் ஒன்றை ஏற்படுத்தவும். படையினர் கட்டுப் பாட்டில் இருக்கும் பொதுமக்களின் காணி களை அவர்களிடமே மீள ஒப்படைக்கவும் இராணுவ மயநீக்கத்தில் ஈடுபடவும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிற்கு காணாமல் போனோரார் தொடர்பான ஆவணம் ஒன்றை வழங்கவும் 2015இல் வாக்குறுதியளித்தது. இந்த வாக்குறுதிகள் எதையும் கூட அரசாங்கம் நிறைவேற்றவில்லை.

மீள் நிகழாமைக்கான உத்தரவாதம்

நிலைமாறுகால நீதி பயனுள்ள வகையில் செயலாற்ற ஏற்கனவே ஏற்பட்ட போர் அல்லது மனித உரிமைகள் மீறப்படும் சூழ்நிலைகள் மீளவும் ஏற்படாமல் இருக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பிரச்சினைகளின் தோற்றுவாய்கள் புரிந்து கொள்ளப்பட்டு அவற்றை இல்லாதொழிப்பதற்கான அமைப்புச் சீராக்கல் மேற்கொள்ளப்படவேண்டும். ஏற்படுத்தப்படும் புதிய அமைப்புக்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமையவேண்டும்.

இந்த இலக்கை அடைவதற்காகப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சிறிலங்கா அரசாங்கம் 2015இல் பொறுப்பேற்றுக்கொண்டது.

- பாதுகாப்புத் துறையை மறுசீராக்கத்திற்கு உட்படுத்தல்.
- பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தை உருவாக்கல்.
- ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிறுபான்மை மதக்குழுக்கள், வழிபாட்டுத்தலங்கள், சிவில் சமூகம் மீதான தாக்குதல்களைத் தடுத்தல்.
- பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அதையொத்த சட்டங்களை இல்லாதொழித்தல் அல்லது மாற்றியமைத்தல்
- காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக்கலும் காணாமல் ஆக்கப்படுவதற்கு எதிரான சர்வதேச உடன்பாட்டில் கைச்சாத்திட்டு நடைமுறைப்படுத்தலும்
- 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல்.
- அரசியல் யாப்பு மறுசீரமைப்பு மூலம் அரசியல் தீர்வு ஒன்றை எட்டுதல்

இந்த வாக்குறுதிகளைப் பொறுத்தவரை தகவலறியும் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. புதிய அரசியல் யாப்பை உருவாக்க நிர்ணய சபை ஏற்படுத்தப்பட்டது. குழுக்களை அமைத்து திட்டவரைவினைத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக புதியதொரு சட்டவரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் உள்ளடக்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை விட மோசமானது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் ஏற்படுத்தப்பட்டு வரும் புதிய யாப்பு அரசியல் தீர்வுக்கானது எனக்கூறப்பட்டாலும் அது எவ்வளவு தூரம் பிரச்சினைக்கான தீர்வாக அமையப்போகிறது என்பது வினாவுக்குரியதாகவே உள்ளது. புதிய யாப்பிலும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும் மேலும் அது ஒற்றையாட்சி யாப்பாகவே இருக்கும் எனத் திரும்பத்திரும்ப வலியுறுத்தப்படுவதானது இதன் உள்ளடக்கம் எவ்வாறு இருக்கும் என்பது மட்டில் நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்துகிறது.

இலங்கைத்தீவில் 2009இல் போர் முடிவுக்கு வந்த பின்பு ஏற்பட்டுள்ள புதிய சூழலை ஒட்டு மொத்தமாகத் தீவில் வாழும் மக்களனைவருக்கும் பயனுள்ளதாக மாற்றிக் கொள்ளும் அவசியம் உள்ளது. நிலைமாறு கால நீதிப்பொறிமுறைகளைச் சிறந்த வகையில் முன்னெடுத்து உண்மையான மீளிணக்கப்பாட்டையும் நீடித்த அமைதியையும் கொண்டுவருவதே பயனுள்ளதாக இருக்கும். இந்நிலையில் இவ்விடயம் தொடர்பான முயற்சிகள் கடந்த காலங்களில் எவ்வாறான நிலையில் உள்ளது என்பதை மேலே பார்த்தோம். தொடர்ந்து இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகள் எப்படியான அணுகுமுறைகளைக் கைக்கொள்கின்றன என்பதைத் தொடர்ந்து பார்ப்பதன் மூலம் எதிர்காலம் பற்றிய சில தெளிவுகளைப் பெறமுயல்வோம்.

சிறிலங்கா அரசு

மிக மோசமான பொதுமக்கள் இழப்புக்களுடனான கொடூரமான ஒரு போரை நடத்தி

முடித்த சிறிலங்கா அரசுதான் நிலைமாறுகால நீதியை நிலைநாட்டி நாட்டை நீடித்த அமைதியை நோக்கி நடாத்தும் பிரதான கடப்பாடு கொண்டதாக இருக்கிறது. போரை நடாத்திய அரசாங்கம் மாறி புதிய அரசாங்கம் வந்த சூழலானது இத்தகைய ஒரு முயற்சிக்கும் உறுதுணையாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. கடந்த அரசாங்கத்தின் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் உண்மையை வெளிப்படுத்தி சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்திப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடுகளை வழங்கி மீள் நிகழாமைக்கான புதிய பொறிமுறைகளை இந்தப் புதிய 'நல்லாட்சி' அரசாங்கம் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும் கவலைக்குரிய விதத்தில் பௌத்த சிங்களப் பேரினவாதத்தைத் தனது வாக்குப்பலத்துக்காக நம்பியிருக்கும் தென்னிலங்கையின் தேர்தல் அரசியல் போக்கில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்த புதிய அரசாங்கமும் தயாராக இருக்கவில்லை. ஆகவே சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் அவரவர்கள் எதிர்பார்க்கும் வாக்குறுதிகளைத் தாராளமாக அள்ளி வழங்கி கால இழுத்தடிப்பின் மூலம் பிரச்சினைகளை நீர்த்துப்போகச் செய்து ஆட்சிக் காலத்தைக் கடத்தி தமது சிங்கள பௌத்த வாக்கு வங்கியை தக்க வைக்கப் போரின் வெற்றியில் உரிமை கோருவது, போரை வென்ற படையினரை ஒருபோதும் விசாரணைக்குட்படுத்த மாட்டோம் என சூளுரைப்பது, ஒற்றையாட்சியில் மாற்றமில்லை, பௌத்தத்துக்கு முன்னுரிமை போன்ற விடயங்களைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துவது போன்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகள் உண்மையான நல்லிணக்கத்துக்கும் அமைதிக்குமான அரசாங்கத்தின் அர்ப்பணத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

மேலும் நிலைமாறுகால நீதிக்கான பொறிமுறைகளையும் சமாந்தரமாக முன்னெடுப்பதற்குப்பதிலாக நிரல்படுத்தல் (Sequencing) என்கின்ற ஒரு இராஜதந்திர அணுகுமுறையையும் அரசாங்கம் கையாளுவதும் புலனாகிறது. அரசியல் யாப்பு விடயத்தை முன்னுரிமைப்படுத்துவதன் மூலம் முதலில் தீர்வு அப்புறம் ஏனையவை என்கின்ற நகர்வு சிலருக்குக் கவர்ச்சிகரமானதாகவும் தோன்றுகிறது. ஆயினும் இதில் உள்ள பொறி என்னவென்றால் அரசியல் தீர்வுக்குப் பொறுப்புக்கூறலை விலைபேசி விற்றுவிடும் ஒரு முயற்சியாகவும் இது அமையலாம்.

ஆகவே சிறிலங்காவின் தற்போதைய அரசியல் யதார்த்தத்தின்படி நிலைமாறுகால நீதி சம்பந்தமான விடயங்களை இதயசுத்தியோடு அணுகுவது தொடர்பில் ஒரு அரசியல் விருப்பு இல்லா நிலையை அரசாங்கத்தரப்பில் அவதானிக்கமுடிகிறது.

சர்வதேசத் தரப்பு

சர்வதேசத் தரப்பின் ஈடுபாட்டை இத்தகைய சிறியதொரு கட்டுரையில் ஆய்வு செய்ய முடியாதெனினும் சிறிலங்காவில் நடைபெற்ற தமிழின அழிப்புத்தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய ஒரு தரப்பாக சர்வதேசத் தரப்பு குறிப்பாக ஐ.நா. உள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும். நடைபெற்ற பேரழிவுக்கு ஐ.நாவின் தவறுகளும் காரணமென்பதை ஐ.நாவின் விசாரணைக் குழுவும் தெளிவாகக் கூறியுள்ளது. புலிகளை அழித்து விட வேண்டும் என்கின்ற விடயத்தில் அப்போதைய சிறிலங்கா அரசாங்கத்தோடு கரம்கோர்த்த பல நாடுகளுக்குத் தமிழினத்துக்கான பாதுகாப்பை வழங்கும் தார்மீகக் கடப்பாடும் உண்டு. ஆயினும் சர்வதேச அரசியல் தார்மீக ஒழுங்கின் படியல்ல குறிப்பிட்ட சக்திகளின் நலனின் அடிப்படையிலேயே இயங்குகிறது என்ற வகையில் மேற்கத்தைய நாடுகளுக்குத் தற்போதைய 'நல்லாட்சி'யை பாதுகாக்கும் தேவை உள்ளது. அதனால் கடந்த காலத்தைப் போல அரசாங்கத்தின்மீது கடும் அழுத்தங்களைப்பிரயோகிக்காமல் அதனைப்

பிரச்சினையின்றிப் பிணை எடுக்கும் முயற்சி களையே அவை மேற்கொள்ளும். ஆகவே குறைந்த பட்ச தீர்வுகளுக்கும் தீர்மானங்களுக் கும் தமிழர் தரப்பை உடன்பட வைக்கும் முயற் சிகளையே தற்போது அவை மேற்கொள்ளும். ஆகவே முன்னைய ஆட்சிக்கெதிராக நிலை மாறுகால நீதியெனத் தானே பெற்றெடுத்த குழந் தையைத் தானே இயற்கை மரணத்துக்குக் கைவிட் டுவிட சர்வதேசத் தரப்பு தயாராக இருக்கும். இந் நிலையில் இணைந்து நிற்கும் இந்த இரண்டு தரப்புக்களையும் சரியாகக் கையாண்டு தமிழர் நலன்களைப் பேணும் பெரும்பொறுப்பு தமிழர் தரப்புக்கே உண்டு.

தமிழர் தரப்பு

தமிழர் தரப்பில் 2009க்கு பின்னான அரசியல் இருதுருவப்பட்டு நிற்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இத்துருவ நிலையைக் கடந்து ஒரு தரப்பாகச் சிந்திக்கவும் செயற்படவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இதுவரை வெற்றியளித்ததாகத் தெரியவில்லை.

இதில் முதலாவது நிலை முள்ளிவாய்க்கா லில் நடந்த ஆயுத மோதலின் முடிவைத் தமிழர் தரப்புக்கு ஏற்பட்ட பெரும் தோல்வியாகக் கருது கின்றது. இத்துடன் எல்லாம் முடிந்துவிட்டது இனித் தமிழ் மக்களுக்குப் பேரம் பேசும் வலு இல்லை, ஆகவே 'மென்வலுவைப்' பயன்படுத்தி அரச தரப்போடும் சர்வதேசத்தோடும் இணங் கிப் போகும் ஒரு அணுகுமுறையைக் கடைப் பிடித்து பெறக்கூடியவற்றைப் பெற்றுக்கொண்டு படிப்படியாக முன்னேறிச் செல்ல முயலலாம் என்பது இதன் கருத்தியல் . இந்த அணுகுமுறை யதார்த்தமானது, இராஜதந்திர ரீதியிலானது ஆகவே நடைமுறைச்சாத்தியமான ஒரே வழி என்று இத்தரப்பினரால் விளக்கப்படுகிறது.

இந்த அணுகுமுறையில் உள்ள சிக்கல் என்னவென்றால் இறங்கி வரத் தயாராக இருக் கும் ஒரு தரப்பைக் காணும் எதிர்தரப்பார் எவ்வளவு கீழே இறக்க முடியுமோ அவ்வளவு இறக்க முயல்வர் என்பதுதான். இதனைத் தான் "இளகிய இரும்பைக் கண்டால் கொல்லன்... அடிப்பானாம்" என்பார்கள். இன்று இந்தநிலை ஏற்பட்டுள்ளதை மிகத் தெளிவாக அவதானிக்க முடிகிறது. கவலைக்குரிய விதத்தில் இந்த அணுகுமுறையை இன்று கடைப்பிடிப்பது தமிழர் தரப்பின் ஏகோபித்த வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றுள்ள கட்சியா கும். மக்கள் மத்தியில் இவர்கள் தொடர்பான விமர்சனம் அதிகமிருப்பினும் புலிகளால் ஏற் படுத்தப்பட்ட அமைப்பு, அவர்களின் தொடர்ச்சி, ஒற்றுமை என்கின்ற பின்னணியில் தேர்தல் திருவிழாவில் இவர்களே முன்னணியில் இருக் கிறார்கள்.

இவர்கள் கூறுவதுபோல 'மென்வலு' த்திற மைகளைப் பயன்படுத்தி சர்வதேச தரப்பின் உதவியோடு அரசதரப்பை ஒரு வழிக்குக் கொண்டு வந்து வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் மீளப்பெறமுடியாத அதி காரப் பகிர்வோடு தமிழர் தம்மைத்தாமே ஆளும் வாய்ப்பை ஏற்படுத்த முடியுமென்றால் அது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால் கடந்த எழுபது ஆண்டுகால இலங்கைத்தீவின் வரலாறும் 2009இன் பின்னாக வந்த அரசாங்கங்களின் செயற் பாடுகளும் இவ்வணுகுமுறையைத் தோல்விக் கென விதிக்கப்பட்டதாகவே எமக்குப் பாடம் சொல்கின்றன.

இரண்டாவது அணுகுமுறை முள்ளிவாய்க் கால் பேரவலத்தை ஒரு தோல்வியாக அல்லா மல், முற்றுப்புள்ளியாக அல்லாமல் புதியதொரு பயணத்தின் தொடக்கமாகப் பார்க்க முனைகி றது. 1956இல் ஆரம்பித்து 2009இல் உச்சம டைந்த ஈழத்தமிழினத்துக்கெதிரான வன் முறையை இவ்வணுகுமுறை ஒரு இனவழிப் பின் வரலாறாகப் பார்க்கிறது. ஈழத்தமிழின அழிப்பு முள்ளிவாய்க்காலில் உச்சமடைந்தது. இன்று அது புதியதொரு வடிவத்திலே தொடர் ந்து வருகிறது என்பதை வலியுறுத்துவதன் மூலமும் நிரூபிப்பதன் மூலமும்தான் ஈழத்தமிழ

ருக்கான புதியதொரு வரலாற்றை வரைய முடியும் என இவ்வணுகுமுறை நம்புகிறது. தமிழின அழிப்பு நடக்கிறது என்ற உண்மைதான் தமிழினத்தின் எதிர்காலத்துக்கான திறவுகோல் என இது கருதுகிறது.

இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் 2009 இன் பின்னான ஈழத்தமிழ் மக்களின் பொதுப்புத்தி இதனை யதார்த்தமற்ற ஒன்றாகவும் ஒற்றுமைக்கு எதிரானதாகவும் பார்ப்பது தான். அரசியல் பலமற்ற சிலதரப்புக்களும் சிவில் சமூக அமைப்புக்களும் தான் இன்று இக்கருத்தியலை முன்னெடுக்கின்றன. மேலும் இவ்வணுகுமுறையில் உள்ள முக்கியமான பல வீனம் என்னவென்றால் தமது நம்பிக்கைகளை வென்றெடுப்பதற்குரிய வழிப்படம் ஒன்றை உருவாக்க இவர்களால் முடியாதிருப்பதும் அதன் காரணமாக மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியாதிருப்பதும் தான்.

முதலாவது அணுகுமுறை நிரல்படுத்தலை (Sequencing) ஏற்றுக்கொண்டு நீடித்த தீர்வைத் தரக்கூடிய அரசியல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்காக உண்மை, நீதி போன்ற நிலைமாறுகால நியமங்களை விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கின்றது. இரண்டாவது அணுகுமுறையானது நீடித்த தீர்வுக்கான ஒரே அணுகுமுறை பொறுப்புக்கூறும் விடயத்தில் உறுதியாக இருந்து சர்வதேச மயப்பட்ட விசாரணையை வலியுறுத்தி ஏற்படுத்தி நடைபெற்றது இன அழிப்பு என நிரூபிக்க உழைப்பதுதான் எனக் கருதுகிறது. ஆகவே உண்மையை வெளிக் கொணர்தல் நீதியை நிலைநாட்டுதல் போன்ற விடயங்களில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை என இது கருதுகிறது. இவ்வாறு இரு அணுகுமுறைகளும் எதிர் துருவங்களாக முரண்பட்டு நிற்கின்றன.

இந்நிலையில் இந்த இரண்டு தரப்பையும் ஒருங்கிணைத்து ஒருமுகப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ் மக்களின் நலன்சார்ந்த செயற்திட்டங்களை முன்னெடுக்க மேற்கொள்ளப்பட்டமுயற்சிகள் அனைத்தும் இது வரை தோல்வியிலேயே முடிந்துள்ளன. அடிப்படைக் கோட்பாடுகளில் ஒற்றுமையும் மூலோபாயங்களில் உடன்பாடும் தந்திரோபாயங்களில் புரிந்துணர்வும் கொண்ட ஒருங்கிணைந்த தமிழ்த்தலைமையை உருவாக்குவது இன்றுள்ள ஒரு பெரும் சவாலாகும். முடியுமா?

அருட்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன்

இன்றைய அரசியல் பின்புலத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அரசில் தீர்வுக்கான அணுகுமுறைகள்

தமிழ் மக்கள் எதிர் நோக்கும் நீண்டகாலப் பிரச்சினைகளின் தீர்வுகள் சிங்கள மக்களின் மன நிலையோடு இணைந்திருப்பதால் தமிழ் மக்கள் அதுபற்றித் தெரிந்து கொள்வது முக்கியமாகிறது. காலம் காலமாக சகோதரர்களாக இவ்வழகான தீவில் வாழ்ந்த இரு இனங்களுள் முரண்பாடுகளும் பிளவுகளும் ஏற்பட்டிருப்பதற்கான வேரோட்டமான மூல காரணிகளைத் தெரிந்து கொள்வது ஓர் அரசியல் தீர்வுக்கான முன்னெடுப்புக்குத் தேவையானது.

1.0. ஒடுக்கு முறைக்கான காரணிகள்:

சமயம், அரசியல், பொருளாதாரம், வரலாறு, உளவியல் போன்ற காரணிகளும் தமிழர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய உரிமைகளை மறுப்பதற்கான காரணிகளாக அமைகின்றன.

சமயச்சார்பு :இது சிங்கள பௌத்த நாடு என்ற எண்ணக்கரு சிங்கள மக்களுள் வேரோட்டமாகப் பதிந்துள்ளது.[1] இலங்கையில் பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கும் பரம்பல் செய்வதற்கும் புத்த பெருமான் சிங்கள வர்களைத் தெரிவு செய்தார் என்று எண்ணியது.[2] இந்தியாவின் பௌத்த சமணக் கோட்பாடுகள் பரவலாக வேரூன்றத் தொடங்கிய காலங்களில் தமிழ் நாட்டிலும் பௌத்தம் பரவத்தொடங்க இதற்கு எதிராக இந்து சமயம் பக்திமார்க்கங்களின் ஊடாக எழுச்சி பெற்றது. பௌத்தர்களும்

சமணர்களும் இந்துக்களால் தாக்கப்பட்டு கழு வேற்றிக் கொலைசெய்யப்பட்டது வரலாறு. அதே காலத்தில் வடகிழக்கில் இருந்த தமிழ் பௌத் தர்களும் படிப்படியாக சைவத்தைப் பின்பற்றின தும் தமிழ் பௌத்த டகோபாக்கள் கைவிடப்பட்டு அழிவுக்கு உட்பட்டதும் வரலாறு. (பௌத்த அடை யாள எச்சங்களைத் தமிழ் பகுதிகளில் -கந்த ரோடை போன்ற இடங்களில் காணக்கூடி யதாக இருக்கின்றது.) இச்சமயக் காழ்ப்புணர்ச்சி இலங்கை அரசியலிலும் ஊடறுத்து நிற்கிறது.

அரசியல்: அநாகரிக தர்மபால குழுவினரும் சிங்கள அரசியல் வாதிகளும் சிங்கள ஆரிய உயர்வர்க்க இனவாதப் போக்கைத் தழுவியது.[3] மட்டுமல்ல அரசியல் அதிகாரத்தில் இருப் பதற்குத் தமிழர் பிரச்சனையைத் துருப்புச் சீட் டாகப் பயன்படுத்தியது. [4]

பொருளாதாரம் : சிங்களவர்கள் தங்களை விடத் தமிழர்கள் பொருளாதாரத்தில் குறிப்பாக வாணிபத்தில் உயர்ந்தவர்களென்று எண்ணி யது. [5]

உளவியல் : இந்தியாவின் தென்கோடியில் வாழும் ஏழு கோடித் தமிழ் மக்களின் பிரசன்னம் ஒரு நிரந்தர அச்சத்தை உருவாக்கியமை.[6]

வரலாறு : தென் இந்தியாவிலிருந்து குறிப் பாக மூவேந்தர் காலத்துச் சோழ நாட்டிலிருந்து படையெடுப்புக்கள் நடத்தி வளமான இலங்கை மண்ணைக் கைப்பற்றியதாகவும் எண்ணியமை.[7] இவ் வரலாற்றுச் செய்தியை இன்றைய பரம் பரை வரை ஊட்டப்பட்டு வருவதும், தமிழர் பற்றிய அச்ச உணர்வுகளை உருவாக்கித் தமிழர் களைத் திட்டமிட்டு பாகுபாட்டுடன் ஓரங்கட்டவும் வழிவகுக்கிறது.

1.1. புதிய அச்ச உணர்வு:

வரலாற்றில் ஏற்பட்ட பன்முக அச்சுறுத்தல் களுக்கு அப்பாலும் சமீபத்திய தசாப்த காலங் களாக வேறொரு விதமான புதிய அச்சத்தினை யும் அவர்கள் தமது மயப்படுத்தியுள்ள காரணத் தால் தமிழர்களுக்குக் கொடுக்கவேண்டிய உரிமைகளைத் தொடர்ந்து மறுக்கும் மனப் பாங்குடனேயே அவர்கள் செயற்படுகிறார்கள்.

அ) புலம் பெயர்ந்து மேற்புல நாடுகளில் வாழும் லட்சக்கணக்கான தமிழர்கள், தாம் வதியும் பன்னாட்டுச் சமூகத்தைத் தமக்கு எதிராக உசார்படுத்தி வருவதாக சிங்கள மக்களிடம் எழுந்துள்ள அர்த்தமற்ற அச்ச உணர்வு.

ஆ) ஐக்கிய நாடுகள் சபையும், போர்க்குற் றங்கள் கண்டறியப்பட்டுக் குற்றவாளிகள் இனங் காணப்பட்டுத் தண்டனை வளங்கப்படவேண்டு மென்று முனைப்புடன் செயற்படுவதால் தங் கள் நாட்டுக்காகப் போராடிய இராணுவத்தலை வர்கள் இரத்தம் சிந்திய இராணுவச் சிப்பாய்கள் தண்டிக்கப்படலாம் என்ற ஆதங்கம்.

இ) மேலும் இந்திய தமிழ் நாடு இலங்கைத் தமிழர் மீது கொண்டுள்ள இனத்துவத் தொடர்பு டன் இணைந்த அக்கறையால், ஈழத்தமிழருக் கான விடுதலைப் பயணத்தில் தமிழ் நாடும் தவிர் க்க முடியாத பங்காளியாகத்தன்னை வெளிப் படுத்துவதும் இங்குள்ள சிங்களவர்களுக்கு ஒருவிதமான நெருடலை ஏற்படுத்துகிறது.

2.0.மாற்றமற்ற சிங்கள மனோநிலை

இலங்கை சுதந்திரத்தின் (1948) பிற்பாடு பிரித்தானியர் கையிலிருந்து சிங்களவரிடம் ஆட்சிகைமாறியது. படிப்படியாக தமிழர் உரி மைகள் மறுக்கப்பட்டது. சாத்வீக, அகிம்சா போராட்டங்கள் ஊடாக எதிர்ப்பை வெளிப்படுத் திய ஒவ்வொரு முறையும் இராணுவ இயந்திரங் கொண்டு அடக்கப்பட்டது. இது பயன் கொடுக் காத பட்சத்தில் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றது. தமிழர்கள் விடயத்தில் கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக சிங்கள மனோ நிலை ஒரே பாதையில் பயணிக்கிறது.

'தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவ தாக ஒரு தரப்புக் காட்டிக்கொண்டால் மறுதரப்பு அதனை எதிர்க்கும். அந்த எதிர்ப்பு வலுத்து சிங்

களத் தேசியவாதம் சீண்டப்பட்டு வீறு கொண்டெழும். அதற்குப் பயந்து முதல் தரப்பு ஒன்றில் தன்னுடைய முயற்சிகளைக் கைவிடும் அல்லது இரண்டாவது தரப்பிலும் பார்க்க வீரியமாக சிங்களத்தேசிய வாதத்தை சீண்டி அதன் பயனை அனுபவிக்க முயற்சிக்கும்.

காலம் காலமாக இதுவே நடந்து வந்தது. 2015 ஒரு மாற்றம் ஏற்பட்டது. இதுவரை காலமும் அரசியல் ஆட்டம் ஆடிவந்த ஜக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஒரே அணிக்குள் ஒன்று சேர்ந்தன. வரலாற்றில் இவ்வாறான வாய்ப்பு முன்னர் இருந்ததில்லை என்று முற்போக்குச் சிங்களவர்களும் மென்போக்குத் தமிழர்களும் கொண்டாடினார்கள். இந்த ஒரு வாய்ப்பே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அசைக்க முடியாத நம்பிக்கையைத் தருவதாக இருந்தது, இருக்கிறது.'[8]

தமிழர் உரிமைக்கான 30 வருட அகிம்சைப் போராட்டத்திலும் 30 வருட ஆயுதப் போராட்டத்திலும் தமிழருக்கு உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையினால் இது சர்வதேச மயமாக்கப்பட்டதையும் ஐ. நா. மன்றத்துக்குள் இது ஒரு விவாதப் பொருளாக மாறியதையும் சிங்களவர் கண்டிப்பாக உணர்ந்தே ஆகவேண்டும். உள்நாட்டு நீதிப்பொறிமுறையில் தமிழர் நம்பிக்கை இழந்தவர்களாகத் தொடர்ந்தும் சர்வதேச விசாரணை மூலமே நீதியையும் நியாயத்தையும் பெற முடியும் என்பதை வலியுறுத்தியும் வருகின்றனர் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அதே வேளையில் புதிய ஆட்சிமாற்றத்தினால் பன்னாட்டு சமூகம் ஒரு தாராள மென்போக்கை இலங்கை மட்டில் கொண்டுள்ளது. இந்நிலையில் புதிய அரசு எடுத்து வரும் நேர்மறையான திட்டங்கள், செயற்பாடுகள், பேச்சு வார்த்தைகளைத் தமிழர்கள் எதிர்க்கும் போது தமிழர் பன்னாட்டு சமூகத்தின் ஆதரவை இழக்கநேரிடும்.

3.0. இராஜதந்திர உறவு

ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டது, பேச்சுவார்த்தைகள் முறிக்கப்பட்டது, போராட்டங்கள் ஒடுக்கப்பட்டது இது சிங்களவர்களின் தொடர்ச்சியான வாக்குப் பிறழ்வும் நேர்மையற்ற போக்கும். தற்பொழுது தமிழர்களுக்குக் கையிலிருக்கும் ஒரே வழி இராஜதந்திர உறவு ஒன்றுதான். அதன் மூலமாகப் புதிய விடுதலைப் பாதையை நகர்த்த வேண்டியுள்ளது. முதற்கண் நமது சிங்களச் சகோதரர்களோடு தொடர்பு நிலைக்கான முயற்சிகளைத் தேடுவது முக்கியமானதாகத் தோன்றுகிறது. உதவி தேடி உறவு தேடி அனைத்திற்கும் அயல்நாடுகளுக்கு அலையும் நாம், மீண்டும் சிங்களவரோடு ஓர் உறவைத் தொடங்கமுடியாதா? அரசியல் தலைவர்களோடு மட்டும் பேசுவதோடு நிற்காமல் அடிமட்ட சிங்களமக்கள், பௌத்த பிக்குகளோடு தொடர்ச்சியான பேச்சு வார்த்தைகள் நடாத்தப்படவேண்டும்.

3.1. போராட்ட வடிவங்கள் மாறவேண்டும்

சாத்வீகப்போராட்டம் முதல் ஆயுதப்போராட்டம் வரை தோல்வி கண்ட யதார்த்தத்தை உணர வேண்டும். இப்பெலவீனத்திலும் விழுகையிலுமிருந்து என்ன விதமாக எழுச்சி பெறலாம் என்பதும் அது நோக்கிய செல்நெறியும் கவனத்துக்குரியது. மீண்டும் அர்த்தமற்ற போராட்டங்களை வெளிப்படுத்தி அல்லலுறும் மக்களை மேலும் உயிர் பொருள் ஆபத்துக்குள் இழுத்துச் செல்லாமல் இருப்பது முக்கியமானது. வீரவசனங்களல்ல விவேகமான உரையாடலே பலன்தரும்.

'தமது வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுவதற்காகத் தாம் எவ்வித அர்ப்பணிப்புக்கும் தயார் என்றும் தமிழினம் வீதிக்கிறங்கித் தன் வீரத்தை நிரூபித்தால் விடிவு நிச்சயம் என்றும் பயனற்ற வீர வசனங்களைப் பேசி மக்களை உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தும் அரசியல் வாதிகளைத் தொடர்வது எம்மை மீண்டும் அழிவுக்கும் ஆபத்துக்குமே இட்டுச்செல்லும்

பெரிய போராட்டங்களைத் தமிழினம் இத் தீவின் கரைகளைத் தாண்டி ஐ.நா.சபை முன் றல் வரை செய்திருக்கின்றது. இவையேதும் தெற்கை அதட்டியதாகவோ உலகை உலுப்பிய தாகவோ தெரியவில்லை. அப்படி உலுப்பியி ருந்தால் இன்றும் அரசியற் தீர்வு குறித்தும் காணி விடுவிப்புத் தொடர்பிலும் பேசிக்கொண் டிருக்கத் தேவை இருந்திராது.' [8]

3.2. தவறுகள் கற்பிக்கும் பாடங்கள்

1987 இந்தியா - இலங்கை அரசு செய்த ஒப்பந்தத்தின் கீழ் எமக்குக் கிடைத்த காணி பொலிஸ் அதிகாரங்கள் போதுமா இல்லையா என்பது இப்பொழுது விவாதப் பொருளல்ல ஆனால் அதில் குறிப்பிடப்பட்டிருந்த காணி பொலீஸ் அதிகாரங்கள் கொண்ட மாகாண சபை முறைமை. வடக்குக் கிழக்கு இணைப்பு இவை இரண்டுமே அந்த ஒப்பந்தத்தின் மைல் கற்கள் எனலாம். ஏதோ காரணங்களுக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அந்த ஒப்பந்தத்தின் முதல்தர எதிரிகளானார்கள். இவ்வாறு பேச்சு வார்த்தையின் பொழுது ஒரே மூச்சில் முழுத்தீர்வைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் பல தீர்வுகளைத் தமிழர்களாகிய நாம் இழந்துள்ளோம். தற்பொழுதும் புதிய அரசின் அரசியல் தீர்வுத்திட்டம் ஆட்டம் கண்டா லும் அதன் உள்ளீடுகள் சிலவற்றையாவது பெற்று எமது இராஜதந்திரப் போராட்டத்தை தொடர்வதே சிறந்த வழி.

3.3. போர்க்குற்ற சர்வதேச விசாரணை

போர்க்குற்ற விசாரணையை மட்டும் அழுத் திக்கொண்டு இருப்பின் தமிழ் சிங்கள உறவு மேலும் விரிசல் அடையும். அவ்விசாரணையை ஐ. நா. மன்றத்திற்கு விட்டுவிடுவோம். தமிழரது உரிமைகளை வென்றெடுப்பதில் முக்கியத் துவம் கொடுத்து போர்க்குற்ற விசாரணைகளை அடக்கி வாசிப்பது நலமாக இருக்கும் என்றும் சிந்திக்கலாம். மனித உரிமை மீறல் சம்பந்த மான போர்க்குற்ற விசாரணையை நடாத்தும் ஐ. நா. மன்றம் இதனால் தமிழர்களது உரிமை களைப் பெற்றுத்தரும் என்பதற்கும் தொடர் பில்லை.

போர்க்குற்றவாளிகள் தண்டிக்கபட வேண்டு மென்ற அச்சத்திலிருந்து இராணுவத்தை விடுவிப்பதை தமிழர் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்குப் பேரம் பேசும் சீட்டாகப் பயன் படுத்த முனையலாம். சிங்களப் போர்க்குற்றவாளி களுக்கும் தமிழ் கைதிகளுக்கும் மன்னிப்பு அளித்து ஒரு புரிந்துணர்வுத் தளத்தை உரு வாக்க முனைவது சிறந்தது. இவ்வாறான மன் னிப்பு நிகழ்வுகள் மகா யுத்தங்களின் பிற்பாடு பரம விரோதிகளாயிருந்த பிரித்தானியா - யேர்மனி போன்ற நாடுகளுள் இடம்பெற்றது. தற்பொழுது அந்நாடுகள் கைகோர்த்து எமக்கு முன்னுதாரணமாக அமைகின்றன.

3.4. இந்தியாவின் வகிபாகம்

இலங்கையைப் பொறுத்தவரையில் இந் தியா எவ்விதமாகப் பிரச்சினையைப் பார்க்கிறதோ உலகம் அதே விதமாகப் பார்க்கிறது. தன்னை மீறி இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இந்தியா விரும்புவதில்லை. ஐரோப்பிய ஒன்றியம் இவ் அரசியல் தீர்வுக்கு இந்தியாவை மீறி செயற்ப டாது என்பது யதார்த்தம் சோவிய ஜக்கிய நாடு இந்தியாவுடன் இணைந்துதான் செயற்படும். சீனா இலங்கையினுள் கால் பதித்திருப்பதால் ஐக்கிய அமெரிக்கா இந்தியாவுடன் இணைந்து நிற்பதுதான் யதார்த்தம். சர்வதேசக் குடும்பம் இந்தியா செய்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற முனைப்பாக இருக்கும் என்பதில் சந்தேக மில்லை அதற்கு அப்பால் தமிழ் தேசியம் என்று கூறிப் போராட்டங்கள் தொடர்வது அர்த்தம் இல்லை. இலங்கையில் போர் நடபெறுகையில் நோர்வே அனுசரணையாளராக இருந்த பிரதிநிதி திரு சோள்கைம் அவர்கள் இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடாத்திய ஒவ்வொரு தடவையும் இந்தியத் தலைநகர் புது டெல்லி சென்று இலங்கை அரசுடன் என்ன பேசப்பட்ட தென்பதை கூறிச்செல்ல வேண்டியிருந்தது.

இந்தியா இலங்கையோடு செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அப்பால் செல்ல முடியாதது என்பது தெளிவு. எனவே வேறெந்த நாடும் தமிழருக்காக ஓர் ஒப்பந்தத்தை செய்ய இந்தியா அனுமதிக்காது என்பது உண்மை. இந்தியாவைத் தவிர்த்தோ அல்லது உடனோ ஒரு பூகோள அரசியல் செய்வது என்பது வெறும் கற்பனையே.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் எமக்குக் கிடைத்த நல்ல அம்சங்களைவிட கூடுதலாகவோ அல்லது அதற்குச் சமமாகவோ அதிகாரங்கள் நல்லாட்சி அரசின் புதிய அரசமைப்பு மூலம் கிடைக்குமென்பதையும் எதிர்பார்க்க முடியாது.

3.5. தமிழ் தேசிய ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தல்

உரிமைக்கும் நீதிக்கும் பாதுகாப்பு மக்கள் சக்தி, இது ஒரு தலைமையில் இயங்கவேண்டும். குறைகள் பிழைகள் இருப்பின் நெறிப்படுத்தப்பட்டுத் தலைமைத்துவம் சரியான பாதையில் பயணிக்க மக்கள் உதவவேண்டும்.

அதிகாரப் பங்கீடானது நிலம் சட்டம் ஒழுங்கு கல்வி சுகாதாரம் உட்படசமூக, பொருளாதார அபிவிருத்தி வளங்கள் மற்றும் நிதி அதிகாரங்கள் புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கடந்த 2015 ஜனவரியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு (த.தே.கூ.) எடுத்த சாணக்கிய முடிவின் காரணமாகவே மகிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்டு ஜனாதிபதி சிறிசேனா ஆட்சிக்கு வந்தார். அந்தக் குழுவில் த.தே.கூ. தமிழ் மக்களுக்குரிய தீர்வு பற்றிப் பேசிவருகிறது, அது அரசோடு மோத விரும்பவில்லை. போருக்குப் பின்னர் பேரம் பேசும் சக்தியை இழந்து விட்ட நாம் அமெரிக்கா, இந்தியா போன்ற நேச நாடுகளின் ஆதரவோடுதான் இனச்சிக்கலுக்குத் தீர்வு காணமுன் ஆரோக்கியமான உறவு அரசுடன் பேணுதல் முக்கியமானது.

அடுத்ததாக வடகிழக்கில் வாழும் தமிழருடைய ஒற்றுமையைப் பலப்படுத்தவேண்டும். அதற்குப் போதிய அவகாசம் கொடுத்துச் செயலாற்றுவது முக்கியமானது. அவசரப்படுவது வன்செயலின் பிறிதொரு முகம்.

'Peace is not only the end and target also means to an end.'- *Martin Luther King*
'அமைதி எமதுநோக்கும் இலக்கும் மட்டுமல்ல அதை அடைவதற்கான வழியும்அதுதான்.'

அடிக்குறிப்புகள்

1.In the last 100 years, violence has been directed against what have been called theun-Singhala (asinghala) and un-Buddhist (abaudha) element in Sri Lanka society.
"cf. Jayawardene K., (Associate Professor in the Dept. of Modern History and
Political Science, Colombo University, Sri Lanka),"Ethnic Consciousness in Sri
Lanka: Continuity and Change",in Sri Lanka, The Ethnic Conflict, New Delhi 1984, p.115.

2. Cf. Vijayawardhana D. C., Revolt in the Temple, Colombo 1953, pp. 25-27

3. Cf. Jayawardena K., "Class Formation and Communalism", in Race and Class,Vol.XXVI, London, Summer 1984, pp. 58-62

4. Jayawardena K., "Class Formation and Communalism", in Race and Class,Vol.XXVI, op.cit., pp. 58-62

5. Cf. Pastoral Letter of the Catholic Bishops of Sri Lanka, Colombo 1984, p.14.

6. Cf. "Emergency Sri Lanka", in International Alert, London 1986, p.9.

7. Cf. Pastoral Letter of the Catholic Bishops of Sri Lanka, 0p.cit,.p. 13.

8.இலைஜா கால், சததியங்கள், உதயன், 25.10.2016. ப.12

அருட்பணி அ.பி.யெயசேகரம்

Feasible ways to achieve lasting solution to Tamils issue at present Context

The seeds of the conflict and fears

In spite of pluralistic character of Sri Lankan population, there is deep rooted faith among the Sinhalese that the island is a Singhalese –Buddhist country that generates many fears: Religious, Political, Economic, Psychological and Historical

New fears:

The Singhalese feel the presence of Tamil Diaspora in Western Countries influence or instigate the International community and United Nations to punish Sri Lankan Military personnel as war criminals who fought for them against Tamil Tigers.

Also the Tamil politicians in Thamil Nadu make use of Sri Lankan Tamils problem as political issue.

No possible change among the Singhalese Politicians

The Sinhala nationalism dominated the political set-up, gained control over the state machinery. This oppression has a continuous history of sixty nine years since independence and has been practiced by successive governments in the same way.

Diplomacy

Sri Lankan Politics is a Vihara Politics. It is centered around Buddhist Mahanayakas and monks. Tamils always tend to go out of the country for solution. why not think in terms of a constant dialogue with Buddhist monks and the public who considerably influence Sinhala politicians.

Various diplomatic ways:

-The process of resistance (struggle) needs a change; it has to be constant dialogue to eradicate gradually their fears and suspicion.

Organizing protest marches and mass agitation only within north and Eastern provinces do not help. Tamils have done it as far as UNO, it has not brought any meaningful effect. The resistance would consequently lead to violent Agitation and consequently create a need again for a strong Military occupation.

-Learning from past history

Indian - Sri Lankan Pact in 1987- emergence of North and East and powers of Police and Land given to Provincial council is a mile stone in the development, but the Tigers rejected it.

- Amnesty: To work out for the way to permanent solution and reconciliation among conflicting parties Amnesty was implemented all over the world. Hence here, too amnesty could be considered for war criminals and Tamil prisoners as bargaining issue to come closer to conflicting parties to win back the lost rights. The Slogans of punishing war criminals do not help any way to solve Tamil issues .

-role of India

The presence of India, the big neighbour should not be overlooked. The World perceives the Sri Lankan Issue as India sees it. Neither International community nor UN can intervene in this issue overlooking the Sri Lanka - India pact already in existence.

-Tamils unity

Tamils have to be united under one political party which has been elected by the people and to negotiate constantly to win over the rights through dialogue and non-violent strategy. Splitting into small groups or political parties on certain minute issues would impair or risk the negotiations under way.

Rev. Fr. A.F. Jeyasegaram

Fr. Sara - called to work with hands rather than lips

I observe Fr. Sara as a person who considered himself an instrument in the hand of God trying to establish peace with justice in the community he was destined to serve. I have observed and still observe some people going through a period of restlessness and even uneasiness till they do something to make lives of others more comfortable, more relaxed and to be more at peace with themselves and others. I have seen signs of this golden quality in Fr. Sara already when he was a student in St. Francis Xavier's Major Seminary where I was a member of the formation team. Though he was older than his companions since he joined the Seminary a little late he used to take part in all the activities enthusiastically.

The sterling quality he possessed began to bloom in different forms right from the time of his ordination when he was entrusted with the responsibilities of guiding, protecting, counselling and leading the flock in his care.

During the past two decades there had been two major events or disasters which rattled the people especially in the North and East causing immense damage to the property and heavy loss of lives. As a true shepherd of his flock who along with them underwent

these harrowing experiences, Fr. Sara had at the end to pay the supreme sacrifice. These events were the 'Tsunami' in Dec. 2004 and the final war between the Sri Lankan government and the Tamil militants in 2008 and 2009. Both these events resulted in the heavy loss of lives up to the tune of more than 150,000 let alone the traumatic experience of their near and dear ones. More than 15,000 people have also disappeared or forced to disappear without any trace. A reflection of the above mentioned facts makes me to put down in words some aspects of Biblical background, contributions of great Saints and men which probably motivated Fr. Sara to empathise with the affected ones.

Widow's son

During the earthly life of Our Lord, He always had a soft corner for the suffering and the marginalised. Jesus had mercy on the widow who lost her only son and gave him back to her.[1] Widows in the Jewish society were considered the unfortunate ones who were not favoured by God. Adding to that, she lost her only son, the only bread-winner of the family. Jesus had pity on her pathetic condition and turned everything upside down and there was joy all over the place where there was sadness and dismay. There are number of occasions in the Gospel where Jesus worked many miracles when the sadness of the people concerned was turned into joy.

When a person is in need of something very essential, mere soothing words amount to only lip service. Words of encouragement not accompanied by kind deeds are only empty. That is why St. James says that when a brother or sister is in need of food or clothing mere words such as, 'Eat well and be satisfied or clothe yourself and keep warm' will be of no use.[2]

A Pioneer social Apostle in the history of the church

St. Basil of Caesarea (329 - 379) was not only the Father of Eastern Monasticisim but also pioneer Social Apostle of the Church. He was deeply disturbed and moved to action when he witnessed the social evils then prevailing in Caesarea. The ordinary people and the colonists (those who came to Caesarea seeking employment) were driven to the wall due to exorbitant taxation. The cancer of usury was rife. Many were homeless, prostitution was rampant etc. The saintly Bishop who had a predilection for the afflicted and the poor, developed great social themes, the fundamental equality of all human beings before God was outlined and the need for the redistribution of goods to limit the greed of some was emphasized. The words of St. Basil are worth pondering upon, "The bread which you do not use is the bread of the hungry, the garment hanging in your wardrobe is the garment of him who is naked; the shoes that you do not wear are shoes of the one who is barefoot; the money that you keep locked away is the money of the poor; the acts of charity that you do not perform are so many injustices that you commit." He built a city to house the homeless, the destitute, the workers etc. with facilities to care for the sick and the disabled. The city was righty called 'Bailidad'.[3]

[1] Cfr., Lk.7: 11-16.
[2] James, 2: 15-16.
[3] Cfr., Hamman, Adalbert, **How to Read the Church Fathers,** SCM Press, London, 1991, p.79; Leornard Foley, (Ed.) Pat McClosky (Revised), **Saint of the Day**, Bangalore, 1999, p.3.

Great saints of the modern times

One of the outstanding Saints of the modern times is St. Peter Claver S.J. (1581-1654). He worked for about 40 years relentlessly for the betterment of thousands of people who were brought from Africa and sold as slaves in America. He had worked in Cartagena where there was the port and a clearing house where the slaves from Africa were brought and kept to be sent to different cities and mines to work as slaves in subhuman conditions. Pope Paul III (1534-1549) had already condemned the slave trade. Later Pope Pius IX (1836-1878) described the slave trade as 'supreme villainy'. Though the call of the Popes and the heroic work of great men, Saints like St. Peter Claver did not succeed for a long time in stopping slave-trade for centuries, they tried to alleviate their sufferings and to establish their human dignity to some extent. The only concession the 'slave owners' gave was to allow them to be baptized that too without any religious instruction but with no effort to mitigate their physical condition which was sub-human. As soon as a ship arrived at the port of Cartagena with a load of negro-slaves St. Peter Claver used to rush to them with medicine, foodstuffs, bread, brandy, lemon, tobacco etc. He did not know their language and later he got the help of some interpreters to converse with them to give them hope and encouragement. He used to say that we must speak to them with our hands, before we try to speak to them with our lips. He cared for their bodies and souls. Every year some 10,000 slaves were brought to that shore alone and in 40 years of his labor he cared for and baptized about 300,000 slaves after giving them the basic instruction. He tried to implement the laws of Spain at least which were somewhat sympathetic to these unfortunate men. St. Peter Claver was canonized by Pope Leo XIII in 1888 and he declared him patron of the missionary enterprise among the Negroes in whatever part of the world.[4]

Another Saint of the modern times who is the Patron of Sri Lanka and our pride is St. Joseph Vaz (1651-1711). He labored in Sri Lanka for 24 years under trying conditions. Ten of those years he had to toil hard alone covering the length and breadth of Sri Lanka on foot several times mostly under disguise. His simple and humble life spoke louder than his words. His charity had no frontiers and it was manifested clearly especially during the outbreak of small-pox in the Kandyan Kingdom. He treated and cared for all the sick irrespective of race, creed, color, etc. with utmost kindness. Even when the near and dear ones and even the family members abandoned the infirmed, Fr. Vaz and his companions cared for them in his improvised hospital.[5] During the other days also the Saint always had a soft corner for the poor. After the daily Mass in Kandy he used to distribute free rice to all the poor who used to come there whether they were Buddhists, Hindus or Muslims. At least four times as year he used to gather all the poor in and around the town of Kandy and gave to them meals and clothing. Very often he used to go in search of them to distribute these provisions.[6]

A contemporary witness I believe had a deep impact in Fr. Sara. The film 'Remero'

[4] Cfr., **Butler's Lives of Saints**, ed. & revised by Herbert, J. Thurstan & Donald Attwater, Vol.III, Burns & aoates, London, St. Peter Claver, pp.519-524.

[5] Cfr., Perera, S.G., **Life of the Venerable Father Joseph Vaz - Apostle of Ceylon,** Galle,1953, pp.135-139.

[6] Cfr., Sebastian de Rego, **Life of Father Joseph Vaz** (in Portuguese), 1747, tr. in Tamil by Fr. Gabriel Pacheko (1795), published by Fr. S Gnanaprakasar, Jaffna, 1910. p.173.

released in 1989, depicting the life of one of the contemporary martyrs of the Church, Archbishop Oscar Remero of El Salvador who was gunned down by the hit-squad of the Salvadoran Government on 24.03.1980, was screened in our Seminary more than once. Archbishop Remero when elected Bishop was considered to be a moderate with conservative views of the Church. The rulers of El Salvador also considered him as a person who would not cross their lines. But when the Archbishop saw that untold number of civilians, human-rights activists and even some of his priests were either killed or disappeared he took a very firm stand and eventually was gunned down while celebrating mass. The slogan of the government was 'Be a Patriot - Kill a priest' and between 1980 and 1989 more than 60,000 Salvadorans were killed.[7] All these events beautifully depicted in the film must have quietly and deeply worked in the shaping of Fr. Sara.

Sri Lankan Martyrs of Our times

Fr. Sara was a teenager probably thinking of what kind of vocation he has to choose when the event of the martyrdom of Fr. Mary Bastian a 37 year old young priest a zealous Pastor a friend of the poor and the afflicted was gunned down at Vankalai in the then new-born Diocese of Mannar during the early hours of the day of Epiphany in 1985 (6.1.1985). It was a time when the war between the Sri Lankan Security Forces and the Tamil Militants took a turn for the worse especially after the July Riots of 1983 when thousands of Tamil civilians were killed. During these years the outspoken critics of the behavior of the Security Forces and those who tried to bring out the facts with regard to the heavy loss of lives of civilians due to the rampage of the army, navy and the air-force as retaliatory acts to the LTTE attacks on them, were targeted. There was such a retaliatory killing of more than 100 civilians travelling in buses between Murunkan and Mannar. Just before that there was a land-mine explosion in which some soldiers were killed. After this retaliatory massacre the entire Mannar district was like a ghostly region and people were afraid to come out even to identify their dead near and dear ones. It was Fr. Mary Bastion and a few others who came out to help the relatives of the dead ones to identify them and take them to their respective places to give them dignified burial.

It was not merely the gruesome killing of Fr. Bastian but also the false propaganda of the Government with regard to the whole episode which added insult to the injury. Some of the eye witnesses of the killing and the removal of the body of Fr. Bastian in a jeep by the Sri Lankan army are still alive. At the same time the army- spokesman then in their official press release issued a statement that there was a battle in the church premises of the church at Vankalai and Fr. Bastian managed to escape to India. The media in the South highlighted this news and many, including the Catholic Church leaders in the South believed it. The Bishops then of Jaffna and Mannar condemned the killing and stated that the army was accountable for the killing of Fr. Mary Bastian and the other alter-boys who were then with him in the presbytery.

There was also another instance of martyrdom in the South in 1987. There was a similarity between this martyrdom and that

[7] Cfr. From the internet - Oscar Romero.

of Arch Bishop Oscar Romero seven years before. This was the killing of 60 years old Oblate Priest Fr. Michael Rodrigo who was gunned down while celebrating Mass on 10.11.1980. His blood was splashed into the chalice after the consecration and was mixed with the precious blood. This priest was working for the uplift of the peasants in Buttala in the Badulla district. Some of the rich who were well connected with the powerful politicians of the region were not interested in the 'social work' of Fr. Rodrigo which knew no linguistic or religious barrier. In spite of the threats to his life he continued with his work and had to pay the ultimate price.[8]

The enforced disappearance of Fr. Jim Brown (1972-2006) (presumed dead) is another case which had a deep impact in the life of Fr. Sara. Fr. Jim Brown was Fr. Sara's contemporary in the Seminary days. When the final war between the Sri Lankan Government Forces and the LTTE resumed in 2006 Fr. Jim Brown was in charge of the Catholic Community at Allaipiddy where a fight broke out and in the cross-fire more than dozen civilians of the village were killed and Fr. Jim Brown took an active part in evacuating the other villagers into safe areas. The Security Forces of the area considered this humanitarian act as an act of collusion with the LTTE. Eventually he and his lay-helper, Mr. Vimalathas, a young married man disappeared after being seen last in front of the army sentry-point at Allaipiddy on 20.02.2006. Our Bishop then Rt. Rev. Fr. Thomas Savundaranayagam made a complaint and launched a strong protest. A case was filed and even after 11 years the case has not made any progress.

There are also number of other Priests and Religious who were killed or forced to disappear during the last few decades of war starting from Fr. Mary Bastian. The list is as follows: Frs. Chandra Fernando and Herbert in the East and Frs. Jim Brown and Francis Joseph, the last two come in the category of 'enforced disappearances'. There is one Rosarian Brother Wenceslaus who was gunned down at Tholagatty in Valigamam North. Frs. X. Karunaratnam (Kili) and Packiyaranjith were killed in land-mine explosions. Fr. Jeyarajasingam, a Methodist Pastor was killed and his body burnt with his vehicle behind the Thallady army camp a few weeks before the murder of Fr. Mary Bastian. All these took place within the last 40 years and there is no doubt that these people did not just throw away their lives unnecessarily. So far nobody has claimed responsibility for the deaths of these dedicated servants of God and men though everybody here knows who were behind these killings.

Background to the ethnic Problem

There were many independent Kingdoms in this island (Sri Lanka) before the colonial powers took control from the 16th century. Finally it was the British who took the maritime region in 1796 and with the victory over the Central Region of Kandy in 1815 brought the whole island under their control. For the sake of easy administration they had one government for the whole country and gave independence to the whole country in 1948 without due consideration for the age old different languages and cultures of people. The lack of foresight resulted in the outbreak of tension within a decade and subsequent race-riots in the following years causing damage to property and loss of several hundred thousand lives of people.

[8] Cfr., From the I nternet, "Michael Rodrigo."

The first outbreak was triggered by the 'Sinhala only Act' of Mr. S.W.R.D. Bandaranayake in 1956 to get the support of the Sinhala masses. The Tamils protested and their leaders staged a 'Satyagraha'- non violent protest in the Gall-face in Colombo and it was put down violently by the government. The Catholic Church leaders did not raise their voice in any way. It was only Fr. Xavier Thaninayagam, a great Tamil scholar of international repute who took part in this protest. In some schools in the North where Sinhala was also taught as a second language the students burnt the Sinhala books as a sign of protest. Then in 1958 when government tried to introduce Sinhala 'Sri' instead of the existing English letters to be displayed in the vehicles, the riots broke out and many Tamils were killed and many more were sent to Jaffna from Colombo by ship and other modes of transport. There were further riots targeted against the Tamils in 1961 and 1977. In the 1977 riots many of the Indian Tamils living in the Central Province and other parts were driven out and many of them fled to the North.

It was only after the riots of 1977 that the Catholic Church began to act. First of all the Church was involved in humanitarian work of the thousands of displaced people in a massive scale. Slowly organizations and structures not only non-governmental but also within the Church in the North and South made efforts to prevent recurrence of such man-made disasters.

Further Violence and Ethnic Riots

Unfortunately the ruling governments (whether UNP or SLFP) failed to understand the signs of the time and failed to learn lessons from the riots of 1977. When the riots broke out and when the minority Tamils were harmed in a massive scale the danger of the Tamil youth having recourse to an armed struggle as all the previous non-violent struggles claiming equality and the recognition of the Tamil language, culture and their traditional homeland failed. It eventually became a reality when a group of Tamil youngsters started to launch an armed struggle. Instead of identifying the cause why the Tamil youth took up arms and removing the cause, the Government tried to put down violently the armed struggle and consequently it expanded and gathered momentum day by day.

On the 1st of June, 1981 there was another spate of violence which drew international attention with the burning of the Jaffna public library by the Security Forces which was aided and abetted by two Government Ministers who were then stationed in Jaffna. At the time of the burning, it was the biggest in South Asia having a collection of 97,000 volumes of books, valuable parchments, and palmyra-leaf manuscripts. This burning is described by Wikipedia as the most violent instance of **'ethnic biblioclasm'** of the 20th century. No culprits have been apprehended and it took several decades for some in the government to express their regrets for the incident. Such incidents alienated the general public from the Government and made them rally round the Tamil militants who were gathering momentum.

Black July

The July 1983 riots can be considered the starting point of the full scale direct war between Sri Lankan Government Forces and the Tamil militants. On 23.07.1983 thirteen Sri Lankan soldiers were killed by the LTTE

and the riots started in Colombo and spread to other places. The victims were Tamils who lost their lives and livelihood. This triggered further violence by the LTTE as well as the Sri Lankan Security Forces. The LTTE at first ambushed and killed the soldiers in patrol and later started attacking army camps and police stations killing number of soldiers. There were also retaliatory killings of large number of civilians, abductions, torture, detentions etc. The implementation of PTA (Prevention of Terrorism Act) which gave unlimited powers to the Security Forces was used against the suspects who were Tamils. Amnesty International and a number of Human Rights organizations outside the Country and inside considered this law as unacceptable. There were also a number of aerial bombings which killed large number of civilians. Some targets were churches, temples and schools. Attempts made to bring both warring parties to talks did not achieve any positive result.

Catholic Church's Reactions

Catholic Bishop Conference of Sri Lanka was very concerned about the deteriorating situation. They issued statements from time to time to asking the concerned parties to abstain from violence. The people in the North felt that the Church at large did not give enough pressure to the Government to abstain from bombing and shelling civilian targets.

It was during this time that the Bishop then of Jaffna Rt. Rev. Dr. B. Deogupillai, a man of vision who wanted both parties to abstain from violence came forward with some bold statements. Already on 12.11.1981, he had made some recommendations to the President, Hon. Mr. J.R. Jayawardana to bring about peace and unity. Among other things he suggested that to bring about equality among all it would be better to make Tamil also as an official Language for the whole country. He also sent a copy of it to the Catholic Bishops' Conference of Sri Lanka.[9]

On 08.06.1983 Bishop B. Deogupillai along with the Bishop then of Mannar, Rt. Rev. Dr. Thomas Savundaranayagm and Bishop then of Trinco-Batticaloa, Rt. Rev. Dr. Kingsly Swampillai wrote a letter to the Pope briefing the situation in Sri Lanka to keep him informed so that he could speak to the Sri Lankan President who would meet him later in the month.[10]

Again on 22.06.1983, Bishop Deogupillai wrote to the Prime Minister then, Hon. Mr. R. Premadasa stating that all that the Tamils want is equality in front of law and the right to use their language for all their needs. When Sinhala alone is the official language, the Tamils are not considered on par with the Sinhalese and hence made second class citizens of the land and hence Tamil also should be made an official language. Then PTA, the draconian law which was used exclusively with regard to the Tamils, should be abrogated.[11]

As requested by the president, Hon. Mr. J.R. Jayawardana, the Bishop on 04.08.1983 submitted some changes to be made in the PTA but the President sent a reply on 15.11.1983 that he would not agree with the suggested changes to the PTA.[12]

On 05.07.1984 Bishop Deogupillai got a letter from one of the Government

[9] Cfr., **Life and Ministry of Bishop Deogupillai (Memoirs),** Jaffna, 1996, p.53
[10] Cfr., ibid. p.61.
[11] Cfr., ibid.
[12] Cfr., ibid., pp.62-63.

departments in Sinhala without a Tamil translation and he sent it back with a covering letter mentioning that if Tamil is also made an official language this kind of mistake would not happen.[13] On 18.07.1986 Bishop Deogupillai made a historic speech during the prize giving at St. Patrick's College which aroused international attention. It was a time when hundreds of civilians were being killed in bombing raids, shelling from land and area. All the protests to the Government were not heeded and the Bishop stated that it is high time that we appeal to UN to intervene to save our people.[14]

The climax of the ethnic war and the reaction of the Church

The escalation of violence and war which started during the tenure of the episcopate of Bishop Deogupillai reached its climax during the time of Bishop Thomas Savundaranayagam (1992-2015) as the Bishop of Jaffna. As the war progressed and as many were being killed many realized the wisdom behind the prophetic words of Bishop Deogupillai - 'It is high time that we appeal to UN to intervene to save our people'.

Bishop Thomas Savundaranayagam during his tenure of office in Mannar (11 years) had the experience of the war and its effects, such as heavy loss of lives of civilians including one of his priests (Fr. Mary Bastian), displacement of people, exodus of people to India, abandonment of entire parishes etc. In spite of the difficulties in travelling he used to visit all the places. He even went to India to visit the people who had fled there. The same kind of work he had to continue in Jaffna also with renewed vigor as the war worsened with travel restrictions and embargo of many essential things and the entire population suffered. He made use of every opportunity to voice the grievances of the people to find relief to them. Reports of casualties of shocking magnitude including the loss of some priests, disappearances of priests and untimely death of priests were causes of agony for him.

His statements to newspaper, TV and radio briefings and interviews were considered to be objective and contained valuable inside story of what was happening in the Jaffna peninsula and Vanni. All the foreign diplomats who used to visit the North made it a point to visit him to get correct information in order to help the affected people. All the priests and religious rallied behind him in the midst of all these hard times and tried their level best to alleviate the sufferings of the people irrespective of religion or locality. It is to be noted that many of the beneficiaries of the Church's organizations such as HUDEC (Human Development Center) were non-Catholics. Bishop also never failed to voice his concern and strong protest to the Government when he lost his priests. eg. Enforced 'disappearance' of Fr. Jim Brown and his lay-helper, Mr. Vimalathas in the year 2006. Glimpses of his mission during these troubled years and the role of the Church as the consoler of the afflicted can be seen in the diary published in a book form in 2016.[15]

[13] Cfr., ibid., p.64.
[14] Cfr., ibid., pp.84-95.
[15] See Savundaranayagam, Thomas – **Shepherding the diocese of Jaffna, 1992-2015,(Extracts from Bishop's diary)** ed.Fr.T.Judethas, Jaffna, 2016.

Role played by Rt. Rev. Rayappu Joseph, Bishop of Mannar (1992-2015)

Right from the day one of his episcopate as the second Bishop of Mannar, he used to be an outspoken champion of human-rights. He used to be on the side of the afflicted and especially the victims of war. He expected his priests and religious working in the Diocese to be close to the suffering people. When there was a bombing raid by the air-force where civilians were killed he used to take the matter straight to the President. Some of the facts he brought out boldly are of historical importance. When the Government asserted that there was zero causality of the civilians during the final stages of the war the Bishop contested it. When he gave evidence in front of the LLRC (Lessons Learnt and Reconciliation Commission) citing the statistics given by the Government authorities themselves he pointed out that still around 150,000 people are not accounted for. This was an eye-opener for many, especially the International Organizations and Human Rights groups. He used to visit the political prisoners detained in several prisons all over the country and tried his level best to apply pressure to expedite their cases and release them. There had been occasions that he was denied access to the political prisoners who were wounded in the attacks by security guards in the prison itself. Subsequently the wounded prisoners (Nimalaruban and Dilruckson) succumbed to their injuries. The near and dear ones of the political prisoners and the 'disappeared' people either used to meet him or wrote to him and he used to attend to each case with special interest.

Reactions from the Church leaders of the South

There is no doubt that the Church leaders of the South were concerned right from the beginning of the ethnic conflict and were worried about the people affected by it. Whenever the Bishops from the North and East went to participate in the Catholic Bishops' Conference of Sri Lanka meetings the other Bishops gave priority to listening to the grievances of the people in the North and East. The Bishops themselves visited the war-torn areas and even met some of the victims and the displaced people sheltered in welfare centres.

Yet the people feel that enough pressure was not given to the Government with regard to their basic grievances. Reconciliation will be a distant reality as long as these issues are not addressed. These are outlined in the many reports released by the Justice and Peace Commission of the Catholic Diocese of Jaffna which functions under the patronage of the Bishop of Jaffna. Two of these reports outline some basic issues which need to be addressed as early as possible. These reports are titled:

1. Situation Report outlining the Obstacles for Peace and Reconciliation, dated 14.09.2016

2. Justice Delayed is Justice Denied - The Story of the Political Prisoners dated 25.02.2016

The general situation remains basically the same since these reports were released. These reports give details of the grievances of the people.

- Lands of the people not released
- Political Prisoners not released

- Lack of accountability for missing persons
- PTA still in force
- No right to remember the dead
- No adequate arrangement to look after the victims of war
- Poisonous injections and untimely and mysterious deaths of rehabilitated LTTE cadres
- Failure of local mechanism of investigation into war-crimes, enforced disappearances, killing of civilians and hence the demand for international judges to investigate
- Erecting statues of Buddha in sensitive areas and where there are no Buddhists.
- Destruction of war cemetries

These reports among others also have been sent to the Church authorities in the South.

Unfortunately some of the statements made by the Church authorities in the South may derail the peace and reconciliation process. Eg. Everybody in the North and East especially the affected persons know that the local mechanism to establish justice had been a failure as in the cases of the 5 youths killed by the Security Forces in 2006 in Trincomallee, killing of the 15 'Action Fame' aid workers at Muthur, the murder of about 27 civilians at Kumarapuram, enforced disappearance of Fr. Jim Brown and Fr. Francis Joseph etc. When there is a poor record of delivering justice, we do not expect the local mechanism would deliver the goods. In this background the Church authorities in the South insist on a purely local mechanism with local judges to investigate into these murders and enforced disappearances caused by the Security Forces.

Conclusion

I would like to conclude with a quotation from the address of Pope Francis to the Diplomatic Corps recently and with a part of the statement released by the near and dear ones of the disappeared people who are currently staging a hunger-strike till death at Vavuniya. First to the Pope's address, 'Peace-making also demands that those causes of discord which lead to war be rooted out (Gandium et Spes. no. 78) beginning with acts of injustice. Indeed justice and peace are intimately linked. Is. 32:17. As St. John Paul II observed ..... forgiveness is in no way opposed to justice. It is rather the fullness of justice, leading to that tranquility of order which involves the deepest healing of the wounds which fester in human hearts. Justice and forgiveness are both essential to such healing.[16] Today (16.01.217) is the fourth day of fasting unto death of the near and near ones who are demanding a solution for the enforced disappearances and for the unconditional release of the political prisoners in many jails all over the country. These people want to know what happened to their disappeared ones. The Government is answerable as they were arrested, handed over or surrendered to the Security Forces before disappearing. Even if these people have been killed by the Security Forces they want to know how and what happened to them so that at least they may conduct some religious rites for the dead. They are not

[16] Taken from the address of H.H.Pope Francis to the Diplomatic Corps on 9.1.2017, in L'Osservatore Romano (English edition), 13.1.2017, p.8.

interested in any retaliation to those who are responsible for the killings. We can observe the Christen message of forgiveness here. They just want to know the truth which is their right. When these people are languishing in pain the statement made by the Prime Minster in the Parliament on 25.01.2017 stating that these people who 'disappeared' had most probably escaped to other countries and we can do nothing about it.[17] This statement raises more questions for which the Government will find hard to give sensible answers. Such statements by responsible people are not going to help in any way to bring about justice, peace and reconciliation.

Fr. S.V.B. Mangalarajah
President
Commission for Justice & Peace of the Catholic Diocese of Jaffna
Sri Lanka

[17] Cfr., 'Valampuri' a Tamil daily from Jaffna, Sri Lanka, dated 26.1.2017, pp.1,23.

அமரர் அருட்தந்தை சறத்ஜீவன் வார்த்தையினால் அல்ல செயல்களினால் பணியாற்ற அழைக்கப்பட்டவர்

புனித சவேரியார் பெரிய குருமட உருவாக்கல் காலத்தில் இருந்தே அருட்தந்தை சரத் ஜீவன் நீதியோடு கூடிய சமாதானத்திற்காக உழைத்தவர் என்று சான்று பகர்கின்றேன். கடந்த இரண்டு தசாப்தங்களில் எமது நாட்டை உலுக்கிய இரண்டு அவலங்கள் : 2004ல் சுனாமி மற்றும் 2009ல் இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான மக்களுக்கு அர்ப்பணிப்புடன் வாழ்க்கை சாட்சியம் மற்றும் உன்னத மனிதர்களின் சான்றுகளை சுருக்கமாக அவதானிப்போம்.

புதிய ஏற்பாட்டில் இயேசுக் கிறிஸ்துவின் வார்த்தைகள் மற்றும் பணிகள் துன்பப்படுவோர், கைவிடப்பட்டோர் மற்றும் ஒடுக்கப்பட்டோர் ஆகியோர் சார்பாக இருந்ததை வேதாகமத்தில் இருந்து அவதானிக்கின்றோம்.

சிசேரிய நாட்டு ஆயரான புனித பசில் (329-327) சமூக அநீதிகளை எப்படிக் கண்டித்தார் என்றால் அவர் கூறுவார் 'எங்களிடம் மேலதிகமாக இருப்பவை எல்லாம் மற்றவர்களிடம் இருந்து சுரண்டப்பட்டவையே.'

நவீன யுகத்தில் வாழ்ந்த புனித பீற்றர் கிளேவர் (யேசு சபை (1581-1654) ஏறத்தாழ 40 வருடங்களில் 3,00,000ம் அதிகமான ஆபிரிக்க அடிமைகளுக்கு அமெரிக்க தேசத்தில் மனிதத் தன்மைகளுடன் நடாத்தப்படுவதற்கு தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார்.

புனித ஜோசப்வாஸ் (1651-1711) இந்திய தேசத்திலிருந்து இலங்கைக்கு ஒரு பிச்சைக் காரன் வடிவில் வந்து 24 வருடங்கள் கால் நடை யாக ஏழை எளியவர்கள், கைவிடப்பட்டோர், நோயாளிகளுக்குப் பணிபுரிந்த வரலாறை யாரும் மறைக்கவோ, மறக்கவோ முடியாது.

அத்துடன் பேராயர் றோமேரோ எல் சல்வ டோர் தேசத்தில் நிகழ்ந்த சிறுபான்மையின ருக்கு எதிரான போராட்டத்தில் அடக்கு முறை களையும், கொலைகளையும் கண்டித்து அன்பு வழியைப் போதித்த அவர் 24.03.1980ல் திருப் பலி ஒப்புக்கொடுத்தபோது சுட்டுக் கொல்லப் பட்டார். இவரின் துணிச்சலான வாழ்வின் படக்காட்சி குருத்துவக் கல்லூரியில் அருட்தந்தை சறத்ஜீவனின் காலத்தில் ஒரு முறைக்குக் கூடுத லான தடவைகள் போட்டுக் காண்பிக்கப்பட்டது. இது இவரின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தியி ருக்குமென்பதில் ஐயமேயில்லை.

இதே போன்று 1985ல் மன்னார் வங்காலை யில் பாதிப்புற்ற அப்பாவி மக்களின் நலனுக் காக உழைத்து நாதியற்றிருந்தவர்களுக்காகக் குரல் கொடுத்தமையால் ஆலயத்தில் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அருட்தந்தை மேரி பஸ்ரியனின் சம்பவமும், பதுளை மாவட்டத்தில் ஏழை மக்களின் நலனுக்காக உழைத்த அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை மைக்கல் றொட்றிகோ 1980.11.10 அன்று திருப்பலி ஒப்புக் கொடுத்த வேளை சுட்டுக் கொல்லப்பட்டதும், அதே வரிசையில் கிழக்கில் கொலை செய்யப் பட்ட அருட்தந்தையர்களான சந்திரா பெர்னான்டோ மற்றும் ஷேபேர்ட் ஆகியோரும், மேலும் இவருடன் குருமடத்தில் கற்றுக் காணாம லாக்கப்பட்ட அருட்தந்தை ஜிம்புறவுண் (2006), நிலக் கண்ணி வெடியில் கொல்லப்பட்ட அருட் தந்தையர்கள் கருணாரட்ணம், பாக்கிய ரஞ்சித் என்பவர்களும், 1984ல் கொலை செய்யப்பட்டு வாகனத்துடன் வைத்து எரிக்கப்பட்ட மெதடிஸ்ட் சபைப் போதகர் அருட்தந்தை ஜெயராஜசிங்கம் ஆகிய பலரில் சிலரின் வாழ்க்கைத் தாக்கம் நிச்சயமாக அருட்தந்தை சறத்ஜீவன் அவர்களை உருவாக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உள்நாட்டுப் போருக்கான பின்னணி

• 16ம் நூற்றாண்டின் பின்னர் இலங்கைத் தேசமானது வெவ்வேறு இராச்சியங்களாக ஆளப்பட்டது. காலனித்துவ ஆட்சியின் வரிசை யில் பிரித்தானியர்கள் 1815ல் ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்து வந்தனர். 1948ல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கியபோது மொழி, கலாசார பின்னணிகளைக் கருத்தில் கொள்ளாமையி னால்10 வருடங்களுக்குள் பிரிவினை வாதம் தோன்றியது.

• 1956ல் S.W.R.D. பண்டாரநாயக்கவினால் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராகத் தமிழர்கள் சத்தியாக்கிரகப் புரட்சி செய் தார்கள். இதில் அருட் தந்தை சேவியர் தனிநாய கம் அவர்களின் பங்களிப்பு அபரிமிதமானது.

• 1958ல் வாகன இலக்கத்தில் ஆங்கில எழுத்துக்குப் பதிலாக ශ්‍ර என்ற சிங்கள எழுத்தின் அறிமுகம் தமிழ், சிங்களக் கலவரத்தில் பல அழிவுகளைத் தோற்றுவித்தது.

• 1961, 1977 இனக்கலவரங்களும் பல அழிவு களைக் கொண்டு வந்தது. இவற்றுக்கான கார ணங்களை இனங்கண்டு அவற்றிற்குத் தீர்வைக் கொண்டு வருவதை விடுத்து வன்முறையால் இந்தக் கலவரங்களைக் கட்டுப்படுத்த சிங்கள அரசாங்கம் எடுத்த முயற்சிகள் தோல்வி கண் டன.

• 1981ல் தெற்காசிய நாடுகளில் முதன்மை இடத்தை வகித்த யாழ் நூலகம் இராணுவத் தால் எரிக்கப்பட்டமை விரிசலை வலுப்படுத் தியது.

• 23.07.1983ல் தமிழீழ விடுதலைப் புலிகளி னால் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித் தாக் குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட தைத் தொடர்ந்து 'கறுப்பு யூலை' தினமாக

நினைவு கூரப்படுமளவுக்குத் தென்பகுதித் தமிழ் மக்கள் பெரும் அவலங்களை எதிர் நோக்கினர்.

• உள்நாடு, வெளிநாடு மற்றும் மனித உரிமைகள் அமைப்புகளின் கடும் எதிர்ப்புகள் மத்தியிலும் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் ஷெல் மற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நிலைக்கு இட்டுச் சென்றது.

திருச்சபையின் நிலைப்பாடு

1977 கலவரத்தின் பின்னரே இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை குரல் கொடுக்க ஆரம்பித்தது.

முன்னாள் யாழ் ஆயர் அமரர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை தூர நோக்குடன் பல முயற்சிகளை மேற்கொண்டார். இதில் 12.11.1981ல் ஜனாதிபதி J.R ஜெயவர்த்தனா அவர்களுக்குத் தமிழ் மொழியையும் அரச மொழியாகப் பிரகடனப் படுத்த முன்மொழிந்தமை, 8.6.1983ல் தமிழ் ஆயர்களுடன் இணைந்து நாட்டின் நிலைமையை விபரித்து பரிசுத்த பாப்பரசருக்கு எழுதிய கடிதமும், 22.06.1983ல் பிரதம மந்திரி R. பிரேமதாசா அவர்களுக்குப் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும்படியாகக் கோரிய கடிதமும், 04.08. 1983ல் ஜனாதிபதி J.R ஜெயவர்த்தனா அவர்களுக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்தும்படியாகக் கோரிய விண்ணப்பக் கடிதமும், 05.07.1984ல் அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட தனிச் சிங்களக் கடிதத்தைத் திருப்பி அனுப்பியமையும், 18.07.1986ல் புனித பத்திரிசியார் கல்லூரியில் பரிசளிப்பு தின நிகழ்வில் சர்வதேச புகழ்பெற்ற அவரது உரையில் தமிழ் மக்களைக் காப்பாற்ற ஐ.நா சபையின் உதவியை வேண்ட வேண்டிய இறுதிக்கட்டத்திலிருக்கின்றோம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

• போரின் அகோரம் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மன்னார் (1981-1992), யாழ் (1992-2015) ஆயராகக் கடமையாற்றிய காலப் பகுதியில் காணப்பட்டது. குண்டுவீச்சினாலும், இடப்பெயர்வுகளினாலும் பாதிக்கப்பட்ட மக்களைத் தேடிச் சென்று ஆறுதல் கூறியதுடன் இவற்றுக்கு எதிராகப் பத்திரிகைகள், தொலைக் காட்சி மற்றும் வானொலிகளிலும் கண்டனங்களை வெளிப்படுத்தினார். 2006ல் அருட்தந்தை ஜிம்புறவுன் மற்றும் அவரின் உதவியாளர் காணாமலாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கு எதிராகச் செய்த கண்டன ஆர்ப்பாட்டம் குறிப்பிடத்தக்கது.

• மன்னார் மறைமாவட்டத்தின் 2வது ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை போரினால் பாதிக்கப்பட்டோர் சார்பில் குரல் கொடுத்து மனித உரிமைகளுக்கு ஆதரவு வழங்கினார். இவர் அரசாங்கத்தின் மூடி மறைப்புகளைத் திரை நீக்கம் செய்தார். மேலும் அரசியல் கைதிகளின் நலனிலும் விடுதலையிலும் கரிசனை காட்டினார்.

• தென்பகுதித் திருச்சபை ஆரம்பத்திலிருந்தே தமது கவலையையும், கரிசனையையும் வெளிப்படுத்தியே வந்த போதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் இவர்கள் அரசாங்கத்துக்குக் கொடுக்கும் அழுத்தம் போதாது என்று கருதுகின்றனர்.

• யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு பல அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. அதில் 2 அறிக்கைகளை உடனடியாக அமுல் படுத்த முனைய வேண்டும்.

1. 14.09.16ல் வெளியிடப்பட்ட நீதி சமாதானத்தை நிலைநாட்டத் தடையாக உள்ள தடைகள் என்ற சூழ்நிலை அறிக்கை.
2. 25.02.16ல் வெளியிடப்பட்ட தாமதமாக்கப் படும் நீதி, வழங்கத் தவறிய நீதியாகும் (அரசியல் கைதிகளின் கதைகள்)

இத்தகைய அறிக்கைகளுக்குத் தென்பகுதித் திருச்சபையின் பதிலறிக்கைகள் சமாதானத்தைக் குலைக்க வல்லதாக அமைவதுண்டு. பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவ உண்மையைப் புறக்கணித்து உள்நாட்டு பொறிமுறையே கையாளப்பட வேண்டும் என்று வலியு

றுத்திக் கூறுவது ஆபத்தானது.

இறுதியில் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் கூறுவார் மன்னிப்பே நீதியின் முழுமை. நீதியும், மன்னிப்பும் ஆழமான மன வடுக்களைக் குணப்படுத்தத் தேவையானவை. இந்தக் குணமாக்கலே உண்மைச் சமாதானத்தைப் பெற்றுத்தர வல்லது. காணாமற் போனோர் மற்றும் அரசியல் கைதிகளின் உறவுகள் :- இலங்கையின் பல பாகங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் இராணுவத்திடம் சரணடைந்து காணாமற் போனோரின் நிலையைத் தெரிவிக்க வேண்டும் அத்தோடு இதற்குக் காரணமானவர்கள் மன்னிப்புப் பெறலாம் என்றும் கோருகின்ற போதும், பொறுப்பற்ற தனமாக 25.01.2017ல் பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் காணாமற் போனோர் வெளிநாடுகளுக்குத் தப்பிப் போயிருக்கலாம் என்று குறிப்பிடுவது எந்த விதத்திலும் நீதி சமாதானத்தைப் பெற்றுத் தராது என்பதில் ஐயமேதுமில்லை.

தமிழாக்கம் : அருட்பணி. சோபன் ஜெயஸ்

குறைந்த செலவில் கூடுதலான வருமானம் தரும் சூரிய அடுப்புகள்

அருட்தந்தை சறத்ஜீவன் நினைவாக...

சூரிய சக்தியிலும் பொருத்தமான தொழில்நுட்பத்திலும் அதிகம் ஆர்வம் கொண்டிருந்த அருட்தந்தை சறத்ஜீவன் சூரியகலங்களைப் பயன்படுத்தி மின்சாரம் பெற்று வந்தார். அவர் நேசித்த மக்கள் இன்று அனைத்தையும் இழந்து நிற்கும் இன்றைய நிலையில், இவ்வாறாக பாதிக்கப்பட்ட மக்கள் எப்படி மற்ற நாடுகளில் சூரிய சக்தியைப் பயன் படுத்தி பொருளாதார ரீதியாக மீண்டு எழுந்து உள்ளார்கள் என்று இந்த ஆக்கம் விபரிக்கிறது.

ஆக்கியவர்: ம. யூ. சூரியஜீவனீ Ph.D.

வறுமையும் சூரிய மின்கலங்களும்

வறுமையில் வாடும் மக்களுக்கும் அகதிகளுக்கும் உலகளாவிய அளவில் பெரும் வரப்பிரசாதமாக அமைந்திருப்பது சூரியசக்தி. ஆபிரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் இந்தியாவில் வாழும் வறிய மக்கள், பெரும் அளவில் சூரியசக்தியால் நாளாந்த வருமானத்தையும் தொழில் வாய்ப்புகளையும் பெற்று வருகிறார்கள். இலங்கைத் தமிழ் மக்களோ இவ்வாறான பயன்களை பெருமளவில் பெறவில்லை. சூரிய மின்கலங்களில் காட்டப்படும் ஆர்வம் சூரிய அடுப்புகளில் காட்டப்படாமையே இதற்குக் காரணம் ஆகும்.

சூரிய மின்கலங்கள் செலவு கூடிய முறை யில் உற்பத்தி செய்யப்படுபவை. அமெரிக்கா செய்மதிகளைவிண்வெளியில் விட்டபோது செய்மதிகளுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நோக்கத்துக்காக சூரிய மின்கலங்கள்பற்றிய ஆய்வுகளுக்கு கோடிக் கணக்கில் பணத்தை செலவிட்டது. இந்த ஆய் வுகளின் பலனாக உருவான மின்கலங்கள் மிக வும் குளிரான விண்வெளியில் சிறப்பாகவும், சூடான பின்தங்கிய நாடுகளில் பலவீனமாகவும் செயற்படத் தக்கவையாக உருவாகி உள்ளன. சூரிய மின்கலங்கள் சூரிய ஒளியில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.சூரிய வெப்பம் இந்த மின்கலங்களின் எதிரியாகும்.

குளிர் நாடுகளில் உள்ள மக்களில் பலர் பணபலம் கொண்டவர்கள். அவர்கள் விலை கூடிய சூரிய மின்கலங்களை வாங்கி பயன் பெறும் வசதி கொண்டவர்கள். ஆகவே இந்த மின்கலங் கள் சூடான நாடுகளில் உள்ள வறிய மக்க ளுக்குக் கட்டுப்படியாகும் வகையில் தயாரிக்கப் படுவதில்லை.

சூரிய அடுப்புகளின் பயன்

சூரிய அடுப்புகள் வறிய மக்கள் பெருமள வில் வாழும் சூடான பிரதேசங்களுக்கு என சிறப்பாக மலிவான செலவில் தயாரிக்கப்படு பவை. சூரிய ஒளி மட்டும் அன்றி சூரிய வெப்பத் தையும் பிரதான சக்தியாகப் பயன்படுத்தி சூரிய அடுப்புக்கள் இயங்குகின்றன. ஆகவே உச்ச வெயில் இந்த சூரிய அடுப்புக்கு மிகவும் சிறந்த சக்தியாகும்.

மிகவும் விலை குறைந்த சூரிய அடுப்பை சாதாரண மட்டைகள், ஈயத்தாள், பசை மற்றும் பொலித்தீன் பை ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்க முடியும். ஆனால் நாளாந்த வருமா னத்தை தரும் சூரிய அடுப்பு ஒன்றை செய்ய ஆயிரம் ரூபாயாவது செலவாகும். இவ்வாறான அடுப்புக்களில் சிறிய கேக், பணிஸ் மற்றும் பாண் தயாரித்து அவற்றை விற்று அகதி வாழ்வில் இருந்து வெளிவந்த ஆபிரிக்க பெண்கள் பெருமளவில் இருக்கிறார்கள். இந்த அடுப்புகளில் தேங்காய்ப்பூவையும் தண்ணீ ரையும் விட்டு தேங்காய் எண்ணை உற்பத்தி செய்து தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி கொண் டுள்ள பெண்கள் அமைப்புகளும் ஆபிரிக்க நாடுகளில் உள்ளன.

நிறுவனங்களின் சுடுநீர் தேவைகள், நீர் சுத்திகரிப்பு, மற்றும் பெருமளவில் உணவு தயாரிப்பு ஆகியவற்றுக்காகபெரிய அளவிலான விலை கூடிய சூரிய அடுப்புகளும் உள்ளன. ஆபிரிக்காவைப் போல இந்தியாவிலும் இவற்றில் பெருமளவு ஆர்வம் காட்டப்பட்டு வருகிறது.



மிகவும் பிரபலமான இந்த அடுப்புப்பொதி முத லில்1994 இல் Solar Cookers International நிறுவனத்தின்பொறியியலாளர்களால் உருவாக் கப்பட்டது. பின்னர்பதினையாயிரம் பெண்களுக்கு கென்யாவில் உள்ள அகதிகள் முகாம் ஒன்றில் ஐக்கிய நாடுகள் சபையால் விநியோகிக்கப்பட்டு பிரபலமானது.)

அடுப்புப்பொதி

எங்கும்ஒரு கையில் எடுத்துச் செல்லத் தக்க தாக பொதியில் வரும் இந்த சூரிய அடுப்புப் பொதி மிகவும் மலிவானதும் எவராலும் இலகு வில் பயன்படுத்தத் தக்கதும் ஆகும். அடிப்படை

யில் காகித மட்டை, அலுமினியத்தாள் மற்றும் பொலிதீன் பை ஆகியவற்றைக் கொண்டு இந்த அடுப்பு ஆக்கப்பட்டுள்ளது. ஆனால் இவை வெப்பத்துக்கு தாக்குப்பிடிக்கதக்க வகையை சேர்ந்தவை. இலங்கை போன்ற நாடுகளில் இந்த உயர்தர காகித மட்டை, அலுமினியத்தாள் மற்றும் பொலிதீன் பை ஆகியவை கிடைப்பது கடினம். ஆகவே ஆரம்பத்தில் தொண்டு நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் மூலம் இந்த சூரிய அடுப்புகளை அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நிறுவனங்களில் இருந்து வாங்கிப் பயன்படுத்த வேண்டி இருக்கும். காலப்போக்கில் மக்கள் தாமே இந்த அடுப்புக்களை உள்ளூர் மூலப்பொருட்கள் மற்றும் தேவையான உயர்தர மூலப்பொருட்கள் கொண்டு உற்பத்தி செய்ய பயின்று கொள்ளலாம். ஆபிரிக்கநாட்டுப் பெண்கள் இவ்வாறாக தாமே உற்பத்தி செய்து கொள்கிறார்கள்.

(உகண்டாவில் உள்ள பிகர்வே கிராமத்தில் பெண்கள் தமது அடுப்புப் பொதிகளைத் தயார் செய்வதை இந்த 2007ம் ஆண்டு எடுத்த படத்தில் காணலாம்.)

பெட்டி அடுப்பு

பெட்டி சூரிய அடுப்பு மிகவும் பிரபலமான சூரிய அடுப்பாகும். இலங்கையிலும் பெட்டி அடுப்பு அறியப்பட்டுள்ளது. பெரிய அளவிலான பாண், பணிஸ் மற்றும் கேக் வகைகளைத் தயாரிக்க பெட்டி அடுப்புகள் பயன்படுகின்றன. இவை சூரிய அடுப்புப் பொதியிலும் பார்க்க கூடிய செலவில் தயாரிக்கப்படுபவை. ஆனால் இவற்றைத் தயாரிக்க பெருமளவில் உள்ளூர் பொருட்களும் தச்சுவேலையும் போதுமானவை.

மேலும் பெட்டி அடுப்புகளைத் தேவையான அளவுகளில் தயாரிக்க முடியும். பெரிய அடுப்புகளை சில்லுகள் பூட்டி துவிச்சக்கர வண்டியில் இழுத்துச் செல்ல முடியும்.

(அமெரிக்க தயாரிப்பான இந்த பெட்டி அடுப்பு உயர்தர மூலப்பொருட்களைக் கொண்டு ஆக்கப் பட்டது. குளிர்ப் பிரதேசத்திலும் சமைக்கும் சக்தி கொண்டது.)

குவிய அடுப்புகள்

குவிய சூரிய அடுப்புகள் மிகவும் சக்தி வாய்ந்தவை. இரும்பை உருக்கும் அளவுக்கு வெப்பத்தை அள்ளி வழங்கும் குவிய அடுப்புக்கள் இருக்கின்றன. குடை ஒன்றைப் பயன்படுத்தி செய்ய கூடிய குவிய அடுப்பு இலகுவானதும் செலவு குறைந்ததும் ஆகும். மற்ற சூரிய அடுப்புகளில் பொரியல் செய்ய முடியாது. ஆனால் குவிய அடுப்பில் பொரிக்க முடியும். குவிய அடுப்புகளே பெருமளவிலானவர்களுக்கு உணவு சமைக்க வேண்டிய நிறுவனங்களில் பயன்படுகின்றன. நீர் கொதிக்க வைக்கவும் குவிய அடுப்புகளே தேவையானவ. குவிய சூரிய அடுப்பில் சாதாரணமாக சமைக்கும் நேரத்தில் அல்லது அதனிலும் குறைவான நேரத்தில் சமைக்க முடியும். குவிய சூரிய அடுப்புகளை

சூரியன் அசையும் திசைக்குத் திருப்பி விடுவது அவசியம். குறைந்தது 45 நிமிடத்துக்கு ஒரு முறையாவது இந்த அடுப்பைத் திருப்ப வேண்டும். கணனிக்கட்டுப்பாட்டில் தானாகத் திரும்பும் அடுப்புகள் இப்போது தயாரிக்கப்படுகின்றன.

(இந்தப் படத்தில் SK-14 குவிய சூரிய அடுப்பு அதனைத் தயாரித்த Dr. Dieter Seifert அவர்களால் காண்பிக்கப்படுகிறது. இந்த ஜேர்மன் விஞ்ஞானி குவிய அடுப்புகளின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். ஒரு நாளில் பத்துப் பேருக்கு இரண்டு மணித்தியாலத்தில் சமைக்கத்தக்கது இந்த அடுப்பு. தட்டையாக பெட்டியில் எடுத்துச் சென்று இலகுவாக அமைக்கத்தக்கதாக இந்த அடுப்பு அமைக்கப்பட்டுள்ளது.)

சமையல் பண்பாடு

உணவும் சமையலும் ஒரு இனத்தின் பண்பாட்டு அடையாளங்கள். தலைமுறை தலைமுறையாக மக்கள் தமக்கென சமையல் மற்றும் உணவுப் பண்பாட்டு முறைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே இவற்றில் மாற்றம் செய்வது மிகவும் கடினமானது. விறகு அடுப்பில் வைத்துசமைத்து பழகிய மக்களை சூரிய வெப்பத்தில் ஒரு விசித்திரமான காகித அடுப்பில் அல்லது இயந்திரத்தில் சமைக்குமாறு எதிர்பார்ப்பது, அதிக அளவிலான முயற்சியின் பின்பே சாத்தியமாகும். இந்த மாற்றம் ஒரு பண்பாட்டு மாற்றமாகும். இவ்வாறான மாற்றத்தை செய்ய தொண்டு நிறுவனங்களின் அர்ப்பணிப்புடன் கூடிய பெருமளவிலான முயற்சி தேவையாக இருக்கிறது. குவிய சூரிய அடுப்புத் தவிர்ந்த மற்ற சூரிய அடுப்பில் சமைக்க இரண்டு மடங்கு நேரம் தேவைப்படும். ஆனால் சாதாரண சமையல் போன்று அடுப்புக்குப் பக்கத்தில் நின்று பிரட்டி விடவோ அடிப்பிடிக்காமல் பார்க்கவோ தேவையில்லை. இதற்குக் காரணம் சூரிய அடுப்பில் அடிப்பிடிக்கும் சாத்தியம் இல்லை. மேலும் சூரிய அடுப்பில் சமைத்த உணவில் புகை மணம் இருக்காது.

சூரிய அடுப்பின் பொருளாதார பயன் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி கொண்டது. ஆனால் அந்தப் பொருளாதாரப் பயனை மக்கள் அறிந்து கொள்ள அவர்கள் முதலில் இந்த அடுப்புகளைப் பயன்படுத்த ஆரம்பிக்க வேண்டி இருக்கிறது. அடுப்புகள் தனியே பொருளாதார பயனை தரா. அடுப்பில் வைத்து வேகவைத்து பாணோ பணிசோ செய்ய மாவும், மாஜரினும், எண்ணையும், உப்பும், சீனியும் ஏனைய மூலப் பொருட்களும் தேவை. மற்றும் பாண், பணிஸ் மற்றும் கேக் செய்யும் அறிவும் அனுபவமும் தேவை. இவற்றிற்கும் மேலாக சூரிய வெயில் நன்கு விழும் இடம் நீண்ட காலத்துக்கு தேவை. மேலும் இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை ஏனைய வணிகர்களுடன் போட்டியிடாது விற்கும் சந்தர்ப்பம் தேவை. இவை தவிர பழங்களையும் மரக்கறிகளையும் பதப்படுத்தி வத்தல்களாகவோ அல்லது சட்டினி மற்றும் ஜாம் வகைகளாகவோ போத்தல்களில் அடைப்பதற்கும் சூரிய அடுப்புகளை மக்கள் பயன்படுத்தலாம். ஆகவே, தொண்டு நிறுவனங்கள் அரச நிறுவனங்களான மாகாண சபை மற்றும் மத்திய அரசு ஆகியவற்றுடன் இணைந்து சூரிய அடுப்புப் பயன்பாட்டை பாரிய அளவில் முன்னெடுக்க வேண்டும். மக்களுக்குப் பொது நிலங்களையும் தரிசு நிலங்களையும் சூரிய அடுப்புப் பயன்பாட்டுக்கு வெயில் நேரத்தில் பிரித்துக் கொடுக்க அரச நிறுவனங்களும் பொது அமைப்புகளும் முன்வர வேண்டும். சூரிய சக்தி ஒரு நாளில் சில மணி நேரங்களே கிடைக்கும். ஆகவே ஒரு குடும்பம் பல சூரிய அடுப்புகளை

பயன்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. உதாரணமாக, நாள் ஒன்றுக்கு100 கேக்குகளை உற்பத்தி செய்து விற்க விரும்பும் குடும்பம் 50 அடுப்புப் பொதிகளைப் பயன்படுத்த நிலம் தேவை. இன்னுமொரு குடும்பம் நாள் ஒன்றுக்கு 200 போத்தல்களில் சட்டினி செய்து விற்க விரும் பினால் ஒரு அடுப்பில் இரண்டு போத்தல் சட் டினி தயாரிக்க முடியும் என்ற வகையில் அவர்க ளுக்கும் 50 அடுப்புப்பொதிகளைப் பயன்படுத்த நிலம் தேவை. ஆகவே இவ்வாறாக நிலத்தைப் பிரித்துக் கொடுக்க நிறுவனங்கள் தேவை. மேலும் சூடாக சமைக்கப்பட்ட உணவு வகை களை பின்னர் போத்தல்களில் அல்லது பெட்டி களில் அடைக்கும் தொழிற்சாலைக்குக் கொண்டு போக வேண்டும். இவ்வாறு கொண்டு போகும் போது சூடு ஆறக்கூடாது. இதற்கு மரத்தூள், தும்பு அல்லது காகிதம் கொண்டு வெப்பம் இழக்காமல் இருக்கும் கொள்கலன்கள் தயாரிக் கப்பட வேண்டும். சூடான உணவுகள் பாத் திரங்களுடன் இந்தக் கொள்கலன்களில் அடைக் கப்பட்டு துவிச்சக்கர வண்டிகளில் தொழிற் சாலைகளுக்கு இழுத்துச் செல்லப்படலாம். இந்த விதமான ஏற்பாடுகளையும் இதனால் பலருக்கும் வேலை வாய்ப்புகளையும் ஏற்ப டுத்திக் கொடுக்க மாகாணசபை மற்றும் பொது நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

அடுப்பு உற்பத்தி நிறுவனங்கள்

Solar Cooker International ஒரு அமெரிக்க தொண்டு நிறுவனம். கென்யா, நேபாளம் மற் றும் தன்சானியாவில் இந்த நிறுவனம் சூரிய அடுப்புகளைப் பல்லாயிரக்கணக்கான மக்க ளுக்கு விநியோகித்து தேவையான பயிற்சியும் வழங்கி இருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் சமூக பொருளாதார சபையின் விசேட ஆலோ சகர் தரத்தைக் கொண்டுள்ள இந்த அமைப்பு சூரிய அடுப்புப் பொதியை முக்கியமாகவும் ஏனைய சூரிய அடுப்புகளை வசதிகள் தேவை களைப் பொறுத்தும் அறிமுகப்படுத்தி வருகிறது.

இந்த நிறுவனத்தின் இணைய முகவரி:

http://www.solarcookers.org/

எப்படி சூரிய அடுப்புப் பொதியை செய்வது என்று விளக்கமான தகவலை இந்த நிறுவனம் பின் வரும் இணையத் தளத்தில் வழங்கி உள்ளது.

http://solarcooking.wikia.com/wiki/CooKit#Variations

இந்தியாவில் உருவாக்கப்பட்ட வீடுகளில் பயன்படத்தக்க குவிய சூரிய அடுப்பான பார் வதி சூரிய அடுப்பைத் தயாரிக்கும் தகவல்களை பின்வரும் இணையத்தில் பெறலாம்:

http://www.angelfire.com/80s/shobhapardeshi/twelvesided.html

(Scheffler Reflectors என்று அழைக்கப்படும் இந்த குவிய அடுப்பை Solar Energy Enterprises Co Ltd ஆபிரிக்க தொழில் மயமாக்கல் நாளில் காண்பிக்கும் போது எடுத்த படம்.)

Solar Energy Enterprises Co Ltd என்ற வணிக நிறுவனம் சூடானில் சிறப்பான முறை யில் பெட்டி மற்றும் குவிய சூரிய அடுப்புகளைத் தயாரித்து ஆபிரிக்க நாடுகளில் விற்பனை செய்து வருகிறது. இதன் உரிமையாளரான Dr.SalihHamadto இங்கிலாந்தில் பௌதீகவி யலில் 1969 இல் கலாநிதிப் பட்டம் பெற்றவர். 30 வருடங்களாக இந்த வணிக நிறுவனத்தை நடத்தி வருகிறார். அவருடன் hamadtosa @hotmail.com என்றமின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.

[6]நான், “என் தலைவராகிய ஆண்டவரே, எனக்குப் பேசத்
தெரியாதே, சிறுபிள்ளைதானே” என்றேன்.
[7]ஆண்டவர் என்னிடம் கூறியது: “‘சிறுபிள்ளை நான்’ என்று
சொல்லாதே யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகின்றேனோ
அவர்களிடம் செல் எவற்றை எல்லாம் சொல்லக் கட்டளை
இடுகின்றேனோ அவற்றைச் சொல்.
[8]அவர்கள்முன் அஞ்சாதே. ஏனெனில், உன்னை விடுவிக்க நான்
உன்னோடு இருக்கின்றேன், என்கிறார் ஆண்டவர்.”
[9]ஆண்டவர் தம் கையை நீட்டி என் வாயைத் தொட்டு என்னிடம்
கூறியது: “இதோ பார்! என் சொற்களை உன் வாயில்
வைத்துள்ளேன்.
[10]பிடுங்கவும் தகர்க்கவும், அழிக்கவும் கவிழ்க்கவும், கட்டவும்
நடவும், இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும்
அரசுகள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன்”.

எரேமியா 1:6-10

மக்களின் நல்லாயன்
அருட்தந்தை
மரியாம்பிள்ளை ததேயுஸ் சற்குணம்
மலர்வு : 13.05.1968
உதிர்வு : 18.05.2009
திருநிலைப்படுத்தல் : 14.05.2003

உள்ளத்தால் பேசுகிறேன்

சறா!
உன்னுடைய நட்புக்கு நன்றி.
நீ பார்ப்பதற்குப் பெரிய மனிதன்.
பழகுவதற்கு இனிமையானவன்.
உன்னோடு 1980 இன் ஆரம்பங்களிலிருந்து பழகினேன்.
புனித மரியாள் பேராலயத்தில் பீடப்பணியாளனாக
அறிமுகமானாய்.
உன்னிடமிருந்த பொறுப்புணர்வையும் ஈடுபாட்டையும்
கண்டு வியந்தேன்.
இளைஞர் உருவாக்கல் இயக்கத்திலும் உன்னைக்
கண்டேன்.
உன்னை நீ தேடுவதை நான் உணர்ந்தேன்.
உனது ஆற்றல்களையும் திறமைகளையும்
நீ இனம் கண்டுவிட்டாய் என்பதையும் நான் அறிந்தேன்.
புனித மடுத்தீனாரின் சிறிய குருமடத்திலும் உன்னைச்
சந்தித்தேன்.
உனது வாழ்க்கை வளர்ச்சிப் பாதையில் செல்கிறது
என்பதை நான் அவதானிக்கத் தவறவில்லை.
கல்வியில் நீ காட்டிய ஆர்வம்
உனது வாழ்க்கை வெற்றிப்படிகளில் என்பதை அன்றே
உணர்த்தியது.
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியில்
உன்னைக் கண்டு மகிழ்ந்தேன்.
உன்னோடு அருகிருந்து பயணித்தேன்.
உன்னுடைய வயதும், வளர்ந்து வந்த பாதையின்
அனுபவமும்
உன்னுடைய முதிர்ச்சியுடன் ஒத்து நின்றன.
உன்னுடைய சிந்தனைகள், உன்னுடைய ஆக்கங்கள்,
உன்னுடைய ஈடுபாடுகள், உன்னுடைய தீர்மானங்கள்,
உன்னுடைய உறவுத் தொடர்புகள்
அனைத்துமே வளரும் காலத்து நம்பிக்கைகளாக
வெளிப்பட்டன.
நீ குருவானாய். எமது இணைந்த பயணம் தொடர்ந்தது.
பணி எதுவாக இருந்தாலும் நல்ல மனத்துடன் ஏற்றாய்.
வன்னி உன் பணியின் உச்சம். உனது ஆளுமை
முழுமையாக வெளிப்பட்டது. இறைதந்தையில் உனது
நம்பிக்கை மக்களை உனது பணியில்
முன்னுரிமைப்படுத்த உதவியது. ஆழிப்பேரலை எழுந்த
போதிலும் சரி வன்னிப்போரிலும் சரி உனது ஆன்ம
பலத்தை எண்ணி வியந்தேன். இறுதி மூச்சு இருந்த வரை

உறுதி தழும்பாது உயர்ந்துவிட்டாய்.
“விழுமியங்களின் மனிதன்” நீ,
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உன்னைக் கேட்டுத்தான்.
இறை உறவு உனக்கு எப்போதும் முன்னுரிமையானது.
உண்மையை விரும்பி வாழ்ந்தாய்
நீதியின் வழி அனைத்தும் அமைய வேண்டுமென விரும்பினாய்.
குழும உறவை மதித்தாய்.
குழுமமாகவே செயற்பட விரும்பினாய்.
நல்லது எதையும் முன்னின்று வழிநடத்த நீ தயங்கியதில்லை.
ஏழைகளின் நண்பன். கரிசனை உனக்குக் கைவந்த கலை.
உனக்குப் பகைவர் என்று யாரும் இல்லை.
வாழ்க்கையிலும் சரி பணிகளிலும் சரி எதனை
முன்னுரிமைப்படுத்த வேண்டும் என்பதில் தெளிவு உன்னிடம்
உறுதியாக இருந்தது.
உன்னுடைய வாழ்க்கையிலே வெற்றிக்கு வித்திட்டவர் யார்?
உன்னுடைய குடும்பம்தான் என்று உறுதியாகச் சொன்னால்
அதில் தவறிருக்காது.
அமரத்துவமடைந்த உன்னுடைய அப்பா,
அன்புள்ளம் கொண்ட அம்மா,
பாசம் நிறைந்த உன்னுடைய சகோதரர்கள், சகோதரிகள்,
நீ மனிதனாக வளர்வதற்கும், இறை பணியாளனாக
மலர்வதற்கும்
கற்றுத்தந்தவர்கள், களம் அமைத்துத் தந்தவர்கள்.
உன் முன்னிலையிலும்
உன் குடும்ப உறவுகள் முன்னிலையிலும்
நன்றியோடு பணிகின்றோம்.
சறா!
இன்று நீ என்னோடு இல்லை, கவல்கிறேன்.
இன்று நீ எம்மோடு இல்லை, பரிதவிக்கிறோம்.
உன்னை
இன்று நீ இல்லை
என்று நினைப்பதைவிட
உன்னிடம் இருந்ததை
உன்னிடம் இருந்து
நீ கொடுத்ததை
உன்னையே நீ கொடுத்ததை
நினைக்கும் போது...
இந்த நினைவே
பிரிவால் துயருறும் ஒவ்வொருவரையும்
ஆற்றுப்படுத்தும் என்பது
எனது நம்பிக்கை.

ஜெறிகரன்

புறமுதுகு காட்டாத புதல்வன்

இறைநெறியில் தடம் பதித்த கொடியில் பூத்து
மறை மொழியைப் பறைசாற்றி மனிதம் காத்து
நிறைவாழ்வின் திருவடியை அடைந்த சறா!
நினைவாலே கோயில் கட்டிப் புலம்புகின்றோம்!

இறுதிவரை மக்களுடன் இருப்பேன் என்ற
உறுதிமொழி காத்து உயிர் நீத்த மைந்தா!
அலைகள் செய்த அழிவினிலும் அரணாகி நீ
கொலை மலிந்த போரினிலும் விளக்காகினாய்!

மனிதத்தின் குன்றாய் யாழ் குருவாகினாய்
புனிதத்தின் அருள் ஈந்து பணியாற்றினாய்
பருவத்தின் பற்றெல்லாம் பதிக்காக்கினாய்
உருவத்தின் பொலிவையன்புச் சுடராக்கினாய்!

புறமுதுகு காட்டாத புதல்வா சறா!
அறமெதுவும் இல்லையடா அறிவாய் இன்று
மதவெறியும் இனவெறியும் அழிந்துபோக
மலரட்டும் புதுவாழ்வுன் மறைவின் பேறாய்!

நீ. மரிய சேவியர்

இதயக் கண்ணீருடன்

இறை பணியில்
இறுதிவரை - தனைக்
கரைத்து - இன்று
இறுதி மூச்சையும்
பணியில் உரமாக்கிய
அருட்பணி
சறத் ஜீவன் அடிகளாருக்காக
இதயம் நிறைந்து அஞ்சலித்துப்
பிரார்த்திக்கின்றோம்.

கனத்த நெஞ்சங்களுடன்
மடுத்தீனார் குழுமம்

ஓராயிரம் வடுக்கள் சுமந்தவரே!

கொதிக்கும்
எரிமலைக்குழம்பின்
நடுவே
கொழுந்து விட்டெரிந்த
வேள்வித் தீயே!

உடல் வலுவென்ற
மனப்பலத்தால்
உலகையே வென்று
உயர்ந்தவரே!

ஆத்மீக தாகத்தால்
துடித்த மந்தைக்கு
ஆருயிரைத் தண்ணீராக்கி
ஊற்றியோனே!
கொதிக்கும் வெம்பாலையிலே
ஆடுகளுக்காய்
கோரைப்புல் தேடிய
மேய்ப்பனே!

ஓயாது நடந்த
அண்மைப் போரில்
ஓராயிரம் வடுக்கள் சுமந்தவரே!
இறுதி மூச்சையும் பணியில்
உரமாக்கி
அர்ப்பண வாழ்வின்
அர்த்தம் கொடுத்தவரே!

இரத்தம் பாய்ந்த
மந்தையின் இதயவொலி
கேட்டதாலோ
இதயம் இயங்கிட மறுத்தது?
பிரசவ வலி தாங்கிய
பிதாமகனே
பிறை நிலவே
சரத் ஜீவன் அடிகளாரே!

ஆயனாய் வாழ்ந்தீர்
அப்படியே இறந்தீர்
ஆண்டவரில் அமைதியாவீர்
நல்லாயன் பரிசோடு!

சிந்து

ஜெத்சமனி அனுபவித்த இறை ஊழியன்

எம் பாசத் தந்தையே,
இதழ் பிரிக்காமல் குரல் எழுப்பாமல்
இமைகள் உதிர
விழிகள் காய - உறவின்
நிழல் கொண்டு
பாலைவனத் தாகமாய் - உம்
பாசத்தைப் பிரசவிக்க - நாம்
கதறிடும் குரல்மொழி

உயிர்கள் பிரிய அவயங்கள் கருகிட
கால் பதித்த இடங்கள் புதைகுழியாகிட
பசியும், அழுகுரல்களும்
மலர்வளையமாகிட
சுவாசக்காற்றாய் இரத்தவாடை வீசிட
யாவையும் நெஞ்சக் கூட்டில் சுமந்து
மக்களுக்காய் இதயம் துடித்து - பல
ஜெத்சமனி அனுபவித்த இறை ஊழியனே - இன்று
உந்தன் இதயத் துடிப்புத்தான் உயிர் குடித்ததோ
துடிக்கின்றோம் உம் பிரிவால்
தொழுகின்றோம் இறைபாதம்
தூவுகின்றோம்
கண்ணீர்ப் பூமாலை

சவேரியார் குழுமம்

The Heroic Life and Witnessing

of

Father Mariampillai T. Sarathjeevan

"I am the good shepherd. I know my own and my own know me, as the Father knows me and I know the Father. Because of this I give my Life for my sheep" (Jn. 10:1-4)

The heroic life and witnessing of Father Sarathjeevan manifested so very convincingly in the answer he gave Fr. James Pathinathan who invited him to go with him after he had been injured by shell fire: *"I shall stay on with my people until the very end."* He faithfully kept his word. Fear and anxiety, hunger and thirst he experienced along with his long suffering people who lived daily only with one meal of *kanchi.*

He comforted the dying, buried the dead and ministered to one and all alike. When at last he left along with the last group of his people, he was found to be extremely weak and fully exhausted. At this crucial stage, he suffered a massive heart-attack and succumbed to it, offering his life to the Eternal High Priest and Good Shepherd, Christ, the Lord.

The Jaffna Presbyterium, together with all Religious and People, salute the dedication and witnessing of the faithful band of Priests and Religious who remained with the afflicted people till the end enduring their lot and serving them as best as they could in every way. As for Father Sara, he exceeded them all by paying the Supreme Sacrifice of his precious life for the greater glory of God. We all praise and thank God for the Special Grace given to all and very specially to Father Sara for his Selfless Sacrifice of his life.

I have been very close to his family and have known him from his childhood. He enjoyed the affection and love of his dear family.

He was my altar-server at the Cathedral actively participating in all the liturgical functions. He was also very active in the Youth Group of the Cathedral. He was a model as an altar-server as well as a member of the Youth Group.

His seminary life both at St.Martin's and St.Francis Xavier's was exemplary. He always maintained simplicity and benevolence every-where.

He offered his unstinted services gladly in all the parishes he worked.At Mullaithivu he worked among the *tsunami* victims traumatised by the disaster. Later at Uruthirapuram and Wanni, he crowned his ministry with sacrificial offering of his life of love and service.

- Fr. J.P. Emmanuel Selvarajah

எப்படி உன்னால் முடிந்தது?

நல்ல ஆயன் நானே!
நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன், என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன, அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்.

யோவான் 10: 14-15

சறா!
எப்படி உன்னால் முடிந்தது?

இறைவனின் வார்த்தையை
இறுதிப் புள்ளிவரை வாழ்ந்து பணிபுரிய
எப்படி உன்னால் முடிந்தது?
எப்பணியென்றாலும்
அப்பணியில் முழுமையாய் அர்ப்பணிக்க
எப்படி உன்னால் முடிந்தது?
பேராழி அனர்த்தத்தால்
பெருந்தொகையாய் இறந்தவரை அடக்கம்செய்ய,
இழந்தவரை அருகிருந்து தேற்றிப் பணிபுரிய
எப்படி உன்னால் முடிந்தது?
சமூகப்பணி தொடர்பாக
வெளிநாடு செல்ல அனுமதி கிடைக்காததை
நிறைகுடமாய் ஏற்றுத் தொடர்ந்து பணிபுரிய
எப்படி உன்னால் முடிந்தது?
போர் நடந்த இடம்விட்டு
வெளியேற அழைக்கப்பட்டும்
மக்களே உனது முன்னுரிமை என்று
இறுதிமூச்சு இருந்தவரை உடல் உருகிப் பணிபுரிய
எப்படி உன்னால் முடிந்தது?

எம் உள்ளத்தில் நீங்காது நிற்பது :
இறைத்தந்தை உனக்கு எப்போதும் நல்ல ஆயன்.
நீயும் அடுத்தவர்க்கு நல்லாயனானாய்.
உன் ஆழமான ஆன்மீகம் எமக்கு ஒரு வழிகாட்டி.
இறைவன் திருவடியில் நீ சாந்தி பெறுவதும் உறுதி.

நன்றியுடனும் பெருமையுடனும்,
குருத்துவத்தில் உன் நண்பர்கள்

ஒரு வீழ்ப்பம்

அருட்தந்தை

மரியாம்பிள்ளை தேயூஸ் சறத்ஜீவன்

* 13.05.1968 + 18.05.2009

இறையாட்சியை நம்புகிறவர்கள் ஒடுக்கப்படுவோரின்
விடுதலைக்காகப் போராடாமல் இருக்கமுடியாது – ஜி குடியெரெஸ்

ஒரு விழுப்பம்

Oru Vilupam

(Vilupam: All codes extol the excellence of disciplined self-denial)

A

Fribute

to the Heroic Life and Powerful Witnessing of

Father Mariampillai Thatheus Sarathjeevan

who Crowned his Minsitry with Sacrifical Offering

of his Love and Service

on May 18, 2009

at one of the worst Human Ttragedies

of the Century at Wanni

A Publication by
Priest - Friends and co-workers at Wanni

முகப்புவரிகள்

தனது அற்புதமான மக்கள் மையப் பணியில் முன்உதாரணமாகி மிகக் கொடூரமான சூழலில் எம்மை விட்டு சடுதியாகப்பிரிந்த குருத்தோழன் சறத்ஜீவனுடைய அகண்ட ஆழுமையை சில பக்கங்களில் புகுத்தியுள்ளோம்.

வரலாறு காணாத வன்னிப்பேரவலத்தின் ஒரு குறியீடாகத் தந்தை விளங்குகிறார். அவருடைய பிரிவின் பின்புலத்தை ஆவணப்படுத்த எண்ணி இக்குறுநூலை வெளியிடுகின்றோம். அவரிடம் இருந்தவர்களிடம் அறிய முயற்சி எடுத்தபொழுது இக்கொடூர நினைவுகளை மீட்டுக்கொண்டு மீண்டும் துன்பியல் அனுபவத்திற்குச் செல்ல அவர்கள் விரும்பவில்லை. இருப்பினும் அவருடன் பயணித்த அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர் பல தரவுகளைத் தந்துதவியுள்ளார்.

இது ஒரு கண்ணீர் அஞ்சலிமலர் அல்ல. உறுதிகொண்ட இலட்சியத்துக்காக ஆவிபிரியும்வரை வீர சாட்சியத்துடன் போராடியவரின் ஒரு விழுப்பம். திருஅவையின் நீதி சமூகப்படிப்பினைகள் நூல் வடிவில் இருந்தால் மட்டும் போதாது அதற்கு உயிர் ஊட்டம் கொடுக்கின்ற மனிதர்கள் தேவை. அவர்கள் வரலாற்றுச் சூழலில் வாழ்கிறவர்கள்.

இவரின் உருவாக்கத்திற்கு சிறந்த அடித்தளமாகவும் பலன்கொடுக்கும் விளைநிலமா கவுமிருந்து பணிபுரிய எப்பொழுதும் உற்சாகப்படுத்திய பெற்றோர்கள், சகோதரர்களுக்குப் பாராட்டுகளைத் தெரிவிப்பதில் நிறைவடைகிறோம்.

ஒரு விழுப்பம்

உலகப்பற்றை நீத்தவர் செய்யும் பெருமைக்குரிய செயல்களை விழுப்பம் என்று அறநூல்கள் கூறுகிறது. வள்ளுவம் அதை விழுப்பத்தில் விழுப்பம் என்கிறது.

“ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு”

வீரத்தின் அடையாளமாகப் போரில் பெற்ற காயத்தை விழுப்புண் என்பர். இவ்விரு கருத்து உள்ளீடு அடிகளாருக்குப் பொருந்துவதால் விழுப்பம் என்ற பெயர் மலருக்கு அணிந்துள்ளோம்! ஆக்கங்கள் தந்துதவிய அனைவருக்கும் பாராட்டுக்கள்!

குருத்தோழர்கள்.
17.06.2009

அப்பா, சூரிய ஜீவன், நித்திலா, நிலா, அம்மா
சறத்ஜீவன், சக்திஜீவன்

யாழ் பேராலயப் பங்கின் உன்னத கொடை

அருட்பணி மரியாம்பிள்ளை சறத்ஜீவன் யாழ் பேராலயப் பங்கின் மகன், தனது குருத்துவத்தின் குறுகிய காலத்திலே இறைவனடி சேர்ந்து விட்டாரென்ற கவலை எம்மை இன்றும் வாட்டிக்கொண்டிருக் கின்றது.

"நல்ல ஆயன் தன் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" என்ற இயேசுவின் கூற்றுக்கிணங்க கொடூரமான போரின் மத்தியிலே இறுதிவரை பணியாற்ற வேண்டுமென அர்ப்பணத்தோடு வாழ்ந்தார். வரலாற்றிலே புனித மாக்சிமிலியன் கோல்பே என்ற குரு போலாந்து நாட்டைச் சேர்ந்தவர். சித்திரவதை முகாமிற்குள் ஒரு கைதியின் உயிரைக் காப்பாற்ற தன் உயிரைக்கொடுத்தார்.

பேராயர் ஆஸ்கார் ரொமேரோ தென்அமெரிக்காவில் எல்சல்வடோர் நாட்டின் ஏழைகளின் விடுதலைக்காகப் போராடி திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது சுட்டுக்கொல்லப்பட்டார். மறைபோதக நாடுகளில் பணியாற்றிய பல குருக்கள் சித்திரவதை செய்யப்பட்டும், சிறையில் அடை பட்டும், கொலை செய்யப்பட்டும் உள்ளனர். எம்மண்ணிலும் இவ்வாறு இறந்தவர்கள் உண்டு. அவ்வரி சையிலே அருட்பணி சறத்ஜீவனும் அடங்குவார்.

இவர் மக்களின் நலனுக்காகப் போர்ச்சூழலில் உறவையும், உணவையும் பகிர்ந்து அவர்களுக்கு ஆன்மீக ஊட்டத்தை வழங்கி மரித்தவரை அடக்கம் செய்து, மனம் உடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறி நம்பிக்கையூட்டி நற்பணியாற்றி அம்மண்ணிலே சங்கமமானார்.

"உமது மக்களுக்காகப் பணிசெய்ய நான் காத்திருக்கின்றேன்" என்ற புனித மாட்டீனின் கூற்றுக்கு அமைய அருட்தந்தை சறத்ஜீவன் இறுதிவரை வன்னி மண்ணிலே மக்களோடு இருந்து பணியாற்றி எதிர்பாராத விதமாக இறைவனால் அழைத்துக் கொள்ளப்பட்டார். நான் பேராலயத்தில் (1979-80களில்) உதவித்தந்தையாகப் பணியாற்றிய போது பீடப்பணியாளராக இவரை அறிகிறேன். குடும்பத்தில், விசுவாசத்திலே ஆழமும், மறைபணியிலே வாஞ்சையையும் பார்த்திருக்கிறேன். அத்தகைய குடும் பத்திலே உருவான குருவும் தோற்றத்திலே பெரிய உருவமாகக் காட்சியளித்தாலும் எளிமையும், அமை தியும், அர்ப்பணமும், சேவைசெய்யும் மனப்பாங்கும் அவரின் குருத்துவத்திற்கு மெருகூட்டின.

"கோதுமை மணி மடிந்தாலொழிய அது அப்படியே இருக்கும்" என்ற வேதவாக்குக்கேற்ப இன்று எம்மைக் குருத்துவ வாழ்வில் அதிகமாக அர்ப்பணிக்கவும், துன்பங்கள், அவலங்கள் கண்டு துவண்டு விடாமல் துணிவோடு பணியாற்ற அருட்தந்தையின் வாழ்வு தூண்டுதல் தர வேண்டும். இப்போரவல வடுக்களால் காயமடைந்து, மனமுடைந்து, உறவிழந்து ஊனமுற்று வாழும் எம்மக்களுக்கு இறைவ னின் தொடுகையை உணர்த்தும் வல்ல கருவிகளாக வாழ நம்மை அழைத்து நிற்கின்றது. முகாம்க ளிலே முடங்கிக் கிடக்கும் மக்கள் வெகுவிரைவில் விடுதலையின் சுவாசக்காற்றை சுவாசிக்க நல் உள்ளம் படைத்தவரின் தியாகங்கள், அர்ப்பணங்கள் துணைபுரிவதாக.

சறத்ஜீவன் சாவு உன்னைச் சாகடித்தாலும், உன் ஜீவனை சரித்திரம் ஒரு போதும் சாகடிக்காது. உறுதியான உனது தோற்றம் போல உன் உள்ளமும் உரமுள்ளதே! பறித்தெடுக்கப்பட்ட பல்லாயிரம் அப்பாவி உயிர்களின் கோரமாய்ச் சிதறடிக்கப்பட்ட உடலங்களைக் கண்டு உன் இதயமே தாங்காமல் வெடித்துக்கொண்டதோ! ஆறாண்டு உன் குருத்துவப் பணியின் மகத்துவம் ஆயிரமாண்டுகளுக்கும் மங்காமல் நினைவு கூரப்படும். கிறிஸ்துவின் தியாகச்சுடர் உம் உருவில் என்றும் சுடர்விடுகிறது. ஆண்டவரில் உன் ஆன்மா அமைதி காண்பதில் ஐயமில்லை.

அருட்பணி. இ.கொ. சகாயநாயகம்
பங்குக்குரு, யாழ். பேராலயம்.

சறத்ஜீவன் ஒரு சரித்திர நாயகன்

சறத்ஜீவன் சாவு உன்னைச் சாகடித்தாலும், உன் ஜீவனை சரித்திரம் ஒரு போதும் சாகடிக்காது.

உறுதியான உனது தோற்றம் போல உன் உள்ளமும் உரமுள்ளதே! பறித்தெடுக்கப்பட்ட பல்லாயிரம் அப்பாவி உயிர்களின் கோரமாய்ச் சிதறடிக்கப்பட்ட உடலங்களைக் கண்டு உன் இதயமே தாங்காமல் வெடித்துக் கொண்டதோ! ஆறாண்டு உன் குருத்துவப் பணியின்மகத்துவம் ஆயிரமாண்டுகளுக்கும் மங்காமல் நினைவு கூரப்படும். கிறீஸ்துவின் தியாகச் சுடர் உன் உருவில் என்றும் சுடர் விடுகிறது. ஆண்டவரில் உன் ஆன்மா அமைதி காண்பதில் ஐயமில்லை.

அருள்தாசன்

வீரம் - சாட்சியம் சொரிந்த அருட்தந்தை சறத்ஜீவன்

நல்ல ஆயன் நானே தந்தை என்னை அறிந்திருக்கிறார்... என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன். (யோவான் 10:14)

அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர் அவர்கள் முல்லைத்தீவில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக ஷெல் தாக்குதலில் காயப்பட்டு அங்கிருந்து புறப்படும்போது அருட்பணி சறத்ஜீவன் அடிகளைத் தன்னுடன் கூடவரும்படி அழைக்க "இறுதிவரை நான் எனது மக்களுடன் தான் தங்குவேன்" என்று விடை பகர்ந்தார். தான் கூறிய வார்த்தைகளை பயம், கவலை, பசி, தாகம் போன்றவற்றோடு நீண்டகாலம் வாழ்ந்து நாள் ஒன்றிற்கு ஒரு நேரக் கஞ்சி மட்டும் உணவாக உட்கொண்டு துன்புற்று வாழ்ந்த தனது மக்களுடன் தனது கடைசி நிமிடம் வரை வாழ்ந்தார். அருட்பணி மரியாம்பிள்ளை, த.சறத்ஜீவனின் வீரமுள்ள சாட்சியம் நிறைந்த வாழ்விற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. மடிந்து கொண்டிருக்கும் மக்களுக்கு ஆறுதல் கூறியும் மரித்தோரை அடக்கம் செய்தும் காயப்பட்டவர்களை பராமரித்தும் வந்தார். இறுதியாக அங்கு தங்கியிருந்த மிகுதித்தொகை மக்களுடன் அங்கிருந்து புறப்பட்ட பொழுது அவர் மிகவும் பெலவீனமடைந்து முழுமையாக சோர்வுற்றிருந்தார். இறுதியாக மாரடைப்பு ஏற்பட்டு தன்னுடைய உன்னதமான உயிரை அரப்பணித்து நல்லாயனும் கிறிஸ்துவுமாகிய தன் எஜமானிடம் தனது ஆவியை ஒப்படைத்தார்.

சகிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வாழ்ந்த மக்களோடு இறுதிவரை இருந்து அர்ப்பணிப்போடும் சாட்சியத்தோடும் ஆழமான விசுவாசத்தோடும் பணிபுரிந்தார். இதில் குருக்கள், துறவற சபைகள், யாழ் கத்தோலிக்க சமூகம் நிறைவடைகிறது. மற்றவர்களுக்காகத் தன்னுயிரைத் துச்சமாக மதித்து அதனைப் பலிகொடுக்கும் அளவிற்கு கடவுளை மகிமைப்படுத்தினார். அனைவருக்கும் இறைவன் கொடுத்த இம்மாபெரும் கொடைக்காகவும் விசேடவிதமாக அருட்தந்தை சறா அவர்களுக்குக் கொடுத்த தன்னலமற்ற தியாகம் நிறைந்த வாழ்விற்காகவும் இறைவனைப் புகழ்வதோடு நன்றியும் கூறுகின்றோம்.

இவருடைய குடும்பத்தோடு நெருங்கிப் பழகிய காரணத்தால் சிறுவயதில் இருந்தே நன்கு அறிவேன். இவர் தன்னுடைய குடும்பத்தில் செல்லப்பிள்ளையாக மகிழ்வோடு வாழ்ந்தவர்.

என்னுடைய பேராலயப் பங்குத்தந்தைப் பணிக்காலத்தில் பீடப்பணியாளனாகத் தன்னை இணைத்துக் கொண்டு பேராலயத்தில் இடம்பெற்ற அனைத்து சமய வழிபாட்டு நிகழ்வுகளிலும் சுறுசுறுப்போடு பங்குபற்றியவர். பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தில் துடிப்புள்ள உறுப்பினராகச் செயற்பட்டவர். பீடப்பணியாளர் சபையிலும் இளைஞர் உருவாக்கல் இயக்கத்திலும் இவர் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்.

புனித மாட்டீனார் குருமட வாழ்க்கையில் மட்டுமல்ல புனித பிரான்சிஸ் சவேரியார் பெரிய குரு மடத்திலும் மற்றவர்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்தார். இவர் எப்பொழுதும் எங்கும் இரக்கம் உள்ளவராக வாழ்ந்து எளிமையைக் கடைப்பிடித்தார். இவர் தான் பணி ஆற்றிய எல்லாப் பங்குகளிலும் தன்னுடைய கறைபடியாத பணிகளை மகிழ்ச்சியோடு செய்தார். முல்லைத்தீவில் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளப்பெரிய சேவைகளைச் செய்து இறுதியாக உருத்திரபுரத்திலும் வன்னிப்பிரதேசத்திலும் இறுதிப் பேரவலத்தில் ஆற்றிய பணிகளுக்கு மகுடம் சூட்டுவது போல் அன்புச் சேவையில் தன்னை முழுமையாக நிறைவு செய்து தனது ஆன்மாவை விலைமதிக்க முடியாத பலியாக ஒப்புக்கொடுத்தார்.

மறைத்திரு பொன். இம்மானுவேல் செல்வராஜா

"எம் மனங்களில் கொலு விருப்பாய்

"சரத் ஜீவன்"
நீ இறந்தும் வாழ்கிறாய்.
ஏனென்றால்
உனது மரணமும்
கிறிஸ்துவின் மரணம் போன்றது
ஆபத்தில் சிக்குண்ட
நீன் மந்தைகளைக் காப்பாற்ற
பொன்னான உன்னுயிரை
ஆகுதி ஆக்கினாய்
அலைந்து திரிந்த உன் மக்களுக்காய்
உன்னையே நீ அழித்துக்கொண்டாய்
"மக்கள் இருக்கும் வரை
வரமாட்டேன்" என்று சொன்னாய்.
நீ சொன்ன வார்த்தைக்கும்
அர்த்தம் கொடுத்தவன் நீ

தன்னைத் தானே அழித்து
அணுவணுவாய்த் தனை இழந்து
நெற்றியிலே திலகமாகும்
மணம் வீசும் சந்தனம் போல்
நீயாக முன்வந்து
தேய்ந்து தேய்ந்து
தேய் பிறையாகி
மக்கள் மனங்களில்
பௌர்ணமி ஆனாய்.

பீடப்பணியாளனாய்த்
திருப்பீடத்தில் உனைக்கண்டோம்
பேராலயத்தில் இசைமீட்டி
இறைவனை நீ புகழ்ந்து நின்றாய்
இளைஞர் குழாமிலே
ஓர் அங்கமாய் நீ இணைந்து
அரும்பணிகள் பல புரிந்தாய்.
இறைவனின் குருவாகி
பேராலயப் பங்கினிற்கு
பெருமை சேர்த்து
அணி செய்தாய்.

"தன் நண்பனுக்காக
உயிரைக் கொடுப்பதை விட
மேலான அன்பு இல்லை"
என்ற இறைவார்த்தையை
உனதாக்கி வாழ்ந்து நின்றாய்.
இறைமகன் யேசுவைப் போல்
நல்லாயனுக்குரிய
நற்பண்புகளை
மகிழ்வோடு வெளிக்கொணர்ந்தாய்
நாம் வாழும் பிரபஞ்சம்
அழிந்துதான் போனாலும்
வேதத்தின் சிறு "குற்றும்"
அழிந்திடாது என்பதைப்போல்
உன்னுடைய
உயிர் தந்த தற்கொடையும்
களங்கமற்ற அன்புறவும்
என்றுமே அழியாமல்
எம் மனங்களில் கொலுவிருக்கும்.



இ.அ. அமலரட்ணம் – (யாழ். பேராலயம்)

அன்புடமை, அர்ப்பணம், சான்றாமை நிறைந்த எனது உடன்பணியாளர் அவர்!

அருட்பணி சறத்ஜீவன் எம்மைவிட்டுப்பிரிந்து நாட்கள் 31. அவருடனான அனுபவத்தைப் பகிர் வதில் மனங்கொள்கிறேன். அவருடன் நான் பயணித்த பாதையை மூன்று கூறுகளாக்கியுள்ளேன்.

1. முல்லைத்தீவில் உதவி பங்குக்குரு 2. வன்னி மறைக்கோட்டத்தின் உடன்பணியாளர்.
3. வலைஞர் மடத்தில் இடம் பெயர்ந்த அகதி

முல்லைத்தீவில் உதவி பங்குப்பணியாளர்

அவர் எனது ஆழ்ந்த அன்பிற்குப் பாத்திரமான உதவிப்பணியாளர். பிரமாணிக்கம், அர்ப்பணம், உயர்மானிட விழுமியங்கள் கலந்த மனிதனாகப் பார்த்தேன். தொடக்க 2004ல் எனது பங்கிற்கு அருட்பணி சறத்ஜீவன் (சறா) வருகை தந்திருந்தார். இவ்வேளையில்தான் பங்கின் பணிகள் பெரிதளவில் அதிகரித்தது. இந்தியாவில் இருந்தும் வேறு இடங்களிலிருந்தும் 1990களில் இடம் பெயர்ந்தவர்கள் வருகைதரத் தொடங்கினார்கள். சமூகத்தைக் கட்டியெழுப்புதல், பங்கை உருவாக்கல், பங்கின் அமைப்புக்களை நிர்மாணித்தல், நிறுவனப் பணிகள், பங்கின் பணிமுறைகள், பங்கிற்கான நெறிமுறைகள் அனைத்தையும் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது. பங்குக் களத்தில் அனைத்துப் பணிகளையும் பொறுப்பாக எடுத்து மகிழ்வுடன் பணியாற்றுவார். அழகு புன்னகை யுடன் களைத்தாலும் இரவு பகல் பாராமல் கொடுத்த பணியை அனைவருடைய திருப்திக்கும் நிறைவாக்குவார். யாழ் பேராலயத்தில் பீடப்பணி, இளைஞர் மன்ற அங்கத்துவ அனுபவப் பின்புலத் தில் இரு மன்றங்களை செயல்திறன் மிக்க அர்ப்பணம் கொண்ட அங்கத்தவர்களாக உரு மாற்றி னார். சிலாவத்தையின் புனித ஆனாள் ஆலயக் கட்டுமானப் பணிகளைப் பொறுப்பெடுத்துத் தானே அதன் வரைபடத்தையும் ஒழுங்கமைத்து மிகக் குறைந்த செலவில் கட்டி முடித்தார். அதற்குத் தேவையான கட்டிட மூலப்பொருட்களைக் கொழும்பிலும் முல்லைத்தீவுக் கடற்கரையிலும் இருந்து தானாகவே எடுத்துப் பணிகளைச் செய்தார். பங்கில் அனைத்து வீடுகளையும் தரிசிப்பார். நத்தார் நாட்களில் வீடுகளை ஆசீர்வதிப்பார்.

இலங்கையின் கிழக்குப் பகுதியை 2004 கடல் கோள் தாக்கியதில் முல்லைத்தீவு மிகக் கேவல மாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று. அந்நகரமும் சுற்றாடலும் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு 3000 பேரைக் காவு கொண்டும், அதிகமானோரைக் காயப்படுத்தியும் சென்றது. இப்பேரவலத்தின் தொடக்கத்திலிருந்தே இறந்தோரை அடக்கம் செய்வதிலும் உறவினருக்கும் தப்பியோருக்கும் ஆறுதல் கூறுவதிலும் பங்கின் இடிபாடுகளுக்குள் மிஞ்சியதை எதிர்காலத்திற்கு சேகரித்து வைப் பதிலும் தனது பணியில் முழு மூச்சாக ஈடுபட்டார். இவைகள் எல்லாம் உடல் உள உணர்வுகளைத் தாரைவார்க்கும் அனுபவங்கள், பெருந்தன்மை, அர்ப்பணம் தியாகங்களின் வழியாக இவைகளை நிறைவு செய்தார். மார்ச் 2005 முல்லைத்தீவிலிருந்து உருத்திரபுரம் பங்கிற்கு மாற்றப்பட்டார்.

வன்னி மறைக்கோட்டத்தின் உடன் பணியாளர்

இது அவரது பங்குக்குருவான முதல் தளப்பணிகளை அர்ப்பணம், அன்பு, ஆத்ம வாஞ்சை, அர்ப்பணிப்புகளுடன் கூடிய பங்கை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். முன்னைய போர்ச் சூழலினால் உடைந்து போன ஆலயத்தை ஆயரினதும் மக்களினதும் உதவியுடன் திருத்த வேலைகளை ஆரம்பித்து மக்கள் ஒன்றிணைந்து வழிபாடு நடத்தக்கூடிய மிக அழகான ஆலயமாகக் கட்டி முடித்தார். அனைவராலும் அன்பு செய்யப்பட்டு கவரப்பட்ட பங்குக் குருவாகத் திகழ்ந்தார்.

பங்குப் பணிகளுடன் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் யேசுசபை அகதிமைய இணைப்பாளராக நியமிக்கப்பட்டார். இது பாரிய பொறுப்பாக இருப்பினும் அவருக்கே உரித்தான அர்ப்பண, தியாக குண இயல்புகளுடன் இடம் பெயர்ந்தோரின் அடிப்படைத் தேவையினை நிறைவேற்றி வந்தார். இத்தருணத்தில் சமாதான ஒப்பந்தம் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே உருவானது. இதனால் வன்னி மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியி ருந்தது. உணவும் அதன் முக்கிய பொருட்களும் சோதனைச் சாவடியில் மட்டுப்படுத்தப்பட்டது. கட்டிடப்பொருட்கள் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. தென்பகுதிப் பயணங்கள் இதைவிட மோச மானது மிகச் சிரமமானது. வன்னியில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் கிராமங்கள், சமூகங்கள் தோறும் இளைஞர்கள் இயக்கத்திற்கு இணைக்கப்பட்டது பங்குக் குருக்களுக்கு பெரும் துன்பியல் நிகழ்வாக இருந்தது. இவ்வேளையில் எமது மத்தியில் நடக்கும் நிகழ்வை முன்னிட்டு பங்கு மக்களின் ஆழ்ந்த துயரத்தை நீக்குவதற்கு பங்குக் குருக்களைப் பல தடவை சந்தித்தோம். எமது அவலங்களின் வெளிப்படையாகவும் பக்கச்சார்பின்றி திறந்த மனத்தோடும் கருத்துக்களை வெளியிடுவார். அநேகமாக இதற்குப் பொறுப்பானவர்களோடு பேசி ஒழிக்கும் படி கூறியிருந்தோம். அத்துடன் வான் தாக்குதல் அப்பாவி மக்கள்மீது செல்வீச்சுக்களைப் பொழிதல் உணவுத் தடை களுக்கு எதிராக சர்வ மதப் பிரார்த்தனைகளும் கண்டன ஊர்வலங்களும் நடாத்தி அரசாங்கத் திற்கும் ஐ.நா சபைக்கும் மக்களைத் தாக்க வேண்டாம் என்று மகஜர்களை அனுப்பினோம். அனைத்துப்பணிகளிலும் அவருடைய வகிபாகம் போற்றுதற்குரியது. என்னைக் கவர்ந்தது என்ன வென்றால் நான் மூத்த குரு என்ற மட்டில் கண்டனக்கூட்டங்களைத் தலைமை தாங்கிச் செல்வது வழமை அவ்வேளைகளில் எப்பொழுதும் அவர் எனக்கு அருகில் துணிவுடன் இருந்து உதவியளிப்பார். அவ்வேளைகளில் கமராக்கள் படங்களைப்பதியும் தன்னை மறைத்துக்கொள்ளாமல் துணிவுடன் இருப்பார். அவருடைய துணிவையும் என் மேல்வைத்த அபார அக்கறையையும் மறக்கமுடியாது.

வலைஞர் மடத்தில் இடம் பெயர்ந்த அகதியாக

இலங்கைப் பாதுகாப்புப் படைகள் கிளிநொச்சியை முழுமையாகக் கைப்பற்றியதன் பிற்பாடு முல்லைத்தீவு மாவட்டம் நோக்கி முன்னேறியவர்கள். அனைத்துக் குடிமக்களும் அவர்களுக்குப் பணிபுரிகின்றவர்களும் அரசு அறிவித்ததற்கு அமைய சமாதான வலயமாகிய சுதந்திரபுரம், தேவிபுரம் ஆகிய இடங்களுக்கு அடைக்கலம் புக வேண்டியிருந்தது. இவ்விடங்களிலும் சண்டை கள் தொடங்க அரசு அறிவித்ததற்கு அமைய புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலயங் களுக்குப் போக வேண்டியிருந்தது. நான் முன்கூட்டியே இந்த வலயத்திற்கு சென்று வலைஞர் மடத் தில் வாழ்ந்து வந்தேன். அங்கே அனைத்துக்குருக்கள், அருட்சகோதரிகள் அவர்களிடமிருந்த பெற்றோர்களை இழந்த வலுவற்ற குழந்தைகள் கியூடெக், யேசு சபை அகதிமையம் அனைவரும் பணிபுரிந்த வலைஞர்மடத்திற்கு வருகை தந்தார்கள். அனைவரும் ஆலய வளாகத்துள் சறா உட்பட இடம்பெயர்ந்தார்கள். இது பெப்ரவரி, மார்ச் மாதத்தில் இடம் பெற்றது.

இங்கும் சறாவின் அர்ப்பணிப்பு ஆழுமை அனுபவங்களைக் கண்டு கொண்டோம். அவர் அங்கிருக்கும் குருக்கள், துறவிகள், அநாதைச் சிறுவர்கள் மனிதவள நிறுவனங்கள் (கியூடெக், யேசு சபை அகதிமையம் (JRS) உட்பட எமக்குச் சந்தையில் பொருட்களை வாங்கிவருவார். செல்வீச்சுக்களும் பல்குழல் எறிகணைத் தாக்குதலும் நிறைந்த ஆபத்தான பயணம். எம்மைப் பசியிலிருந்து காப்பாற்ற இப்பணியை மகிழ்வுடன் புரிந்தார். அத்துடன் மூன்று இலட்சம் இடம் பெயர்ந்த மக்களுக்குப் பொருள் தட்டுப்பாடு உச்சமாக இருந்தது. அருட்பணியாளர்கள் நேசநாய கம், மரியதாஸ் ஆகியோருடன் இணைந்து இரவு, பகல் பாராது அடக்கம் செய்தார்கள். பல தடவைகள் பிரிந்த உடலங்களைப் பாயில் சுற்றி ஓர், இரு மணித்தியாலங்களுக்குள் அடக்கம்

செய்து விட வேண்டும். பாயில் சுற்றியாவது அவர்களை அடக்கம் செய்வது தான் உறவினர்களுக்குக் கொடுக்கும் மனத்தேறுதலாக இருந்தது. அத்துடன் கூடாரங்களில் இருந்த இறப்புக்களைச் சந்தித்த குடும்பங்களைத் தேற்றியும், அவர்களோடு இணைந்து செபித்தும் வருவார்கள். எனக்குக் காயம் ஏற்பட்டதினால் ஏப்ரல் 22 வலைஞர்மடத்தைவிட்டு வெளியேறி வவுனியாவுக்கு வந்தேன். மிகுதி வர்ணனை நம்பிக்கையான தகவல்களிலிருந்து தருகிறேன்.

இறுதிச்சமர் மே மாத நடுப்பகுதியில் தொடங்கியது. சறாவும் இடம் பெயர்ந்தவராக அங்கே மக்களின் வறுமை, பாதுகாப்பின்மை, உயிர் அச்சுறுத்தல், தொடர் குண்டுவீச்சுக்கள், சுடுகலனின் ஆக்கிரமிப்புக்கள் அனைத்தினுள்ளும் இவரும் ஒருவரானார்'. சமரின் இறுதி நாட்களுக்குள் வலை ஞர்மட ஆலய வளாகத்தில் இருந்த அனைவரும் முள்ளிவாய்க்காலுக்கு இடம்பெயர்ந்தார்கள். அனைத்து மக்களும் முள்ளிவாய்க்காலுக்கு இடம்பெயர்ந்தார்கள். அத்துடன் அனைத்து மக்களும் முள்ளிவாய்க்காலுக்கு செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

சறாவின் இறுதிப்பயணம் - கடத்தல் (பாஸ்கா) அனுபவம்

பதுங்கு குழிகள் அமைத்து ஒரு சில நாட்கள் பாதுகாப்பாக இருந்தது. முள்ளிவாய்க்காலில் இறுதிச் சமர் தொடங்கியதும் ஒரு பதுங்குழியோ. ஓர் இடமோ பாதுகாப்பில்லை. பலர் இறந்தார்கள். பலர் காயப்பட்டார்கள். சமரில் அகப்பட்ட மக்கள் சமைக்கவும், தண்ணீர் எடுக்கவும் பதுங்கு குழி களை விட்டு விலக முடியாத நிலை. அங்கே உணவும், குடிப்பதற்கு நீரும் இல்லாமல் மக்கள் வாடினார்கள். இது தான் நாம் காணாத பேரவலம். இதை அறிவிக்கவும் தங்களோடு இருந்தவர் களைத் தெரியப்படுத்தவும் மூன்று தடவை வெள்ளைக் கொடியுடன் இராணுவத்திடம் செல்ல முயன்று இறுதியில் அவர்களைச் சந்தித்து அங்கு உள்ளவர்களுக்குப் பாதுகாப்பான வழியை அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுள்ளார். இவருடன் இருந்தவர்களுக்கு உழவுஊர்தி ஒன்று இரட்டைவாய்க் கால் செல்வதற்கு இராணுவத்தால் கொடுக்கப்பட்டது. சறா சில நாட்கள் தொடர்ச்சியாக சாப்பாடு, குடிக்க நீர் இன்றி இருந்ததினால் பெலவீனப்பட்டிருந்தார். காயப்பட்டவர்களுக்கு இடம் கொடுப்ப தற்கு உழவூர்தியில் ஏறாமல் நடந்தார். இரு தடவை முடியாமல் தள்ளாடினார். நிலைமை மோசமாக இராணுவத்துக்கு அறிவிக்கப்பட்டு அவர்களுடைய மருத்துவக் கூடாரத்திற்கு எடுத்துச்செல்லப்பட் டார். அங்கு சேலையின் பாய்ச்சப்பட்டது. அதில் இருந்தும் மீளாமல் தன் ஆவியை தந்தையின் கரங்களில் ஒப்படைத்தார்.

இறுதிவரையும் மற்றவர்களுக்காக வாழ்ந்தார். தனது உயிரை அர்ப்பணிக்கும் ஈறாக அவருடைய ஆண்டவரும் தலைமை ஆயனுமாகிய கிறிஸ்துவைப் போல் உயிரை ஒப்புக்கொடுத்தார். தனது உயிருக்கு ஆபத்து நெருங்கிய பொழுதும் தனது மக்களைக் கைவிடவில்லை. ஆனால் அவர்களுக்காகத் தனது உயிரைத் தற்கொடையாக்கினார்.

அருட்பணி. ஜேம்ஸ் பத்திநாதர்
பங்குப்பணியாளர் முல்லைத்தீவு
இணைப்பாளர், நீதி-சமாதான ஆணையம், வன்னி

என்றும் மறவோம்

அறிவிலும் ஆற்றலிலும் நீர் ஒரு மகான்
ஆன்மீகத்திலும் பணிசெய்வதிலும்
நீர் ஒரு கிறிஸ்து
மரணமும் பட்டினியும் எம் மக்களைத்
துரத்திய வேளையில்
எம் மக்களுக்காய் அஞ்சாது
பணி செய்த குருவே!

தூரங்கள் சுருங்கியது
உறவுகள் பிரிந்தது
மக்கள் மரணிக்கின்ற வேளையில்
சர்வதேசத்தின் குரல் மௌனித்து நிற்க
மக்களின் குரலாக
ஒலித்த குருவே!

மக்களுக்காய் பணி பல செய்தவரே
அன்பாலும் பணி ஆற்றலாலும்
மக்களின் மனங்களில் நிறைந்தவரே
எம் மக்களிடம் இருந்து பிரிந்து
சென்றது ஏனோ!

தாங்க முடியவில்லைக் குருவே
உம் பிரிவு
எம்மை நீர் பிரிந்து சென்றுவிட்டாலும்
உம்மை நாம் என்றும் மறவோம்!

இளைஞர் உருவாக்கல் இயக்கம்,
புனித மரியன்னை பேராலயம்,
யாழ்ப்பாணம்.

“ஒப்பற்ற சுயபரித்தியாகம் கொண்டவர் எம் தந்தை”

இயேசு சபை அகதிப்பணியின் ஸ்தாபகர் மறைப்பணி பேதுரு அருப்பேயின் கனவினை நனவாக்கிய ஓர் உன்னத மறைபணியாளராகத் ததேயூஸ் சறத்ஜீவன் அடிகளார் வாழ்ந்தார். தாயின் கருவில் உருவாகும் முன்னரே இறைவன் தேர்ந்தெடுத்தது மட்டுமல்லாமல் பிறர் அன்புப் பணி தனை மிகுதியாய் மேற்கொள்ளவும் அழைத்துள்ளார் என்பதினை அவரது வாழ்வின் ஊடாகவும் அவர் செய்த பணியின் ஊடாகவும் வெளிப்பட்டுள்ளதினை நாம் கண்டு அனுபவித்துள்ளோம். ஏனெனில் கடவுளுக்காய்த் தம்மை அர்ப்பணித்தவர் கடவுளைப் பிறரன்புப் பணியிலும் மக்களின் மனங்களிலும் கண்டு கொண்டார். அவருக்காகத் தம்மையே முழுமையாக அர்ப்பணித்துள்ளார்.

தோழமை, குரல்கொடுத்தல், பணிசெய்தல் போன்ற உயரிய பண்புகளைத் தன்னகத்தே கொண்டு யேசுசபை அகதிப்பணியகத்தில் (JRS) பணியாற்றியுள்ளார். ஏனெனில் JRS குடும்பத் திற்கு இவரது வரவு ஓர் வரப்பிரசாதமாகவே காணப்படுகின்றது. வன்னி நிலப்பரப்பில் கிளிநொச்சி மாவட்டத்தின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டகாலம் முதல் அவர் ஆற்றிய பணிகள் சொல்லில் அடங்காதவை. பங்குப்பணிகளோடு JRS பணியினையும் மனநிறைவோடு ஏற்று எந்த வசதிகளை யும் எதிர்பாராமல் இருக்கின்ற வளத்தினைக் கொண்டு இன்முகத்துடன் பணியாற்றியவர்.

கல்விப் பணிமுதல் ஏனைய எல்லாப் பணிகளையும் மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றி யவர் மட்டுமல்லாது அனைவரோடும் நல்லுறவை வளர்த்து அவர்களது துன்பதுயரங்களில் அவர்களுக்கு உற்ற ஆறுதல் அளித்ததோடு வாழ்வினையும் வளமாக்கியுள்ளார். போர்க்கால சூழ்நிலையிலும் இயற்கை அனர்த்தங்களிலும் அல்லல்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதோடு அவர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்துத் தாமும் அவர்களோடு வாழ்ந்த ஒரு ஜீவன்.

2008ம் ஆண்டு மார்கழி மாதம் இலங்கை JRS குடும்பக் கலந்துரையாடலில் அவரது பணியின் அனுபவத்தினைக் கூறும் போது அவரது இரு கண்களும் கலங்கின. அத்தகைய நிலை தனக்காக அல்ல மாறாகத் தனது மக்களுக்காகவே. அவர் மனமுருகி அழுதார். இத்தகைய நிலையிலே நாமும் அங்கு சென்று பணியாற்ற வேண்டும் என்ற உணர்வு எமக்குத் தோன்றியது. இருப்பினும் அவர் கூறிய வார்த்தை என் பணிக்கும் JRS குடும்பத்திற்கும் என்றும் மறக்க முடியாத ஒரு வார்த்தையாக அமைந்தது. “எனக்காகவும், எம் மக்களுக்கா கவும் செபியுங்கள்” என்ற வார்த்தைதான் அது. எம் காதுகளில் இன்றுவரை இந்த வார்த்தை ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் அவர் பணியாளர்களோடு மட்டுமல்ல சின்னக் குழந்தை முதல் பெரியோர் வரையும் ஒரே தன்மை கொண்ட இயல்புடன் பழகியவர் நம் தந்தை அவரிடம் நாம் கண்ட பண்புகளான மன்னிக்கும் பண்பு, தாரைவார்க்கும் பண்பு, பிறரை அன்பு செய்யும் பண்பு, நிபந்தனையில் லாமல், எதிர்பார்ப்பில்லாமல் அன்பினை முன் கூட்டியே வெளிப்படுத்தும் ஓர் பண்பு என்ற பல பண்புகளைச் சொல்லிக் கொண்டேபோகலாம்.



உயிர் உள்ளவரை பிறருக்காய் உழைத்திட்ட ஓர் உத்தமரை பல உயிர்களை வாழ்வித்த ஜோதியாய் தன் நிலை பாராது பிறர் நலம் கருதித் தன்னையே உருக்கிய திரியாய் வாழ்ந்தவர் எம் அன்புக்கும் மதிப்புக்கு முரிய மறை பணியாளர் தேயுஸ் சறத்ஜீவன் அடிகளார். எனவே அவரது வாழ்வும், இறப்பும் (JRS) குடும்பத்திற்கு மட்டுமல்ல எல்லோருக்கும் ஓர் முன்மாதிரிகையான வாழ்வு மட்டுமல்ல கிறிஸ்துவின் ஒளியில் நடந்த ஓர் உன்னத மறைபணியாளர்.

யேசு சபை அகதிப்பணியகம்–
JRS குடும்பம்
இலங்கை

சறா ஓர் அபூர்வப் பிறவி நீ!

வாழ்க்கையில் பலருடன் பழகும் சந்தர்ப்பங்கள் நிறையவுண்டு. ஆனால் ஒரு சிலர் மட்டும் ஏன் மனித மனங்களில் நீடித்த இடம் பெறுகின்றனர். அதிலும் வியப்பு எதுவெனில் அவர்களில் சிலர் பழகிய குறுகிய காலத்திலேயே சாவை சந்தித்து விடுகின்றார்கள் என்பது தான். அவர்கள் மனங்களில் இடம் பெறுவதற்கு அவர்களிடமிருந்த அபூர்வ பண்புகள், அவர்களின் காலத்திற்கு முந்தைய மரணம் காரணமாக அமையுமா?

சறாவிடமிருந்த அபூர்வ பண்புகள் பற்றி எழுதுவதற்கு முன்பு சறா சவேரியார் குருத்துவக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் இருந்தே சறாவை நன்கு எனக்குத் தெரியும். என்னிடம் கல்வி கற்றவன் என்ற வகையில் ஒரு மாணவனாக இருக்கும்போதே சறா எந்த விடயத்தையும் கவனமாக, பொறுப்பாக எடுத்துச் செயல்படுவதை அவதானித்துள்ளேன். மற்ற மாணவர்கள் பகிடி கேலி செய்து கலகலப்பாக இருக்கும் போது சறா படிக்கும் காலத்திலேயே எல்லாவற்றையும் கவனமாக, நிதானமாகச் செய்யும் பண்புகொண்ட ஒரு மாணவனாகவே இருந்துள்ளார். சறாவின் மனம் போல் உடலும் பெரிதாக இருந்தது. மாணவர்களின் வழமையான கேலிகள் பகிடிகட்கு சறா விதிவிலக்கல்ல. ஆனாலும் அதைப் பொருட்படுத்தி அதை ஒரு விடயமாக்கிக் கோபித்து சினக்கும் அளவிற்கு சறா மனதில் முதிர்ச்சியடையாதவர் அல்ல. சிரித்து விட்டுத் தன் வழமையான பாணியில் செயல்படும் பண்பு அபூர்வம் இல்லையா! தன்னைப்பற்றிய உயர்ந்த எண்ணம் ஆழுமை கொண்ட மனிதர் மற்றையவர்களின் வசைச்சொற்கள், கேலிகள் என்பவற்றைப் பெரிதுபடுத்த மாட்டார்கள்.

குருமட மாணவப் பராயத்திற்குப் பின்பு சறாவினுடைய சந்திப்பு வன்னியில் மீண்டும் புதுப்பிக்கப் படுகின்றது. வன்னியில் சறாவினுடைய சந்திப்பானது ஒரு சக குரு என்ற அந்தஸ்தில் மட்டுமல்ல, எனது பணிக்கும் சறாவால் மேற்கொண்ட பணிக்குமிடையில் ஒரு ஒற்றுமை. அதனால் எமக் கிடையே ஏற்பட்ட அனுபவப் பகிர்வுகள், கருத்துப் பரிமாறல்கள் எம் உறவை ஆழமாக்கியது. சறா எனக்கு வயதில் குறைந்தவராக இருந்தாலும் எனது சொந்த வாழ்விற்கு சறா சில மாதிரிகை களைப் பதித்திருக்கின்றார். சறா ஒருபோதும் தனது நலனை முன்னிலைப்படுத்தியது கிடையாது. ஓய்வின்றி மக்களுக்காகக் குறிப்பாக ஏழைகளுக்காகத் தன்னை ஆகுதியாக்கினார் என்பது தான் உண்மை ஒரு விதத்தில் ஓய்வின்றிக் கடின உழைப்புடன் இருந்ததினால் சாவு அவரைக் காலத்திற்கு முந்தியே இறைவன் சந்நிதானத்திற்கு அழைத்ததா?

சறா சரியானது என்று எதைக் கருதுகின்றாரோ அதை நேரடியாகக் கூறும் பண்புடையவர். பத வியை, வசதிகளை எதிர்நோக்காது ஏழைகளுக்காக வாழும் அபூர்வ பண்பு என் வாழ்விற்கு ஒரு மாதிரி என்று கூறலாம். எனக்கு மட்டுமல்ல மற்ற சக குருக்களுக்கும் பயன்படும் என்பது என் எண்ணம்.

சறாவின் வாழ்வில் பணியில் ஒரு சுயநல நிகழ்ச்சி நிரல் இருந்ததாக என் மனதில் இன்று வரை காணவில்லை. மனிதரில் பலர் பணிபுரியும் பொழுது சில நிகழ்ச்சி நிரல்களை முன்னிலைப் படுத்தியே பணி புரிவது மனித வரலாற்றில் புதிதல்ல. இதற்கு எவரும் விதிவிலக்கு அல்ல. ஆனால் சறா இந்தப் பண்பு இல்லாத ஏழைகளை முன்னிலைப்படுத்திய நிகழ்ச்சி நிரலுடன் பணிபுரிந்த ஒரு அபூர்வ மனிதன்.

சறாவின் பணி பங்குத்தளத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. இயேசுசபை அகதிகள் பணிய கத்தின் வன்னிப்பிராந்திய இணைப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார். எனவே அவரின் பணி, அனு பவம் விரிந்து சென்றது. வன்னி இணைப்பாளராகப் பணி புரிந்ததினால் அவர் பல அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பொறுப்பாக இருந்தார். அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாகப் பல இலட்சம்

ரூபாய்களை மக்கள் பணிக்காக அவர் செலவு செய்தார். ஆனால் அவரின் வாழ்வு சில சமயம் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் எளிமையான ஒரு வாழ்வாக இருந்துள்ளது. வள்ளுவர் கூறும் 'பற்றற்றான் வாழ்வு' சறாவின் வாழ்வில் இருந்துள்ளது. இது இவரின் அபூர்வ பண்பைக் காட்டும் இன்னொரு சுட்டியாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக சறாவின் அபூர்வப் பண்பு மெதுமையான இரக்கம் கொண்ட, மற்றவர்களின் துன்பத்தில் தான் துவண்டு போகும் பண்பு. மற்றவர்கள் துன்பப்படுவதை சறாவால் தாங்கமுடியாது. துன்பப்படுபவர்களை விட தான் அதிகம் வேதனை அனுபவிப்பது சறாவின் பண்பு. வன்னியில் குறிப்பாக வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் கொடூரச் சாவுகளின் அனுபவம் சறாவின் இறுதி அத்தியாயத்திற்கு பெரும் பங்காற்றியிருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. உடல் வலுவின்மையைவிட உள்ளத்தின் சுமை, வேதனை அவரின் சாவிற்கு வழிவகுத்தது. மற்றவர்களின் துன்பத்தில் சாவில் இன்பம் காணும் சுயநல உலகில், மற்றவர்களின் துன்பக் கண்ணீரில் மனம் வெதும்பி தன்னுயிரைக் கொடுத்ததினால் சறா ஒரு அபூர்வப் பிறவி தான். அபூர்வப் பிறவி என்பது மற்றவர்களிடம் பொதுவாகக் காணப்படும் பண்புகளை விட வித்தியாசமான பண்புகளுடன் வாழ்வது சறாவின் வாழ்வில் நான் கண்டது எல்லாம் தனித்துவமானது தான்.

எல்லாவற்றிற்கும் மேலாக குருத்துவத்தில் சறா ஒரு அபூர்வப்பிறவி. தன்னை அழைத்த இயேசுவைப் போல் பலி, பலிப்பீடம், பலிப்பொருளாகத் தன் வாழ்வை, தான் வாழ்ந்த தளத்தில் தானே மனமுவந்து ஒப்புக்கொடுத்தது தான். தப்பிப்பிழைக்க வழியிருந்தும் தன்னைப் பலிப்பொருளாக்க வலிந்து மக்களோடு நின்று தன்னையே இயேசுவைப் போல் பலியாக்கினார். இது எல்லாவற்றையும் விட மேலானது மட்டுமல்ல சறாவின் தனித்துவமுமாகும்.

இறுதியாக சறாவை 2009 தை மாதம் 9ம் திகதி சந்தித்தேன். சோர்ந்து களைத்துக் காணப்பட்டார். ஓய்வு தேவை என்றேன். மக்கள் இப்போது படும் துன்பத்தில் இருந்து எப்படி நான் ஓய்வு எடுப்பது என்பது தான் பதில். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. சறா உனக்கு நிரந்தர ஓய்வு தந்து இறைவன் அழைத்து விட்டாரா?

சறா மானிடப்பிறவிகளில் - தனி
மனிதர்களில் அபூர்வப்பிறவி நீ
உன் இடத்தை நிரப்புவார் யார் இனி
மனதில் நீ மூட்டினாய் அணையாத தீ
பதிக்கின்றோம் உன் தடங்களில்
எம் பாதங்கள்.

பணி. கி.ஜோ. ஜெயக்குமார்
கரித்தாஸ் - கியுடெக்
யாழ்ப்பாணம்.

அருட்தந்தை சறத்ஜீவன் எளிமையினதும் பொறுப்புணர்வினதும் மறுவடிவம்

2009ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி யுத்தம் இறுதிக்கட்டத்தை நெருங்கிய காலகட்டத்தில் அருட்தந்தை மரியாம்பிள்ளை சறத்ஜீவன் அடிகள் கிளிநொச்சியில் மாரடைப்பால் அகாலமரணம் அடைந்தார் என்ற செய்தியை அறிந்து நான் ஆழ்ந்த துக்கமும் அதிர்ச்சியும் அடைந்தேன். இவர் கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் உள்ள உருத்திரபுரம் பங்கில் பங்குத்தந்தையாக இருந்தார். யுத்தப் பிரதேசத்தில் மக்களுடன் இடத்திற்கு இடம் இடம்பெயர்ந்து கொண்டிருந்த இவர் தன்னுடைய வாழ்வின் இறுதிநாட்களை ஒழுங்கான உணவும் குடிநீரும் இன்றிப் பதுங்குகுழிக்குள் கழிக்க வேண்டியிருந்தது.

அருட்தந்தை சறா என்று யாழ் மறைமாவட்ட மக்களிடையே நன்கு அறியப்பட்ட இவரை 2004ம் ஆண்டு மார்கழி மாதம் முதன் முதலாக நான் சந்தித்தேன். நான் அப்பொழுது சுனாமிப் பேரலை யால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான மறுவாழ்விற்கான பணிக்காக முல்லைத்தீவில் உள்ள இரணைப்பாலைப் பங்குப் பணிமனையில் தங்கியிருந்தேன். அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதருக்கு உதவியாகப் பணியாற்ற இவர் என்னையும் என்னோடு இருந்த ஏனையவர்களையும் சந்திப்பதற்காக வந்தார். மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த கொண்டா 90 மோட்டார் சைக்கிளில் எம்மை சந்திக்க வந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அதனால் அவருடைய மோட்டார் சைக்கிளையும் நாம் பயணித்த வாகனத்தில் ஏற்றிக்கொண்டு இரணைப்பாலையிலிருந்து 35 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள முல்லைத்தீவுக்குச் சென்றோம்.

ஆரம்ப நாட்களிலும் தொடர்ந்து வந்த நாட்களிலும் இருபது தொடக்கம் முப்பதிற்கும் மேற்பட்ட மறைமாவட்ட துறவறசபைகளைச் சேர்ந்த குருக்களுடனும் குருமடமாணவர்களுடனும் முள்ளிய வளைப் பாதையில் அமைந்துள்ள மாமூலை என்னும் இடத்தில் அருட்தந்தை ஜேம்ஸ். அருட்தந்தை சறா ஆகியோருடன் மிகவும் குறைந்த வசதிகள் உள்ள சிறிய கட்டிடத்தில் தங்கியிருந்தோம். நாங்களும் சுனாமியில் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த மக்களைச் சந்திப் பதில் தொடர்புபட்டிருந்தோம். ஒரு கிணறும் ஒரு மலசலகூடமும் மட்டுமே நாம் பாவிக்கக் கூடியதாய் இருந்தது. அருட்தந்தை சறா காலையில் நேரத்தோடு எழுந்து 75 அடி ஆழமான கிணற்றிலிருந்து தண்ணீரை அள்ளி நாம் கழுவுவதற்காகவும் சமைப்பதற்காகவும் அங்கே இருந்த பானைக்குள் ளும், கொள்கலன்களுக்குள்ளும் நீரை நிரப்புவார். அருட்தந்தை ஜேம்ஸ், அருட்தந்தை சறா ஆகியோர் தங்களிடம் இருந்த பழைய சைக்கிளையும் அவர்கள் அணிந்திருந்த குருக்களுக்கான உடையையும் தவிர ஏனையவற்றை இழந்திருந்தனர். இதைப்பற்றி அவர்கள் எம்மிடம் முறையிட வில்லை. இருந்தும் தங்களால் செய்யக்கூடிய அனைத்தையும் அமைதியுடனும் சந்தோஷத்து டனும் செய்து கொண்டிருந்தனர்.

இவர் குருவாக வந்து மிகக்குறுகிய காலமே பணியாற்றினார். (மே மாதம் 14ம் திகதி தன்னு டைய குருத்துவத்தின் 6வது வருட நினைவையும் அதற்கு முதல் நாள் தனது 41வது பிறந்த நாளையும் நினைவு கூர்ந்தார்) எளிமைக்கும் பொறுப்புணர்ச்சிக்கும் பெயர் பெற்ற இவர் தனது குருத்துவ அழைத்தலுக்கு ஏற்ப நம்பிக்கையுடனும் உண்மையான அன்புடனும் கடவுளுக்கும் மக்களுக்கும் சேவை செய்தார். அதே நேரத்தில ஒரு குருவாகவும் ஒரு மனிதனாகவும் மற்றவரோடு தோழமை கொண்டிருந்த அவரை அனைவரும் விரும்புவர். தன்னுடைய சகோதர குருக்கள்

மட்டுமல்ல அருட்சகோதரிகள் குருமடமாணவர் கள் மற்றும் பொதுநிலையினர் மீது அளவற்ற மரியாதை கொண்டிருந்தார். இவர் கடவுளின் மனிதனாக இருந்தார். புகழை விரும்பாத ஒரு தீர்க்கதரிசியாக இறைவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சுயாதீனமாக இறை அழைத்தலை ஏற்று 2003ம் ஆண்டு தனது 35வது வயதில் குருவாக அருட்பொழிவு பெற்றார். அவருடைய உடலைக் கொண்டு வந்து சொந்த இடமான யாழ்ப்பாணத்தில் அடக்கம் செய்வதற்குக் கூட பாதை இல்லாமல் போய்விட்டது. அவருடைய மரணத்தின் ஒரு வாரத்திற்குப் பின் நல்லடக்கம் நடைபெற்றது. இறுதி நாட்களில் கொழும்பில் உள்ள அந்தியகால சேவை நிலையத்தில் இவருடைய உடல் வைக்கப்பட்டிருந்தது.



அன்பான அருட்தந்தை சறா! நன்றாகப் பணி புரிந்தீர் எமது பிரியாவிடையைக் கூறுகின்றோம். உமது உன்னதமான வாழ்வை எந்தவொரு கிறிஸ்தவனும் முன்மாதிரிகையாக எடுத்துக் கொள்ள முடியும். இறைவன் உமக்கு முடிவில் லாத வாழ்வை அளிப்பாராக.

எம். யோசப் ஜெயசீலன் (கிளரேசியன்)

என்னை வரும்படி கேட்பதாக இருந்தால் இனி ரெலிபோன் எடுக்காதே...

- சறாவின் சான்றுகள்

அவருடைய ஆற்றல் :

சறா சிறந்ததோர் பாடகரும், வீணைமீட்டுபவரும். இதனை அவர் பெரிய கோவிலின் வீணை மீட்டிய காலம் சான்று பகரும். மேலும் சறா பொறுப்புள்ள தலைவன் என்பதை அவருடைய பெரிய கோவில் பங்கின் பீடப்பணியாளர் தலைவராகவும் இளைஞர் மன்றத் தலைவராகவும் இருந்த காலங்கள் சொல்லி நிற்கும்.

அவரிடம் கொடுக்கப்பட்ட வேலையை விரைவாகவும், நேர்த்தியாகவும் செய்து முடிக்கும் ஒரு கடமை வீரன். சறாவிடம் வேலையைக் கொடுத்தால் 30நாள் வேலையை 10 நாளில் செய்து முடித்து விடுவார். அவர் மாடு போல உழைப்பவர். இவரைப்பற்றிய எமது குருமுதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் கருத்து இதனை மெய்ப்பிக்கும்.

அவர் ஒரு சமூக சேவையாளர்

பங்கின் இளைஞனாக சமூகசேவைகளில் ஈடுபட்டு உழைத்தவர். குருமட வாழ்விலும் சமூக சேவைக் கழகத்துடனும் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டார். குருவாக வந்து உதவிப் பங்குத் தந்தையாக முல்லைத்தீவுப் பங்கில் இவர் இருந்தபோதே ஆழிப் பேரலையின் கண்மூடித்தனமான தாக்குதல் இடம் பெற்றது. இந்த அழிவில் மக்களின் அவலத்தில் கரம் பிடித்து வழிநடத்தித் தேற்றுகின்ற பெரும் பாக்கியத்தை இவர் பெற்றிருந்தார்.

உருத்திரபுரம் பங்குத்தந்தையாக இருந்தபோது இவரின் துடிப்புள்ள சமூக சேவையின் மனப்பாங்கையும், எந்தப் பொறுப்பையும் துணிவுடன் ஏற்று நடத்தும் ஆற்றலையும் கண்ட யாழ். ஆயர் வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் JRS நிறுவனத்தின் வன்னிப் பிராந்திய இணைப்பாளராக அவரை நியமித்தார். தன்னில் கொண்ட நம்பிக்கையின் பிரகாரம் தன் இறுதி மூச்சு வரை தன் கடமையைச் செய்து முடித்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக வன்னியின் இறுதிப் போரில் இடம் பெயர்ந்து உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி வாழ வழியின்றித் தவித்த மக்களோடு தன்னையும் கரைத்து தன்னால் இயன்ற பணிகளின் வழியாக அவர்களின் துன்பத்தில் இணைந்த தியாகி தான் எங்கள் சறா.

அவருடைய ஆன்மீகம்

அவர் சிறுவயதில் இருந்தே நாள் பூசைகளைக் கூடத் தவறுவதில்லை. என்னையும் படுக்கையில் இருந்து அடித்து எழுப்பி பூசைக்கு அனுப்பி விட்டுத்தான் வருவார். இது அவரின் சொந்தத் தம்பியின் சான்று. சிறு வயதில் ஆரம்பித்த இந்தப் பூசைப் பக்தி அவரை ஆன்மீகத்தில் இணைத்தது.

ஈற்றில் அவரின் இந்தப் பூசைப்பக்தி அவரைப் பூசை வைக்கின்ற குருவாக மாற்றியது. ஒரு முறை அவருடன் நீண்ட தூரம் ஒரு ஞாயிறு திருப்பலிக்காகச் சென்ற ஒருவர் அங்கே 8 பேர்

மட்டும் நிற்பதைக் கண்டு, "இத்தனை பேருக்காகவும் இவ்வளவு தூரம் நீங்கள் ஏன் கஷ்டப்பட்டு வருகின்றீர்கள்?" என்று கேட்ட பொழுது அவர் கூறினாராம் "நான் ஒருவன் வராவிட்டால், இவ் 8 பேரும் கஷ்டப்பட்டுப் பங்கு ஆலயத்திற்கு அல்லவா வரவேண்டும், அல்லது பூசை இல்லாமல் அல்லவா இருக்க வேண்டும்." சறாவின் உருவாக்குனர்களில் ஒருவரான அருட்தந்தை டேவிட் அடிகளார் தன்னுடைய இரங்கல் கடிதத்தில் குறிப்பிட்டு எழுதுகிறார். 'இவர் தன்னுடைய இறுதி 3 நாட்களையும் பதுங்கு குழிக்குள் கழிக்க வேண்டிய சூழலில் அவருக்கு உண்ண உணவில்லையே என்ற வருத்தத்தை விடத் திருப்பலி ஒப்புக்கொடுக்க முடியவில்லையே என்ற வருத்தம் தான் அதிகமாக இருந்தது.

மேலும் இவருடைய ஆன்மீகத்தில் நற்கருணைப் பக்தியும், அன்னை மரியாளின் செபமாலைப் பக்தியும் நிரம்பியிருந்தமையை இவர் கட்டிய சிற்றாலயங்கள் சான்று பகரும்.

அவர் ஒரு நல்ல நண்பன்

இதற்கு 15 வருடங்கள் அவருடைய நெருங்கிய நண்பனாக இருக்க வாய்ப்புக் கிட்டிய நானே சான்று பகருகின்றேன். அவருடைய நட்பில் நான் உண்மையான அன்பைச் சுவைத்தேன். இவருடைய தோழமை மிகவும் என்னைக் கவர்ந்தது. வன்னியில் இருந்து வருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்னைத்தேடி ஊர்காவற்றுறைக்கு வராமல் செல்ல மாட்டார். "உடுக்கையிழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற திருவள்ளுவரின் வார்த்தைக்கு இணங்க துன்ப துயரங்களை, வேதனைகளைப் பகிர்ந்து வழிகாட்டும் தாயுள்ளம் படைத்த நல்ல நண்பனை இவரில் நான் கண்டேன்.

மேலும் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும், நட்பை மதித்து வேற்றுமையில் ஒற்றுமையை மதிக்கின்ற முதிர்ச்சி நிலையையும் இவரில் நான் அனுபவித்தேன். அத்துடன் இவர் எங்கெல்லாம் பணியாற்றினாரோ அங்கெல்லாம் இருந்தவர்களைத் தன் அன்புப் பணியால் நண்பர்களாக மாற்றி அவர்களுக்காகத் தன் உயிரையும் கொடுத்து, 'தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை' என்ற இயேசுவின் வார்த்தைகளை மெய்ப்பித்தார்.

அவருடைய துணிவும், தியாகமும் :

அவர் சிறுவனாக இருந்த பொழுது கிணற்றுக் கட்டில் ஏறி ஒரு மரத்தின் பழத்தைப் பிடுங்க முற்பட்ட பொழுது அவரின் தாய் சொன்னாராம் 'சறாக்குட்டி கீழே இறங்கு, விழுந்தால் செத்து விடுவாயடா.' அதற்கு அவர் உடனே கீழே இறங்கிக் கேட்டாராம் 'அம்மா செத்தா என்னம்மா?' அன்றே அவர் சாவைச் சந்திக்க ஆயத்தமானார்.

நாங்கள் அருட்சகோதரராக இருந்த போது ஒரு முறை சக்கோட்டைக்கு விடுமுறைக்காக சென்றிருந்தோம். வழக்கமாக விடுமுறையின் இறுதிநாளில் ஒருவர்மேல் ஒருவர் சேற்றுத் தண்ணீர் அடித்து குதூகலித்து இருப்போம். அந்த நாளில் யாராவது தண்ணீருடன் துரத்தினால் நாங்கள் ஓட்டம் பிடிப்போம். ஆனால் சறாவைப் பார்த்த போது அவர் மற்றவர்கள் தண்ணீருடன் வருவதைக் கண்டு கதிரை ஒன்றில் அமர்ந்தவாறு "ஊற்றத் தானே வந்தீர்கள் ஊற்றுங்கள்" என்று கூறினார். அவர்களும் ஊற்றிச் சென்றார்கள். இவ்வாறு மற்றவர்களின் மகிழ்ச்சிக்காக எந்தக் கஸ்ரத்தையும் தாங்க வல்லவராகக் காட்சியளித்தார்.

கிளரேசியன் சபையைச் சேர்ந்த அருட்சகோ. யோசப் ஜெயசீலன் தன்னுடைய இரங்கல் கடிதத்தில் குறிப்பிடுகிறார் 'சுனாமி அகதிகளுக்கு உதவ முள்ளியவளையில் 25க்கும் அதிகமான அருட்சகோதரர்களும், குருக்களும் ஒரே ஒரு கிணற்றையும் ஒரே ஒரு மலசலகூடத்தையும் பயன் படுத்த வேண்டி இருந்தது. அந்நாட்களில் சறா நேரத்துடனே எழுந்து பாத்திரங்களில் கழுவு வதற்கும், சமைப்பதற்கும் தேவையான தண்ணீரை ஏறத்தாழ 75அடி ஆழமான கிணற்றில் இருந்து ஊற்றி வைப்பார்' இப்படியாக மற்றவர்களுக்காகத் தன் கஷ்டங்களைப் பாராமல் செயற்பட்டார்.

இவரின் இறுதிக் காலத்தில் இவருடன் நீண்ட நாட்கள் செலவு செய்த அருட்தந்தை இராஜ சிங்கம் அடிகளார் கூறினார் சறா போரின் ஆரம்ப காலத்தில் ஷெல்லுகள் வந்து வீழ்ந்த வண்ண மாக இருக்கும் பொழுதும் கூட பதுங்கு குழிக்குள் தான் செல்லாமல் மற்றவர்களைக் கட்டாயப் படுத்தி அனுப்பி விட்டு படுக்கையிலே அவர் இருப்பார். இவ்வாறு மற்றவர்களின் உயிரை மதித்து தன் உயிரைத் துச்சமென மதித்த மாவீரன்.

இவர் இவ்வுலகை விட்டுப் பிரிவதற்கு மூன்று வாரங்களுக்கு முன் இவருடன் தொலைபேசியில் ஏறத்தாழ 45 நிமிடங்கள் கதைப்பதற்கு வாய்ப்புக் கிட்டியது அப்பொழுது இவர் பேசிய வார்த்தைகள் பசுமரத்தில் ஆணி பாய்ந்தாற் போல் என் மனதில் பதிந்தன. தன்னுடைய கஷ்டங்கள் மத்தியிலும் பொதுவாக எல்லோரையும் அவர் சுகம் விசாரித்தார். அப்பொழுது நான் அவரிடம் கூறினேன் எல்லோருடைய ஆதங்கமும் நீங்கள் இங்கு வந்து சேர்வதே என்று. அப்பொழுது அவர் கூறினார் 'நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காய் உயிரையும் கொடுப்பார். ஆகவே நான் இறுதி ஆள் அங்கு இருக்கும் வரையும் நானும் இருப்பேன். என்னை வரும்படி கேட்பதாக இருந்தால் இனி ரெலிபோன் எடுக்க வேண்டாம்.' இவருடைய வார்த்தைகளைப் போலவே இறுதி ஆளாக அங்கு இருந்து புறப்பட்டு தன் உயிரையும் அர்ப்பணித்துத் தியாகப் பலியானார்.

Sara opted to be a martyr and God accepted Him.

Sara is still living in the lives he lived and died for. So we have to make him live by living for the dying and ultimately dying for the living.

As our beloved late Holy Father Pope John Paul II of venerable memory, wrote once for the Wold Day of Peace, 'There is no Peace with-out Justice, no Justice without Forgiveness' may his death inspire us to work only for Peace with Justice and Forgiveness.

அருட்பணி. மோ. ஜோபன் ஜுபஸ்
(சறாவின் குரு நண்பன்)

அன்பின் சுரா,

உன்னை என்று விளித்து எழுத கை தயங்குகின்றது
வயதில் குறைந்தவனாயினும் அப்படி ஒரு ஆளுமை

உடல் பெரிதுதான்
உள்ளமும் அது போலவே.

இரக்க குணமும்
மதிப்பளித்து நடக்கும் பண்பும்
கடும் உழைப்பும்
உன்னுடன் உடன் பிறந்தவை.

"வன்னியில் இறுதி நபர்
இருக்கும் வரைக்கும்
தானும் இருப்பாராம்"
கேள்விப்பட்ட போது
நெஞ்சம் விம்மியது
பெருமையினால்.

குருத்துவத்தின் வரைவிலக்கணங்கள்
பலவற்றைப் படித்திருக்கின்றேன்
புத்தகங்களில்
ஆனால் வாழ்விலக்கணங்களை
உன் போன்றவர்களில்
அனுபவிக்கின்றேன்
மேரி பஸ்ரியன்
லொறட்
ஜிம்பிறவுண்
பாக்கிய றஞ்சித்
கிளி
இவர்கள் வரிசையில்
சறா இன்று நீயும்.

எதையும் தாங்கும் இதயம் மட்டும்
உன்னிடம் இருந்திருந்தால்
நீ எப்போதே வெளியேறியிருப்பாய்
எத்தனையோ வேண்டுகோள்கள்
உன்னை வெளியேறப் பணித்தபோதும்

உன்னைச் சார்ந்த மக்களை
வெளியேற்ற மறுத்தது உன் இதயம்
அதனால் தானே அது நின்று போனது

சுமை தாங்கும் இதயத்தைப் பெற்றிருந்தாய்
நண்பா
எம் இதயங்களில் வாழ்கின்றாய்.

உன் தலை அடிக்கடி அசைவதை
அதிசயமாய்ப் பார்த்ததுண்டு
அது இறைசித்தத்திற்கு
எப்போதும் ஆமென அசைந்ததை
இப்போது புரிந்து கொள்கின்றேன்.

நண்பா
உனதும் உன்போன்றவரதும்
வாழ்வும் மரணமும்
துருவத்திடை ஒளிரும் வெள்ளி
காரிருளில் பயணிக்கும்
குருத்துவத்திற்குத் திசைகாட்டி

உம் சுவடு பற்றி
மக்களுக்கான பணியாளராய்
மக்களோடு பயணிப்போம்

இறப்பால் இருப்பை உறுதிப்படுத்தியவனே
எமக்காய்
இறையருள் இறைஞ்சி நில்லும்

அன்புடன்
றவி.

சறா, திருத்தூதர் சுவடுகளில் நீயும்...!

அருள்தந்தை சறத்ஜீவன் அடிகளின் அஸ்தியை யாழ்ப்பாணத்தில் 30.05.2009 அன்று நல்லடக்கம் செய்யுமுன் ஆயர் இல்லச் சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியில் ஆற்றப்பெற்ற மறையுரையின் சாரம்.)

மிகப்பெரும் மனித அவலத்துக்குள் சிக்குண்ட வன்னி மக்களுக்குத் தமது இறுதி மூச்சு வரை ஓய்வு ஒழிச்சலின்றிப் பணிபுரிந்து உயிர் துறந்தவர், இறை அடியான் அருள் தந்தை சறத்ஜீவன் அடிகள். அவர் நம்மை விட்டுப் பிரிந்த இந்த 2009ம் ஆண்டானது, கிறிஸ்துவின் திருத்தூதரான பவுல் அடிகளின் ஆண்டாகவும் அமைகின்றது. புனித பவுலின் வார்த்தைகளை வேதாகமத்தில் நாம் வாசிக்கும் போது, சறத்ஜீவன் அடிகளும் தமது பணி வாழ்விலும், இன்னும் குறிப்பாகத் தமது இறுதிப் பணி நாட்களிலும் அதே மனநிலையையும் அதே பணி ஆர்வத்தையும் கொண்டிருப்பார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இயேசுவை ஆண்டவராக அறிய வந்ததுமுதல் புனித பவுல் தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டவராக உயர் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்தார். தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தார். பசி நோக்காது கண் துஞ்சாது உழைத்தார். கிறிஸ்துவைப் பற்றி மக்களுக்கு இடையறாது நற்செய்தி அறிவித்தார். கிறிஸ்துவின் பெயரால் மக்களின் பிணக்குகளைத் தீர்க்கவும் வறுமையைப் போக்கவும் முயற்சிகள் செய்தார். இவற்றால் பல்வேறு பிரதேசங்களையும் நாடுகளையும் சேர்ந்த மக்களைக் கடவுளிடம் அழைத்து வந்தார். கிறிஸ்துவின் அன்பிலிருந்து எதுவும் அவரைப் பிரிக்க முடியவில்லை.

நமது வன்னிப் பிரதேசத்தை நோக்குவோமாயின், மோதலில் ஈடுபட்டோரின் ஈவிரக்கமற்ற செயற்பாடுகளின் நெருக்கடிக்குள் அகப்பட்டுக் கொண்ட மக்கள் கொடூரமான எறிகணை வீச்சுக்களால் உயிரிழந்தனர் காயமுற்றனர் உடல் உறுப்புக்களை இழந்தனர் வாழ்வா சாவா என்ற நெஞ்சைப் பிளக்கும் ஏக்கத்தால் நெருக்குண்டனர் உள்ளதெல்லாம் கைவிட்டு அகதிகளாய் ஓடியதால், மாற்று உடைகூட இன்றிப் பரிதவித்தனர். இந்த மக்களுக்குப் பணிபுரியவென்று அனுப்பப்பட்டிருந்த அருள்தந்தை சறத்ஜீவனும் மக்களின் இந்தத் துன்பங்கள் அனைத்தையும் தமது தலை மேலும் ஏற்றுக்கொண்டார். ஆயினும் துன்பத்தால் துவண்டு போய்விடாமல், சளைக்காது இறந்தோரை அடக்கஞ் செய்தார் காயப்பட்டோருக்குச் சொற்பமேனும் மருத்துவ உதவி கிடைக்கச் செய்தார் தமக்குக் கிடைத்த அற்ப உணவையும் இல்லாதோரோடு பகிர்ந்து கொண்டார். எப்படி அவரால் முடிந்தது? காரணம், அவரை உந்தித் தள்ளிய கிறிஸ்துவின் அன்பே. எனவே அவர் பவுல் அடியாரோடு சேர்ந்து இவ்வாறு சொல்லக் கூடியதாய் இருந்தது. "கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக்கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்?... ஏனெனில் சாவோ, வாழ்வோ... நிகழ்வனவோ, வருவனவோ... வேறெந்தப் படைப்போ நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை" (உரோ 8: 35-39)

ஆதித் திருச்சபையிலே தூய ஆவியாரின் கொடைகளைப் புனித பவுல் நிறைவாகப் பெற்றிருந்தார். ஞானம், புத்தி, அறிவு, திடம், விமரிசை, பக்தி தேவபயம் என்ற இக்கொடைகளைப் பவுல் அடியார் பெற்றுக் கொண்டதும் அல்லாமல், தமது பணியிலே அவற்றைச் சிறப்புடன் பயன்படுத்தவும் தவறவில்லை. நமது சறத்ஜீவன் அடிகளும் தூய ஆவியார் தமக்கு அளித்த கொடைகளை நிறைவாக அனுபவித்தார் இன்னலுற்ற மக்களுக்கான தமது பணியில் அவர் அக்கொடைகளைப் பிரயோகித்து, பலன் பலவும் விளையச் செய்தார்.

குறிப்பாகச் சொல்லப் புகுந்தால், 'திடம்' அல்லது துணிவு அல்லது உறுதிப்பாடு எனும் ஆவியாரின் கொடைதான். மரண பயத்தின் மத்தியிலும் துன்புற்றோருக்குத் துணிவுடன் பணிபுரிய அவரைத் திடப்படுத்தியது. மேலும் 'விமரிசை' எனும் ஆவியாரின் கொடையானது சிக்கலான சூழ்நிலைகளைச் சீர்தூக்கி எடை போடவும், அதன் மூலம் தகுந்த முடிவுகளை எடுக்கவும் துணைபுரியும் என்று படித்திருக்கின்றோம். இந்தக் காலகட்டத்தில் சறா அடிகளுக்கு இக்கொடை நிறையவே தேவைப்பட்டது.

சில வாரங்களுக்கு முன்னதாக நமது செவிகளில், "சறா அடிகளுடைய உருத்திரபுரப் பங்குமக்கள்தான் முழுமையாக இடம்பெயர்ந்து விட்டார்களே! இன்னமும் அவர் ஏன் வன்னியிலேயே தங்கியிருக்கிறார்? இந்தப் பக்கம் வந்துவிடலாமே" என்ற விமர்சனங்களும் விழுத்தான் செய்தன. ஆனாலும் இவரது இரங்கல் திருப்பலியில் யாழ்ப்பாண ஆயர் அவர்கள் ஆற்றிய மறையுரையிலேயே இதற்கான பதிலும் துலங்கியது. சறா அடிகள் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டிருந்த பணிகளுக்கு மேலதிகமாக, இயேசு சபையினரின் அகதிகள் சேவை (JRS) நிறுவனத்திற்குக் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளராக அவர் பணி புரிவாரா என்று ஆயர் அவர்கள் கேட்ட போது, "நீங்கள் கேட்டுக் கொண்டதால் அதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று அருள் தந்தை சறத்ஜீவன் சொன்னதாக ஆயர் பகர்ந்தார். நாள் தோறும் மோசமடைந்து கொண்டிருந்த அந்த அவலச் சூழ்நிலையிலே, இன்று இங்க நான் செய்யவேண்டியது என்ன என்று முடிவெடுத்துச் செயல்படுவதற்கு விமரிசை என்ற கொடை, சறா அடிகளுக்கு நிச்சயம் துணை புரிந்திருக்கும். அதனால் தான் போலும் அவர், தமது பொறுப்பின் கனாகனத்தை உணர்ந்தவராக, "அகதி மக்கள் வன்னியில் இருக்குமளவும் நானும் இங்கேயே இருப்பேன்" என்று தெளிவுறக் கூறி, கருமமே கண்ணாய்ப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

சறத்ஜீவன் அடிகளார் பட்ட பாடுகள் போதும், செய்த இரக்கச் செயல்கள் போதும் என்று இறைவன் நினைத்தாரோ என்னவோ, வன்னி மக்களின் ஒரு பெருங்கண்டம் முடிவுற்று, 18.05.2009 அன்று முள்ளிவாய்க்காலில் இருந்து மக்கள் வெளியேறிய போது, இறுதியாக மற்றக் குருக்களோடு அவர் வந்துகொண்டிருந்த வேளை மாரடைப்பு ஏற்பட, இறைவன் அவரைத் தம்மிடம் அழைத்துக் கொண்டார். "நான் பசியாய் இருந்தேன், உணவு தந்தாய், நான் குற்றுயிராய்க் கிடந்தேன், என்னைத் தூக்கியெடுத்தாய்; சின்னஞ் சிறிய என் சகோதரர்களுக்கு நீ செய்தவையெல்லாம் எனக்கே செய்தாய்" என்று கூறி, இறைவன் தனது ஆனந்தத்தில் சங்கமமாகிட சறத்ஜீவனைக் கூட்டிச் சென்றுவிட்டார். சறா, நீ கிறிஸ்துவின் சிறந்த சீடனாய் வாழ்ந்து சென்றுள்ளாய். சீடத்துவத்தின் சிறப்புக்காய் இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

அருள் தந்தை ஜெராட் சவரிமுத்து

வாழ்வின் ஆபத்தான எல்லைக்குச் சென்ற ஒரு மனிதம்

உலகில் இருப்புக்கொள்ளும் உயர் ஆன்மீகங்கள் அல்லது ஆன்மீகத் தத்துவங்கள் வரையறுக் கப்பட்ட யுகத்தின் வரலாற்று நகர்வுகளுடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. சில வரலாற்று நிகழ்வுகள் ஆன்மீகத்தின் அடிநாதமாக அமைந்துள்ளன. ஆன்மீகத்தை உருவாக்கியும் உள்ளது என்றும் கூறலாம். கிறீஸ்தவத்தின் மூலவிசையான யூத ஆன்மீகம் இஸ்ராயேல் மக்களின் எகிப்திய அடிமைத்தன வரலாற்று நிகழ்விலிருந்து உருவாகியது என்பது மறைக்க முடியாதது.

1950களில் கொல்கத்தா நகரின் சேரி வாழ்வு, தெருவோரங்களில் காட்சி அளித்த மனித எலும்புக் கூடுகள், தொழுநோயின் அவலங்கள் அன்னை திரேசாவின் துறவறவாழ்வில் புதிய பார்வையைக் கொணர்ந்து அவளின் புரட்சியான எளிய வாழ்வுமுறைக்கு வித்திட்டது. அன்னை திரேசாவின் மகளிர் துறவற சபை பன்நாடுகள் எங்கும் பாரிய வளர்ச்சிக்குக் காரணம் கொல்கத்தாவின் தெருவோரங்கள் கொடுத்த களம்.

ஆன்மீகம் அந்தரத்திலோ, அல்லது ஆவியிலோ மட்டும் வளரமுடியாது அதற்குத் தளம் தேவை, அதற்கு உடல் தேவை. இறைவனுடைய வார்த்தைக்கு மரியாள் தளம் ஆகினாள். கிறிஸ்துவின் மனுவுரு, மானிடயேற்பு தொடரப்பட வேண்டியது.

களம் அமைத்த வன்னி

இப்பின்புலத்தில் நோக்கின் வன்னிக்குக் காலடி வைத்த நாளன்றே தனது ஆன்மீகத்தை அடிகளார் சறத் ஜீவன் மண்ணோடும் அம்மக்களின் ஆதங்கங்கள், எதிர்பார்ப்புக்கள், அபிலாசை கள், வாழ்வியல் போராட்டங்களுடனும் தன்னை இணைத்துக்கொண்டார். அதன்வழி தன் ஆன்மீ கத்தைத் தேர்ந்தெடுத்து நெறிப்படுத்திச்சென்றார். அங்கே புதிய ஆன்மீகம் தேவையென்று உணர்ந் தார். மக்கள் விடுதலை விலைஉயர்ந்தது. குருதிசிந்தும் மக்களோடு தனது குருதியை சிந்த வேண் டும் என்று தலைவர் கிறிஸ்துவின் சிலுவைப்பாதைக்கு இழுத்துச்செல்லப்பட்டார், கவரப்பட்டார். மக்களுக்கு விடுதலை எதிர்நோக்கைக் கொடுத்தார். மக்கள் குறுகிய எல்லைக்குள் முடக்கப்பட்டதும் வான் செல் தாக்குதலினால் தாக்கப்பட்டும் ஒவ்வொரு நாளும் 500க்கு அதிக மக்கள் சிதறுண்டு இறந்த நிலையில் அடக்கம் செய்வதும் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்வதும் இறுதிவரையும் மக்களோடு இருப்பேன் என்ற துணிச்சல் அவருக்குப் புதிய ஆன்மீகக் களத்தைத் தோற்றுவித்தது. இவ்விடுதலை எட்டியது எட்டவில்லை என்பதல்ல விவாதம், இவ்எதிர்நோக்கின் மையத்தில் வாழ்வின் உயர் மதிப்பீடுகளைச் சகிக்கமுடியாத துன்பியல் போராட்டத்தில் வாழ்ந்தார். மக்களோடு இருப்புக்கொண்டு எளிமை வாழ்வின் உச்சத்திற்குச் சென்றார். பூரண வெறுமையாக்கலுக்குத் தன்னை உட்படுத்தி இறுதி மூச்சுவரை ஆன்மீகக் களத்தில் போராடினார். போல் அடிகளின் வார்த்தையில் "இன்னல்கள்.. எங்களை அளவுக்கு மிஞ்சி வாட்டின, எங்களால் தாங்க முடியாத சுமையாக மாறின. இனிப் பிழைப்போம் என்ற நம்பிக்கை இல்லாமற் போயிற்று. எங்களுக்கு மரணதண்டனையே விதிக்கப்பட்டது என்ற உணர்வு ஏற்பட்டது." (2கொரி 1.8)

மறைசாட்சியக் களம்

கத்தோலிக்க திருஅவையில் இறைநம்பிக்கைக்காகத் தம் இன்னுயிரை ஈந்தவர்களை மறை சாட்சிகள் என்று அறிக்கையிடுகின்றோம். மறைசாட்சியத்துக்கு இரத்தம் சிந்தும் நிலை இருக்கவேண்டும் என்பர். அடிகளார் சறத்ஜீவனின் வாழ்வும் அவரது இறுதிப் பிரிவும் மறைசாட்சிய

அம்சங்களைக் கொண்டது. உக்கிரமான போரில் தண்ணீர் எடுக்கவும் சமைக்கவும் பதுங்குழி களை விட்டு வெளியேற முடியவில்லை. தொடர்ந்து பல நாட்கள் உணவு, நீர் இன்மையினால் உயிர் அணுக்கள் படிப்படியாகத் தனது செயலூக்கத்தை இழந்து கொண்டது. இக்குருதி சிந்தல் வெளிப்படையாகத் தோன்றாவிட்டாலும் இதை 'வெண் வன்செயல்' என்கிறார் ஆயர் கெல்ட் கமெறா, அதாவது அநீத அமைப்புகளினால் உருவாகும் பட்டினிச்சாவு இரத்த உயிர் அணுக்கள் உருவாகத் தடையாகி உயிர் இழக்கத் தூண்டுகிறது. அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர் கூறுகிறார்; உழவூர்தியில் தம்மோடு இருந்தவர்களை இரட்டை வாய்க்காலுக்கு எடுத்துச் செல்கையில் காயப்பட்டவர்களிற்கு இடம் கொடுப்பதற்காகத் தான் நடந்து சென்றார். இருதடவைகள் மயங்கினார் உணவின்மையும், உடம்பின் நீரற்ற தன்மையும் அவரது உயிரைப் பறித்தது.

"தமிழர்களுக்கு எதிராக நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதலின் வாயிலாகவும், அவர்களைப் பட்டினி போட்டுக் கொல்வதன் மூலமும், நோயை ஏற்படுத்தும் சூழலை உருவாக்கியும் அளவிற்கு அதிகமான மக்களை முகாம்களில் முடக்கி வைத்து அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளைப் போதுமான அளவிற்கு அளிக்காமலும் ஒரு திட்டமிட்ட இனப்படு கொலையை இலங்கை அரசு நடத்தியுள்ளது" என்கிறார் அமெரிக்க பேராசியர் போய்ல்

குடும்பத்தளம்

"இதெல்லாம் இவருக்கு எங்கிருந்து வந்தது"? என்ற கேள்வி நற்செய்தி ஏட்டில் கேட்ட நினைவு.

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்,

என்பதற்கு அமைய அடிகள் சறத் ஜீவனின் முன் உதாரணமான வாழ்விற்கு அடித்தளம் அவரது பெற்றோர்கள், குடும்ப உறவுகள். பெற்றோர்கள் இருவரும் சிறந்த ஆசிரியர்களாகக் கத்தோலிக்க ஆசிரிய முகாமைத்துவத்தின் கீழ் தங்கள் பணியைத் தொடக்கினவர்கள். எளிமை, கடமை உணர்வு, சான்றாண்மை போன்ற நற்பண்புகள் அவர்களில் குடிகொண்டிருந்தது. ஆசிரிய கலாசாலையிலும் ஆசிரிய பணித்தளத்திலும் பெற்ற அறிவு கத்தோலிக்க மானிட விழுமியங்களைத் தாமும் உள் வாங்கி பாடசாலைப் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல தம் பிள்ளைகளுக்கும் ஊட்டி வந்தார்கள். தாய் ஒரு புரட்சிப்பெண், மாற்றுச்சிந்தனைகளை வரவேற்பவர். அர்த்தமற்ற கலாசார தடையங்களைக் கடந்து, வரட்டுக் கௌரவங்களை உடைத்து சகோதரத்துவ சமத்துவ மதிப்பீடுகளுக்கு முன்னு ரிமை கொடுத்து வாழ்ந்ததற்கு அவர் ஒரு முன்உதாரணம். அவருடைய புரட்சிச் சிந்தனையும், பக்கச் சார்பற்ற போக்கும், வறியவர்கள் மீது கொண்ட இரக்கமும் அடிகளாரின் வாழ்வுக்கு மிகவும் கைகொடுத்துள்ளதை மறுக்க முடியாது.

தமிழருக்கான ஒடுக்கு முறை தொடங்கியதும் அதற்கு எதிரான அகிம்சைப் போராட்டங்களில் அவர் துணிவுடன் பங்குபற்றியதும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக தர்க்கித்ததும் அடிகளாருக்கு விடுதலைக்கான இலட்சிய வேட்கையினை கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அடிகளா ரின் அடக்கநாள் கையேட்டில் ஜெறிகரன் எழுதுகிறார் "உன்னுடைய வாழ்க்கையிலே வெற்றிக்கு வித்திட்டவர் யார்? உன்னுடைய குடும்பம்தான் என்று உறுதியாகச் சொன்னால் அதில் தவறிருக்காது. அமரத்துவமடைந்த உன்னுடைய அப்பா, அன்புள்ளம் கொண்ட அம்மா, பாசம் நிறைந்த உன்னு டைய சகோதரர்கள் சகோதரிகள், நீ மனிதனாக வாழ்வதற்கும், இறை பணியாளனாக மலர்வ தற்கும் கற்றுத்தந்தவர்கள், களம் அமைத்துத் தந்தவர்கள், உன் முன்னிலையிலும் உன் குடும்ப உறவுகள் முன்னிலையிலும் நன்றியோடு பணிகின்றோம்."

அரசியல்தள ஆன்மீகம்

கிறிஸ்தவ ஆன்மீகம் அல்லது அருள்வாழ்வியத்தின் மூலவேர் இறைவனுடைய திட்டத்திற்கு இசைவாக்கம் செய்வது. இது ஆளுக்கு ஆள் வேறுபடலாம். ஆனால் அரசியல் அருள்வாழ்வியம் இறைத்திட்டத்தை வரலாற்றின் நிகழ்வுகளில் நிறைவாக உய்த்துணர்தல். இறைவனின் திட்டம் அனைவரும் குறிப்பாக பெரும்பான்மையான ஏழைகள், அநீத அமைப்புகளால் ஒடுக்கப்பட்டவர் கள் வாழ்வை அடைதல் ஆகும். "அவர்கள் வீடு கட்டிக் குடியிருப்பார்கள். திராட்சை நட்டு அதன் கனிகளை உண்பார்கள்." (எசாயா 65:21) எதிர் மறையாக நோக்கின் வறுமை, அடக்குமுறையில், அகப்பட்டுள்ள கோடிக்கணக்கான மக்களின் அடிமைத்தனங்கள் முடிவுக்கு வரவேண்டும். மனித மாண்பைத் தொடர்ச்சியாகச் சூறையாடுதல், உரிமைகளைக் களவாடல், கொத்தாக மக்களைக் கொலைசெய்தல், சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேற்றல், சித்திரவதைகள் என்பன உயிரின் மதிப்பை இழக்கச்செய்கிறது. மானிடத்தை இழிவுபடுத்துகிறது. "இறைவன் கொடுத்த பெருங்கொடையாகிய உயிரைப் பாதுகாப்பது நாம் செய்யக்கூடிய சிறிய செயல்" என்கிறார் பேராயர் றொமேறோ. இறைவனின் படைப்பு சிதைக்கப்படுகிறது அதன் நோக்கம் பிறள்வுக்குள்ளாகிறது என்பதை ஒடுக்கப்பட்டவர்களின் இருப்பு தெளிவுபடுத்துகிறது.

இறுதிக்குடிமகன் பாதுகாப்பாக வெளியேறும்வரை நானிருப்பேன் என்று குரல் கொடுத்தவர். இவ்உலகில் ஒடுக்கப்பட்ட இறுதி மனிதனுக்கு விடுதலை கிட்டும்வரை சறத்ஜீவனின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும்!

அ.பி. யெயசேகரம்

பிரலாபம்

விருத்தம்

அன்புத்தாய்

அரிய பாலூட்டித் தாலாட்டி வளர்த்தெந்தன்
இருதயம் புண்படுதே சதிவருமென் அறியேன்யான்!
ஆனந்தம் சேரென்மகனே இன்பமுடன் ஆங்கு
துயருறும் மக்கட்குத் துன்பம் தீர்க்கவென்று
தித்திக்கும் திராட்சைத் தோட்டம் திருஅவை பணிசெய்தாய்
எத்திக்கும் ஜெஸ்தமெனி வன்னியது அறியேன்யான்
முற்றந் தோன்று முழுநிலவின்
முகத்தை யினிநாம் காண்பதெப்போ?

தன்நிகரில்லா மகனே தவிக்கிறேன் யான்
தரணியிலே தயவுகாட்ட எனக்கோ நாதியில்லை!
கட்டியணைக்க வில்லை கன்னமதை வருடவில்லை!
பட்டதெல்லாம் சொல்லிப் பரிதவிக்க யாருமில்லை!
மட்டடங்காக் கண்ணீரைச் சொரிய நீயுமில்லை
நிர்க்கதியாய் நிற்கின்றேன் நினைவலைகள் வருத்துதடா
என்னுடலை அடக்க வருவாயென நினைக்கவில்லை!
உன்னுடலை அடக்க நானிருக்க நினைக்கவில்லை!

அன்புச்சகோதரர்கள்

குண்டும் ஷெல்லுங் கொடுமை செய்யக்
கோயில் தோறும் ஓடோடி
மண்டும் பெரிய கஷ்டமுற்றும்
மனது கோணா மாதரசன்!
அன்று இறைவன் அடி சேர்ந்த
இன்னா சேதி இதய மதைக்
கொன்று தின்னு தையையோ!
காணக் கொடுத்து வைக்கலையே
- யூட் சூரியஜீவன்

முத்திக்கும் வித்திட்டீர் முரிம னத்தின்
மூவாத ஆறுதலாய் துயன்று ழைத்தீர்!
மத்திக்கும் வெண்டயிர்போற் கலங்கி னாலும்
மாயேசு சாந்திதர வேண்டி னேனே!

வடிதேற லமுதமொழி தானுங் கேளா
மருந்துபால் வார்க்காத பாவி யானேன்
குடியிருந்த கோயில்தனை யெந்நாட் காண்பேன்
குழைகின்றேன் உன்னை என்றும் ஏங்கி ஏங்கி
- மரீனா சகாயநிலா

கண்ணியநற் கடமையொடு கட்டுப் பாடு
கைதேர்ந்த உன்வாழ்வில் கனிவாய்ப் பெற்று
அன்பின் இருப்பிடமாய் வளர்ந்தோம் நாங்கள்
துன்பம் ஆட்கொண்டு பிரிந்தது நாமேதோ
எண்ணியெண்ணிச் செய்தவைகள் கோடி ஆனால்
எண்ணாமல் செய்தவைகள் இன்னுங் கோடி
கண்ணிலினிக் காண்ப தெப் போ? நிழல ளித்த
கற்பகமே சரிந்ததென் தவக்குருவே.
- மடோனா கார்மேல் நித்திலா

அண்ணா அண்ணாவென்று அன்புடனே அழைத்திடுவேன்
அடுத்துவரும் பயணத்தில் அண்ணாவைக் காத்திருப்பேன்
உன்னிழப்பின் செய்திகேட்டு உருக்குலைந்து நிற்கிறேன் யான்
உடன்பிறப்பின் உயிரிழப்பு உதிரத்தைப் பெருக்குதையா!
சுற்றம் பார்த்து செய்யுதவி
ஐயோ வார்த்தைக் கடங்காதே
ஆனிமாதம் முதன்நன்மை கொண்டாட்டம் காத்திருந்தேன்
வன்னியிலே உன்சேவை வைகாசி முடிந்ததுவே.
- யூட்சன் சக்திஜீவன்

பெறாமக்கள்

யேசு பரனார் திருச் சிலுவைச்
சின்னம் போட்டுக் காட்டினவர்
ஆசை யோடு கரம்பற்றி
அகரம் எழுதிக் காட்டினவர்
ஆல யத்தின் மணிகேட்க
அன்பி னோடே திருப்பலிக்குக்
காலைவேளை கூட்டினவர்
கருணை நிறைந்த எம்சித்தா
அழுகை கண்டால் எமையாற்ற
அணைக்குங் கரங்கள் நீட்டினவர்
என்ன கஷ்டப் பட்டாலும்
எங்கள் சுகமே தன்சுகமாய்
என்றும் வாழ்ந்த சித்தப்பா
இறைவ னெடுத்தால் என்செய்வோம்!

முள்ளிவாய்க்கால் கல்வாரியில் விதையாகிய குருத்துவ விருட்சங்கள்

அருட் பணி :- M.T. சறத்ஜீவன்
அருட் பணி :- G.A. பிரான்சிஸ் யோசப்

2009 மே 18 பொழுது கரைந்து கொண்டிருந்த நேரம், கந்தகப் புகையும், நெருப்பும் படிப்படியாக மறைந்து கொண்டிருந்த நேரம், மனித அலறல்களும் ஒப்பாரிகளும் மூச்சடங்கியிருந்த நேரம். ஆங்காங்கே ஓரிரண்டு துப்பாக்கி வெடி ஓசைகளும், புரியாத மொழியினரின் ஏளனக் குரல்களும், நையாண்டிகளும் ஓங்கி ஒலித்துக்கொண்டிருந்த நேரம். போர் எல்லைகளைத் தாண்டி நீண்ட வரிசையில் நின்று, நிர்வாணமாக்கப்பட்டு, உடல் பரிசோதனை செய்யப்பட்ட அவமானத்தோடும் பசி, தாகம், களைப்பு, சோர்வு, ஏமாற்றம் என்ற பெரும் உடல் மனப்பாரத்தோடும் நின்ற எம்மை முள்ளிவாய்க்கால் எல்லையிலுள்ள இரட்டைவாய்க்கால் சாளம்பன் என்ற இடத்தில், யுத்தத்தில் உயிர் தப்பிய இறுதி மனிதர்களின் கூட்டத்தில் ஒலித்துக்கொண்டிருந்த “சறா பாதர் செத்திட்டார்” என்ற ஒப்பாரிக் குரல்கள் ஒருமுறைநிலைகுலையச் செய்தது. சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோருடைய கண்களும் நீரால் நிறைந்திருந்தது. “காலமை எங்களோட வந்த பாதர் இப்ப எங்களைவிட்டுட்டுப் போட்டார்” என்று எல்லோரும் அங்கு ஒலித்த அதிகாரக்குரல்களுக்கும், வெருட்டல்களுக்கும் மத்தியில் அழுது குழறிய வண்ணம் இருந்தார்கள். “இப்பத்தான் பாதரின் சடலத்தை பஸ்ஸில கொண்டு போகினம்”, “எங்களை விட்டுட்டுப் பாதர் போட்டார்” என்று அழுகுரல்கள் நீண்டு கொண்டே

போனது. யாருக்கு யார் ஆறுதல் சொல்வது. அந்த இடத்தில் ஒருசிலரின் குரல்களையும், வெற்றி அக்களிப்பையும் தவிர ஆறுதல் சொல்ல யாருமே இல்லை. இறுதிவரை மக்களுடன் நிற் பேன் என்ற உறுதியான முடிவுடன், இறுதிவரை நின்று முள்ளிவாய்க்கால் கல்வாரிக்குள்ளே தன் னுடைய சுவாசத்தைக் கரைத்துக் கொண்டவர் அருட்பனி சறத்ஜீவன் அடிகளார்.

உலகப் பந்தின் ஒரு சிறிய புள்ளியிலே மனிதம் நொருக்கப்பட்டு, சிலுவை சுமத்தப் பட்டு, இழப்புக்களையும், மரணங்களையும், அங்கவீனங்களையும் சேமித்துக் கொண்டு கந் தகப் புகைக்குள் வாழ்வியலைத் தேடிய போது, இறை பணியாளரின் பிரசன்னமும் உடனிருப் பும் அவசியமானது என்ற உண்மையைப் புரிய வைத்து, எண்ணிக்கையில்லாமல் மாண்டு போன தமிழர்களின் மரணத்தோடு தன்னையும் உத்தம குருவாக இயேசுவின் வழியில் பலியாக் கியவர் இவ் அருட்பணியாளர். அரச சார்பற்ற உள்நாட்டு - வெளிநாட்டு நிறுவனங்கள் யுத்தப் பிரதேசத்தில் இருந்து அரசினால் வெளியேற் றப்பட்ட பின்னர் யுத்தத்தின் சுடுகலன்கள் மக் களை நோக்கித் திருப்பப்பட்டன. மக்களின் இழப் புக்கள் வரையறைகளைத் தாண்டிச் செல்ல ஆரம்பித்தன. இந்தக் காலகட்டத்தில், யுத்தப் பிரதேசத்தில் கத்தோலிக்க திருச்சபையின் இருப்பு அரசினால் விரும்பப்படாத ஒன்றாகக் கருதப்பட்டது. இதன் விளைவாக அங்கு பணி யாற்றிக்கொண்டிருந்த கத்தோலிக்க அருட் பணியாளருக்கு அரசினால் அங்கிருந்து வெளி யேறவேண்டும் என்ற பகிரங்க அழைப்புக் கொடுக் கப்பட்டது. அவர்கள் அனைவரும் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஆனாலும் ஒருசில குருக்கள் இறுதிவரை மக்களுடன் இருப்போம் என்ற உறுதியான முடிவெடுத்தார்கள். அவர்க ளில் ஒருவர் அருட்பணி சறத்ஜீவன் அடிகளார்.

இவ் அருட்பணியாளர் பலரது உள்ளங் களில் அழியாமல்இடம்பிடித்த ஒரு இறைபணி யாளர். எதையும் நல் மனத்தோடு ஏற்றுக் கொள்ளும் துணிவு கொண்டவர். உருத்திர புரத்தின் பங்குக் குருவாகப் பணியாற்றிக் கொண் டிருந்த போது, வன்னி மறைக் கோட்ட இயேசு சபை அதிகிகள் பணி நிறுவனத்தின் இயக்குந ராகவும் கடமை புரிந்தவர். 2008ஆம் ஆண்டு நடுப்பகுதியில் யுத்தம் கிளிநொச்சி நகரை அண்மித்த போது, உருத்திரபுர மக்களுக்கும் இடம்பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்த வேளையில் இறுதி மனிதராக இவரும் வெளியேறினார். இக்காலப்பகுதியில் இவரின் பணி வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கல்மடு என்னும் இடத்தில் வசதிக் குறைபாடுகள் மத்தியிலும் தடங்கலின்றி நடைபெறத் தொடங்கியது.

ஆன்மீகப் பணியோடு தன்னால் இயன்ற சமூகப் பணியையும் மக்களுக்கு ஆற்றிக் கொண்டிருந்தார். கல்மடு, வட்டக்கச்சியை யுத்தம் அண்மித்தபோது, இவர் தனதுபணியி டத்தை மூங்கிலாறு உடையார்கட்டுப் பகுதிக்கு குறிப்பிட்ட சிலநாட்கள் இடைவெளிக்குள் மாற்றிக் கொண்டார். ஒருசில தடவைகளில், அகோர எறிகணைத் தாக்குதலுக்குள் சிக் குண்டு பயங்கரமான அனுபவத்தைப் பெற்றுக் கொண்டார். மூங்கிலாறுப் பிரதேசத்தில் இவர் ஆற்றிய நிவாரணப் பணிமிகவும் முக்கியமா னது. பொருட்கள் தட்டுப்பாடான காலத்தில் அவற்றை சேகரித்து, பொதி செய்து மக்க ளுக்கு விநியோகித்து உன்னத பணியாற் றினார். இவர் மிகவும் இரக்க சுபாவம் கொண்ட வர். சுதந்திரபுரம், உடையார்கட்டு, இரணைப் பாலை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் என மக்களோடு இடம்பெயர்ந்து, தனது இருப்பால் இறைபிரசன்னத்தை வெளிப்படுத்தி மக்க ளுக்கு நம்பிக்கையைக் கொடுத்தார். முகம் கோணாமல் எதற்கும் துணிந்தவராகப் பலவித மான உதவிகளைச் செய்தார்.

வன்னி மறைக்கோட்டக் குருக்கள் எல்லோ ரும் வலைஞர்மட ஆலயத்தில் தஞ்சமடைந்த வேளையில், இவரும் அங்கு இருந்தார். மக் களின் வாழ்விடங்கள் மிகவும் குறுகிய நிலை யில் நாற்புறமும் யுத்தத்தால் சூழப்பட்ட போது,

பதுங்கு அகழிகளை விட்டு வெளியில் நடமாடு வது உயிராபத்தான விடயமாக இருந்தது. அந்த நாட்களில் வீதியினால் பயணிப்பவர்கள் திடீரென கொல்லப்படும் நிலமையிலும் கூட, இவர் உறுதியோடு பயணித்து தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டவர். வலைஞர்மடம், மாத்தளன் பகுதிகளில் மக்கள் கடற்றொழில் செய்ய ஏதுவான நிலை இருந்த வேளையில், இவர் அதிகாலையில் எழுந்து கடற்கரைக்குச் சென்று அங்கு மக்கள் படும் துன்பத்தைக் கண்டு வேதனைப்படுவார்.

2009ஆம் ஆண்டு பரிசுத்த வார வழிபாடுகள் வலைஞர்மடம், இரட்டைவாய்க்கால் ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே நடைபெற்றன. வலைஞர்மடத்தில் குருக்களும், சகோதரிகளும் வழிபாடுகளை மக்களுக்காக ஒழுங்குபடுத்தி னார்கள். இரட்டைவாய்க்கால் செல்வது உயிரா பத்தான விடயமாக இருந்தாலும் இரண்டு அருட்பணியாளர்களுடன் தானாக முன்வந்து, அங்கு சென்று அந்த மக்கள் பரிசுத்தவார வழி பாடுகளில் முழுமையாகப் பங்கு கொள்ள மிகவும் உதவியாக இருந்தார்.

மே 13ஆம் திகதி அவருடைய பிறந்தநாள் புனித பற்றிமாஅன்னையின் பெருவிழா இத னால் என்னவோ தேவமாதா மீது இவர் அதீத பக்தி கொண்டவர். மூன்று தடவைகளுக்கு மேலாக தொடர்ச்சியான எறிகணைத் தாக்கு தல்களில் சிக்குண்ட பொழுதெல்லாம், கையில் செபமாலையைத் தாங்கி தொடர்ச்சியாகப் பல செபமாலை சொல்லி, மற்றவர்களையும் செபிக் கத்தூண்டி மரியன்னையின் அடைக்கலத்தில் தன்னோடு இருந்தவர்களை ஒப்படைத்து எல்லோரையும் காப்பாற்றினார்.

ஒரு முறை உடையார்கட்டுப் பகுதியில் எறி கணைகள் விழ, மக்கள் தூய யூதாததேயு ஆல யத்தை நோக்கி ஓடி வந்து அங்கு தஞ்சமடைந் தார்கள். எறிகணைத் தாக்குதல்கள் மிக அகோர மாக உடையார்கட்டு புதுக்குடியிருப்பு வீதியை இலக்கு வைத்து நடத்தப்பட்டுக் கொண்டிருக்க, ஆலயத்தில் தஞ்சமடைந்தவர்கள் ஒப்பாரி வைத்துக் குழறத் தொடங்கினார்கள். கண்க ளுக்கு முன்னால் மக்கள் காயமடைந்தும், இறந்து கொண்டும் இருந்தார்கள். அந்த வேளையில் அருட்பணி சறத்ஜீவன் நிதானமாக இருந்து "அழ வேண்டாம்! அழுவதனால் பயனில்லை, செபமாலையை கைகளில் ஏந்தி செபமாலை யைச் சொல்லுங்கள்" என அறிவுறுத்தி உரத்த குரலில் செபிக்க ஆரம்பித்தார். அகோரத்தாக் குதல்கள் மத்தியிலும் அழுகுரல்கள் அடங்கி எல்லோருடைய நாவும்அன்னை மரியாளின் நாமத்தை உச்சரிக்கும் புதுமை அங்கு நடை பெற்றது. மே 17ஆம் திகதி இரவு முழுவதும் செபமாலையைக் கையிலேந்தி செபித்துக் கொண்டிருந்தார்.

யுத்தம் இறுதிக்கட்டத்தை அண்மித்த இறுதி நாட்களில் மரணபயம் எல்லோரையும் சூழ்ந்து நின்ற வேளையிலும் மரணத்தைக் கண்டு இவர் அஞ்சவில்லை. மரணத்திலும் உறுதியாக இருந்தார். நாற்புறமும் இராணுவம் சூழ்ந்து நின்ற வேளையிலும் மரணத்தைக்கண்டு இவர் அஞ்சாது தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அறி வுறுத்தலின் படி 2009 மே 17ஆம் திகதி மாலை, இரண்டு குருக்களோடும், ஒரு சில பிள்ளைக ளோடும் வெள்ளைக்கொடியுடன் இரண்டு தடவைகள் சமகால இடைவெளியில் இராணு வத்தினரை எதிர் கொண்டு செல்ல முற்பட்ட போது இவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக 18ஆம் திகதி காலை வேளையில் மீண்டும் ஒரு தடவை வெள்ளைக் கொடியுடன் இராணுவத்தை எதிர்கொள்ள முயற்சித்த போது, இவரும் துணிவுடன் அந்த முயற்சியில் ஈடுபட்டார். "தன் நண்பர்களுக்காக உயிரைக்கொடுப்பதை விட மேலான அன்பு எதுவுமில்லை" (யோ 15:13) என்கின்ற இறைவார்த்தை அவரது உள்ளத்தில் ஓங்கி ஒலித்ததன் பிரதிபலிப்பு இந்த சம்பவத் தில் நிருபணமாகியது. இறுதியாக இந்த முயற்சி வெற்றியடைந்தது.

அங்கு இருந்தவர்கள் விசாரணை செய்யப் பட்ட விதம், இவர் தாக்கப்பட்ட சம்பவம், போராட்டத்தின் எதிர்பாராத அந்த முடிவு இவரது மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத் தியது. இவைகள் எல்லாவற்றினதும் தாக்கம் இதயத்துடிப்பை படிப்படியாகக் குறைத்திருக்க வேண்டும். எரியும் சுவாலைகளுக்கு மத்தியில் வெறுங்காலுடன் பல நூறு மீற்றர் மனப்பாரத் தோடு நடந்த இவரது உடல் படிப்படியாக சோரத் தொடங்கியது. இவர் சுமந்துவந்த பொருட்களடங்கிய இரண்டு பொதிகளை இவருடன் வந்த ஒருவர் பெற்றுக் கொள்ள, இன் னும் இரண்டு பிள்ளைகள் இவரைத் கைத்தாங் கலாக சுமக்க முற்பட்ட போது, அவர் கூறியது "என்னால் முடியும், நான் தனியே நடந்து வரு வேன்" என்ற வார்த்தைகள் இறுதி நேரத்திலும் இவரது மனஉறுதியைக் காட்டி நின்றன. "நீங் கள் எங்கள் அடிமைகள்" என்ற ஏளனக்குரல்க ளுக்கு மத்தியில் நண்பகல் 12:30 மணியளவில் இரட்டைவாய்க்காலுக்கு அண்மித்த பகுதியில் இவரது உடலின் இசைவாக்கம் படிப்படியாகக் குறைந்து போக, இன்னும் சிலருடன் பல பிரயத் தனங்களுக்கு மத்தியில் ஓர் உழவு இயந்திரத் தில் இவரும் ஏற்றப்பட்டு சாளம்பன் என்ற இடத் துக்கு அனுப்பப்பட்டார். அங்குமதியம் 2:45 மணியளவில் மருத்துவ உதவிகள் மறுக்கப் பட்ட நிலையில் அவரது இதயமும் தனது துடிப்பை நிறுத்த இவ்வுலகை விட்டு பரமனடி சேர்ந்தார்.

அருட்பணி சறத்ஜீவனின் உறுதியான மனநிலையும், இறைமகன் இயேசுவின் பாதை யில் தன்னைப்பலியாக ஒப்புக் கொடுத்த நிகழ்வும் பணிக் குருத்துவத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை வரைந்து நிற்கின்றன.

அருட்பணி G.A. பிரான்சிஸ் யோசப் அடிகளார்

இதே காலப் பகுதியில் பல்லாயிரம்மக்க ளோடு காணாமல் போன அருட்பணி பிரான்சிஸ் யோசப் அடிகளாரும் 50 வருட காலக்குருத்து வப் பயணத்தில் தனித்துவமான பல சாதனை களைப் புரிந்திருக்கிறார். இறைவழியில் நின்று உண்மைக்குச் சான்று பகர்ந்து துன்பப்பட்ட மக்களோடு தனது வாழ்வினையும் இணைத்துக் கொண்டார். காணாமல் போனோர் பட்டியலில் அவரது பெயர் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவ ரது இருப்பு கேள்விக் குறியானாலும் தமிழரின் வரலாற்றில் அவர் தனித்துவமான ஒரு இடம் பிடித்தவர். இவ் அருட்பணியாளரின் வாழ்வில் சில பதிவுகள்:-

2009 மே 13ஆம் திகதி காலை நேரம், முள்ளிவாய்க்கால் பகுதி முழுவதும் ரணகள மாய் மாறியிருந்தது. திரும்பும் திசையெல்லாம் சடலங்களும், அங்கவீனர்களும், ஒப்பாரிகளும், கூக்குரல்களும், பற்றியெரியும் வாகனங்களும். 12ஆம் திகதி நள்ளிரவு தொடங்கி 13ஆம் திகதி அதிகாலை வரை நடத்தப்பட்ட பல்குழல், ஆட்லறி, கனன் எறிகணைத் தாக்குதல்களின் எச்சங்கள்தான் இவைகள். ஒரு சில மணித்தி யாலங்களில் ஆயிரக்கணக்கானோர் காயப் பட்டும், கொல்லப்பட்டும் கிடந்தார்கள். அன் றைய தினம் மதிய நேரம், அருட்பணியாளர் பிரான்சிஸ் அடிகளாரைச் சந்திப்பதற்காக அவ ரின் பதுங்கு அகழிக்கு சென்ற போது அவரு டன் அவரது பணியாளர்களும், கால் ஊனமுற்ற ஒரு பெண்ணும் இருந்தார். நாங்கள் உள்ளே இருந்து உரையாடிக் கொண்டிருந்த போது, மீண்டும் எறிகணைத் தாக்குதல்கள் சரமாரி யாக மேற்கொள்ளப்பட, நாங்கள் இருந்த இடத்திலிருந்து ஒரு சில மீற்றர் தள்ளியிருந்த எண்ணைக் களஞ்சியம் தீப்பற்றி எரிய ஆரம்பித் தது. எங்கும் தீச்சுவாலை, அதன் வெக்கை உள்ளே இருந்த எங்களை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. அப்போது கையில் கிடைத்த துணிகளைச் சுற்றி தண்ணீருக்குள் தோய்த்து உடல் வெக்கையை தணித்துக் கொண்டிருந் தோம். பதுங்கு குழியை விட்டு வெளியே செல்ல முடியாத அளவிற்கு எறிகணைகள் எம்மைச் சுற்றிவீழ்ந்து கொண்டிருந்தன.

இதுதான் எங்களின் இறுதிச் சந்திப்பு என்பதை அன்று நான் உணரவில்லை. ஆனால் இன்று அது நிதர்சனமாக்கப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் பிரான்சிஸ் அடிகளார் பல விடயங் களை மனம் விட்டுப் பேசினார். உரையாடல் முடிவில் அவரை எங்களோடு வந்து இருக்கும் படி கேட்டபோது, அவர் இரண்டு காலும் ஊன முற்ற பெண்ணைக் காட்டி, "நான் உங்களுடன் வர ஆயத்தம் ஆனால், இந்தப் பெண்ணையும் கொண்டு வந்து உங்களுக்கு சுமையாக இருக்கவிரும்பவில்லை" என்று உருக்கமாக வும் நிதானமாகவும் கூறிய வார்த்தைகளால் நாம் அவரைக் கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்ல விரும்பவில்லை. இவர் சுட்டிக்காட்டிய அந்தப் பெண் இவரிடம் ஆங்கிலம் பயின்ற ஒரு மாணவி. அந்தப் பெண்ணைப்பார்த்த போது, அவளுக்கு முன்னாலே நீலநிற பேசின் ஒன்றிற் குள்ளே இரண்டு பின்னங்கால்களையும் இழந்த அவரின் செல்லப் பிராணியான பூனைக்குட்டி யும் காணப் பட்டது.

அடிகளார், கிளிநொச்சி அம்பாள் குளம் என்ற இடத்தில் பலவருடங்களாக இருந்து ஆன் மீக, சமூகப் பணி ஆற்றிக் கொண்டு இருந்த வர். தாய்நாட்டின் மீதும் , மக்களின் விடுதலை மீதும் அதீத ஆர்வம் கொண்ட இவர் யாழ்ப் பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிப ராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற பின்னர் தமிழ் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களில் தன்னுடைய கல்வித்துறை அனுபவத்தாலும் போர்க்கால சமூக கட்டமைப்புக்குள் உருவாக் கப்பட்டிருந்த பல கல்வி சார்ந்த துறைகளில் தலைமைப் பதவிகளை வகித்தவர். வன்னியில் தமிழ் இளையோரினது ஆங்கில மொழிப் புல மைக்கு வித்திட்டு, நீண்ட நாள் கனவாகிய ஆங்கில மொழிக் கல்லூரியை 2004 கிளிநொச் சியில் பிறப்பெடுக்கச் செய்து தனது ஆங்கில மொழிப் புலமையினாலும், நீண்டநாள் கல்வித் துறை அனுபவத்தினாலும் இக்கல்லூரியை திறம்பட இயக்கி, ஆங்கில மொழிப்பட்டதாரி களை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

கடின உழைப்பும், விடா முயற்சியும் கொண்ட இவர் மக்களின் வாழ்வியலின் துன்பமான வர லாற்றுத்தடங்களுடன் தன்னை இரண்டற இணைத் துக் கொண்டார். இடப் பெயர்வு என்ற போரியல் சுழற்சிக்குள்ளே தர்மபுரம், வள்ளிபுனம், உடை யார்கட்டு, இரணைப் பாலை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் எனப் பல்வேறு குறிச்சி களைத் தாண்டி, போரின் இறுதிக்காலம் வரை துன்பப்படும் மக்களோடு இருந்தார். ஏழ் மையை வாழ்வாக்கியவர், உதவி என்று தேடிச் செல்வோரை அன்போடு அரவணைத்து மனம் கோணாமல் உதவி செய்வார். இவர் வள்ளி புனம் பிரதேசத்தில் இருந்த போது குருத்துவத் தின் 50வது வருட நிறைவை உடையார்கட்டு தூய யூதாததேயு ஆலயத்தில் 2008 மார்கழி 21ஆம் திகதி ஏனைய குருக்களோடும், மக்க ளோடும் சேர்ந்து மிகவும் எளிமையான முறை யிலே கொண்டாடினார். 50வருட குருத்துவப் பயணத்தில் இறைவனின் துணையோடு வர லாற்றில் பல சாதனைகளை இவர் புரிந்திருக் கிறார்.

இடப்பெயர்வின் தாக்கம் இவரின் உடலிலும் பலவிதமான நோய்களை ஏற்படுத்தத் தொடங் கியது. உடல்பலவீனம், கண்பார்வை போன்ற சவால்களுக்கு முகம் கொடுத்தவராக, தனது இயலாமையிலும் உறுதியாகப் பல பணிகளைப் புரிந்தவர். எந்த வேளையிலும் யாருக்கும் சுமையாக இருக்க விரும்பாதவர். இவர் அகோர எறிகணைத் தாக்குதலுக்குள் சிக்குண்டு இறை துணையால் பாதுகாக்கப்பட்டவர். ஒருமுறை உடையார்கட்டு ஆலயத்தில் நாங்கள் ஒன்றாக இருந்த போது எறிகணைத் தாக்குதலுக்குள் எல்லோரும் சிக்குண்டு இரவு வேளையில் சிதறி ஓடும் போது, கைத்தாங்கலாக இவரை அழைத் துச்சென்றது இன்னும் எனது நினைவில் உள் ளது. பல தடவைகளில் உந்துருளியில் இவரை

அழைத்துக் கொண்டு நீண்ட பயணங்கள் செய்யும் போது, தான் நடந்து, கடந்து வந்த வாழ்வியல் அனுபவங்களை என்னோடு பகிர்ந்து கொள்வார். இவர் எமது கடந்தகால வரலாற்றை நன்கு அறிந்திருந்த இறை பணியாளர் என்பதைப் புரிந்து கொண்டேன்.

இவரது கண்களில் ஒன்று சத்திர சிகிச்சை செய்யப்பட்டு குணப்படுத்த வேண்டிய கட்டாய தேவை இக்காலப் பகுதியில் ஏற்பட்டது. மருத்துவ சிகிச்சைக்காக அங்கிருந்து வெளியேறினால் தான் மீண்டும் திரும்பி வர முடியாது போனால் தனது பணிகள் பாதிப்படையும் என்று நினைத்தவராக, ஆரம்பத்தில் மறுத்தாலும் காலப்போக்கில் இவரது பார்வை மேலும் மேலும் குன்றிப்போக பார்வையை இழக்க நேரிடும் என்ற அபாயத்தை உணர்ந்தவராக அங்கிருந்து வெளியேற விரும்பிய போது, அதற்கு ஏதுவாக சூழ்நிலைகள் இவரின் பயணத்திற்கு சாதகமாக அமையவில்லை. இவரை அங்கிருந்து மருத்துவ சிகிச்சைக்காக வெளியேற்றுவதற்கு நாங்கள் பல முயற்சிகள் எடுத்தபோதும் எதுவும் பயனளிக்கவில்லை. இருந்தாலும் எல்லாவற்றையும் நல் மனதோடு ஏற்றுக் கொண்டார்.

2009 மே 13ஆம் திகதி அவரை விட்டு நான் பிரியும் போது இனம் புரியாத பயம் ஒன்று எனது மனதில் இருந்தது. தனித்துவிடப்படுகிறாரே என்று எனது உள்மனம் சொல்லிக் கொண்டேயிருந்தது. அந்தவேளையில் “கடவுளுக்குச் சித்தமானால் மீண்டும் ஒருமுறை சந்திப்போம்” என்று அவரது வாயில் இருந்து வந்த வார்த்தைகள் என்னை சற்று ஆறுதல் படுத்தியது. அந்த இடத்திலிருந்து அவர் அன்றைய தினமே வெளியேறி இன்னுமொரு இடத்தில் பாதுகாப்புத் தேடிய இவர் மே மாதம் 17ஆம் திகதி வட்டுவாகல் பாலத்தைத் தாண்டி பல இலட்சக்கணக்கான மக்களோடு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் சென்றார். களைப்பு, சோர்வு அவரது உடல் இசைவாக்கத்திலே தளர்ச்சியை ஏற்படுத்த ஓர் மரநிழலின் கீழ் தன்னுடன் இருந்த தனது பணியாளர்களோடு இளைப்பாறிக்கொண்டிருந்தார். பலர் அவரை அடையாளம் கண்டு தங்களின் சோகங்களை அவரோடுபகிர்ந்து கொண்டனர்.

இவரின் பிரசன்னத்தை அங்கு கண்ட அரசியல்துறையைச் சேர்ந்த சிலர், மே 18 காலை வேளையில் இவரை அணுகிச் சென்று தங்களைஅடையாளப்படுத்தி, இராணுவத்தினரிடம் சரணடைய தமக்கு உதவி புரியும் படி கேட்டுக்கொண்டார்கள். அடிகளாரின் ஆங்கில மொழிப்புலமை சரணடைதலுக்குரிய ஒரு சுமூகமான சூழ் நிலையை உருவாக்கும் என்பதையும், அவர் ஒரு குருவானவர் என்பதால் இராணுவத்தினர் இவருக்கு மதிப்பளிப்பார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். தாராள உள்ளத்தோடு மனம் கோணாமல் உதவி செய்யும் மனம்படைத்தவர் இவர், இதற்கு இசைந்து அதனை செயற்படுத்துவதற்கு இராணுவ உயர் அதிகாரிகளை தொடர்பு கொண்டார். அவர்களும் சரணடைதலுக்கு சம்மதித்து சரணடைபவர்களின் பெயர்ப் பட்டியலை ஆயத்தம் செய்யும் படி கேட்டுக்கொண்டார்கள்.

ஆரம்பத்தில் ஒரு சிலர் மட்டுமே தங்களை அடையாளப்படுத்தினாலும், அடிகளாரின் அந்த முயற்சியை அறிந்த இன்னும் பலர் அங்கு ஒன்றுகூடி குடும்ப சகிதம் தங்களின் பெயர் விபரங்களை அப்பட்டியலில் சேர்த்துக் கொண்டார்கள். ஒரு சிலருடன் ஆரம்பித்த பெயர்ப் பட்டியல் மிகவும் நீண்ட பட்டியலாக மாறியது. இறுதியில் அந்தப் பெயர்ப் பட்டியலைப் பெற்றுக் கொண்ட அதிகாரி, அவர்களுக்கென விசேட பேருந்து வண்டிகளை ஒழுங்கு செய்து, அவற்றில் ஏற்றிய பின்னர் அடிகளாரையும் அந்தப் போராளிகளோடு ஏற்றிச் சென்றார்கள். இந்த சம்பவங்களைப் பலர் கண்டுள்ளார்கள். அடிகளாரின் இருப்பு இப்போது கேள்விக் குறியாக மாறிவிட்டது. அடிகளாரோடு அந்தப் பேருந்துகளில் கொண்டு செல்லப்பட்டவர்க

ளின் பெயர்களும், காணாமல் போனோரின் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டு விட்டது.

இவ் அருட் பணியாளர்கள் சறத்ஜீவன், பிரான்சிஸ் யோசப் முள்ளிவாய்க்கால் என்ற, உலகப் பந்தில் ஒரு சிறு புள்ளியில் மக்களின் துன்பியலோடு தங்களின் இருப்பைக் கரைத்துக்கொண்டவர்கள். இறுதிக் காலத்திலும் இறைபிரசன்னத்தை மக்களுக்குக் கொடுத்தவர்கள். காற்றோடும், கடலோடும், மண்ணோடும் கரைந்து போன பல்லாயிரக்கணக்கான மக்களோடும் தங்களின் வாழ்வையும் இணைத்துக் கொண்டவர்கள். வரலாற்றில்உங்களின் தடங்களை என்றும் நாம் நினைவில் கொள்வோம்.

– அருட்பணி. அன்ரன் ஸ்ரீபன்

“I Will not Leave my People”

A tribute to the legacy of Rev. Fr. Mariampillai T. Sarathjeevan

The past few weeks have been catastrophic and have left the Tamil population of the island of Sri Lanka devastated. The lives of the Tamil people are filled with moments of abject suffering and destruction. Every day we have been hearing disturbing accounts of deaths and injuries. Church bells have been tolling incessantly bringing news of the death of beloved ones to the people. On the 18th of May, the bells of Jaffna Cathedral brought the news of the untimely death of the young and dynamic priest, Rev. Fr. Mariampillai T. Sarathjeevan, submerging the people of Jaffna in the sea of sorrow. Is he dead? It is something difficult to believe, but we are forced to believe and accept this irreparable loss of a precious life, dedicated to the diocese of Jaffna. It is not only a great loss to his family, but also a matter of bereavement for the entire diocese of Jaffna. Before proceeding further, I wish to convey our prayerful support to his family, so that they might find the fortitude to face the loss of this sagacious soul.

Fr. Sara, as he has been always called with love and affection by all, was born in Jaffna in a family of five. The family maintained a spiritual atmosphere that made it possible for Fr. Sara to become a diocesan priest in the Jaffna diocese, and his sister to dedicate

herself to a religious life in the Holy Cross Congregation. Fr. Sara was an active member in the youth group at Jaffna Cathedral and was very zealous in spiritual activities. At a mature age he decided to dedicate himself to God and joined the seminary as a late vocation. He was ordained by the Bishop of Jaffna, Rt. Rev. Dr. Thomas Savundranayagam on 14th May 2003.

As a formator, I had the privilege of being his moderator for many years during his formation, and memories of him are still fresh in my mind. He was an amicable student in the group, and was very docile towards those in charge of him. He was known for being compassionate towards the poor and needy. As seminarians and priests we were also lucky to experience his compassion and love whenever we went on a day out or for a picnic. Fr. Sara would cook for all of us like a mother cooking for her children. Today, when I hear from his family and priest friends about his last days, my memory is flooded with such instances that bear witness to his generosity.

Fr. Sara was sent to Uruthirapuarmin Kilinochchi as a parish priest and served the people with dedication and commitment. Later, in addition to this, he was also given the responsibility of being the co-coordinator of JRS (Jesuit Rehabilitation Service). He carried out these responsibilities with a real sense of dedication and zeal. Eventually, when the war broke out in the Wanni area, people were displaced in large numbers, and Fr. Sara was there with the people helping them and assisting them in these critical hours. When his people were evicted he too started moving with them, taking inspiration from the example of his Master, the Good Shepherd. During his last days he was with the people in the safety zone, and worked relentlessly with the wounded and dying. If he wanted, he could have made efforts to come out of the war zone, but he was working with the firm conviction that he must not desert his flock in distress. Finally, when the war ceased he was able to come out of the area with the help of the security forces, but when he came to Kilinochichi, he died of heart failure. He succumbed to the emotional stress of seeing the torment of his people whom he had endeavored to serve with such unflinching and single–minded devotion. At this juncture, when I think of the life of this young priest I feel proud of him and thank God for anointing him as a good shepherd to his flock. From what he said about his last days, I understand that this life was fully occupied with putting up shelters for people, taking care of the sick and burying the dead. He categorically stated that he would not come out leaving the people like orphans. Following the footsteps of Lord and master, Our Lord Jesus Christ, he said, “I will not leave my people.” These words of determination and commitment from a person with six years of priesthood are exemplary; words that would motivate every priest to strive to reach their spiritual goals. What helped him withstand all the tribulations in his life was his constant communion with God. In the final days that led to his demise, he expressed his concern about not being able to celebrate mass as he had to spend a few days in the bunker without food and drink. Ultimately, when he was able to come out of the terrible circumstances, he could not bear to witness the agony of his people and his heart failed.

Fr. Sara has left a strong legacy for us: “I will not leave my people” These words of

spiritual acumen will ring eternally in the ears of everyone who knew him. I thank God for this exemplary young priest and pray to God that the Lord may shed his compassion on each one of us so that our country may take a journey towards peace to ensure the safety of every precious human life in the future. Let the sacrifice of Rev. Fr. Mariampillai T. Sarathjeevan go not in vain; he has set an example by valuing human life and serving suffering humanity above everything else. Assuredly, his presence will be perpetual and everlasting in the minds and hearts of his people as "to live in hearts we leave behind is not to die."

"God is love, and whoever remains in love, remains in God and God in Him." 1 John 4:16

- Fr. David Manuelpillai

AN EPITOME OF SIMPLICITY AND COMMITMENT

It is with profound sadness and shock I learnt about the untimely demise of Rev. Fr. Mariampillai Sarathjeevan on May 18, 2009 in Kilinochchi as the war was reaching its final days. He has died due to heart failure. Being the parish priest of Uruththirapuram, a few kilometers off the township of Kilinochchi, he had been moving from place to place with the people in the war zone. He had lived the last few days of his life in a bunker, allegedly, without any food or drink.

I met Fr. Sara (as he is popularly known in the diocese of Jaffna) for the first time in December 2004. I was staying at Iranapali Mission House on my way to Mullaitivu to get myself involved in post-tsunami relief work. He, in his capacity as the assistant pastor of Mullaitivu (Fr. James Pathinathan who was also injured recently was the Parish Priest), came to Iranapalai to receive us, a group of one priest and two seminarians, one of them being me.

I remember vividly the motorbike in which he came to meet us. It was a bike only nominally. It was in an unbelievably bad shape and condition so much so we put the bike in the van and drove him to Mullaitivu, some 35 kilometers from Iranapalai.

The first days and weeks were really hard with minimum facilities. 20-30 seminarians and priests both diocesan and religious

were staying in a small building at Mamoolai, Mulliyawalai along with Fr. James and Fr. Sara. We were all involved in visiting the people in their transit camps. We shared one well and one toilet. Fr. Sara would get up very early in the morning to fill up the pots and other vessels with water needed for washing and cooking. The well was around 75 feet deep.

Fr. Sarathjeevan, along with Fr. James had lost almost all his belongings save the old bike and the cassock he was wearing in. However, he had nothing to complain about. He was often found calm and charm doing what he could to the level best.

Though, he had a short span as a priest (on May 14 he completed 6 years as a priest and, the day before he turned 41 years in age), he did serve God and the people with great love and fidelity as his priestly vocation demanded of him. He was known for his simplicity and commitment. Fr. Sara was a priest and a man whose company anyone would enjoy and cherish. He had immense respect for his brother priests, and all others whether they are nuns, seminarians or lay faithful. He was a man of God who disliked being in the limelight but was prophetic and loving in the style of the One whose footsteps he freely chose to follow as a priest. Being a "late vocation", he was 35 years old when he was ordained a priest in 2003.

His dear and near ones were not able either to see his mortal body or to pay their last respects and love to him. He had to be cremated since there was no way to transfer the mortal body to his home town, Jaffna. After waiting so long to find means to transfer, the cremation was done in Colombo.

Dear Father, well done ! Good bye to you forever ! Your life is worthy of imitation by any Christian.

May God grant you Eternal Bliss!

Brother Joseph Jeyaseelan CMF

அருட்தந்தை சறத்ஜீவனின் 5ம் ஆண்டு நினைவாக

வன்னி மண்ணிலே நடந்த யுத்தத்தின் போது இறுதிவரை மக்க ளோடு நின்று பணிபுரிந்து யுத்தத்தின் கடைசி நாளன்று மக்களோடும் சககுருக்களோடும் வெளியேறிய போது அவர் கண்டகாட்சிகளால் மனம் நொந்து "இதை என்னால தாங்க முடியாமல் இருக்கு" என்று சொல்லி நடந்து வந்த போது, மாரடைப்பின் காரணமாக உயிர்நீத்த அருட்தந்தை சறத்ஜீவனின் நினைவாக இக்கட்டுரைஅமைகிறது.

அமரர் அருட்பணி சறத்ஜீவன் அடிகளார் இறைபதம் அடைந்து ஐந்து வருடங்கள் உருண்டோடிவிட்டன. ஆனாலும் அடிகளாரின் வாழ் வும் பணியும் அவரின் நினைவுகளும் என்றுமே எம் மனங்களில் நிறைந்திருக்கின்றன. 'சறாபாதர்" என்றால் வன்னிமண்ணின் மூலை முடுக்குகள் எல்லாம் அவரின் பணிபற்றி பல கதைகள் சொல்லும். யாழ் மரியன்னை பேராலயப் பங்கிலே பிறந்து வளர்ந்து உருவாகிய காலம் முதல் அவர் கிறீஸ்துவின் சாட்சியாக வாழ்ந்தார் என்றே சொல்ல முடியும். அமரர் அருட்பணி சறத்ஜீவனின் குருத்துவ அழைப்பு உண் மையிலேயே சிறப்பானது. அவ் அழைப்பு 'தாயின் வயிற்றில் இருந்த போதே என்னைத் தமக்கென ஒதுக்கிவைத்துத் தமது அருளால் என்னை அழைத்த கடவுள் தம் மகனைப் பற்றிய நற்செய்தியை பிற இனத்தவர்க்கு நான் அறிவிக்குமாறு அவரை எனக்கு வெளிப்படுத்தத் திருவுளங்கொண்டார்." கலா 1:15-16. என்ற பவுலின் அனுபவத்தை நினைவுப்படுத்துகின்றது. இளைஞராக இருக்கும் போதே யாழ்

மரியன்னை பேராலயத்தில் இளைஞர் உருவாக்கல் இயக்கத்தில் அர்ப்பணிப்போடு பணியாற்றி உழைத்தவர். திரு இசையில் ஆர்வம் உடையவராய் வீணைப் பெட்டிவாசிப்பதில் வித்தகராக உருவாகினார். யாழ் மரியன்னை பேராலயப் பங்கிற்கு சறத்ஜீவனின் பங்களிப்பு மிகவும் உன்னதமானது.

சறத்ஜீவன் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்ற இறுதிக்காலங்களில் அவரின் பாடசாலைப் பதிவுகளும் கூட மிகச்சிறப்பானது. அன்று கல்விப்பணியை மேற்கொண்ட குருக்களின் அன்பைச் சிறப்பாகப் பெறும் அளவிற்கு பாடசாலைக் கல்வியிலும், பாடசாலையின் பொதுப்பணிகளிலும், சாரணர்களின் தலைவராகவும், சிறந்த தலைமைத்துவப் பொறுப்புக்களை பொறுப்போடு நிறைவேற்றியவர் என்பதை இவரின் சகதோழர்கள் நன்கு அறிவர்.

குருத்துவ அழைப்பைப் பெற்ற "சறாபாதர்" தனது ஆரம்பப் பயிற்சிகளை புனித மாட்டீனார் குருமடத்தில் பெற்ற போது அவரின் வாழ்வில் துலங்கிய 'ஆவியின் கனிகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம்" போன்ற பண்புகளை அவரின் பயிற்சியாளர்களும், சக சகோதர குருமடமாணவர்களும் நன்கு அறிந்திருந்தார்கள். புனித மாட்டீனார் குருமடத்தில் கடமை, கண்ணியம், பொறுப்புணர்வு உள்ள சிறந்த மாணவனாகத் துலங்கி ஏனைய சகோதரர்களிற்கும் எடுத்துக்காட்டான வாழ்வை வாழ்ந்தார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

தனது குருத்துவப் பயிற்சியை ஓர் அருட்சகோதரராகத் தொடர்ந்து புனித சவேரியார் பெரிய குருமடத்தில் கல்வியைப் பெற்றகாலங்களில், "பிறதர்சறா" என்றால் குருமடத்தில் குருக்களும், ஏனைய அருட்சகோதரர்களும் அதிக மரியாதை வைத்திருந்தார்கள். இறைபற்றும், கடின உழைப்பும் இவரது வாழ்வின் தாரகமந்திரம் என்று சொல்லலாம். இறைவிசுவாசம் - நம்பிக்கை தான் 'சறா'வின் குருத்துவ வாழ்விற்கு மூலைக்கல்லாக அமைந்திருந்ததை அவர் வாழ்வு முழுவதும் காணமுடிந்தது.

"நாங்கள் எங்களைப்பற்றி அல்ல யேசுகிறிஸ்துவைப் பற்றியே அறிவிக்கின்றோம். நாங்கள் யேசுவின் பொருட்டு வந்த உங்கள் பணியாளர்களே" 2 கொரி. 4:5 என்ற பவுலின் குருத்துவ அர்ப்பண நோக்கு - பணிக் கொள்கைகளே சறாவின் வாழ்வின் அர்ப்பணத்தின் மையமாக இருந்தன. ஆடம்பரமற்ற குருத்துவ நுழைவும் அவர்பணியும் இதற்கு சான்றாக அமையும்.

சறத்ஜீவனின் குருத்துவ வாழ்வில் அவரின் வன்னிப் பிராந்தியப் பணிகள் என்றுமே அழியாத தடங்களைப் பதித்துள்ளன. 2004ம் ஆண்டில் முல்லைத்தீவு புனித பேதுருவானவர் பங்குப் பணிமனையில் அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதனிற்கு உதவிப் பங்குத்தந்தையாகப் பணிபுரிந்து முல்லைத்தீவுப் பங்கில் அவர் ஆற்றிய இறையரசுப் பணிகள் மிக மிகப் பெறுமதிவாய்ந்தவை. முல்லைத்தீவு முதல் வற்றாப்பளை - கேப்பாப்புலவு வரையிலான திருச்சபைகள் இன்றும் அருட்பணி சறத்ஜீவனின் பணிகளை நினைவு கூர்வார்கள்.

மிகவும் எளிமையான குருத்துவ வாழ்வை வாழந்தவர் இவர். சுனாமி இயற்கைப் பேரழிவிற்கு முன்னராக முல்லைத்தீவு புனித பேதுருவானவர் பங்குப்பணிமனையில் ஒரு அறையில் அவர் எளிமையாக வாழ்ந்தார். எந்த நேரமும் சுறுசுறுப்பாகவே இயங்கிக் கொண்டிருப்பார். காலையில் மக்கள் பணியில் ஈடுபட்டிருப்பார். ஏழைகள், கைவிடப்பட்டவர்கள் முதல் மறையாசிரியர்கள், மரியாயின் சேனையினர், வின்சன்டிபோல் சபையினர் வரை ஏதோ ஒருபணியில் சறாபாதருடன் ஈடுபட்டிருப்பார்கள். இளையோர் மன்றத்தை மீளப் புதுப்பித்து பங்குப்பணிகளில் ஈடுபடுத்தினார். பீடப்பணியாளர்கள் சனி - ஞாயிறு தினங்களில் பங்குப் பணிமனையில் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவர். 2004ம் ஆண்டு மார்கழி மாதம் இளையோர்-பீடப்பணியாளரை ஒன்றிணைத்து சிறந்த கரோல்

நிகழ்ச்சியை ஒவ்வொரு வீட்டிலும் ஒழுங்கு செய்து தானும் அவர்களோடு சென்று செபித்து வீடுகளை ஆசீர்வதித்ததை இன்னும் மக்கள் நினைவு கூர்வார்கள். அந்தநாட்களில் சறாபாத ரின் ஆசீர்வாதம் தான் 2004ம் ஆண்டு சுனாமி அழிவில் இருந்து தங்களைக் காப்பாற்றியது என்றுபலர் கூறுகின்றனர்.

சாதாரண ஒரு எம்-டி- 90 மோட்டார் சைக்கி ளில் அன்றைய திருத்தப்படாத வீதிகளிலும் வேகமாகவே பறந்துசெல்வார். நேரத்தை மீதப் படுத்தி பணிகளில் ஈடுபடவேண்டும் என்ற ஆவல் எப்போதுமே அவர் வேகத்தில் காணப்படும். மோட்டார் சைக்கிள் வேகம் மட்டுமல்ல அவர் நடைகூட வேகமானது.

இரவு நேரங்களில் வேதாகமம் வாசிப்பார். செபிப்பார். ஒவ்வொரு நாளும் எந்த வானொலிச் செய்திகளையும் தவறவிடமாட்டார். அறைக்கு மேலே ஒரு சோலார் பனல், அறைக்கு உள்ளே ஆங்காங்கே பற்றரிகள் - வயர்கள் - சிறிய மின் குமிழ்கள் - ஒரு எளிமையான ஆனால் நிறை வான, மகிழ்ச்சியான வாழ்வை வாழ்ந்து வந்தார். எதைச் செய்தாலும் நிறைவாக ஆண்ட வரின் மகிமைக்காகச் செய்ய வேண்டும் என்ற மனப்பக்குவம் அவரில் குடிகொண்டிருந்தது.

கஷ்டத்திலும், துன்பத்திலும் கூட அவர் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தார். 2004ம் ஆண்டு மார்கழி 26ம் திகதி முல்லைத்தீவு சுனாமி இயற்கை அனர்த்தத்தில் அவர் கடவுளின் வல்ல மையான வழிநடத்தலில் காப்பாற்றப்பட்டார். அன்றைய திருக்குடும்ப விழாவின் இறுதியில் திருச்சொருப ஆசீரைக் கொடுத்து பல ஆயிரக் கணக்கானோர் உயிர்பிழைக்க இறைவனின் சிறப்பான கருவியாக மாறினார்.

அருட்பணி சறத்ஜீவனின் குருத்துவ அர்ப் பண வாழ்வை யாழ் திருச்சபை ஒரு போதும் மறந்து விட முடியாது. முல்லைத்தீவில் பணி மனையில் இருந்த இவர் உடைமைகள் எல்லாம் சுனாமியால் கடலுக்குள்ளே இழுத்துச் செல்லப் பட்டதாம் அணிந்திருந்த அந்த ஓரே ஒரு குருத் துவ அங்கியுடனேயே சுனாமி அனர்த்தப்பணி களைத் தொடர்ந்தார். சறாபாதர் மக்களை நேசித்த ஒரு குரு. மக்களுக்காக வாழ்ந்து மக்கள் பணி யிலே தன்னைக் கரைத்துக் கொண்ட ஒரு குரு.

அருட்பணி சறத்ஜீவன் அடிகள் ஒரு தன்னல மற்ற பணியாளன் என்பதை வன்னிமண் ஒரு போதும் மறந்து விடாது. 2004 மார்கழி சுனாமிப் பேரலையால் முல்லைத்தீவு நகரம் சிதைந்து போய்க் காட்சி அளித்தது. எங்கும் அவலக் குரல் கள். 2000 உயிர்கள்வரை சுனாமியால் காவு கொள்ளப்பட்டு இழப்பின் வேதனையில் மக்கள் துடிதுடித்துக் கொண்டிருந்தார்கள். முள்ளிய வளை என்ற அயல்கிராமத்தில் முல்லைத்தீவு மக்கள் பாடசாலைகளிலும் பொது இடங்களி லும் தஞ்சம் அடைந்திருந்தார்கள். இந்த உருக் குலைந்த சமூகத்துள் தானும் ஒருவனாக இணைந்து அவர்களிற்கு அன்புப்பணி ஆற்றி னார் எம் குரு. ஆறுதல் மொழியும் அரவணைப் பும் துன்பப்பட்ட மக்களிற்கு சறாபாதர் கொடுக் கத் தவறவில்லை.

இதே பணி ஆர்வம் பின்னர் இவர் உருத்திர புரம் பங்கில் பணியாற்றிய போதும் காணப் பட்டது. வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழ்ந்த அக திகள், ஏழைகளிற்கு அன்புப்பணிபுரிய வேண் டும் என்ற ஆர்வத்தினால் யேசுசபையினரின் அகதிகள் பணியகத்தில் வன்னி இணைப்பாள ராகத் தன்னை இணைத்துக் கொண்டார். பங்குப் பணியுடன் அகதிப் பணியையும் மேற்கொண்டு தன்னலமற்ற குருத்துவப்பணிக்கு அர்த்தம் கொடுத்தார்.

அருட்பணி சறத்ஜீவன் அடிகளின் குருத்துவப் பணிகளைக் கூறிக்கொண்டே செல்லலாம். அவ ரின் அளப்பெரும் பணிகள் அவரை எப்போ துமே ஆண்டவர் யேசுவின் அன்புக் குரு என்று அடையாளம் காட்டியது.

இறுதியாக வன்னியில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தில் எம் சறாபாதர்தன் இன்னுயிரை ஈந் தமை நாம் எல்லோரும் அறிந்ததே. முள்ளி வாய்க்காலில் பசியால் வாடிய மக்களோடு

தானும் பசித்திருந்தார். பயப்பீதியில் ஒவ்வொரு கணமும் பதுங்குகுழிக்குள் வாழ்ந்த மக்களின் அனுபவங்களில் தானும் பங்கேற்றார். மக்களைவிட்டு வெளியேறக்கூடாது என்ற உறுதியான முடிவை இவர் எடுத்திருந்தமையாழ் திருச்சபைத் தலைவர்கள் மட்டும் அல்ல வன்னி மக்கள் அனைவரும் அறிந்திருந்தனர். எது நடந்தாலும் நடக்கட்டும் மக்களுக்காகவே வாழ வேண்டும் என்ற பணியிலான அர்ப்பணம் சறாபாதரை எப்போதும் ஆட்கொண்டிருந்தது. அருட்பணி சறத்ஜீவன் அடிகள் வன்னி இறுதியுத்தத்தின் அவலங்களின் ஒரு அடையாளம். போருக்குள் ஆகுதியாகிவிட்ட ஒடுக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழினத்தின் உண்மையான விம்பம். நசுக்கப்பட்ட உரிமைக் குரல்களின் ஓர் ஒலி. அவலச் சாவுகளைத் தழுவிய ஆயிரமாயிரம் மக்களின் ஒரு மூச்சு. பசியால், பட்டினியால், வறுமையால் இன்னும் மருத்துவ வசதியைப் பெற முடியாமையால் சிதைந்துபோய் போருக்குள் அகப்பட்ட ஒரு சமூகத்தின் அறுக்கப்பட்ட ஒரு வேர். இழப்புக்களைச் சந்தித்த தாய்மாரின் ஓலங்களுக்குக் காரணமாக அநியாயமாகக் கொல்லப்பட்ட ஆயிரமாயிரம் மக்களில் இவரும் ஒரு உத்தம புத்திரன். ஒட்டு மொத்தத்தில் “சறாபாதர்” ஆண்டவர் யேசுவின் ஒரு உண்மைச் சீடன்.

அருட்பணி. அ. றொபினீசன் யோசப்
முல்லைத்தீவு

கல்வாரிப்பலியும் வாழ்வுப்பலியும்
- அருட்தந்தை சறத்ஜீவன்

அமெரிக்கரான அருட்தந்தை எட்மன் வோல்ஸ் என்பவர் ரஸ்யாவிலே இறைபணி செய்தவர் அந்த நாட்களில் ரஸ்யாவிலே பொது உடமைக் கட்சிக்காரர்களின் கொடூர ஆட்சியால் பலகோடிக்கணக்கான மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இந்தப் பஞ்சகாலம் முடிவடைந்த வேளையில் அருட்பணி வோல்ஸ் அவர்கள் அப்போதைய திருத்தந் தையை சந்திக்கப் பணிக்கப்பட்டார். அந்தசந்திப்பின் போது நீண்ட நேர மாக அன்றைய திருச்சபை எதிர் நோக்கிய சவால்களைப் பற்றி இருவ ரும் உரையாடிக் கொண்டார்கள். அப்பொழுது திருத்தந்தை, அருட் தந்தை வோல்ஸ்சிடம் "இன்று திருச்சபை சந்திக்கின்ற மிகப்பெரிய சவால் என்ன? அது திருச்சபையைத் துன்புறுத்துகின்றவர்களா? அல்லது நீரோக்களா? அல்லது பொது உடமைக் கட்சிக்காரர்களா?" என்ற ஓர் கேள்வியைக் கேட்டது மாத்திரமல்ல அதற்குத் தானே பதிலையும் அளித்தார். அதாவது திருச்சபை எதிர்நோக்குகின்ற மிகப்பெரியசவால் பிரமாணிக்கமற்ற குருக்களே (unfaithful priest). எனவேதான் "குருத் துவம் எப்படிப் போகிறதோ அப்படித்தான் திருச்சபையும் போகும்" என்ற கூற்று ஒரு மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. எனவே திருச்சபைக்கும் இன்னும் சிறப்பாக ஓர் மறைமாவட்டத்திற்குக் கிடைக்கக்கூடிய மிகப் பெரும் ஆசீர்வாதம் பிரமாணிக்கமுள்ள குருக்களே ஆகும். அந்த வகை யில் முள்ளிவாய்க்காலில் தன்னுடைய வாழ்வை மக்களுக்காக அர்ப்ப ணித்த பிரமாணிக்கமுள்ள குரு அருட்பணி சறத்ஜீவன் யாழ்மறை மாவட்டத்திற்கு இறைவன் அளித்த மிகப் பெரும் ஆசீர்வாதமாகும்.

அருட்தந்தை சறத்ஜீவனை குருமட உரு வாக்ககாலத்திலேயே அறிந்திருந்தேன். அவர் மிகவும் அமைதியான மனப்பாங்குடன் வாழ்ந்த ஓர் இலட்சியப் பற்றுக் கொண்ட ஓர் குருமட மாணவராவர். யாழ் மேற்றாசனப் பங்கில் துடிப்புள்ள இளைஞனாக பங்கின் பல்வேறு மட்டங்களில் பங்குத் தந்தையர்களுடன் இணை ந்து பங்கின் வளர்ச்சிக்காகப் பலபணிகளைச் செய்த ஒரு இளைஞன். பேராலயப் பங்கிலே மழையோ பனியோ பார்க்காது நாளாந்த திருப் பலியில் தவறாது பங்கெடுத்துவந்த இவரை இவரின் பன்னிரண்டாவது வயதில் இறைவன் தன் னை அழைப்பதனை உணர்ந்து தன் தாயின் அனுமதி கேட்டார். "நீ உன்னுடைய A/L ஐ முடித்த பின்னர் குருமடம் சேர்வதற்கான முடிவை எடுக்க வேண்டும். இவ்வாறான ஓர் உறுதியான முடிவை முதிர்ச்சியான வயதில் எடுக்கும் போதுதான் குருத்துவத்தின் எல்லா சவால்களுக்கும் முகம் கொடுத்து இறுதிவரை குருவாக இருக்க முடியும்" என்று தாய் அன் போடு கூறிய வார்த்தைகளுக்கு செவிமடுத்து முதிர்ச்சியான வயதில் முதிர்ச்சியான தீர்மா னம் எடுத்து இறைபணிக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்த அர்ப்பணிப்பான இளைஞன். குருப்பட்டம் பெற்று ஆன்மீகவாஞ்சையுடன் தன்னுடைய குருத்துவ வாழ்வை வாழ்ந்த அருட் தந்தை சறத்ஜீவன் மக்களின் இடம் பெயர்வுக ளோடு தன்னை ஒன்றாக இணைத்துக் கொண் டவர். இறுதிவரை துன்பப்படுகின்ற மக்களோடு வாழவேண்டும் என்ற ஆசையினால் அவர்க ளோடு வாழ்ந்து அவர்களுக்காகவே தன்னு டைய வாழ்வை அர்ப்பணித்தவர். "ஒரு குரு என்பவர் மந்தையின் மணத்தை அறிந்திருக்க வேண்டும் ஒரு குரு என்றும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் தாழ்ச்சியோடு மக்களுக்குப் பணிபுரிய வேண்டும" என்ற நம் திருத்தந்தை பிரான்சிஸ் குருத்துவத்துக்குக் கொடுத்த வரைவி லக்கணம் அருட்தந்தை சறத்ஜீவனின் வாழ்க் கையாகின என்பதை யாராலும் மறுக்கமுடியாது. ஒரு குருவின் வாழ்வு கல்வாரிப்பலியை நாளாந் தம் ஒப்புக்கொடுப்பது மாத்திரமல்ல அந்தப் பலியை நாளாந்தம் வாழ்வதாகும். அந்தவகை யில் தன்னுடைய இறுதி மூச்சுவரை மக்களோடு மக்களாக வாழ்ந்து மரணித்த இந்த இளம் குருவின் வாழ்வு நம் மறைமாவட்டத்தில் உள்ள எல்லாக்குருக்களுக்கும் ஒரு முன்னுதாரண மாகும். இந்த மாதத்தில் முள்ளிவாய்காலில் முடக்கப்பட்ட அனைத்து மக்களையும் எமது நெஞ்சத்தில் வைத்து பூஜிக்கும் வேளையில் அந்த மக்களின் அவலங்களோடு தன் வாழ் வைக் கரைத்துக் கொண்ட அருட்தந்தை சறத் ஜீவனது வாழ்விற்காக நன்றி கூறி அவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்பதோடு மட்டுமல்லாது அவருடைய இழப்பினால் துயருறுகின்ற அவருடைய குடும்பத்தினருக் கும் அவரின் சககுருக்களாக ஓர் மறைமாவட்ட மாக நம்முடைய ஆறுதலைத் தெரிவிக்கின் றோம்.

அருட்பணி மனுவேற்பிள்ளை டேவிட்

Heroic Decision of Rev. Fr. Sara

It is almost one year since Father left us all, especially the victims of war whom he loved to the last. For a priest the sacred ordination is just a new beginning in discipleship of Jesus Christ. During his life and ministry, the priest makes many decisions and among them there are few heroic and self-immolative like that of his Guru Jesus Christ. Father Sara, made a heroic option to be with his victimised people and share their life and agonies to the last. He spoke up for them and suffered for his courageous choice.

Let his short life, heroic decision and selfless dedication be a continuous incentive for all of us priests and religious left behind to accompany the same victimised people. The moment we become silent and comfortably settled with the injustices around us, not having the courage to question them, we start losing our priestly character.

May God help us persevere and walk along the steps of Father Sara.

S.J.Emmanuel
Germany

அமரர் சறத்ஜீவன் அடிகளார்க்குக் கவிதாஞ்சலி

மின்னாமல் முழங்காமல் கார்முகிலும் இடித்ததுபோல்
என்னாவி அதிரவைக்கும் செய்தியொன்று செவிமடுத்தேன்
என்னாளும் இன்முகத்தோடுரையாடும் தெய்வமகன்
எத்திக்கும் பறந்தோடி இடர்களையும் பேருருவம்
பொன்னான மறையுரைகள் பொழிகின்ற பேராளன்
பொலிகின்ற வதனத்தில் தவழ்கின்ற புன்னகைகள்
தன்னாலென் உளம் நொருக்கிக் கலங்க வைத்த தியாகியவன்
தவப்புதல்வன் சறத்ஜீவன் அடிகளாரைக் காண்பதெப்போ

பால்நிலாவின் வண்ணமுகம் பார்த்தவரைக் கவர்ந்திழுக்கும்
பரிவுடனே அண்டியோரின் துன்பங்கள் அகற்றிவிடும்
ஆலமரம் போல்விரிந்து பரந்தகன்ற பூமியிலே
காலவிக்கும் மணலிடை கடுகிநடை பயின்றவுடல்
வேல்துளைத்த புண்ணினிலே எரிதணலும் நுழைந்தாற்போல்
வெந்தழிந்த மக்களுடன் வேதனைகள் பகிர்ந்தகுரு
ஞாலத்து மக்களொன்றா யோலமிட்டுக் கதறியழ
ஞானத்தின் முதிர்ச்சியோடு மோனநிலை யடைந்தானே

பாலர்க்கோர் முன்பள்ளி பங்கிருக்கு மிடங்களெல்லாம்
சாலச்சிறந்திடவே அமைத்துக் கொடுத்தானே
நூலைக் கற்றுணர்ந்த ஆசான்க ளளித்தவர்க்கு
நுண்ணறிவி னோடுபல் லாற்றல்கள் வளர்த்தானே
காலைக் கதிரவனாய் களங்கமற்ற நெஞ்சினனாய்
வாழும் வகையறியா அபலைகளைக் காத்தானே
சாலைவழி நடந்துவரும் வேளையிலே வீழ்ந்தானே
சறத்ஜீவன் அடிகளாரின் தூயமுகம் காண்பதெப்போ.

மாரீசன் கவிதைகள்,
திரு. ஆ. சவிரிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்)
ரொரொன்டோ, கனடா. 17-07-2016

‘Good Shepherd who did not abandon his sheep’

Fr.Mariampillai Sarathjeevan was one of the priests who remained with their people until the end of genocidal war at Mullaivaikkal in the Northern part of Sri Lanka where thousands of people including children and mothers were massacred in so called “No Fire Zone”. He died on the 18th may 2009 while he was coming out from this killing field with some other priests and people. At that time people had no food and water for several weeks. He saw his people being shattered into pieces due to shell attacks and aerial bombing. He had to walk over hundreds of dead bodies scattered all over the place. No doubt these horrendous experience and horrific scene were too much for his weak physical body and utterly disturbed mind to bear and hence had to leave his brother priests and people to join the thousands killed mercilessly.

Since 2009 the government and the people of the South celebrate the **“war victory”** on the 18th May, while banning the people of the North to commemorate their dear and loved ones died and killed in genocidal war. The SL armed forces desecrated and destroyed the cemeteries where thousands of militants died in battles were buried and banned the Tamils even to make a small monument to remember their loved ones. But the armed forces built huge victory monuments and a war museum specially in Kilinochchi and Mullaitheevu districts in killing fields. Today these have become tourist spots for those picnickers who come from the South.

Amidst such brutal and repressive environment the people and the priests built a small monument for Fr.Sarathjeevan and all those perished in war, in Uruthirapuram church premises where he served last. This was unveiled during his first year of memorial service on the 18th May 2010. Since then every year on the 18th of May, people of this parish, his family members, relatives, priests and religious gather in Uruthirapuram church to remember and honour their good shepherd and brother priest.

This year too we all gathered in the same place on the 17th to commemorate the 5th anniversary of his supreme sacrifice. Again the government banned public commemoration even in religious places while holding victory celebrations in the south and also in Mullivaikkal where final massacre took place. Two days before the commemoration, some soldiers had come to the Uruthirapuram church and inquired the parish priest whether people would come from outside for any event to be held in the church. There were soldiers deployed along the Kilinochchi-Uruthirapuram road on the 17th morning to monitor those arriving for the program. The commemoration Mass was offered with the attendance of Fr.Sarathjeewan's family members, relatives, parishioners, priests and religious who came from different areas of the diocese. After the Holy Mass, all gathered in front of the monuments built in memory of Fr.Sarathjeewan and all those died in this brutal war. Two monuments were garlanded by the brother of Fr. Sarathjeewan and a parishioner of Uruthirapuram to pay homage to him and thousands perished in war.

Fr.Sarathjeewan "known as Fr.Sara" was born in a small village called Bogawanthalawa in hill country on the 13th May 1968. His parents, both of them teachers, were serving in that area during this period. Then they were transferred to Kaddukaran-kudiyirippu, again a small village in Talaimannar where Fr Sara spent his early childhood until 1973. Then they shifted to Jaffna, their home town. He had his education at St Patrick's College and entered St Martin's minor seminary in 1993. He completed his Philosophical and theological studies at St. Francis Xavier's major seminary. He was ordained on the 14th May 2003 and assigned as the assistant parish priest of St.Peter's church, Mullaitheevu.

In March, 2005 he was appointed as the parish priest of St Fatima's church, Uruthirapuram, Kilinochchi. With the escalation of war like all others he also left the parish with his people facing continuous displacements. At this crucial period the government ordered all the humanitarian organizations, NGOs including International Committee of the Red Cross and UN High Commission for Refugees to leave the war zone so to make it a "war without witnesses". Fr.Sara being a priest had ample opportunities to leave the battle field and come to a safe zone for his security. But he was one of the eight priests, a good shepherd who refused to abandon his sheep and remained with them till his death. "I am the good shepherd. The good shepherd lays down his life for the sheep" Jn16:11

It is important to make a note that major events of his life had taken place in the month of May.

Born on the 13th May 1968
Ordained on the 14th May 2003
Eternal Rest on the 18th May 2009

"This is my commandment, that you love one another as I have loved you. No one has greater love than this, to lay down one's life for one's friends"

Fr.Terence Fernando

Priest dies alongside refugees
(Vatican Radio, 27 May 2009)

Accompanying his people trapped in the “no Fire Zone” to the very end, Father Mariampillai T. Sarathjeevan, aged 41, died of a heart attack just as the last refugees left the war zone. Father Sarathjeevan, a priest from the diocese of Jaffna, was struck down on 18 May, the day the war between the army and the Tamil Tigers ended and only hours after the army took complete control of the area.

Parish priest in Kilinochchi and coordinator of the Jesuit Rehabilitation Service for the diocese of Jaffna, Father Sarathjeevan was one of seven priests who stayed with those prevented from leaving the coastal strip of the Nanthi Kadal lagoon. He had not left their side since the beginning of military operations in Vanni. He died on the side of the road, exhausted by months of hardship and deprivation under constant shelling. AsiaNews has reported that although he was transported to hospital in Vavuniya nothing could be done to save him. From this city where the majority of the 280,000 refugees of war are gathered, the body of Father Sarathjeevan was brought to Colombo for transfer to Jaffna for the funeral.

Yesterday fellow priests, sisters and religious from Jaffna together with members of Caritas Sedec bid farewell to Father

Sarathjeevan, first in a private Mass celebrated by Father James Pathinathan in Tamil and later in special prayers led by Mons. Oswald Gomis, Bishop of Colombo. Father David Manuelpillai told the congregation that "in the last few days Father Sarathjeevan was deeply concerned he could no longer say Mass, obliged to live in a bunker without food or water. In the end, when he was finally able to leave these desperate conditions he could bear the agony of his people no more and his heart gave way". (A.L.)

(from the Italian Radio Vaticana website)